# சஞ்சீவி

விலை ரூபா 10-00

மலை 9 : வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 29 சனிக்கிழமை (14-08-1999) SANJEAVY -Regenerative Tamil Weekly சிகரம்:11


# கொக்கிளாய் கடலில் 4 மணிநேரச் சண்டை!

## நேற்று முன்தினம் இரவு உக்கிரம்

கொழும்பு,ஓக.14

**கிழக்கில் கொக்கிளாய் கடற் பரப்பில் நேற்று முன்தினம் இரவு கடற் படையினருக்கும் விடுதலைப் புலிகளின் கடற்புலிகளுக்கும் இடையில் நான்கு மணி நேரம் உக்கிரக் கடற்சமர் இடம்பெற்றதாகப் பாதுகாப்புத் தலைமையகம் தெரிவித்துள்ளது. .**

முல்லைத்தீவுப் பகுதியில் இருந்து வந்த புலிகளின் ஏழு படகுகளை அவதானித்து அந்தப் படகுகள் மீது கடற் படையினர் தாக்குதல் தொடுத்த போது பெரும் மோதல் வெடித்தது என்றும் -

விடுதலைப்புலிகளின் இரு படகுகள் மூழ்கடிக்கப்பட்டன என்றும் -

எஞ்சியவை தப்பிவிட்டன என்றும்-

பாதுகாப்பு படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இச்சமரில் விடுதலைப்புலிகள பலர் உயிரிழந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதே நேரம், இந்தத்தாக்குதலில் கடற்படையின் அதிநவீன டோறா படகு சேதமடைந்தது என்று விடுதலைப் புலிகள அறிவித்தனர். (உ-3)

# நிபுணர்களோடு விசாரணைக்குழு நேற்று செம்மணிப் பகுதிக்கு விஜயம்

யாழ்ப்பாணம்,ஓக.14

செம்மணியில் மனிதப் புதைகுழி உள்ளதாகக் கருதப்படும் இடங்களில் அடுத்த கட்ட தோண்டும் நடவடிக்கை ஆரம்பிப்பது தொடர்பான பூர்வாங்க ஏற்பாடுகளை செய்வதற்காக உயர்மட்டக்குழு ஒன்று நேற்று அங்கு விஜயம் செய்தது.

அடுத்தமாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் இரண்டாம் கட்ட பணிக்கான முன்னேற்பாடுகளை இந்தக் குழு அங்கு ஆராய்ந்தது.

சட்டமா அதிபர் திணைக்களத்தைச் சேர்ந்த அரச சட்டத்தரணி யஸந்த கோத்தாகொட, காலி றுகுணு பல்கலைக்கழக சட்ட மருத்துவத்துறை பேராசிரியர் சந்திரசிறி நெரியல்ல மற்றும் குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் அந்த உயர்மட்டக்குழுவில் அங்கம் வகித்தனர்.

தோண்டி எடுக்கப்படும் எலும்புக் கூடுகள் மற்றும் எச்சங்களை இங்கேயே விஞ்ஞானமுறையில் ஆய்வு செய்வதற்கு வசதியாக இங்கு ஆய்வு கூடம் ஒன்றை அமைக்கும் இடம், ஆய்வு நிபுணர்கள் தங்குமிடம் ஆகியன தொடர்பாக இந்தக்குழு அங்கு முடிவு செய்ததாகத் தெரியவந்துள்ளது.

கிருஷாந்தி கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள், மனிதப் புதைகுழிகள் உள்ளதாக தமது வாக்குமூலங்களில் குறிப்பிட்ட இடங்களையும் குழுவினர் பார்வையிட்டதாகவும் தெரியவந்தது. (உ-3-5-15-139)

# யுத்த சூனியப் பிரதேசமாக மடுவைப் பிரகடனம் செய்க!

## இரு தரப்பையும் கோருகின்றார் மன்னார் ஆயர்

மன்னார்,ஓக.14

மடுத்தேவாலயப் பகுதியை யுத்த சூனியப் பிரதேசமாக்கவேண்டும் என்று படையினரிடமும் விடுதலைப் புலிகளிடமும் மன்னார் ஆயர் வண. இராயப்பு யோசப் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக வன்னிப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் பலகல்லவுக்கும் விடுதலைப்புலிகள் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் அவர் கடிதம் எழுதியுள்ளார்.

இதுவிடயமாக ஆயர் தெரிவித்துள்ள யோசனைகள் வருமாறு:-

* மடு ஆலயப்பகுதி, அதாவது தேவாலயத்திலிருந்து ஒரு கிலோமீற்றர் தொலைவுக்குட்பட்ட நிலப்பகுதி இரு தரப்பினராலும் யுத்த சூனியப் பிரதேசமாகக் கருதப்படவேண்டும்.

* இப்பகுதிக்குள் சீருடையினரதும், ஆயுதம் தரித்தோரதும் நடமாட்டம் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும். தண்ணீர் எடுப்பதற்கு அல்லது ஆலயத்தை தரிசிப்பதற்குத் தன்னும் இத்தகையோரது வரவு தடை செய்யப்படவேண்டும்.

* இப்பிராந்திய எல்லையினூடாக நாலு பக்கமும் செல்கின்ற பிரதான பாதைகள் பொதுப்பாதைகளாக இருந்தபோதிலும் இவையும் இரு பகுதியினராலும் தவிர்க்கப்படவேண்டும். ஆயினும் இப்பாதைகளை இருபகுதியினரும் பயன்படுத்த விரும்பினால்

(8ஆம் பக்கம் பார்க்க)

# அரசு - ஐ.தே.க. இணக்கம் ஏற்பட்டால் பிரபாவைச் சந்திக்க வன்னி செல்வேன்

## வர்த்தக சம்மேளனத் தலைவர் கொத்தலாவல தகவல்

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத்திட்டம் தொடர்பாக அரசுக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சிக்குமிடையில் இணக்கம் ஒன்று ஏற்பட்டால் மேற்கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்திக்க வன்னிக்குச் செல்வேன்."

வர்த்தக சம்மேளனத் தலைவர் லலித் கொத்தலாவல மேற்கண்டவாறு பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு தெரிவித்துள்ளார்.

இரு கட்சிகளும் பல்வேறு யோசனைகளை முன்வைத்துள்ளன. அவை தொடர்பாக பேச்சுக்கள் நடத்திவருகின்றோம்.

அந்த முயற்சி வெற்றிபெற்று இரு தரப்புக்குமிடையில் இணக்கம் ஏற்பட்ட பின்னர் அந்த உடன்பாட்டுடன் வன்னிக்குச் செல்வேன்.

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் தகவல்களைப் பரிமாறும் தூதுவனாகப் பணிபுரிவேன் - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

வர்த்தக சம்மேளன முயற்சிக்குத் தெற்கில் முக்கியத்துவம் அளிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (உ-3-21)

# கல்முனை, சிறுத்தீவில் மீன் பிடிக்கத் தடை!

## மீனவருக்கு படைத்தரப்பு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஓக.14

யாழ்.கடலேரியில் கல்முனை, மற்றும் சிறுத்தீவுப் பகுதிகளில் மீன் பிடிப்பதற்கு தடைசெய்யப்பட்டுள்ளது என்று படை அதிகாரிகள் யாழ்.மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

நேற்றுக் காலை 512ஆவது பிரிகேட் அலுவலகத்தில் மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் படை அதிகாரிகளுக்குமிடையே நடந்த சந்திப்பிலேயே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

இந்தச் சந்திப்பில் 51ஆவது படையணியின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் என்.ஆர்.மாரம்பே, யாழ்.நகரத் தளபதி கேணல் ஜெயதிலக ஆகியோரும் குருநகர்,பாஷையூர், கொழும்புத்துறை, நாவாந்துறை, கொட்டடி ஆகிய மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொனடனர்.

மீன்பிடி வள்ளங்களில் பாய்மரங்கள் பாவிப்பது தொடர்பான அறிவுறுத்தல் இம்மாதம் 30ஆம் திகதிக்கு பின்னர் வெளியிடப்படும் என்று படை அதிகாரிகள் இந்தச் சந்திப்பில் தெரிவித்தனர். (உ-3-5-15-139-173-ரி)

---

## செய்திச் சரம்

### மட்டக்களப்பில் மட்டுப்படுத்தப்பட்ட படை நடவடிக்கை

கொழும்பு,ஓக.14

மட்டக்களப்பு மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு காட்டுப் பகுதியில் நேற்றுப் படையினர் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டதாக பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அக்கரைப்பற்று பொலீஸ்நிலைய சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் பட்டிவீரக் தலைமையில் 140 பொலீஸார் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்றும் -

அந்தப் பகுதியில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாமிலிருந்து ஒரு டிரக்கையும் உணவுப் பொருள்களையும் பொலீஸார் கைப்பற்றினர் என்றும்-

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-க)

### பயணிகள் மீது தண்ணீர் வீச்சு!

யாழ்ப்பாணம்,ஓக.14

நயினாதீவு நாகபூஷணி அம்மன் தேவஸ்தான ஆடிப்பூர விழாவில் கலந்து கொண்டுவிட்டு பஸ்களில் யாழ். நகரை நோக்கி நேற்று மாலை திரும்பிக் கொண்டிருந்த பக்தர்கள் மீது படையினர் சிலர் பண்ணைப் பாலதிற்கும் மண்டைதீவுச் சந்திக்கும் இடைப்பட்ட பகுதியில் வைத்து வாளிகள் மூலம் தண்ணீரை அள்ளி வீசியதாகப் பக்தர்கள் விசனத்துடன் தெரிவித்தனர்.

பக்தர்கள் உடைகள் எல்லாம் நனைந்து பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளானதாகவும் கூறப்பட்டது. (உ-3)

### மாங்குளம் ஊடாக திங்களன்று மக்கள் வருவர்

வவுனியா,ஓக.14

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து மாங்குளம் பாதையூடாகப் பொதுமக்கள் நாளை மறுதினம் முதல் வெளியிடங்களுக்கு வருவதற்கு அனுமதிக்கப்படுவர் எனத் தெரிய வருகின்றது.

வவுனியாவில் தங்கியிருந்தவர்களில் இதுவரை இரண்டாயிரத்து 188 பேர் மாங்குளம் பாதையூடாக இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்குச் சென்றுள்ளனர். எஞ்சியுள்ள 600பேர் இன்று அங்கு செல்ல இருக்கின்றனர்.

அதைத்தொடர்ந்து நாளை மறுதினம் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியிலிருந்து மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அனுமதிக்கப்படுவர் எனத்தெரிவிக்கப்பட்டது.(உ-164)

### லெப்டினன்ட் உயிரிழப்பு

வவுனியா,ஓக.14

புளியங்குளம் பாதுகாப்பு வலயத்தில் நேற்றுப் பிற்பகல் 3.00 மணியளவில் அமுக்கவெடியில் சிக்கி விமானப் படையைச் சேர்ந்த லெப்டினன்ட் ஒருவர் உயிரிழந்தார்.

ஏனைய படையினருடன் அவர் நடந்து சென்ற சமயம் நிலத்தில் புதைந்திருந்த அமுக்கவெடியில் அவர் சிக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-21)

### ஆளுநர் திருமலையில்!

திருகோணமலை,ஓக.14

வடக்குக்கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா நேற்று திருமலை விஜயம் செய்ததையடுத்து மாகாணசபை உள்ளிட்ட நகரப்பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

ஆளுநர் அலுவலகம் அமைந்துள்ள பிரதேசத்துக்குச் சென்றவர்கள் பலத்த சோதனைக்குள்ளாக்கப்பட்டனர்.

ஆளுநரின் வருகையை எதிர்பார்த்து இதுவரை ஒத்திவைக்கப்பட்டிருந்த மாகாணசபையின் பல கூட்டங்கள் இன்று முதல் அங்கு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

---

## செய்திச் சரம்

### குண்டு மீட்பு

கொழும்பு,ஓக.14

ஹற்றன் பம்பர் வீதியில் அமைந்துள்ள தொலைத்தொடர்புப் பரிவர்த்தனை நிலையத்துக்கு அருகில் இருந்து நேரம் கணித்து வெடிக்கக் கூடிய குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக ஹற்றன் பொலீஸார் தெரிவித்தனர். (உ-3-7)

### 59தமிழர் தொடர்ந்து தடுத்துவைப்பு

கொழும்பு,ஓக.14

கடந்த சில தினங்களாக கொழும்பில் மருதானை, கொட்டாஞ்சேனை, புறக்கோட்டை ஆகிய பகுதிகளில மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போது கைதான 115 தமிழர்களில் 59பேர் இன்னமும் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்படுவதாக பொலீஸார் தெரிவித்தனர். (உ-3)

### மட்டுநகரில் குண்டு மீட்பு

மட்டக்களப்பு,ஓக.14

மட்டக்களப்பு நகரில் வீதிக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் நேற்று முற்பகல் 11 மணியளவில் குண்டு ஒன்றை கண்டு பிடித்துப் பின்னர் செயலிழக்கச் செய்தனர். (உ-21-3)

### ராணுவ ஆள்சேர்ப்பு நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஓக.14

இராணுவத்துக்கு ஆள்திரட்டுவதற்காக அரியாலை மற்றும் சாவகச்சேரி இராணுவ முகாம்களில் கடந்த 9ஆம் திகதி முதல் நடைபெறவிருந்த நேர்முகப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ்.பாதுகாப்புப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

தவிர்க்கமுடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ள இந்நேர்முகப்பரீட்சை நாளை மறுதினம 16ஆம் திகதி முதல் ஆரம்பமாகி அடுத்த மாதம் 5ஆம் திகதி வரை இந்த இரு இராணுவ முகாம்களிலும் நடைபெறும் எனவும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

### சர்வோதய ஏற்பாட்டில் கொழும்பில்பேரணி

கொழும்பு,ஓக.14

தொடரும் யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமெனக்கோரி சர்வோதய அமைப்பு எதிர்வரும் 29ஆம் திகதி கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தவுள்ளது. (உ-7)

### சயனைற் அருந்தி தற்கொலை

கொழும்பு,ஓக.14

விடுதலைப்புலிகளுக்கு எரிபொருள் விற்றதாகச் சந்தேகத்தின் பேரில் அண்மையில் கைதுசெய்யப்பட்டு கற்பிட்டிச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர் ஒருவர் கைதான அன்றைய தினமே சயனைற் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார் என பொலீஸார் அறிவித்துள்ளனர். (உ-7)

### முஸ்லீம்கள் கையெழுத்துப் போராட்டம்

மட்டக்களப்பு,ஓக.14

வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லீம் மக்களுக்கு பாதுகாப்பான, நம்பிக்கையைத் தரக்கூடிய வகையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி ஒருலட்சம் கையொப்பங்களைத் திரட்டும் போராட்டம் நேற்று காத்தான்குடியில் ஆரம்பமானது.

மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வாழும் முஸ்லீம் மக்களிடம் கையொப்பம் பெறப்படஇருக்கின்றது.

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரசுக்கு எதிரான போக்குடைய அமைப்பு ஒன்றே இப் போராட்டத்தை ஏற்பாடு செய்துள்ளது. (உ-21-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ எழுத்தாளர்களின் நூல்களை கொள்வனவு செய்யக் கோரிக்கை

நல்லூர், ஓக.14

சனசமூக நிலையங்களுக்கு ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியுதவிகள் வழங்க வேண்டும் என தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் உள்ளூராட்சி உதவி ஆணையாளரை கேட்டுள்ளது.

தற்போது உள்ளூராட்சித் திணைக்களம் நூல்கள் கொள்வனவுக்கென சனசமூக நிலையங்களுக்கு வழங்கும் நிதியில் கூடுதலானவற்றை ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களைக் கொள்வனவு செய்ய சனசமூக நிலையங்கள் முன்வரவேண்டும் எனவும் -

பிரதேச சபைகள் இது விடையத்தில் கூடிய அக்கறை எடுத்தல் வேண்டுமெனவும் -

கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## நாளை

தென்மராட்சி, ஓக.14

மிருசுவில் விடத்தற்பளை சம்பா வெளிப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை ஆடிச் சதுர்த்தி விழா நடைபெறும்.

பகல் விஷேட பூசையும் இரவு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன. (ஐ-117)


## நாகம்ஸ்
சுன்னாகம்
கார்த்திக், நக்மா
கவுண்டமணி
நடித்த
**மேட்டுக்குடி**
காட்சிகள் - 11.00 - 2.30
(புதிய நேரம்)
(68173)

## லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்றுமுதல்
முரளி, சிம்ரான்
நடித்த
கனவே கலையாதே
(புதிய வெளியீடு)
நேரம் - 10.30 - 2.30
(68097)

## ராஜா
யாழ்ப்பாணம்
பிரசாந் ~ ஐஸ்வர்யா
நாசா நடித்த
**ஜீன்ஸ்**
10.30, 2.00, 5.00
(C/8472)


ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம்

## தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்

## வருடாந்த மஹோற்சவம். விஞ்ஞாபனம் - 1999

அம்பிகை அடியார்களே!

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் மங்களகரமான பிரமாதி வருடம் ஆடித்திங்கள் 31ம் நாள் (16.08.1999) திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு நாட்கள் நடைபெற சக்தியின் துணை கூடியுள்ளது.

**விசேட திருவிழாக்கள்**

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 16.08.99 | திங்கள் | பகல் 11.30மணி. |
| வேட்டைத்திருவிழா | 24.08.99 | செவ்வாய் | பகல் 11.00 மணி. |
| தேர்த்திருவிழா | 25.08.99 | புதன் | பகல் 11.00 மணி. |
| தீர்த்தத்திருவிழா | 26.08.99 | செவ்வாய் | பகல் 10.30 மணி. |

* அன்பர்கள் பால், தயிர், இளநீர், புஷ்பங்கள் கொடுத்துதவி அம்பிகையின் திருவருள் பெறுக.

ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம்,
நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை.

பரிபாலன சபையினரும்
திருவிழா உபயகாரர்களும்.

(68171)

## திருமறைக் கலாமன்றம்
## கலைத்தூது மணி மண்டபம்
### திறப்பு விழா

15-08-1999 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு

அதிவணக்கத்திற்குரிய

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை

அவர்களால் திறந்து வைக்கப்படும்

**இம் மணி மண்டப திறப்புவிழா நிகழ்விலே கலந்து சிறப்பிக்குமாறு மன்ற அங்கத்தவர்கள், பொறுப்பாளர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

அருட். கலாநிதி நி. மரியசேவியர்
இயக்குநர்
திருமறைக் கலாமன்றம்.

யோ. ஜோணசன ராஜகுமார்
பொதுச் செயலர்
திருமறைக்கலாமன்றம்.

238, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C/8501)

உ

மீசாலை

திருநீலகண்ட வெள்ளை மாவடிப்பிள்ளையார்

## மஹோற்சவ விழா - 1999

| | | | | |
|---|---|---|---|---|
| கொடியேற்றம் | - 17-08-99 | செவ்வாய் | பகல் | 11.00 மணி |
| வேட்டைத்திருவிழா | - 23-08-99 | திங்கள் | பிற்பகல் | 2.00 மணி |
| சப்பறத்திருவிழா | - 24-08-99 | செவ்வாய் | மாலை | 4.00 மணி |
| தேர்த்திருவிழா | - 25-08-99 | புதன் | காலை | 8.00 மணி |
| தீர்த்தத்திருவிழா | - 26-08-99 | வியாழன் | காலை | 8.00 மணி |

தினந்தோறும் காலை 8.30 மணிக்கும் மாலை 4.00 மணிக்கும் உற்சவம் ஆரம்பமாகும்.

குறிப்பு:- 26 – 08 – 99 வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழா ஊஞ்சல்பாட்டு இலங்கை வானொலி தேசிய சேவையில் இரவு 10.15 மணிக்கு ஒலிபரப்பாகும்.

விளம்பர அன்பளிப்புக்கள்:-

* **நியு செலக்சன் ரெலி சென்ரர்**
நவீன சந்தை, சாவகச்சேரி.
தொலைபேசி இலக்கம்:
உள்ளூர் - 070-212253
பக்ஸ் - 070-212253
கேபிள் - 2200
வெளியூா - 0094 70 212253

* **தர்மி கொமினிகேசன்**
கண்டிவீதி, மீசாலை.
உள்ளூர் -070-212482
பக்ஸ் -070-212482
வெளியூர் -0094 70 212482

(சி-8493)

## 182ஆம் நாள் நினைவு

மலர்வு 31 - 10 - 1956



உதிர்வு 15 - 02 - 1999

திருமதி

### சந்திரபிரபா லோகஞானம்

(உபஅஞ்சல் அதிபர் யாழ். பல்கலைக்கழகம்)

ஆறுதிங்கள் அவனியில் கழிந்து விட்டது
பிரபா
தேறவில்லையே மனது தேவி
உன்னைத் தேடி தவிக்கின்றேன்
சோறுபோட்டு நீ ஊட்டி
சோடியாக திரிந்த காலம்
நேற்று போல இருக்கிறதே
என்னைவிட்டு நீ எங்கு சென்றாய்?

திருநெல்வேலி. கணவன்.

(68185)

## 21 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 20 - 05 - 1922



ஆண்டவன் அடியில் 25 - 07 - 1999

### நாகநாதி சோமசுந்தரம்

(ஓய்வு பெற்ற துறைமுக ஊழியர்)

அன்பும் பண்பும் கொண்டு
பாசத்தின் ஒளி விளக்காய் - இப்
பாரினிலே பல காலம் வாழ்ந்தீர்கள்
தம் மக்கள் நால்வரையும் நல்வாழ்வு
பெற வைத்தீர்கள் - வற்றாத
ஊற்றுப் போல் உம் நினைவு
எப்போதும் நிலைத்திருக்கும் - எம் மனதில்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும். தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் இல்லத்தில் இன்று (14/8/99) நடைபெறும் வீட்டுக்கிரியைகள், மதிய போசனம் ஆகியவற்றிலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பெறாமக்கள்.

71/6, ஸ்ரேஷன் றோட்,
யாழ்ப்பாணம். (68172)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சணல் ஆடும் குட்டியும் மணித்தாரா, கினிக்கோழி, பொமனேரியன் நாயும் குட்டிகளும் விற்பனைக்கு எம்மிடம் உண்டு. தொடர்பு:- லிங்கமூர்த்தி மயூரன், நவாலி அரசடி மகாவித்தியாலயம் அண்மையில். (68083)

இறைச்சிக்கோழி புறொயிலர் விற்பனைக்கு உண்டு. குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்தும் கொடுக்கப்படும். தொடர்பு:- லக்கி மதவடி ஒழுங்கை, திருநெல்வேலி. (68110)

ஹொண்டா C.D 125 Twin மோட்டார் சைக்கிள், நிலைகள், கதவுகள், யன்னல்கள், தீராந்திகள், கை மரங்கள் என்பன மலிவு விலையில் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறுகளிலும் கிழமை நாள்களில் 4 மணியின் பின்பும் தொடர்பு:- 43/1,மணிக்கூட்டு ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். (68127)

பழைய ஓடுகள், தீராந்திகள், மரங்கள், நிலை, கதவுகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ப.சிவகுமார், மெமோறியல் பாடசாலை முன்பாக, மானிப்பாய். (சி-8487)

அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1999 மொடல் Sharp Vedio Projector உம், Mixingற்கு ஏற்ற ஓடியோ CD யும் 13 1/2 அடி-6'4"பாலைத் தீராந்திகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ஆ. ஆனந்தன் (கனடா) 'ஆனந்தபவன்' இல.05, மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவில் (மஞ்சவனப்பதி ஆலயம் அருகில்). (68137)

இறைச்சிக்கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு:- இல. 15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சின்னக்கடை அருகில்). (68016)

ஏழு நாள்கள் நிரம்பிய கலப்பின கோழிக்குஞ்சுகள விற்பனைக்குண்டு. தொடர்பு:- கே.வி.சாமி,131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (68159)

## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து (பாதி உட்பட) பெற்றுக் கொள்ளலாம். குறைந்தவிலை, நுட்பமான நிறுவை. அத்துடன் அடை முட்டையும் வாழைக்குட்டிகளும் விற்பனைக்குண்டு. 19,முருகேசர் ஒழுங்கை. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) முத்திரைச்சந்தையடி,நல்லூர். (68141)

## MATHS O/L 99

40 பாடவேளைகளில் ஆரம்பத்திலிருந்து இதுவரையும் பெறுபேறு இல்லாதவர்களும் புதியவர்களும் 1000 தரமான வினாக்களுக்கு விடை அளிப் gj hy Credit Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். (ஆண்டு 6,9,10 உட்பட) B.Sc ஆசிரியர் 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (68144)

## திருத்திக் கொடுக்கப்படும்

சகல கமரா வகைகளும் எலக்ரோனிக் பிளாஸ், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத்துறை துணைச் சாதனங்களும் திருத்திக் கொடுப்படும். தொடர்பு:- சு.நாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, (மேல்மாடி) கன்னாதிட்டிச்சந்திக்கு அருகில். (68177)

## தவறிவிட்டது

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த சு.சசிக்குமார் என்பவரது 0902028103 என்ற இலக்கமுடைய விசேட அடையாள அட்டையும் தேசிய அடையாள அட்டையும் கடந்த 9ம் திகதி கல்வியங்காட்டுக்கும் கோப்பாய்க்கும் இடையில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு கூர்ந்து மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். (68181)

## நெடுந்தீவு வீதிகளுக்கு பெயர் சூட்டல்

நெடுந்தீவு, ஓக.14

நெடுந்தீவிலுள்ள வீதிகளுக்கு விரைவில் பெயர்கள் சூட்டப்படும். இதற்கான ஆலோசனைக் கூட்டம் பிரதேசசபைத் தலைவர் அ.வெ.அரியநாயகம் தலைமையில் நடைபெற்றது.

நெடுந்தீவு றோ.க.வித்தியாலயத்தில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் இங்குள்ள பொதுத்தாபனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

(ஜ-111)

---

## நீங்காத நினைவில் ஓராண்டு

மலர்வு 18 - 03 - 1934



உதிர்வு 26 - 07 - 1998

### திருமதி தங்கமணி பொன்னம்பலம்

(தச்சன்தோப்பு, கைதடி)

திதி: 14-08-1999

எங்கள் அன்புத் தெய்வமே!
கண்களில் நீருடன் கலங்கி நிற்க
எமைவிட்டுப் பிரிந்து சென்றது ஏனோ?
உடலால் எமை விட்டுப் பிரிந்தாலும்
உணர்வுகளால் என்றும் எம்முடன்
உங்கள் நினைவுகள் தொடரும்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
ஞான வைரவப்பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.


34, செட்டித்தெரு,
நல்லூர்.

(68140)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 09 - 02 - 1931



மறைவு 15 - 07 - 1999

### சபாரட்னம் நவரட்னம்

அன்புத் தெய்வமே! எங்கள்
குடும்பத்தின் ஒளி விளக்கே!
பண்பின் சிகரமே பாசத்தின் உறைவிடமே
நீங்கள் எம்மை விட்டுச் சென்று
மாதமொன்று மறைந்தாலும்
எங்கள் நெஞ்சங்களில் என்றும்
அணையாத தீபமாய் ஒளிவீசுவீர்.
எங்கள் அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்திப்போம்.

71/25 புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.


மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(68129)

---

## ஆறாம் மாத நினைவஞ்சலி

தோற்றம்: 28 - 11 - 1935



மறைவு: 14 - 02 - 1999

### அமரர் கார்த்திகேசு யோகநாதன்

(முன்னாள் பத்திரிகை ஆசிரியர் - ஈழநாடு)

பேரான குடும்பமொன்றில் புகழ் பூக்கப் பிறந்திட்டீர்
சீரான நினைவுகளை எம் மனதினிலே விதைத்து வைத்தீர்
பேரான சிவராத்திரியில் பரமனடி சேர்ந்திட்டீர்
தீராது அப்பா! தங்கள் பிரிவுத்துயர் அவனியிலே.

குடும்பத்தினர்.

5, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம்.

(68087)

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



யாழ்ப்பாணம், நல்லூர்

அமரர்

### செல்லையா இராமலிங்கம்

(இளைப்பாறிய பிரதம கணக்காளர்
போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சு)

அன்னை மடியில் 19- 12 - 1925

ஆண்டவன் அடியில் 27 - 07-1998

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

தங்கைமார், மைத்துனர்,
மருமக்கள்.

134, ஜமுனா வீதி,
நல்லூர்.

(68086)

---

## கலைமகிழ்நன்

நடிப்பிசை மாமணி **திரு.வே.க.பாலசிங்கம்** அவர்களின்

## கலைப்பணி

# கௌரவிப்பு விழா

**இடம்:** யா/ கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலை.
**காலம்:** 1999.08.15 ஞாயிறு பி.ப 5.00 மணி.
**தலைவர்:** திரு.தி.சுபாகரன் (ஆசிரியர்).

மங்களவாத்தியத்துடனான அழைப்பு, பொன்னாடை போர்த்தல், கௌரவ உரைகள், கலை நிகழ்வுகள் என்பன இடம் பெறவுள்ளன.

அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வடமராட்சி கலாரசிகர்கள்.

(68162)

---

## வெளிவரவிருக்கும்

# கவிதை நூல்

**கவிஞர் அல்லை ஆறுமுகத்தால் ஆக்கப்பெற்று**
யாழ். ஆனைப்பந்தி மெ.மி.பாடசாலை அதிபர்
நயினை சி. சோமேஸ்வரபிள்ளை B.A
அவர்களால் அச்சிடப்பட்ட

## 'மனிதமும் மதமும்'

என்ற கவிதை நூல் அண்மையில் வெளிவரவிருக்கிறது. யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் சமஸ்கிருதத்துறைத் தலைவரும் ஆகிய திருமதி கலைவாணி இராமநாதன் M.A. அவர்களது 'அறிமுகவுரை' யையும் பண்டிதர் தரவை சிவ. ஆறுமுகம் அவர்களது முன்னுரையையும் ஆக்கியோனின் 'என்னுரை' யையும் தாங்கி இந்நூல் வருகிறது.

**பக்கங்கள் 28. விலை ரூபா 30.**

(68060)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐக்கிய தேசியக் கட்சி
# உங்கள் குரலுக்குச் செவிசாய்க்கின்றது.
# 21 ஆம் நூற்றாண்டுக்காகக் குரலெழுப்புங்கள்.



அன்பின் நண்பர்களே,

நாம் புதிய ஆயிரமாம் ஆண்டொன்றின் நுழைவாயிலில் உள்ளோம். புதிய நூற்றாண்டின் உதயம், சந்தேகமின்றி எமது வாழ்க்கைக்குப் புதிய சவால்களையும் அழைத்து வருகின்றது. எம்மால் இனிமேலும் கடந்த காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்க முடியாது.

எம்மைத் தவிர முழு உலகமும் வேகமாக முன்னோக்கிச் செல்கின்றது. நாமும் முன்னேற்றத்தை நோக்கிச் செல்ல வேண்டியுள்ளோம். சமாதானமும் சுதந்திரமும் பாதுகாப்பும் உள்ள உண்மையான சுபீட்சத்தை நோக்கிச் செல்ல வேண்டியுள்ளோம்.

இது தொடர்பாக, கடந்த ஐந்து வருடங்கள் பூராவும் எமது வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்துள்ள, எம்மை வாட்டி வதைக்கின்ற தீவிர பிரச்சினைகள் தொடர்பாக உங்கள் கருத்துக்களை பங்களிப்புச் செயற்பாடொன்றின் ஊடாக வெளிக்காட்டும் படி உங்களுக்கு அழைப்பு விடுப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஆதலால் புதிய நூற்றாண்டில் எமது நாட்டை சுபீட்சம் மற்றும் முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்வதற்கு விலைமதிப்பற்ற சேவையைப் புரியக்கூடிய உங்களுடைய தீவிர பங்களிப்பையும் கருத்துக்களையும் நான் வரவேற்கின்றேன்.

நன்றி

**ரணில் விக்ரமசிங்க,**
**தலைவர், ஐக்கிய தேசியக் கட்சி**
1999 ஜூலை.

**கேள்வி 1.** சமுர்தியின் மூலம் வறுமையை ஒழிக்க முடியாது. வழங்கப்படுகின்ற சிறு தொகை போதுமானதாக இல்லை. அதன் மூலம் வறியவர்கள் நிரந்தரமாக வறியவர்களாக்கப்பட்டுள்ளனர். வறியவர்கள் அரசியல்வாதிகளின் அடிமைகளாக ஆக்கப்பட்டுள்ளனர். உங்களுடைய முயற்சியும் தேர்ச்சியும், கிராமிய வளங்கள் மற்றும் உங்களுடைய அமைதியான, நியாயமான பிரார்த்தனைகளுடன் கைகோர்த்து ஒருவரிடமும் கையேந்தாது வாழக்கூடிய, வறுமையிலிருந்து மீளக்கூடிய தொழில் வருமான வழிவகைகள் பேரில் இட்டுச் செல்லக்கூடியதான, அதுவரை சமுர்தியை விட அர்த்தமுள்ள, நிவாரணச் செயற் திட்டமொன்று இன்று தேவையாயுள்ளது.

நீங்கள் இணங்குகின்றீர்களா? ஆம் ☐ இல்லை ☐

வேறு கருத்துக்கள் இருப்பின் எழுதியனுப்புங்கள்.

**கேள்வி 2.** கமத்தொழிலில், கடற்றொழிலில் மட்டுமின்றி இறப்பர், தேயிலைப் பயிர்ச் செய்கையிலும் நஷ்டமேற்பட்டுள்ளது. நியாயமான விலை கிடைப்பதில்லை. விதை, உரம், மருந்து, எண்ணெய், உபகரணங்களின் விலைகள் அதிகரித்துள்ளன. கிராமத்தில் எந்தவொரு முன்னேற்றத்தையும் காணமுடியாதுள்ளது.

கமத்தொழிலையும், கடற்றொழிலையும் பெருந் தோட்டப் பயிர்ச் செய்கையையும் காலத்துக் கேற்ப நவீன மயப்படுத்தி, இலாபமீட்டக்கூடிய தொழில்களாக ஆக்கிக் கொள்வதற்கு, கிராமக் கைத்தொழில்களையும் வியாபாரத்தையும் முன்னேற்றிக் கிராமிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவற்கு, கிராமச் சந்தையிலிருந்து உலகச் சந்தைக்கு மாறுவதற்குக் கை கொடுக்கின்ற, அதுவரை விலையைப் பாதுகாத்துத் தருகின்ற செயற் திட்டமொன்று இன்று தேவையாயுள்ளது.

நீங்கள் இணங்குகின்றீர்களா? ஆம் ☐ இல்லை ☐

வேறு கருத்துக்கள் இருப்பின் எழுதியனுப்புங்கள்.

**கேள்வி 3.** தொழிலின்மை அதிகரித்துள்ளதுடன், இருக்கின்ற தொழில், வருமான வழி வகைகளும் மூடப்பட்டுக்கொண்டிருக்கின்றன. தேர்ச்சியின் மூலமும் திறமையின் மூலமும் பணம் சம்பாதிக்க முடியுமாயிருந்த சந்தர்ப்பங்கள் மூடப்பட்டுள்ளன. அரசாங்கத்தொழில்களுக்குப் பகிரங்கப் போட்டிப் பரீட்சைகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறை இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

புதிய தொழினுட்பத்தினதும் புதிய முகாமைத்துவத்தினதும் அடிப்படையிலமைந்த சர்வதேச ரீதியில் போட்டியிடக்கூடிய தரத்திலான புதிய உற்பத்தி முறைகள், கைத்தொழில்கள், வர்த்தக சுற்றுலாத் துறைத் தொழில்கள் உருவாவதை மேம்படுத்தக் கூடியதும், அதற்குத் தேவையான முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதுமான, போட்டிரீதியிலான உலகை வெற்றிகொள்வதற்குத் தேவையான பயிற்சியையும் அறிவையும் வழங்கி இலட்சக் கணக்கில் தொழில் வருமான வழிவகைகளை உருவாக்குகின்ற, வசதிபடைத்த இலட்சக் கணக்கான மக்களை உருவாக்குகின்ற, செயற் திட்டமொன்று இன்று தேவையாயுள்ளது.

நீங்கள் இணங்குகின்றீர்களா? ஆம் ☐ இல்லை ☐

வேறு கருத்துக்கள் இருப்பின் எழுதியனுப்புங்கள்.

**கேள்வி 4.** பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. மின்சாரம், நீர், தொலைபேசிக் கட்டணங்கள் அதிகரித்துள்ளன. வரிக்கு மேல் வரி விதிக்கப்பட்டுள்ளது. ஏழையின் சவப் பெட்டிக்கும் பணக்காரரின் விஸ்கி போத்தலுக்கும் ஒரே விதத்திலான ஜீ.எஸ்.ரீ. வரி விதிப்பு. உலகச் சந்தையில் மாவு, சீனி, பெற்றோல் விலை குறைந்துள்ளது. ஆயினும் மக்களுக்கு நிவாரணமில்லை. பொருட்களின் விலைகளுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடிய விதத்தில் வருமானத்தை அதிகரித்துக் கொடுக்கக் கூடியதும் வறியவர்களை வரிச் சுமையிலிருந்து பாதுகாத்துக்கொடுக்கின்றதும், உலகச் சந்தையில் விலை குறைவதன் அனுகூலத்தை மக்களுக்குக் கிடைக்கச் செய்கின்றதும், கஷ்டமான காலகட்டங்களில் அரசாங்கம் மக்களது உதவிக்கு வருவதுமான செயற் திட்டமொன்று இன்று தேவையாயுள்ளது.

நீங்கள் இணங்குகின்றீர்களா? ஆம் ☐ இல்லை ☐

வேறு கருத்துக்கள் இருப்பின் எழுதியனுப்புங்கள்.

**கேள்வி 5.** இலவசக் கல்வி சீர்குலைந்துள்ளது. பாடசாலைகள் மூடப்படுகின்றன. கற்றலின் மூலம் முன்னேற முடியுமாயிருந்த வழிகள் மூடப்பட்டுள்ளன. பல்கலைக் கழகத்திற்குப் பிரவேசிப்பதற்கு இரண்டு பரீட்சைகள்; உயர் தரத்திற்கு 7 பாடங்கள்; ஆசிரியர்கள் இல்லை; ஆயினும் பாடம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. பல்கலைக் கழகங்கள் அமைச்சரின் கைக்கு; நிர்வாகத்திற்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள்; கேள்விப் பார்வைகளின்றி செய்யப்படுகின்ற கல்விச் சீர்திருத்தங்களினால் கல்வி மேலும் சிக்கலுக்குள்ளாகியுள்ளது.

கல்விக்காகச் செய்யப்படுகின்ற மாபெரும் முதலீட்டின் மூலம் 21 ஆம் நூற்றாண்டின், அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தின் போட்டி நிலைக்கு முகங்கொடுக்கக்கூடிய புதிய பாடங்கள், புதிய அறிவு, புதிய தொழில் நுட்பம் கிராமத்திற்கும், நகரத்திற்கும் சமமாகக் கிடைக்கின்ற, அறிவு மற்றும் கல்விக்கேற்ப பிரதிபலன் கிடைக்கின்ற, ஒருவரது பிறப்பிலிருந்து மரணம் வரை தொடர்ந்து கல்வி பெறக்கூடிய, சந்தைக்கேற்ற விதத்திலான உயர் கல்வியும் தொழிற்பயிற்சியும் பெறக்கூடிய, கல்வியில் அரசியல் தலையிடாத, செயற் திட்டமொன்று இன்று தேவையாயுள்ளது.

நீங்கள் இணங்குகின்றீர்களா? ஆம் ☐ இல்லை ☐

வேறு கருத்துக்கள் இருப்பின் எழுதியனுப்புங்கள்.

**கேள்வி 6.** லாயக்கில்லாத அரசியல்வாதிகளைப் பேச்சுவார்த்தைக்கு அனுப்பியதனால் வாக்குறுதியளிக்கப்பட்ட சமாதானம் உருவாகவில்லை. யுத்தம் அரசியல் நோக்கங்களுக்காக நடாத்தப்படுகின்ற பலிப் பூசையாக மாறியுள்ளது. நான்கு ஆண்டுகளினுள் 12,000 படையினர் இறந்துள்ளனர். வடக்கில் இலட்சக் கணக்கானோர் அநாதைகளாயுள்ளனர். மகாவலித் திட்டங்கள் நான்கிற்குச் செலவு செய்ததை விடக் கூடுதலாகச் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த யுத்தத்தின் மூலம் சிலர் நன்றாகவே சம்பாதித்துள்ளனர். யுத்தம் முடிவடையவில்லை. அதற்குப் பதிலாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தளதா மாளிகையையும் அழித்து, யுத்தம் நாடு பூராவும் பரவியுள்ளது.

நீடித்த சமாதானத்தை முன்னிட்டு எல்லாக் குழுவினரும் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வொன்றுக்கு வருவதற்கு வழி வகுக்கின்ற துரிதமானதொரு சமாதானத்தை உருவாக்கிக்கொள்ள முடியும். அத்தீர்வினுள் எல்லோருக்கும் சமமான சந்தர்ப்பமும் வரவேற்புமுள்ள, இலங்கையர் என்ற தனித்தன்மை உறுதியாகக் கூடிய, நாடு துண்டாடப்படாத அடிப்படையில் எந்தவொரு மாகாணத்திற்கும் பொருளாதார சமூக மற்றும் அரசியல் அபிவிருத்திக்குத் தேவையான அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படக் கூடிய, அதுவரை யுத்த நடவடிக்கைகளை அரசியல் தலையீடுகளின்றி இராணுவத்திடம் ஒப்படைக்கப்படக் கூடியதான செயற் திட்டமொன்று இன்று தேவையாயுள்ளது.

நீங்கள் இணங்குகின்றீர்களா? ஆம் ☐ இல்லை ☐

வேறு கருத்துக்கள் இருப்பின் எழுதியனுப்புங்கள்.

**கேள்வி 7.** போக்குவரத்து எமது தலைவிதியென்றாகியுள்ளது. நேர காலத்திற்கு பஸ் வண்டிகளில்லை. புகையிரதங்கள் இல்லை. கட்டணத்திற்கு ஏற்றதொரு சேவை நடபெறுவதில்லை. பாதையில் இறங்கினால், ஒன்றோ பாதையிலேயே காலத்தைக் கடத்த வேண்டிவரும் இன்றேல் நசுங்கித் தொங்கிச் சென்று களைப்படைய வேண்டிவரும். இரவு காலத்தில் பயணம் மேற்கொள்ள வேண்டியேற்படின் எந்தவொரு வசதியும் இல்லை. பஸ் வண்டி, புகையிரதப் போக்குவரத்தைப் போன்றே வீதிகளும் சீர்கெட்டுள்ளன.

எந்தவொரு நேரத்திலும் கஷ்டங்களின்றி, நெரிசல்களின்றிப் பிரயாணம் செய்யக்கூடிய, தமது காலம் பாதையிலேயே விரயமாகாத, செலுத்துகின்ற கட்டணத்திற்கேற்ப சேவை வழங்கப்படுகின்ற, இலகுவான, செயற்திறனுடன்கூடிய, பண்பான, ஒழுங்கு முறையான சேவையை முதன்மையாகக் கொண்ட போக்குவரத்துச் சேவையைக் கட்டாயப்படுத்தும் பொருட்டு அரசாங்கம் தலையிட்டு நடவடிக்கையெடுக்கின்ற, சிறந்ததொரு வீதி அமைப்பு முறையொன்றை உறுதி செய்கின்ற, செயற் திட்டமொன்று இன்று தேவையாயுள்ளது.

நீங்கள் இணங்குகின்றீர்களா? ஆம் ☐ இல்லை ☐

வேறு கருத்துக்கள் இருப்பின் எழுதியனுப்புங்கள்.

இதற்கு மேலதிகமாக உங்களுடைய வாழ்க்கையுடன் தொடர்புடைய பிரச்சினைகளைப் போன்று புதியதொரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஏற்புடையதான பெறுமதியான கருத்துக்கள் உங்களிடம் இருக்கலாம். தயவுசெய்து அவற்றைக் எமக்கு எழுதி அனுப்பவும்.

இது தொடர்பாக மேலும் கலந்துரையாடுவதற்குத் தேவையெனில் ''சிறிகொத்த''வுக்கு எழுதி அனுப்பவும். உங்களுடைய பெறுமதிமிக்க காலத்தை அர்ப்பணித்து நீங்கள் வழங்கிய பங்களிப்புக்காக நன்றி தெரிவிக்கின்றேன்.

*ரணில் விக்ரமசிங்க*
''சிறிகொத்த''
400, கோட்டே வீதி, பிட்டகோட்டே. தொலைபேசி: 865374

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூரில் முருகனின் வருடாந்த மகோற்சவ வேளையில்

# செம்மணியில் புதைகுழி தோண்டும் தொடர் பணிகள்

## உண்மைகள் வெளிவர வழிபிறக்குமா?

நல்லூர்க் கந்தசாமி கோவில் மகோற்சவம் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகின் றது. எதிர்வரும் செப்ரம்பர் மாதம் எட்டாம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தத் திரு விழாவும் நடைபெற்று உற்சவம் பூர்த்தியடையும் இருபத்தேழு நாள்கள்.(அண்ணளவாக ஒருமாதம் என்றும் சொல்லலாம்) ஒரே திருவிழா அமளி நல்லூரை மட்டுமல்ல குடாநாடு முழுவதையுமே கலகலப்பாக்கிவிடும்.

முன்னரெல்லாம் நல்லூர்த் திருவிழா என்றால் குடாநாடு முழுவதும் தெய்வீகமும் சமயசாரமும் பரந்து பரவிக் கமழும். இப்போது அப்படியல்ல. காலமாற்றம் புதிய போக்கு என்ற பெயரில் நல்லூர்த் திருவிழாக் காலத்தல். சீரழிவுகளே புகுந்து மணக்கின்றன.

இம்முறை இந்த ஒரு மாத திருவிழாக் காலத்தோடும் கோலத்தோடும் சர்வதேசக் கவ னத்தை ஈர்த்துள்ள செம்மணிப் புதைகுழிகள் தோண்டுதலும் சமகால நிகழ்வாகக் குடாநாட்டில் நடைபெறவுள்ளது. நல்லூர் திருவிழாவைப்போல செம்மணிப் புதைகுழிகளைத் தோண்டும் பணி களும் தொடர்ச்சியாக நடைபெறப்போகின்றன. புதைகுழிகளைத் தோண்டுவதற்கான முன் னேற்பாட்டு மற்றும் நீதிமன்ற நிகழ்வுகள் இம் மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகி ஒருமாதகாலம் வரை தோண்டுதல் வேலைகள் நாளாந்தம் (சில நாள் இடைவெளியுடன்) நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதனால் ஆகக் குறைந்தது ஒருவார காலத் திற்கேனும் நல்லூரில் ஆலயத் திருவிழாவும் செம்மணியில் புதைகுழி தோண்டும் 'திருவிழா'வும் ஒரே வேளையில் நடைபெறும் - ஏற்கனவே அறிவித்த அட்டவணைப் பிரகாரம் செம்மணி வேலைகள் நடைபெற்றால்.

முன்னர் இப்பத்தியில் குறிப்பிட்டது போல, யாழ்ப்பாணம் சிவபூமி என்று போற்றப்படும் புண் ணிய பூமியாகும்.

இல்லங்கள் தோறும் யாழ்ப்பாணத்து மக்கள் சமய ஆசார அனுஷ்டானங்களுடன் சிவலிங்க வழிபாடு நடத்திவந்தனர். அதனால் யாழ்ப்பா ணம் முழுவதிலும் சிவலிங்கங்கள் நிறைந்திருந் தன என்றும் சொல்லப்படுகிறது. அதனாலேயே சிவபூமி என்ற காரணப் பெயர் கூறுவாருமுளர்.

ஆனால் இப்போது ஆலயங்களில் காணப்ப டும் சிவலிங்கங்களைவிட வீடுகளில் சிவ்லிங் கத்தை மிக அருமையாகவே காணலாம். அத னாலேயே இந்தப் புண்ணிய பூமி, பாவமண்ணாகி புதைகுழிகள் தோற்றுவிக்கப்பட்டன என்று சமய அபிமானிகள் கவலைப்படுகிறார்கள்.

ஈழத்தமிழர்கள் தமக்கென அரசு அமைத்து அரசாங்கம் நடததியவர்கள். தம்மைத்தாமே ஆண்டு சுதந்திரமாக வாழ்ந்தவர்கள். அதனால் தாமிழும் சைவமும் செழித்தோங்கி வளர்ந்திருந் தன என்பதற்கான ஆதாரங்களில் நல்லூரும் ஒன்று. இங்குதான் வீரத்தமிழ் மன்னன் சங்கி லியனின் செங்கோல் வளையாத நல்லாட்சி நடைபெற்று மக்கள் இன்பமாக வாழ்ந்தார்கள்.

நல்லாட்சி நடைபெற்ற நல்லூர் சைவத்தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றிலும் சமய வரலாற் றிலும் பதிவாகிய புகழ்பூத்த மண். செம்மணி நல்லூரை அடுத்த நிலப்பகுதி. முன்னர் நல்லூரு டன் சேர்ந்த பிரதேசம். அவ்வாறு பார்த்தால் நல்லூரின் ஒரு கோடியில் ஆலயத் திருவிழாவும் மறுகோடியில் புதைகுழி தோண்டும் 'திருவிழா வும்' நடக்கப்போகின்றன.

சமகாலத்தல் ஒரே நாள்களில் இவ்வாறு நடைபெறும் என்று எவரும் எதிர்பார்த்திருக்காத 'அபூர்வநிகழ்வு" எனவும் இதனைச் சொல்லலாம். ஆனால் குடாநாட்டு மக்களின் மனதில் ஆழமா கச் சென்று குத்தும் நிகழ்வு என்பதுமாகும்.

குடாநாட்டு மக்களின் இதயங்களைக் குத்

**உள்ளும் புறமும்**

**குறுமுனி**

தும் நிகழ்வாக மட்டும் செம்மணிப் (படு கொலை களின் மறைப்பிடங்களான) புதைகுழிகளின் விவ காரம் அமையவில்லை உலகெங்கும் வாழும் தமிழர்களின் இதயங்களையும் அனைத்துல கிலும் வாழும் மனிதநேயம்கொண்ட சகல இத யங்கைளயும் குத்திக் காயப்படுத்தியுள்ளது.

பாதுகாப்புடன் வைத்திருப்பேன் என்று அன்பொழுக அழைத்துக கொன்றுகுவித்த 'நய வஞ்சகம்' அர்ங்கேறிய அலங்கோலமான விவ காரமாக சர்வதேச மட்டத்தில் செம்மணி விவ காரம் விம்பமாகத் தெறித்துப் பரவியுள்ளது.

உலகத்தின் பார்வை இவ்வாறெனின் சரி யாக மூன்று வருடங்களுக்கு முன்னர் காணாமற் போனதாகக் கருதப்படும் இளைஞர் யுவதிகளின் பெற்றோரின் இதயம் நாளாந்தம் இரத்தம் கசிந்த வண்ணம் இருக்கும் என்பதனை நேரில் படம் பிடித்துக்காட்டும் தேவை ஒன்று உண்டா?

ஆம். மூன்று வருடங்கள் கழிந்த பின்னரும் தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் மனம் பேதலித்தவர்களாக, நடைப் பிணங்களாக இவர்கள் வாழ்ந்துகொண்டிருப்பதை அரசாங்கம் மனித இயல்புடன் இன்னும் உணர் வதாக இல்லை.

### நம்பிக்கை இழந்தனர்

தமது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது அல்லது எங்கிருக்கிறார்கள் என்ற விவரங்கள் அரசாங்கத்தின் மூலம் ஏதோ ஒருவகையிலாவது தெரியவரும் என்று எதிர்பார்த்திருந்த காணாமற் போனோரின் பெற்றோர்கள், களைத்து விட்டார் கள், சோர்ந்துபோனார்கள்.

அரசாங்கம் அப்போதும், இப்போதும் என்று பலதரப்புக்களைக் கொண்டும் நடத்திய விசார ணைகள் மூலம் தமது பிள்ளைகளின் நிலை குறித்த தகவல்கள் எதுவும் வெளிவரும் என்ற நம்பிக்கையையும் இழந்துவிட்டார்கள்.

பாதுகாப்பு அமைச்சின் விசாரணைக்குழு, ஜனாதிபதி ஆணைக்குழு, இராணுவ பொலிஸா ரின் விசாரணைக்குழு, 512ஆவது படைப்பிரிவின் விசாரணைக்குழு, இரகசியப் பொலிஸ் விசார ணைக்குழு என்ற எத்தனையோ குழுக்கள் கடந்த மூன்று வருடகாலமாக விசாரணை நடத்தி, விவ ரங்கள் சேகரித்த போதிலும் -

காணாமற்போன தமது பிள்ளைகளின் நிலை குறித்து ஒரு சிறு பச்சைக் கோட்டைத்தானும் இன்னும் காணமுடியவில்லை. இனியாவது காட்டு வார்கள் என்பதில் துணிவும் நம்பிக்கையும் இல்லை என்று பெற்றோர்கள் சொல்லுகின்றார் கள்.

பாதுகாப்பு அமைச்சு விசாரணைக்குழு நடத் திய விவரம் சேகரித்தலின் பின்னர், காணாமற் போனவர்களில் சிலர் இறந்துவிட்டதாகப் பாது காப்பு அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட் டதாக அறியவந்தது. எனினும் இதுவரையும் விவரம் எதுவும் அரசினால் வெளியிடப்பட வில்லை.

அவ்வாறு வெளியிடாமல் வெளியுலகத்திற்கு அரசின் 'நயவஞ்சகம்' பகிரங்கமாகிவிடும் என்ற அச்சமோ என்னவோ தெரியாது. ஆனால் இப் போது செம்மணி விவகாரம் மூலம் எல்லாம் தெரிந்த பின்னரும் பாதுகாப்பு அமைச்சு விசார ணைக்குழு வெளியிட்டவிவரத்தை தமக்குத் தெரிவிக்கவில்லை என்பதிலிருந்தே இந்த விசார ணைகள் வெறும் பெயருக்கு நடக்கின்றன என் பதனைப் பெற்றோர்கள் கிரகித்துக்கொண்டுள் ளனர்.

கிருஷாந்தி குமாரசுவாமி, அவரது தாயார் இராசம்மா, சகோதரன் பிரணவன், அயலவர் சி.கிருபா ஆகியோர் மற்றும் கோண்டாவிலில் மலசலக்கூடக்குழியிலிருந்து மீட்கப்பட்ட உரும் பிராய் ரஜனி, செம்மணிப் புதைகுழியிலிருந்து எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்ட மீசாலையைச் சேர்ந்த எஸ்.சதீஸ்குமார், நல்லூரைச் சேர்ந்த பாபு ஆகியோருக்கு நடந்த கதி வெளிவந்த நிலையிலும் -

1996ஆம் ஆண்டு பிற்பகுதியில் அரியாலைப் பகுதியில் கொலைசெய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட பலரின் பெயர்களை கோப்ரல் சோமரத்ன ராஜ பக்ஷ பட்டியலிட்டு தெரிவித்த நிலையிலும் -

காணாமற்போனோர் குறித்து குடாநாட்டில் நடத்தப்பட்ட விசாரணைகளின் பெறுபேறாக தமது பிள்ளைகள் குறித்து எதுவும் தெரியவரும் என்ற நம்பிக்கையை பெற்றோர்கள், உறவினர்கள் அடி யோடு இழந்துவிட்டனர் எனலாம்.

அதனால் ஜனாதிபதிக்கு - ஆறு மாதங்களில் சுயேச்சையான விசாரணைக்குழு நியமிப்பதாக நேரில் சந்தித்தபோது வாக்குறுதி அளித்துவிட்டு அதுகுறித்து "மறந்துபோன" ஜனதிபதிக்கு - அவசர கடிதம் ஒன்றைப் பெற்றோர்கள் கடந்த வாரம் அனுப்பியுள்ளனர்.

காணாமற்போனோருக்கு என்ன நடந்தது? அவர்களின் தற்போதைய நிலை என்ன? அவர் கள் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றார்களா? அவ் வாறாயின் எங்கு? - என்ற விவரங்களை வெளி யிடுமாறு பெற்றோர்கள் ஜனாதிபதியிடம் கேட் டுள்ளனர்.

இதற்கும் பதில் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கவில்லை. கடிதம் கிடைத்ததாகப பதில் வரலாம். விவரமான பதில் வந்தால் செம்மணி விவகாரம் முடிவுற்ற பின்னர் விவரங்களைத் தருகிறோம் என்று தகவல் வந்தாலும் ஆச்சரி யப்படுவதற்கில்லை.

ஆகையால் இனி அரசாங்கத்துக்கு எந்தக் கடிதமும் அனுப்பிப் பயனில்லை. செம்மணி புதைகுழி கண்டுபிடித்தவர்களுக்கு காத்திருப்ப தைத்தவிர நொந்துபோன இதயங்களுக்கு வேறு வழியில்லை.

மிகவும் பயங்கரமான 'கண்டுபிடிப்புக்களை' வெளியிடப்போகும் செம்மணிப் புதைகுழித் தோண்டுதல் சீராகவும் நேராகவும் நடைபெற வேண்டும் என்பதே மக்கள் எதிர்பார்ப்பும் விருப் பமும் ஆகும்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளை வெறும் பார் வையாளராக அன்றி அவர்கள் கேட்டது போல முழு அதிகாரமும் கொண்ட கண்காணிப் பாளராக அங்கீகரித்து புதைகுழி தோண்டும் பணிகள் நடைபெறவேண்டும். ஏனைய விடயங் களில் 'பெயருக்குச்' செய்து பூசி மெழுகுவது போல இது விடயத்திலும் அரசு நடந்துகொள் ளாது என நம்புவோமாக.

அரசாங்க நிர்வாகத்தில் ஒளிப்பு மறைப்பில் லாமல் (Transparency) நடக்கவிரும்புவதாகக் கூறும் அரசு செம்மணி விவகாரத்திலும் உண் மையை ஏற்றுக்கொள்ளும் நேர்மையுடன் செயற் படுமாக!

* * *

## கடல்வளத்தை காசுவளமாக்கும் கடற்றொழில் அடித்தரைக்கு வீழ்ச்சி

யாழ்ப்பாணக் குடாநாட்டின் இரண்டு பிரதான தொழில்களில் கடற்றொழிலும் ஒன்று. இந்த வகையில் பல ஆயிரக்கணக்கான மக்களின் ஜீவனோபாயத்தின் மூலாதாரமாக விளங்கியவள் கடல் அன்னை. பல்லாண்டு காலமாக நீடித்த இந்தச் சிறப்பு இப்போது மங்கிப்போய்விட்டது.

தமிழ்ப் பகுதிகள் மீது கொழும்பு அரசாங்கங் களின் அடக்குமுறை வெளிப்படையாகக் கட்ட விழ்த்து விடப்படுவதற்கு முன்னர், நாட்டின் கட லுணவுத் தேவையில் 25சத வீதத்துக்கும் மேலா னதை வடக்கு மட்டும் தந்து கொண்டிருந்தது. ஆனால் 1983ஆம் ஆண்டின் பின்னர் வடக்கு - கிழக்கினதும் குறிப்பாகக் குடாநாட்டினதும் கட லுணவு உற்பத்தி கிடுகிடுவென வீழ்ச்சி கண்டது. கடந்த பதினைந்து வருடங்களில் குடாநாட்டின் கடலுணவு உற்பத்தி ஒரு சதவீதத்துக்கு- அடி மட்டத்துக்கு வீழ்ச்சி கண்டுள்ளது. இங்கே தரப் பட்டுள்ள அட்டவணை அதனை மிகத்தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

நாட்டின் கடலுணவுத் தேவையில் இன்னும் சுயதேவையை நிறைவேற்றும் நிலைக்கு அரைத் தூரம் தானும் வந்ததாக இல்லை. வெளிநாடுக ளில் இருந்து தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் வகைகள் பெருமளவில் இறக்குமதி செய்யப்படு கின்றன. ஆனால் வடக்கு - கிழக்கின் கடல் வளம் தக்கவாறு பயன்படுத்தப்படவில்லை. இப் பிரதேசத்தின் கடற்றொழிலாளிகளின் நலன்கள் எல்லா வகைகளிலும் புறக்கணிக்கப்படுகின்றன.

அவர்களின் நலன்கள் ஒருபுறமிருக்க, நாளாந்த வாழ்க்கையை ஓட்டுவதற்கு தொழி லைச் செய்வதே கேள்விக் குறியாக்கப்பட்டுள் ளது. குடாநாட்டில் மட்டுமன்றி தமிழர் பிரதேசம் முழுவதிலுமே இதேநிலைதான். முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்டங்களின் கடற்பரப்பில் தொழில் செய்யும் உரிமை சிங்கள மீனவருக்குச் சட்டபூர்வமாக்கப்பட வேண்டும் என்பதில் அரச அதிகாரிகளுக்கு உள்ள அக்கறை தமிழ்ப் பிர தேச மீனவர்கள் மீதும் இல்லை, இப்பிரதேச கடற்றொழில் அபிவிருத்தி மீதும் இல்லை.

குடாநாட்டின் மீன்பிடித் தொழில் தற்போது உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையா கியது மட்டுமன்றி, கண்றாவியாகியும் உள்ளது. கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் அரச விதிகளின், அவற்றை அமுல் செய்யும் படையினரின் அடி மைகள் என்ற நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. ஏனையோரைப் போலவே அவர்களுக்கும் தொழில் செய்யும் உரிமை உண்டு. அவற்றைப் பறிக்கும் அல்லது தடுக்கும் அதிகாரத்தை யாருக்கும் சொத்தாக எழுதிக்கொடுக்க முடி யாது என்பதனை உணர்வதாக இல்லை. 'இம்' என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம் என்ற 17ஆம் 18ஆம் நூற்றாண்டு வகை அதி காரங்களுக்கு அடிபணியும் நிலையில் அவர்கள் வாழவேண்டிஉள்ளது, தொழில் செய்யவேண்டி உள்ளது.

1989 ஆம் ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட கடல் வல யத்தடைச்சட்டம் தமிழ்ப் பிரதேச மீனவர்களின் - கடற்றொழிலாளர்களின் - தொழில் சுதந் திரத்தை மிகப் பெரியஅளவில் பறித்தது. அது தான் ஆரம்பம் என்பதல்ல. அதற்கு முன்னரே மீனவர்கள் கண்டபடி தாக்கப்படுவதும், சுடப் படுவதும், கொல்லப்படுவதும் கடற்படையின ருக்கு வழங்கப்பட்ட தாராள அதிகாரங்களாக இருந்தன.

தமிழ்ப் பகுதிகளின் பாதுகாப்புக்கு கடற் றொழில் செய்பவர்களே தடையாக, குந்தகமாக இருக்கிறார்கள் என்ற தோரணையில் அவர்கள் மீது இராணுவ அடக்குமுறையும் அடாவடித்தன மும் முழுவீச்சில் கட்டவிழ்த்து விடப்பட்டன. விடுதலைப்புலிகளுக்கு அதிகஅளவில் துணை போவோர் இவர்களே என்ற பொருந்தாத சந் தேகத்துடன் படைத்தரப்பு இவர்களைப் பார்த் ததும் உண்டு. தாம் உண்டு தமது தொழில் உண்டு என்று அப்பாவிகளாய் இருந்த மீனவர் கள் "சந்தேக நபர்களாக"ப் புள்ளி குத்தப்பட் டனர். 1985 ஆம் ஆண்டில் தொழிலுக்காக "தூய ஒளி" படகில் கடலுக்குச் சென்ற குருநகரைச் சேர்ந்த 31 மீனவர்கள் கடற்படையினரால் கொல் லப்பட்ட சம்பவம் மீனவர்களுக்கு எதிரான அடக்குமுறையின் சரித்திரப் பதிவாகும்.

கடல்வலயத் தடைச் சட்டம் தமிழ்ப் பிரதேச மீனவர்களை மேலும் நசுக்கியது, பலரைப் பலி யும் கொண்டது. நாளொரு கட்டுப்பாடும் பொழு தொரு தடையுமாக கொண்டு வரப்பட்ட அவர் களின் வாழ்க்கை கசக்கிப் பிழியப்பட்டது. போர் நீக்க, வருடங்கள் செல்லச்செல்ல குடாநாட்டு மீனவர் நிலை மேன்மேலும் மோசமாகி உள்ளது.

யாழ்ப்பாணம் அரசாங்கப் படைகளின் கட்டுப் பாட்டில் வந்த பின்னரும், கடற்றொழில் செய் வோரின் கஷ்டங்கள் நீங்குவதற்குப் பதிலாக மேலும் அதிகரித்து வருவதுதான் மிகவும் விச னத்துக்குரிய விடயமாகும். மீனவர்களின் தொழில் உரிமைகள் மேலும் பறிக்கப்படுவ தோடு மட்டுமன்றி, அவர்கள் தொழில்புரிவது உயிராபத்தானதாகவும் மாறியுள்ளது.

பதினைந்து வருடங்களுக்கு முன்னர்,

இயந்திரப் படகுகள் வைத்து ஆழ்கடல் சென்று தொழில் செய்து கடல்வளத்தை காசு வளமாக்கிய மீனவர்கள் இப்போது கடலின் கரையில் தொழில் செய்கிறார்கள். அதுவும் கூட உயிரைக் கொண்டு போகும் தொழிலாக மாறியுள்ளது.

கடந்த புதன்கிழமை காலை குருநகரிலி ருந்து இறால் பிடிக்கச் சென்ற இரண்டு மீனவர் கள் - குடும்பஸ்தர்கள் இருவர் - படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமான சம்பவம் இதற்குப் பச்சையான உதாரணம். குடா நாட்டு மக்கள் மீளக்குடியேறிய கடந்த மூன்றரை வருடங்களில் இதற்கு முன்னரும் இது போன்ற கொலைச் சம்பவங்கள் நடை பெற்றிருக்கின் றன.

வாழ்வதற்காகச் சாப்பிட வேண்டியுள்ளது. உண்பதற்காக உழைக்க வேண்டியுள்ளது. ஜீவ னோபாயத்துக்குத் தேவையான வருமானத்தை போதியளவு பெறமுடியவில்லை எனினும் தெரிந்த - பயிற்சியுள்ள - தொழிலையே செய்ய வேண்டிய கட்டாயம்.

கடற்றொழில்தான் பயிற்சியான தொழில். ஆனால் அதனைச் செய்வதற்கு விதிக்கப்பட் டுள்ள கட்டுப்பாடுகளும் தடைகளும் தொல்லை களும், இத்தனை இறுக்கத்தில் அகப்பட்டு அத னைச் செய்யத்தான் வேண்டுமா என்ற விரக்தி நிலைக்கு குடாநாட்டு மீனவர்களைத் தள்ளியுள் ளது.

உயிரோடு வாழவேண்டுமே என்று எல்லா வற்றையும் சகித்துக் கொண்டும் தாங்கிக் கொண்டும் அரைப் பிழைப்புக்காக கடலுக்குச் சென்றால், உயிரைப் பறிகொடுப்பதுதான் நியதி என்றால், சாப்பிடாமலே செத்துவிடுவது மேல் என்ற உணர்வலையே இப்போது மீனவர்கள்

**யாழ்ப்பாண மாவட்ட**
**மீன்பிடி அளவு அட்டவணை**

| ஆண்டு | மீன்பிடி | அளவு |
|---|---|---|
| 1983 | 49, 721 | தொன் |
| 1984 | 23, 175 | " |
| 1985 | 23, 775 | " |
| 1986 | 13, 053 | " |
| 1987 | 11, 981 | " |
| 1988 | 24, 702 | " |
| 1989 | 25, 708 | " |
| 1990 | 23, 369 | " |
| 1991 | 1, 191 | " |
| 1992 | 1, 327 | " |
| 1993 | 1, 514 | " |
| 1994 | 3, 112 | " |
| 1995 | 2, 663 | " |
| 1996 | 1, 540 | " |
| 1997 | 2, 762 மெ. | " |
| 1998 | 2, 420 " | " |
| 1999 | 1, 720 " | " |

(ஜனவரி - ஜூன் வரை)

மத்தியில் மேலோங்கி நிற்கிறது. குடாநாட்டில் இயல்பு நிலை திரும்பிக்கொண்டிருப்பதாகக் காட்டிக் கொள்ள விரும்பும் அரசாங்கம் மக்கள் தமது தொழிலைச் செய்வதற்கான சுதந்திரத்தை தன்வசமாக்கிக் கொண்டது ஒருபுறமிருக்க, படையினர் விதிக்கும் விதிமுறைகளைத் தட் டாது கடைப்பிடித்த பின்னரும் தொழிலுக்குச் சென்றவேளை சுட்டுக்கொல்லப்படுவதாயின் ஆட் சியின், நிர்வாகத்தின் அர்த்தம் என்ன? நோக் கம் என்ன?

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மீனவர்கள் இடப் பெயர்வின் பின்னர், 1996 பிற்பகுதியில் மீளக் குடியமர்ந்த பின்னர் கரையிலிருந்து 500 மீற்றர் தூரம் வரை மட்டுமே கடலில் சென்று மீனவர்

(6ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் முருகனின்.......

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் தொழில் செய்யலாம் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. இந்தத் தூரம் பின்னர் படிப்படியாக விஸ்தரிக்கப்படும் என்று படைத்தரப்பினர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு உறுதி அளித்திருந்தனர். ஆனால் மூன்றரை வருடங்கள் கழிந்தும் இன்னமும் உத்தியோகபூர்வமான மாற்றம் வரவில்லை.

மூன்று கிலோமீற்றம் தூரம்வரை சில இடங்களில் காலநிலைக்கு ஏற்ப பொறுப்பதிகாரிகளின் சொந்த முடிவுப் பிரகாரம் அனுமதி வழங்கப்படுகிறது. ஆனால் அது எல்லா இடங்களுக்கும் பொருந்தக் கூடிய பொது உத்தரவாக - உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது.

நிலத்தில் எல்லை பிரித்து வேலி போடும் மனிதன், எல்லை இல்லாத கடலுக்கும் எல்லை பிரித்ததால் வந்த வினையா இது என்று கேட்கத் தோன்றுகிறது. கவிஞர்கள், கதாசிரியர்கள், எழுத்தாளர்கள் என்று அறிஞர்கள் எல்லாம் கடலை எல்லையுள்ள ஒன்றாகப் பார்ப்பதை விரும்பாத அதிகாரவர்க்கத்தினர் தோற்றுவித்ததே கடலுக்குள் போடப்படும் எல்லை!

கடல் எல்லை மட்டுந்தானா கடற்றொழிலா ளர் மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடும் தொல்லையும்? இல்லவே இல்லை;

கீழே பட்டியலைப் படித்துப் பாருங்கள்.

*கடலில் தொழில் செய்வதற்கான நேரமும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நேர அட்டவணை இடத்துக்கு இடம் வித்தியாசப்படும்.

* இயந்திரப் படகில் சென்று மீன் பிடிக்க அரசாங்கம் பெயரளவில் அனுமதி வழங்கியபோதிலும், இங்கு தளத்தில் உள்ள படையினரின் அனுமதி இன்னும் கிடைக்கவில்லை.

* மீனவர்களின் அடையாள அட்டைகள் அடிக்கடி மாற்றப்படுகின்றன. உதாரணமாக குருநகர்ப்பகுதி மீனவர்களுக்கு ஏழாவது தடவையாகப் புதிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. அனேகமாக ஒவ்வொரு பொறுப்பதிகாரி கடமையேற்றதும் மீனவர் அடையாள அட்டை மாற்றப்படுகிறது. வெவ்வேறு வகைத் தொழில் செய்பவருக்கும் வெவ்வேறு நிறங்களில் அடையாள அட்டைகள்.

* வள்ளங்களில் பாய்மரம் கட்டிச் செல்வதற்குத் குருநகர், பாஷையூர், மணியந் தோட்டம் பகுதிகளின் மீனவருக்குத் தடைவிதிக்கப் பட்டிருந்தது. இவ்வருடம் மே மாதம் ஏழாம் திகதியிலிருந்து அந்தத் தடை நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும் இன்னும் செயலளவில் நடைமுறைக்கு வரவில்லை.

*சாரத்துடன் சென்று மீன்பிடிப்பதற்கு குருநகர் பகுதி மீனவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஆனால் நீளக்காற்சட்டையுடன் இறால் பிடிப்பதற்காக சிறுத்தீவுப் பகுதிக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

குடாநாட்டின் மீன்பிடித்துறை, மீனவர்கள் பற்றிய விவரங்களும் அவர்கள் தெரிவிக்கும் முறைகளில் சிலவும் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

* யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்த கடற்றொழிலாளர் குடும்பங்கள் இடப்பெயர்வின் போது வன்னி மற்றும் தமிழகத்துக்குச் சென்று வாழ்கின்றன. 10,631 மீனவர் குடும்பங்களே இப்போது குடாநாட்டில் மீளக்குடியமர்ந்துள்ளன.

* முன்னர் குடாநாட்டில் 7,200 மீன்பிடிக் கலங்கள் பாவனையில் இருந்தன. அவற்றில் 90 சதவீதமானவை அழிக்கப்பட்டும் அழிந்தும் போய்விட்டன.

* முன்னர் இயந்திரப் படகுகளில் சென்று தொழில் செய்தவர்கள் இப்போது கட்டுமரங்களையும் வள்ளங்களையும் வலித்துச் சென்று தொழிலில் ஈடுபடுகின்றனர். இதனால் அவர்களின் உடல்வலுக் குறைந்து களைப்படை கிறார்கள், பெரும் கஷ்டப்படுகிறார்கள். ஒரு வாரம் தொழிலுக்குச் சென்றால் அடுத்த வாரம் ஆஸ்பத்திரிக்குப்போய் சிகிச்சை பெறும் பரிதாபமான நிலையைக் காணமுடிகிறது.

* மீன்பிடிக்கும் தூரம், நேரம் என்பவற்றில் உள்ள கட்டுப்பாடுகளால் வருவாய்க்குப் போதியளவு மீன்வகைகளைப் பிடிக்கமுடிவதில்லை. அதனால் ஜீவனோபாயத்துக்கு கஷ்டப்பட நேரிடுகிறது.

* மீன்பிடி உபகரணங்களை இழந்துள்ள சில இடங்களைச் சேர்ந்த மீனவர்களுக்கு நன்கொடையாகவும் கடன் அடிப்படையிலும் அவற்றை வழங்குவதற்கு ஏற்பாடாகி உள்ளது. ஆனால் அந்த உபகரணங்களைப் பயன்படுத்தித் தொழில் செய்வதற்கு இடமின்றி மீனவர்கள் செய்வதறியாது உள்ளனர்.

- பொன்னாலைப் பகுதி மீனவர்களுக்கு இந்த நிலைமை உண்டாகியிருப்பது ஓர் உதாரணம். அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் இவர்களுக்கு மீன் பிடி உபகரணங்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளது. இதேவேளை, கொக்குவிலமேற்கு, ஆனைக்கோட்டை ஆகிய இடங்களைச் சேர்ந்த கடற்றொழிலாளரும் இதே கஷ்டத்தை அனுபவிக் கின்றனர்.

* யாழ். மாவட்டத்தில் கடற்றொழிலாளருக்கு உண்டான இழப்புகளுக்கு நிவாரணமோ உதவிகளோ அரசதரப்பில் இருந்து இன்னும் கிடைக்கவில்லை. அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம், ஐ.நா.அபிவிருத்தித் திட்டம் ஆகியனவே சில உதவிகளைச் செய்துள்ளன.

* வடமராட்சிப் பகுதியில் பி.ப. 4 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை இறால் பிடிக்க அனுமதிக்க வேண்டும் என்று சிபார்சு செய்யப்பட்ட போதிலும் அதுவும் இன்னும் கவனத்துக்கு எடுக்கப்படவில்லை.

- இவ்வாறாகப் பல கஷ்டங்களையும் தொல்லைகளையும் தாங்கிக் கொண்டு தமது ஜீவனோபாயத்தை நடத்த வேண்டிய துரதிர்ஷ்டம் குடாநாட்டு மீனவருக்கு. இங்கு போர் நடைபெற்ற போதுதான் பல இழப்புக்களையும் நஷ்டங்களையும் எதிர்நோக்க வேண்டி இருந்ததென்றால், இப்போது பல கட்டுப்பாடுகளுக்கும் தொல்லைகளுக்கும் முகம் கொடுக்க நேரிட்டுள்ளது.

எல்லாவற்றுக்குமமேலாக தொழில் செய்யப் போன வேளை உயிரைப் பறிகொடுக்கும் நிலைமை உருவாகி இருப்பது மிகவும் ஆபத்தானதாகும். குடாநாட்டில் இந்தவகையில்தான் இயல்புநிலை திரும்பும் என்றால் மக்கள்பாடு என்னாவது? அத்தகைய இயல்புநிலை வேண்டாம்!

கடலுக்குத் தொழிலுக்குப் புறப்படும் குடும்பத்தலைவன் வீடு வந்து சேர வேண்டும் என்று இல்லத்தலைவி நேர்த்தி வைத்துத்தான் வழியனுப்புவது உண்டு. போர்க்களம் செல்லும் வீரன் சமரில் மடிவானோ உயிருடன் திரும்புவானோ என்ற ஏக்கம் தலைவியை வாட்டுவது போல, மீனவனின் மனைவியும் ஏங்குவது உண்டு.

கடல் ஆழமானது இருந்தாறபோல பெருங் காற்று வீசும். மழையும் பெய்யும் உயர்ந்து பொங்கும். அலையின் வீச்சோடு வள்ளம் அடிபட்டுப் போகலாம். திசைமாறிப் போகலாம். அல்லது அமிழ்ந்தும் போகலாம். இத்தனையும் இயற்கையின் தாக்குதல்களாக அமைபவை.

அவற்றை எதிர்கொள்ளும் துணிவும் வீரமும் சமயோசித புத்தியும் உடற்பலமும் உள்ளவனே அலைகடலிலும் ஆழ்கடலிலும் தொழில் செய்ய இயலும். இத்தகைய இயற்கையின் சோதனைகளால் அவனுக்குச் சில சந்தர்ப்பங்களில் உயிராபத்து வருவதுண்டு. ஆனால் குடாநாட்டில் மனிதரால் உயிராபத்து வரும் நிலை வந்திருப்பது, இன்னும் இங்கு போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதோ என்ற கேள்வியையே எல்லோர் மனதிலும் எழுப்புகிறது.

யாழ்ப்பாணம் கடல்வளம் நிறைந்த பிரதேசம். கண்டத்திட்டு என்ற கடற்பரப்பு பல சதுரமைல்கள் விஸ்தீரணம் கொண்டது. யாழ்ப்பாணத்திற்கும் மன்னாருக்கும் இடையில் அமைந்த இந்தக் கடற்பரப்பில் குடாநாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யப்கூடிய கடல் வளங்கள் இருப்பதாக அறியப்படுகிறது.

அத்தகைய ஒரு பிரதேசத்தில் கரையில் நின்று மீன்பிடித் தொழில செய்வதும் உயிர் ஆபத்தென்றால் இத்துறை வளரவும், சிறக்கவும் வாயப்பேது? தமிழர்களுக்கென சுயாட்சி உரிமை வராதவரை இந்த வளங்கள் எல்லாம் வீணே வற்றிப்போக வேண்டியதுதானா.....? எங்கள் பிரதேசத்தின் பொருளாதாரம் தொடர்ந்தும் ஒல்லியாக நலிந்து போகும் நிலை கவலைக்குரியதாகும்.

விவசாயமும் கடற்றொழிலும் பாதுகாக்கப்படாவிட்டால் எங்கள் பொருளாதாரம் எங்களைக் காப்பாற்றாது.

## எழுதுநர் சங்க கூட்டம்


யாழ்ப்பாணம், ஓக.14

உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இந்நிகழ்வில் கெளரவ விருந்தினர்களாக பலர் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர். உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் 3ஆவது வருடாந்தக் கூட்டம் இதுவாகும். (ஐ)

## 31 ஆம் நாள் நினைவலைகள்

14-08-1999

அன்னை மடியில்
08 – 12 – 1949



ஆண்டவன் திருவடியில்
15 – 07 – 1999

அமரர்

**தம்பித்துரை கமலநாதன் அவர்கள்**

(இயக்குநர் நொதோன் மோட்டோர் வேக்ஸ்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்).

எம் குடும்பத் தலைவா! உங்களைப் பிரிந்து நான்
ஊனாய் உருகித் துடிக்கின்றேன் ஐயா!
அப்பா, அப்பா என நம் குழந்தைச் செல்வங்கள்
இருவரும் கதறியழுகின்றார்கள்,
காலம் முழுக்க கண்ணீரொடு வாழ காலன்
அழைத்தானோ என கலங்குகின்றனர் பெற்றோர்!
நொதோன் என்ற பெயருக்கு உயிர் கொடுத்து
எங்களை உயர்த்தி வைத்த உத்தமனேஎங்கு
சென்றாய்
என ஏங்கித் தவிக்கின்றார்கள் சகோதரர்கள்,
உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை
நாங்கள் வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மக்கள்,
பெற்றோர், சகோதரர்கள்.

மிஷன் பாடசாலை வீதி,
கோண்டாவில்.

(சி-8496)

## நன்றி நவில்லல் மூளாய் அருணாசலம்

எமது அப்பாவாகிய மூளாய் அருணாசலம் என சிறப்பித்து அழைக்கப்படும் சுந்தரம் அருணாசலம் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்த கொழும்பு நாடாளுமன்ற உறுப்பினர் திரு. R. யோகராஜா அவர்களுக்கும் மூளாய் வைத்தியசாலை வைத்தியர், ஊழியர்கள் இலங்கை வங்கி (K. K. S. Branch) முகாமையாளர், ஊழியர்கள் அவர்கட்கும் கொழும்பு விவேகானந்தா கல்லூரி அதிபர், ஆசிரியர்கட்கும் திருமதி நிகால் பத்ர அவர்கட்கும் மற்றும் தொலைபேசி, தந்தி, கடிதம் மூலம் அனுதாபச் செய்தி அனுப்பியவர்கட்கும் பெரும் சிரமத்தின் மத்தியிலும் வருகை தந்த வரணி மக்களுக்கும் இறுதி யாத்திரையில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருமதி அ. மனோன்மணி
(மனைவி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆஸ்பத்திரி வீதி,
மூளாய்.

(68160)

## ருபெல்லாத் தடுப்பூசி வழங்கல்

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மற்றும் முகாமைத்துவ வணிக பீட மாணவிகளுக்கான ருபெல்லாத் தடுப்பூசி வழங்கல்.

காலம்:- **16-08-99** திங்கள்
**17-08-99** செவ்வாய்

நேரம்:- 12.00 - 4.00 p.m.

இடம்:- பல்கலைக்கழக மருத்துவ நிலையம்.
(Health Centre)

அனைத்து மாணவிகளையும் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கலைப்பீட மாணவர் ஒன்றியம்,
யாழ். பல்கலைக்கழகம்.

(68153)


ACTIVE MULTI-ANTENNA

EUROMIND™

பூஸ்ரர் தேவையில்லை!




உங்கள் டிவியில் அனைத்து அலைவரிசைகளையும் பல்தொழில் திறனுடைய தனியொரு அன்டெனா மூலம் தெளிவாக தங்குதடையின்றிக் கண்டுகளிக்கலாம்!

* VHF/UHF டிவி அலைவரிசைகள்
* FM ரேடியோ அலைவரிசைகள்
* மின்சாரத்தாலும் பற்றரியாலும் இயங்கக்கூடியது

யாழ்ப்பாணத்திற்கான மொத்த வியாபாரிகள் தேவை

மொத்த வியாபாரிகளுக்கு விஷேட விலைக்கழிவு உண்டு

UKAAYE

169, BODHIRAJA MAWATHA, COLOMBO -11.
(Gaswork Street, Pettah)
TEL : 075-370019 FAX : 075-370018


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அதிரடி அரங்கு

நீண்டகாலம் தொண்டர் ஆசிரியர்களாக பணிபுரிவோருக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக - அவர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து அவர்கள் பற்றிய விவரங்களைப் பதிவு செய்து உறுதிப்படுத்துவதற்காக - தொண்டர் ஆசிரியர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்று சில தினங்களுக்கு முன்னர் மாகாணக் கல்வி அமைச்சிலிருந்து இங்கு வலயக்கல்விப் பணிமனைகளுக்கு அனுப்பப்பட்டது. அதில் சுமார் அறுநூறு பேரின் பெயர் விவரங்கள் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

ஆனால் பட்டியல் வந்து சேர்ந்த அன்றே மாலையில் திருகோணமலையில் இருந்து மறுஉத்தரவு வந்தது - பட்டியல் தொடர்பாக மேல்நடவடிக்கைகள் எடுப்பதை உடன் நிறுத்தும்படி! ஏன் அப்படி இடைநிறுத்தினார்கள் என்பதை விசாரித்துப் பார்த்தபோது புதிய புதிய தகவல்கள் வெளிவந்தன.

நீண்டகாலம் தொண்டர் ஆசிரியர்களாக இருந்த பலரின் பெயர்கள் இந்தப் பட்டியலில் இல்லை. பலரின் பெயர்கள் புதிதாக இடைச் செருகல் செய்யப்பட்டுள்ளனவாம். இந்தத் திருகுதாளம் அம்பலமானதை அடுத்தே பட்டியல் தொடர்பான மேல்நடவடிக்கைகளை இடைநிறுத்தும் உத்தரவு வந்திருக்கின்றது.

இத்தகைய பட்டியல் நியமனங்களை நம்பி, தமக்கு நெருங்கியவர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுத்துவிடலாம் என்ற நப்பாசையில், யாழ் நகரில் உள்ள பிரபல கல்லூரி ஒன்றின் அதிபர் ஒரே (தமது) பிரதேசத்தைச் சேர்ந்த ஆறு,ஏழு பேருக்கு தமது பாடசாலையில் தொண்டர் ஆசிரியர் நியமனம் கொடுத்திருப்பதாகவும் ஒரு தகவல் - ஒவ்வொரு ஆசிரியருக்கும் தினசரி ஒரு சில பாடங்கள் மட்டுமே வழங்கப்படுகின்றன.

தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி இவ்வாறு நேற்று வந்தோருக்கு அவர் நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிறார் விடயமறிந்த ஒருவர்.

ஆனால் ஒழுங்கு முறைப்படி, குளறுபடியின்றி, சேவையின் அடிப்படையில், நியாய பூர்வமான வகையில் இந்த நியமனங்கள் வழங்கப்படும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துக்கு உறுதியளித்திருக்கின்றார் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர். இந்தப்பட்டியல்கள் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்பட்ட முறை குறித்துக் கூட சில வட்டாரங்கள் அதிருப்தியும் சந்தேகமும் வெளியிட்டன. யாழ்ப்பாணத்தில் ஐந்து கல்வி வலயங்கள் உள்ளன. ஐந்து வலயங்களுக்குமான இணைப்பாளராக யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் செயற்படுகின்றார்.

வழமையான முறையின்படி இந்த அறுநூறு பேரினதும் பெயர்கள் அடங்கிய - ஐந்து கல்வி வலயங்களுக்கும் உரிய - பட்டியல்கள் இணைப்பாளரான யாழ் கல்விப்பணிப்பாளரிடம் வந்து அவர் மூலம் ஏனைய பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டும். இது விடயத்தில் யாழ்.கல்விப்பணிப்பாளர் பட்டியலைப் பெற்று சம்பந்தப்பட்டோருக்கு அனுப்பிவைப்பதுதான் பணி. ஆனால் அவரது கைக்குப் போகவிடாமல் சம்பந்தப்பட்ட கல்விப்பணிப்பாளர்களுக்கு நேரடியாகப் பட்டியல்களை அனுப்பி வைத்திருக்கின்றது மாகாணக் கல்வித்திணைகளம் - ஒருவரின் பட்டியல் இன்னொருவரின் கைக்குக் கிடைத்தால் குட்டுகள், குளறுபடிகள் அம்பலமாகிவிடுமோ என்ற அச்சம்தான் காரணமோ என்னவோ?

இதற்கிடையில் -

'ஆடு வெட்ட முதல் ஏதோ தனக்கு என்றானாம் ஒருவன்' என்பது போன்று தொண்டர் ஆசிரியர் நியமனம் கிடைக்க முன்னர் அதைப் பெற்றுக் கொடுத்தது தாங்கள்தான் என்று உரிமை கோர விழுந்தடிக்கின்றார்கள் சில கட்சியினர்.

தங்கள் அமைப்பாளர் ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டதாற்கு இணங்க இந்த நியமனங்கள் வழங்கப்படுவதாக ஒரு கட்சி பத்திரிகை அறிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

மற்றொரு கட்சியினர் தங்கள் தலைவர் ஜனாதிபதியைச் சந்தித்து கேட்டுக்கொண்டதற்கிணங்க, தாங்கள் வழங்கிய பட்டியலுக்கு அமைய இந்த நியமனங்கள் வழங்கப்படுவதாக பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்துள்ளார்கள்.

இங்கு வலயக் கல்விப் பணிமனைகளுக்கு வந்த பெயர்ப் பட்டியலை தமது அதிகார(?) உரிமையோடு இவர்கள் ஆளனுப்பிப் பெற்றுக்கொண்டதாகவும் கூடத் தகவல்.

ஆனால், யாழ். இராணுவ வட்டாரங்களே தொண்டர் ஆசிரியர்கள் பற்றிய பட்டியலைப் பெற்றுக்கொடுத்து, அரசுக்கு அழுத்தம் கொடுத்து இந்த நியமனங்களுக்கான அனுமதியை ஜனாதிபதி செயலகத்தின் மூலம் வழங்கவைத்ததாக சுயாதீன தகவல்கள் கூறுகின்றன.

இங்குள்ள அரசியல் கட்சி ஒன்று, யாழ்ப்பாணத்தில் சேவையாற்றிக் கொண்டிருக்கும் சுமார் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களைப் புறக்கணித்துவிட்டு தங்கள் சுய பட்டியல் மூலம் தீவுப்பகுதியில் உள்ள கணிசமானோருக்கு மட்டும் தமது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி நியமனம் பெற்றுக்கொடுத்ததும் -

அதை அடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள கல்வி வலய அலுவலகத்தில் இங்குள்ள தொண்டர் ஆசிரியர்கள் மறியற் போராட்டம் நடத்தியதும் -

இராணுவ அதிகாரிகள் அந்த இடத்துக்குச் சென்று சம்பந்தப்பட்டோருக்கு நியமனம் பெற்றுத் தருவதாக உறுதி அளித்ததை அடுத்து மறியற் போராட்டம் செய்தோர் அதனைக் கைவிட்டதும் - வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

பின்னர் சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியின் அழுத்தம் காரணமாக இங்குள்ள கல்வி அதிகாரிகள், தீவகத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனக் கடிதத்தை இரகசியமாகக் கொண்டுவந்து, கல்வித்திணைக்களத்தின் ஏனைய அதிகாரிகளுக்குக் கூடத் தெரியாமல், காதும்காதும் வைத்ததுபோல தீவகத்துக்கு எடுத்துச் சென்று சம்பந்தப்பட்டோருக்கு வழங்கியதும் குறிப்பிடத்தக்கது.

வழமையாக நியமனக் கடிதங்கள் பெறுவதற்காக சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை கல்வி அலுவலகத்துக்கு வருமாறு அழைப்பார்கள். ஆனால் இந்த அரசியல் கட்சியின் தலையீட்டால் கல்வி அதிகாரிகள் தீவகத்தில் உள்ள பாடசாலைகள் ஒவ்வொன்றாகத் தேடிச் தேடிச் சென்று (சிலரின் வீடுகளுக்கு கூடத் தேடிச் சென்று) நியமனக் கடிதங்களை வழங்கியிருந்தார்கள். குடாநாட்டின் தொண்டர் ஆசிரியர்கள் தமக்கு நிரந்தர நியமனம் கேட்டுப் போராடியபோது - தங்களைப் புறக்கணித்து, குடாநாட்டின் ஒரு பகுதியில் உள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு மட்டும் அரசியல் செல்வாக்கால் நியமனம் பெற்றுக்கொடுக்கும் அநீதிக்கெதிராக அவர்கள் திரண்டபோது - அதை முறியடிக்க இரகசியமாக நியமனக் கடிதங்களை வழங்குவதற்கு ஏற்பாடு செய்தவர்கள்தான் இப்போது வழங்கப்படும் நியமனத்துக்கு உரிமைகோர விழுந்தடிக்கின்றார்கள். எதுஎப்படியோ, யார் குற்றியாவது அரிசியானால் சரி. அது இயன்ற விரைவில் செய்யப்பட வேண்டும் என்பதுதான் நமது பிரார்த்தனை.

ஆனால் ஒரு விடயம். இந்தத் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க ஜனாதிபதி செயலகம் பணித்து விட்டாலும் கல்விச் சேவை ஆணைக்குழு இன்னும் அனுமதி வழங்கவில்லை. அந்தத் தடையை எப்படித் தாண்டப் போகின்றார்களோ?

* * *

இது போன்ற விவரங்களை அவ்வப்போது இப்பத்தியில் பிரஸ்தாபிப்பது பொருத்தமானதா எனச் சிந்தித்தோம். ஆனால் சில விடயங்களை அதிகாரிகள் பொத்திப்பொத்தி தமக்குள்ளே அமுக்கிவிடுகின்றார்கள். இத்தகைய பத்திகளில் அவற்றைப் பிரஸ்தாபித்து அம்பலப்படுத்தினால்தான் மேல்நடவடிக்கை என்ற சகடை நகரும். அதனால் குறிப்பிட வேண்டியிருக்கின்றது. வலிகாமம் கல்வி வலையத்தில் பிரபல பாடசாலை ஒன்றில் உயர்தர வகுப்பு முதலாம் வருடத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருத்தி, திருமணமாகி இளம் தந்தையுமான ஆசிரியரால் சில தினங்களுக்கு முன் தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகவும் -

அதிபரும் ஏனையோரும் விஷயத்தை அமுக்கிவிட்டதாகவும் -

சம்பந்தப்பட்ட மாணவிக்கு வேண்டியோர் ஆசிரியர் வீடு புகுந்து தாக்கியதாகவும் -

ஆசிரியரின் இளம் மனைவி விநயமாகக் கேட்டுக் கொண்டதால் அவர்கள் ஆசிரியரை மேலும் ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டுச் சென்று விட்டதாகவும் -

விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

இந்தத் தகவல்களில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கின்றது என்பது வேறுவிடயம். ஆனால் மேலதிகாரிகளுக்கு இதுவரை தகவல் எட்டவில்லை என்பதுதான் உண்மை. இத்தகைய விடயங்களை ஒரேயடியாக அமுக்கப்பார்ப்பது தவறாகும். தகவல் தரப்பட்டிருக்கின்றது. இனித் தங்கள் திறமையைப் பயன்படுத்தி, விசாரணை நடத்தி, உண்மையைக் கண்டுபிடித்து, தவறு நடந்திருந்தால் தவறு செய்தோருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது... இவை எல்லாம் அதிகாரிகளைப் பொறுத்த விடயம்.

மதிப்பு மிக்க கல்வித்துறைக்கு - கல்விக் கண்திறக்கும் ஆசான்களுக்கு - சமூகத்தில் இருக்கும் கீர்த்தியைக் குன்றவிடாது பேணுவது ஒவ்வொரு ஆசிரியரதும் அவர்களின் மேலதிகாரிகளினதும் கடமையாகும்.

**-மின்னல்.**


## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து
(18-08-1999)



## செல்வன் அம்பிகைபாகன் உமாசுதன்

மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை - உடுப்பிட்டியைச் சேர்ந்த அம்பிகைபாகன் - சிவதர்ஷனி தம்பதியினரின் செல்வப் புதல்வன் உமாசுதன் தனது முதலாவது பிறந்த தினத்தை 18/08/1999 அன்று தனது உடுப்பிட்டி இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

உமாஜியை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பாட்டா, பாட்டி, மாமா, கனடாவில் வதியும் பரோபன் மாமா மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் விநாயகர் அருளால் பல்கலைகளும் கற்று செல்வச் செழிப்புடன் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

தகவல்: வே.அம்பிகைபாகன் (அப்பா)

உடுப்பிட்டி. (68175)



## நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற்சவம் 1999

'மரகத மயின்மேல் வருமுருகா
அரகர சிவசிவ அறுமுகவா
சரவண பவனே சண்முகனே
வரந்தர வாவா என் முன்னே
அரவணி சிவனா ரருள் பாலா
பரவ வரமருள் பரமதயாளா'

- சிவயோக சுவாமிகள் -

**அன்புடையீர்!**

யாழ்நகரில் புகழ் பூத்த நல்லூர்க் கந்தனின் வருடாந்த உற் சவம் 16.08.99 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. கடந்த காலங்களைப்போல் இம்முறையும் மேற்படி ஆலயத்தின் மேற்கு வீதியில் அமைந்துள்ள மூத்ததம்பி மடம் (தம்பையா மடத்தில்) முருகன் அருள் வேண்டிவரும் அடியார்களுக்கு திருவிழா நடைபெறும் 25 நாள்களும் அன்னதானம் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பலவித அனர்த்தங்களினால் மேற்படி மண்டபம் சேதமடைந்துள்ளது. ஆகவே இம்மண்டபத்தை புனர் அமைத்து அன்னதானத்திற்கு வேண்டிய சில உபகரணங்களும் கொள்வளவு செய்ய முயற்ச்சி செய்கின்றோம். எமது இந்நற்பணிக்கு தங்கள் அன்பார்ந்த ஆதரவை நல்கி ஊக்குவிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

தங்கள் பேருதவிக்கு நல்லைக்கந்தன் தங்கட்கு
எல்லா நலங்களும் அருள்வானாக!
நன்றி

139, கோயில் வீதி,
நல்லூர்.

செ.சோமஸ்கந்தன்

(68192)



உ
வீராட்விஸ்வப் பிரமணே நம

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பிரமாதி வருடம் ஆவணித் திங்கள் முதலாம் நாள் (18-08-1999) புதன் கிழமை
முற்பகல் 9.15 முதல் 11.07 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

## திருமகள் ஜூவல் கிறாப்ற்
## THIRUMAGALL JEWEL CRAAFT

என்னும் நகை வியாபார ஸ்தாபனத்துக்கான திறப்பு விழா நடத்த இறையருள் கூடியுள்ளதால்
அத்தருணம் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம்
அன்புடன் அழைக்கின்றோம்

பரமேஸ்வரா சந்தி
பலாலி றோட்,
திருநெல்வேலி.

செ. கந்தசாமி.

(68158)


## மிதிவெடிகளை அகற்றக் கோரிக்கை

அரியாலை, ஓக.14

அரியாலை ஆனந்தன் வடல் வீதிப் பகுதியில் பெருமளவு மிதிவெடிகள் புதையுண்டிருக்கலாம் என அஞ்சப்படுவதால் இவற்றை அகற்றி உதவுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக மகஜர் ஒன்றை அரியாலை மத்தி அருணோதயா சன சமூக நிலையம் யாழ்.அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்தப் பகுதியில் அதிகளவில் மதிவெடிகள் இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதால் இப்பகுதி மக்கள் நடமாடுவதற்கு அஞ்சுகின்றனர். இப்பகுதியில் ஏற்கனவே பல கால் நடைகள் மிதிவெடிகளில் சிக்கியுள்ளன. அதேவேளை இரு பொதுமக்களும் கால்களை இழந்ததுடன் சிலர் காயங்களுக்கும் இலக்கானார்கள். எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மிதிவெடிகளை அகற்றும் பணி குடாநாட்டில் தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் இப்பகுதிக்கும் முன்னுரிமை கொடுத்து அவற்றை அகற்ற உதவுமாறு கோரப்பட்டுள்ளது. (ஜ-17-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் லயன்ஸ் கழகம்

**விசேட நிகழ்வு**

இடம் :- யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்
காலம் :- 15-08-1999 (ஞாயிறு) காலை 10 மணி

* கருத்துரை :- **'தேசிய ஒற்றுமை'**
திருமதி சரோஜா சிவச்சந்திரன்
(இயக்குநர், மகளிர் அபிவிருத்தி நிலையம்)

* கருத்துரை :- **'காலங்கடந்த பிறப்பு, திருமணப்பதிவு'**
ந.சதாசிவஐயர்
( பிரதி மாவட்டப் பதிவாளர் நாயகம் - யாழ்மாவட்டம்.)

**பிரதம விருந்தினர்**

**லயன் ஆர். செல்வநாதன்**
(மாவட்த்தலைவர்)

குறிப்பு :- இன்றைய நிகழ்வில் காலங்கடந்த பிறப்பு, திருமணப்பதிவுகளும் மேற்கொள்ளப்படும்.

**லயன் அ.க.த.கிருஷ்ணராஜா** (செயலாளர்) (சி/88515) **லயன் இ.நடராஜா** (தலைவர்)



# எதிர்பாருங்கள்!

**யாழ். மண்ணில் முன்னாள் பிரபல**
**தென்னிந்திய திரைப்பட நடிகர்கள்**
A.V.M. **ராஜன், புஸ்பலதா**
**குழுவினர் பங்குபற்றும்**
**மாபெரும் நிகழ்ச்சி**



**அன்பு வெள்ளம்**
**எங்கே?**
**எப்போது?**
**விரைவில் உங்களுடன்!**

(சி-8309)



LIBRARY WITH

## SAI LITERATURES

A Library Service has been started at the "Sai Illam", Thavady to serve the Sai Devotees.

Sai Literatures written in English by Sai Devotees from all over the world and many valuable books containing the recent speeches of Bhagavan Sri Sathya Sai Baba are available at the library for reading and lending purposes.

Those who are interested can obtain the services of the library on every Saturdays commencing from (21.8.1999) between 03.00 pm to 06.00 pm on free of charge.

"SAI ILLAM"
ARASADY LANE,
THAVADY. (68190)



# வெளிவந்துவிட்டது!

பொதுப் பொருளாதாரம்
வினா – விடை நூல்
**ஆசிரியர்: வே.கருணாகரன்.**

* பேரினப் பொருளாதாரம்
* வெளிவாரி விளைவுகள்
* சர்வதேச வர்த்தகம்
* வர்த்தக மாற்று வீதம்
* அபிவிருத்திக் கொள்கைகள்
* நடைமுறைவிடயங்கள்

ஆகிய நூல்கள் விற்பனையாகும் இடங்கள்:

யாழ்ப்பாணம் ~ பூபாலசிங்கம் புத்தகசாலை
~ ஸ்ரீலங்கா புத்தகசாலை
~ பகவான் மெடிக்கல்ஸ்
சுன்னாகம் ~ துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்
நெல்லியடி ~ மொடேர்ண் புத்தகசாலை

(68179)



# மலிவு விற்பனை

(25-08-1999 வரை)

* வெளிநாட்டு சோடி * கொறியன் * நெற்சூ * இந்தியன சாண்டில்கள் * சிலிப்பர்கள் * சொக்ஸ் வகைகளை

மலிவு விலையில் பெற்றுக் கொள்ள

## கணபதி சூ சென்ரர்

**32, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
**(ராஜா கிறீம் ஹவுஸ் அருகில்)**

(C/8508)


## CORRECTION

Reference to the **Vacancies** advertisement of the University of Jaffna appearing in page six of Uthayan dated 12.08.1999 -

The Salary scale for the posts of Visiting Lecturer should be read as Rs. 300 per hour. It was in inadvertently printed as Rs 800. Error is regretted.

Editor

# அனுமதிப் பத்திரம் இருக்கவில்லை

யாழ்ப்பாணம்,ஓக.14

மாகாண அமைச்சினால் வழங்கப்பட்ட மூக்குக் கண்ணாடிகளையும் காதுகேட்கும் கருவிகளையும் யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கு சமூக சேவைத்திணைக்கள அதிகாரிகள் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறவில்லை. அதனாலேயே அவற்றை விமானத்தில் எடுத்துவர படைத்தரப்பினர் இரத்மலானையில் அனுமதிக்கவில்லை என்று அறியப்படுகிறது.

'மூக்குக் கண்ணாடி எடுத்துவர கொழும்பில் அனுமதி மறுப்பு' என்ற தலைப்பில் 09.08.1999ஆம் திகதி உதயனில் வெளியான செய்தி குறித்து மேற்கொண்டு கிடைத்த தகவல்கள் மூலம் இது தெரியவந்துள்ளது.

திருகோணமலை சென்றிருந்த சமூக சேவைகள் அதிகாரிகளிடம் குடாநாட்டு மக்களுக்கு வழங்கவென மூக்குக் கண்ணாடிகளும் காதுகேட்கும் கருவிகளும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இது சம்பந்தமான ஏனைய ஆவணங்கள் இருந்த போதிலும் பாதுகாப்பு அமைச்சின் அனுமதிப்பத்திரம் இல்லை என்று அறியப்படுகிறது. அதனாலேயே அப்பொருள்களை எடுத்துவர அனுமதி அளிக்கப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது. (அ)

## யுத்த சூனியப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந் நான்கு பாதைகளிலும் எவ்வகைப்பட்ட தாக்குதலும் இருபகுதியினராலும் முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.

* ஜூலை, ஓகஸ்ட் திருவிழாக் காலங்களில் ஆயுதம் தாங்காத பொலீஸார் சீருடையுடன் ஒழுங்கு நடவடிக்கைகளுக்காக கடமையாற்ற வழமைபோல் அனுமதிக்கவேண்டும்.

என்று ஆயர் கோரியுள்ளார்.

இந்தவிடயம் குறித்து இருதரப்பிடமிருந்தும் எழுத்துமூலமான உத்தரவாதம் கிடைக்காத பட்சத்தில் இம்மாதம் நடத்தவேண்டிய மடுத்திருநாளை நடத்தமுடியாது என்றும் ஆயர் தெரிவித்துள்ளார். (உ-3)


**புதிய வீடியோ** CD **வெளியீடுகள்**
**முரளி, சிம்ரான்**
**நடித்த**
☼ **கனவே கலையாதே**
**சூரியா, ஜோதிகா**
**நடித்த**
☼ **பூவெல்லாம்**
**கேட்டுப்பார்**

**சுப்பஸோ வீடியோ**
**149. கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்**
(68202)



**இன்றைய**
CD **வெளியீடு**
❖ **கனவே கலையாதே**
❖ **மலபார் பொலீஸ்**
❖ **பூவெல்லாம்**
**கேட்டுப்பார்**

அடுத்த CD வெளியீடு
**ரோஜா வனம்**
(பிரதிகள் மாலை 4.30 மணிக்கு வெளியிடப்படும்)

**ஆர்க்**
**வீடியோ லைபிறறி**
**அம்மன் வீதி**
(68202)



INSTITUTE OF INFORMATICS STUDIES

COMPUTER
COURSES

**புதிய பயிற்சி நெறிகள், பல புதிய கணனித் தொழில் நுட்ப அறிமுகத்துடன்** (INTERNET, E_Mail) **செப்ரெம்பர் மாதம் 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.**

**மேலதிக விவரங்களுக்கு:-**

23/08/99 உதயன் பத்திரிகையைப் பார்வையிடவும்

DIRECTOR,
IIS - JAFFNA

(c/8507)


# கண்ணீர் அஞ்சலி

## கந்தசாமி ஆனந்தநடராசா

காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபன வேலைக்கள பகுதி ஊழியரும் சிமெந்துப் பொதுத்தொழிலாளர் யூனியனின் நிர்வாகசபை உறுப்பினருமான கந்தசாமி ஆனந்தநடராசா அவர்களின் திடீர்மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிமெந்துப் பொதுத்தொழிலாளர் யூனியன்,
65, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம். (68200)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தம்பிரர்சா அரியம்மா

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தம்பிராசா அரியம்மா 11.08.99 அன்று மாலை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.08.99) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வடக்கிலுள்ள இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:-
**கா.கருணானந்தசோதி**
*(மருமகன்)*

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*

(68199)

## கதிர்காமு வைரமுத்து

ஏழாலை வடக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் கதிர்காமு வைரமுத்து 13.08.99 அன்று காலமாகிவிட்டார். இவர் உமையம்மாவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்புக்கணவரும் பரந்தாமன், ஜானகி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் அன்னலட்சுமியின் சிறியதகப்பனும் உமா, பார்த்தீபன், பிரணவன், கஜன், பிரணவி, செவ்வேள், சோபிதா, ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (15.08.99) அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் உசத்தியோடை மயானத்தில் காலை 10 மணி (ப.நே.) இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**வை.உமையம்மா**
(மனைவி)
**அன்னலட்சுமி**
(பெறாமகள்)

ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(சி/8514)

## கந்தசாமி ஆனந்தநடராசா

**(பொருத்துநர் - காங்கேசன் சிமெந்துக் கூட்டுத்தாபனம்)**

மூளாய் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி ஆனந்தநடராசா 13.8.99 அன்று காலமானார். இவர் கந்தசாமி - பொன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும் மதிவதனியின் அன்புக்கணவரும் பாலசரஸ்வதி, மகாலிங்கம், சந்திரவதனா, சிவராசா, மங்களராஜேஸ்வரி, காலம் சென்றவர்களான வரதராசா, சண்முகராசா ஆகியோரது அன்புச்சகோதரனும் முருகேசம்பிள்ளை, கையிலைநாயகி, சொக்கநாதன், தவமலர், சற்குணரெத்தினம் ஆகியோரது மைத்துனரும் திரு.திருமதி சோமசுந்தரம் (காங்கேசன்துறை) ஆகியோரது மருமகனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று(14.08.99) நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**ஆ. மதிவதனி**
(மனைவி)

*மூளாய் றோட்,*
*வட்டுக்கோட்டை.*

(68197)

## சுப்பிரமணியம் குணரத்தினம்

**(மண்டைதீவு)**

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் இல.47, ஆஸ்பத்திரி வீதி, கொட்டடி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் குணரத்தினம் 13.08.99 மாலை சிவபதமடைந்தார்.

அன்னார் முன்னாள் வேலணை வடக்கு கிராமஅலுவலரும் வளலாய் (அச்சுவேலி) கிராமஅலுவலரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.08.99 பிற்பகல் 1.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்:-
**கே.சிவகுலசிங்கம்.**
(மகன் - கிராமஅலுவலர்,வளலாய்)
**த.ஜெகநாதன்.**
(மருமகன்)

(68203)

## திருமதி கைலாசபிள்ளை பகவதி

யாழ்ப்பாணம், முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும்கொண்ட திருமதி கைலாசபிள்ளை பகவதி நேற்று மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செ.கைலாசபிள்ளையின் அன்பு மனைவியும் குணரத்தினம், தியாகராஜா, திருமதி நகுலேஸ்வரி(கனடா), திருமதி கோணேஸ்வரி, செல்வி சரோஜினிதேவி, திருமதி ஜீவராணி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி அழகம்மா, திருமதி இரட்னேஸ்வரி, பரமநாதன்(கனடா), கதிர்காமநாதன்(கனடா), சண்முகலிங்கம்(பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் கவிதா, வனிதா, குமுதினி, ராகுலன், திலீபன், சுகிந்தன், சாதனா, சாகிராம், சயந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14-08-1999) சனி முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**கை.தியாகராஜா.**
**கை.சரோஜினி**
(பிள்ளைகள்)

48/5 முதலாம் ஒழுங்கை,
(கிடாவிழுந்தான் ஒழுங்கை)
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/1517)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14-08-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஞ்சிகை

சஞ்சீவி 14-08-1999




ராகங்கள் பலவிதம் 'ராகம்ஸ்' பட்டுச் சோலையின் சேலைகளோ புதுவிதம்.

ராகம்ஸ் பட்டுச்சோலை

24,நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

கிளை: பிரதான வீதி, (பஸ்நிலையம் அருகில்) சங்கானை.

(6089)


## கருத்துக் கலசம் — கௌரா

### உடல் உழைப்பு

***ஒரு கவிதை இயற்றுவதில் உள்ள அதே அளவு பெருமை ஒரு நிலத்தை உழுவதில் இருக்கிறது.***

- வாஷிங்டன்.

உடல உழைப்பின்மகத்துவத்தை, விசேடமாக உழவுத் தொழிலின் மகிமையை உணர்த்தும் வாசகம் இது. மனித உழைப்பு இரண்டு வகையானது. ஒன்று உடலுழைப்பு. மற்றது மூளைஉழைப்பு. மனிதனின் வாழ்வியக்கத்துக்கு இந்த இரண்டு உழைப்புகளும் தேவை. ஒன்றில்லாமல் மற்றையது முழுமையாகச் சிறக்காது.

மனித வரலாற்றில் பல்லாயிரம் ஆண்டுகாலமாக உடலுழைப்பே அன்றாட வாழ்க்கையின் ஊன்றுகோலாக விளங்குகிறது. அதிலும் மனிதன் உயிரோடு வாழ்வதற்கு மிக இன்றி அமையாத உணவைப் பெறுவதற்கு உடலுழைப்புப் பெரிதும் தேவைப்படுகிறது; கட்டாயமானதாகி உள்ளது.

ஆனால் இப்போது, உடலுழைப்பைப் போலவே மூளை உழைப்பும் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளது. அதனால் கடந்த இரண்டொரு சந்ததிகளாக எல்லோரும் உடலுழைப்பு இல்லாத தொழில்களையே விரும்பும் தன்மை பரவியுள்ளது.

கணனி மற்றும் புதிய தொழில் நுட்பங்கள் மிக வேகமாக வளர்ந்துள்ளதால், அபிவிருத்தி அடைந்த நாடுகளில் மூளைவளம் - மூளை உழைப்பு - இப்போது பிரதான இடத்தை வகிக்கிறது. இருப்பினும் விவசாயம் போன்ற முக்கிய தொழில் துறைகளில் உடலுழைப்பு அறவே இல்லாது மக்களுக்குத் தேவையான உணவை உற்பத்தி செய்ய முடியுமா என்பது சந்தேகமே.

இலங்கை போன்ற வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் இப்போதும் உடலுழைப்பே பிரதான இடத்தை வகிக்கின்றது. இன்னும் பல ஆண்டுகளுக்கு அந்தநிலையே தொடரும். அதுவும் மிகக்குறிப்பாக, விவசாயமே நாட்டினது பிரதான தொழிலாக விளங்குவதால் - விளங்கும் வரை - உடலுழைப்பின் அவசியம் பெரிதும் உணரப்படும்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு செல்பவர்" என்று வள்ளுவன் சொன்னதும் வாஷிங்டன் கூறுவதும் ஒன்றே. "உழவினார் கைமடங்கின் இல்லை விழைவதூஉம விட்டேம் என்பார்க்கும்நிலை" என்று வள்ளுவன் சொல்வதை நோக்கவேண்டும். உழவர்களுடைய கை தமக்குரிய தொழிலைச் செய்யாதுவிடின், உலகின் பற்றுக்களைத் துறந்த துறவியருக்குக் கூட வாழ்வு இல்லாமற் போய்விடும் என்பதையே இந்தக் குறள் விளக்குகிறது.

ஆகையால் உழவுத் தொழிலைச் செய்வது மூளை உழைப்புச் சார்ந்த எந்தத் தொழிலுக்கும் சளைத்தது அல்ல என்ற நிலை புதிய முன்னேற்றங்களால் அடிபட்டுப் போக வாய்ப்பில்லை.

யாழ்ப்பாணத்தின் வாழ்வும் வளமும் விவசாயத்திலேயே தங்கியுள்ளது. இன்னும் பல காலத்துக்கு அது தொடரும்.

தமது சொந்தக்காலில் நிற்பதற்கு விவசாயத்தைப் பெருக்கவும், அத்துறையை முன்னேற்றவும் இளைஞர்கள் தயங்காது முன்வரவேண்டும்.

தொழில் செய்யும் உரிமை குடிமக்களின் மிக அடிப்படையான வாழ்வுரிமை. அதனை நீண்ட காலத்துக்குக் கட்டுப்படுத்துவது பெரும் மனித ஒடுக்குதலாகும். அதனை உணர்ந்து மக்களின் தொழில் உரிமைகளை பூரணமாக வழங்க வேண்டும்.

# என்றும் நமக்குத் தேவை உற்சாகமும் மகிழ்ச்சியுமே!

பல் வலிக்கு மருத்துவம் வேண்டி பல் வைத்தியரிடம் ஒருவர் சென்றார்.

அவர் பல் டாக்டர் காண்பித்த உயரமான நாற்காலியிலும் அமர்ந்தார்.

அவரது வாயின் உட்புறம் 'டோர்ச்லைட்' அடித்துப் பார்த்த டாக்டர். "ஓ! ஓ!" என்றார்.

நோயாளிக்குப் பயம் பிடித்துக் கொண்டது!

ஆதலால் அவர் "ஏன் டாக்டர், அவ்வளவு சீரியஸாக ஏதாவது...!" என்று கேட்டபோது, "அதெல்லாம் ஒன்றுமில்லை. டெலிபோன் பில் தொகை கட்ட மறந்து விட்டேன்; அது நினைவுக்கு வந்தது..." என்றார் டாக்டர்.

இவருக்குக் கோபம்..."என் பல்லைப் பரிசோதிக்கும் போதுதானா உங்களுக்கு - டெலிபோன பில், மின்கட்டணம், வீட்டுவரி, தொழில்வரி, வருமானவரி என்று - உங்களுடைய சொந்த விஷயங்கள் நினைவிற்கு வரவேண்டும்? நீங்கள் என்ன வைத்தியம் செய்து விடப்போகிறீர்கள்?" என்று கேட்டபடியே சட்டென்று எழுந்து வெளியேறி விட்டார்.

இந்த சமயத்தில் இவர் கோபப்பட்டிருக்க வேண்டியதே இல்லை. நகைச்சுவை உணர்வு உள்ளவராக அவர் இருந்தால், "'டோர்ச்லைட்டை' இன்னும் சற்று நன்றாக அடித்துப் பார்த்து, என்னென்ன மறந்துவிட்டீர்கள் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள் டாக்டர்!" என்று சொல்லி இருக்கலாம்.

ஓர் இளம் தம்பதிகள் உரையாடிக்கொண் டிருந்தார்கள்.

"ஒருவர் குறையை மற்றவர் சுட்டிக் காட்டி, திருத்திக் கொள்ளலாம்" என்றாள் மனைவி.

"சரி, நீயே ஆரம்பி" என்றாள் கணவன்.

தலையை ஒழுங்காக வாரிக் கொள்வதில்லை. தன் உடைகளில் கவனம் செலுத்துவதில்லை. தெருவிலிருந்து வீட்டிற்குள் நுழையும்போதே மனைவியின் பெயர் சொல்லி அழைத்து உரக்கப் பேசுவது... இப்படி பத்துப் பதினைந்து குறைகளை மனைவி அடுக்கினாள்.

பிறகு அவள் தன் கணவனிடம், "இப்போது நீங்கள் சொல்லுங்கள்" என்றாள்.

கணவன் சற்று மௌனமாக இருந்தான். பிறகு சொன்னான்.

"உன்னிடம் ஒரு குறையையும் என்னால் காண முடியவில்லை அன்பே."

அவ்வளவுதான்! மனைவியின் கண்களில் நீர் நிரம்பிவிட்டது. தன்னைக் குறித்த அவள் வெட்கப் பட்டாள்.

இந்தக் கணவனின் நல்ல மனம், எல்லோருக்கும் வரவேண்டும். நிறை கண்டால் போற்றுங்கள்; குறைகண்டால் ஒன்றும் சொல்லாதீர்கள்.

"நீ வாயைத் திறக்கும்போதெல்லாம் உன் உள்ளத்தைத் திறக்கிறாய். ஆகவே, பேச்சில் கவனம் தேவை" என்பது ஓர் அனுபவமொழி.

மகிழ்ச்சி, மகிழ்ச்சியை மற்றவர்களுக்குத் தருவதிலிருந்து வருகிறது.

மகிழ்ச்சி என்பது பிரம்மாண்ட வெற்றிகளால வரவேண்டும் என்பதில்லை; சின்னச்சின்ன சாதனைகள் மூலமும் வரக்கூடும்.

உற்சாகம் என்பது குளத்து நீரில் வளையங்கள் விரிவடைவதுபோல், அருகில் இருப்பவர்களையும் தொற்றிக் கொள்ளும் இயல்புடையது.

நாம் எந்தப் பணியைச் செய்பவராக இருந்தாலும் ஆர்வமும், ஊக்கமும், உற்சாகமும் உடையவர் ஆதல் வேண்டும்.

பொதுவாக மக்கள், "இந்த வேலையிலும் ஊரிலும் எனக்குச் சிறப்பான எதிர்காலம் இல்லை: எல்லாம் உனக்கு எதிராக செயல்படுகின்றன...." என்று முறையிடுவார்கள்.

இப்படிப்பட்ட அவநம்பிக்கையாளர்கள் தங்களின் மகிழ்ச்சியற்ற சூழ்நிலையைத் தாங்களே உருவாக்கிக்கொள்கிறார்கள்.

இவர்கள் குறை கூறுவதை விடுத்து, தங்கள் உள்ளத்தில் ஊக்கமும் உற்சாகமும் கொண்டால் - மிகப் பெரிய சாதனையாளர்களாக உருவாக முடியும்.

ஒரு சிறுவன், பல மாடிக் கட்டிடம் ஒன்றில் 'லிஃப்ட்' இயக்குபவனாக வேலையில் இருந்தான். வாழ்க்கையில் உயர வேண்டும் என்ற லட்சியமும் அவனுக்கு இருந்தது.

ஓய்வு நேரத்தில் அவன் பகுதி நேரமாக கல்லூரியில் சேர்த்து படித்தான். காலப்போக்கில் ரேடியோ இன்ஜினீயர் ஆனான். பிரபல அரசியல் தலைவர்களின் பேச்சுக்களைப் பதிவு செய்யும் பணியில் அமர்த்தப்பட்டான்.

ஒரு சமயம் பிரதம மந்திரி ஒருவரின் சிறப்புரையை நேரிடையாக ஒலிபரப்பும் பொறுப்பு அவனுக்குக் கிடைத்தது. பிரதமரின் பேச்சைக் கேட்க ஆயிரக்கணக்கில் மக்கள் கூட்டம் காத்திருந்தது. மிகப் பரபரப்பான நேரம். தேர்தல் முடிந்து அப்போதுதான் புதிய அமைச்சரவை பதவி ஏற்றிருந்த சமயம்.

'ஒரு காலத்தில் 'லிஃப்ட்' இயக்கும் சிறுவனாக இருந்த நான், இப்போது எப்படிப்பட்ட மகத்தானப் பணியில் இருக்கிறேன்!' என்ற எண்ணம் அந்த நேரத்தில் இவனுக்குத் தோன்றுகிறது.

அது மட்டும் அல்ல.

பிரதமர் 'மைக்' முன்பு நிற்கிறார். குறிப்பிட்ட, உரை துவங்கும் நேரம் வரஇருக்கிறது. பதிவு செய்வதற்குப் பணியாளர்கள் பலரும் தயாராக உள்ளனர். கீழே ஊசி விழுந்தாலும் கேட்கக் கூடிய நிசப்தம். "துவங்குங்கள்" என்று இவன் ஒரு விரலை உயர்த்த வேண்டியதுதான் பாக்கி. அப்போது இவன் பெருமிதமாக நினைக்கிறான்:-

'ஒரு பெரிய தேசத்தின் பிரதமர் கூட இந்த நேரம் என் விரல் அசைப்பிற்குக் காத்திருக்கிறார்! என்னுடைய இப்போதைய இந்தப் பணியை நான் நேசிக்கிறேன்....வானொலி நிலையத் தலைமை



பொறியாளர் பதவி எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது.....'

ஜன்னலுக்கு வெளியே பாருங்கள். காலையின் புதிய தன்மையை உணருங்கள். மலர்கள் சூரிய உதயம், சின்னஞ்சிறு குழந்தைகள், கள்ளமில்லாச் சிரிப்பு, பறவைகள், நீலவானம் எத்தனை அற்புதக் காட்சிகள்!

வெயில் இல்லாதபோது மழை, மழையின் குளிர்ச்சி, அது தரும் கிளர்ச்சி, உற்சாகத்தை அனுபவியுங்கள்.

எண்ணத்தில், பேச்சில், உங்கள் நடவடிக்கைகளில் சந்தோஷம் நிலவட்டும்.

மகிழ்ச்சியோடு நாளைத் துவக்குங்கள்.

எல்லோருமே மகிழ்ச்சியாக இருக்கவே விரும்புகிறார்கள்.

ஆனால் அந்த மகிழ்ச்சி எப்படி வரும்? சக மனிதர்களின் மீதான பகைமையை விடுங்கள். அவர்களை நேசிக்க ஆரம்பியுங்கள். தவறு செய்வதை நிறுத்துங்கள். எல்லாவற்றிக்கும் பயந்து பயந்தே வாழ்நாளைக் கழிக்காதீர்கள். உங்கள் சுகதுக்கங்களையே நினைக்காமல் அடுத்தவர்களுக்கும் உதவி செய்யுங்கள்.

பணம் உள்ளவன் பணக்காரன் இல்லை: அன்பும், பரந்த மனமும் உள்ளவனே நிஜமான செல்வந்தன்.

" 'இன்று மட்டும்' என்கிற தலைப்பில் நாம் அனைவரும் ஒரு தினசரி நிகழ்ச்சிய நிரலை அமைத்துக் கொண்டால் வாழ்க்கை இனிமையாகச் செல்லும்" 'என்கிறார் டேல்கார்னகி.

அவர். "கவலைகளை நிறுத்தி வாழத் துவங்குவது எப்படி?" என்ற புத்தகத்தில் பின்வரும் நான்கு கருத்துக்களைக் கூறுகிறார்:

1. இன்று மட்டும் மகிழ்ச்சியாக இருப்பேன். மகிழ்ச்சி என்பது வெளியில் இல்லை. நமக்குள்ளேதான் இருக்கிறது.

2. இன்று மட்டும் குடும்பம், தொழில் வாய்ப்பு போன்ற எல்லாவற்றையும் அனுசரித்து நடப்பேன். என் வழிக்கே மற்றவர்கள் ஒத்துவர வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்க மாட்டேன்.

3. இன்று ஒரு நாள் மட்டும் எவருக்காவது நன்மை செய்வேன்.

4. இன்று ஒரு நாள் மட்டும் என் மனதை வலுப்படுத்துவேன். உருப்படியாக எதையாவது கற்பேன்.

"உள்ளத்தில் அமைதி உள்ளவர் எவரோ அவர்தான் உண்மையில் மகிழ்ச்சியான மனிதர்" என்கிறார் மார்கஸ் அரேலியஸ் என்கிற அறிஞர்.

உங்கள் இதயத்தில் கோபம், வெறுப்பு, பகைமை, சுயநலம், இருந்தால் மகிழ்ச்சி ஒளி உள்ளே தங்காது.

ஒரு மனிதன் பொல்லாதவன். அவன் தானும் நிம்மதியாக இருந்ததில்லை, மற்றவர்களையும் நிம்மதியாக வாழவிட்டதில்லை.

அவன் திடீரென்று நான்கைந்து ஆண்டுகளுக்கு காணாமல் போய்விட்டான். பிறகு திரும்பி வந்தான்.... புடம் போட்ட பொன்னாக. எப்படி?

"ஒருவாரப்பத்திய உணவில் இருந்தேன். உணவு, வயிற்றுக்கு அல்ல; மனதுக்கு"

"அது என்ன பயிற்சி?"

"ஒரு நிமிடத்திலிருந்து ஏழுநாள்களுக்குக் கட்டுப்பாடாக இருப்பேன் என்று தீர்மானிக்க வேண்டும். என் ஒவ்வொரு சொல்லிலும் கவனமாக இருப்பேன். ஓர் எதிர்மறையான அல்லது கீழான சொல்லையும் தவிர்ப்பேன். நேர்மையற்ற செயலில் ஈடுபடமாட்டேன். எவரையும் இழிவாக பேசமாட்டேன்.....

"இவற்றைக் கடைப்பிடிப்பது உண்மையிலேயே ஒரு கடுமையான பயிற்சிதான். இதில் ஒரு நாள் முயற்சியில் தோற்றேன். பிறகு இரண்டு நாள்களுக்கு தாக்குப்பிடித்தேன். மூன்றாவது முறையும் தேறவில்லை. மறுபடி.. 'கடவுளே, எனக்கு மன உறுதியைத்தா' என்று வேண்டினேன். பிறகு ஒரு முழு வாரத்திற்கு வெற்றி பெற்றேன். 'சரி, போதும்... என் பழைய வழிகளுக்குத் திரும்புவோம்' என்று நினைத்தேன். ஆனால் எனக்குள் ஏதோ ஒரு மாற்றத்தை உணர்ந்தேன். ஆனால் அந்த மாற்றம் முழுமையான மாற்றமாக இல்லை; ஆனால் கொஞ்சம் வித்தியாசமான மனிதனாக இருந்தேன். என் மனதில் அவநம்பிக்கை எண்ணங்கள் இப்பொழுதில்லை, வாழ்க்கையின் சந்தோஷம் புரிகிறது...."

தினமும் உங்கள் வாழ்க்கையில் நடைபெறும் இரண்டு முக்கிய நிகழ்ச்சிகள் - விடியற் காலையில் கண்விழிப்பதும், இரவில் தூக்கத்தில் ஆழ்வதும். இதற்கு இடைப்பட்ட நேரத்தில்தான் உங்களின் அத்தனை நடவடிக்கைகளும் அமைகின்றன. ஆக்கபூர்வ எண்ணங்களும் மகிழ்ச்சியான சிந்தனைகளும் மேற்படி இரண்டு நிகழ்ச்சிகளின் இடையே இருந்தால் - அதுவே அர்த்தமுள்ள சந்தோஷமான வாழ்க்கை.

"காலை பத்துமணி வரையில் மகிழ்ச்சியாக இருங்கள். பகலின் மீதிப்பொழுதை அதுவே கவனித்துக்கொள்ளும்" என்றார் ஓர் அறிஞர்.

மேதை நார்மன் வின்செண்ட்பீலின் நண்பர் ஒருவர் துயில் எழும்போதே நிலக்கண்ணாடி எதிரே நின்று, "இன்று நான் நல்ல காரியங்களையே செய்வேன்" என்பாராம்.

சிறு ஆறுதல் வார்த்தை, சோக சூழ்நிலையைச் சந்தோஷ மயமாக மாற்றுவதை நாம் பல சமயங்களில் காணமுடிகிறது.

ஒருநாள், நூல் ஆசிரியர் ஒருவரை அவரது போலீஸ்கார நண்பர் தொலைபேசியில் அழைத்து "வாழ்க்கையே எனக்கு வெறுத்துவிட்டது. தற்கொலை செய்துகொள்ளப்போகிறேன்; போய்வருகிறேன் என்று கடைசியாக உங்களிடம் சொல்வதற்காகத்தான் அழைத்தேன்" என்றார்.

உடனே நூல் ஆசிரியர், "நீ அப்படி செய்தால் இனிமேல் நான் உன்னோடு பேசவே மாட்டேன்....." என்று ஜோக் அடித்தார். போலீஸ்காரர் சிரித்து விட்டார். நண்பரோடு மனம் விட்டுப் பேச உடனே புறப்பட்டார்.

"எதை மாற்ற முடியாதோ அதை ஏற்கும் மன அமைதியை இறைவா! எனக்குத் தந்தருளும்படி பிரார்த்திக்கிறேன். மாற்றக்கூடியதை மாற்றும் தீரத்தை, (மாற்றக்கூடியதற்கும், மாற்ற இயலாததற்கும் உள்ள) வேறுபாட்டை உணரும் அறிவை எனக்குத் தந்தருளும்படி பிரார்த்திக்கிறேன்" என்று

( XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின் பங்கருக்குள் பாய்ந்த சிப்பாயின் சடலம்

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிக்கான போக்குவரத்துப் பாதையைத் திறப்பதற்காக கடந்தவாரம் மாங்குளம் பகுதியில் துப்புரவுப் பணிகள் நடைபெற்றமை தெரிந்ததே.

படையினரும், புலிகளும் தமது நிலைகளுக்கு இடையே பொதுமக்கள் பாதுகாப்பு வலயமாகக் கணிக்கப்பட்ட பகுதிக்குள் கண்ணிகள் மற்றும் மிதிவெடிகளை அகற்றுவதில் ஈடுபட்டனர்.

அச்சமயம் அப்பகுதியில் குழி ஒன்றுக்குள் அழுகிய நிலையில் காணப்பட்ட சிப்பாய் ஒருவரின் சடலத்தையும் புலிகள் மீட்டெடுத்து படையினரின் வேண்டுகோளின் பேரில் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஊடாகக் கையளித்தனர்.

மிகவும் அழுகிய நிலையில் காணப்பட்டதால் அச்சடலம் உடனடியாகவே மாங்குளத்தில் முழு இராணுவ மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டதாக படைவட்டாரங்கள் தெரிவித்தன.

எட்டாவது ரெஜிமென்டைச் சேர்ந்த பண்டார என்பவரின் சடலமே அதுவாகும். இந்தச் சிப்பாய் அப்பகுதியில் புலிகள் பதுங்கி இருந்து தாக்குதல் நடத்தி வந்த பதுங்குகுழி ஒன்றினுள் குண்டுடன் பாய்ந்து ஐந்து புலிகளைக் கொன்று விட்டு இறந்தார் என்று படை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

## தளுவத்த குறோஷியா பயணம்

ஜெனரல் றொஹான் டி.எஸ்.தளுவத்த இவ்வாரம் பால்க்கன் நாடான குறோஷியாவுக்குப் பயணமாக இருந்தார்.

உலக இராணுவ வீரர்கள் பங்குபற்றும் இராணுவ விளையாட்டுப் போட்டிகள் குறோஷியாவில் நடைபெறவுள்ளன. அதில் பங்குபற்றும் சுமார் 40 இலங்கைப்படையினர் அடங்கிய குழுவுக்கு ஜெனரல் தளுவத்த தலைமை வகித்துச் செல்கிறார்.

முன்னாள் இராணுவத் தளபதியான ஜெனரல் தளுவத்த பரதுகாப்புப்படைகளின் அதிஉயர் அதிகாரியாக நியமிக்கப்பட்டு பின்னர் அப்பதவியில் இருந்து திடீரென இறக்கப்பட்ட பிறகு அவர் மேற்கொள்ளும் முதல் வெளிநாட்டு விஜயம் இதுவாகும்.

சிறிது காலத்துக்கு முன்னர் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத்தில் அதிஉயர் அதிகாரம் வாய்ந்த பதவியான பாதுகாப்புப் படைகளின் தலைமை அதிகாரி (Chief of Defence Staff) என்ற பதவியை ஜனாதிபதி தனக்குள்ள விசேட அதிகாரங்கள் மூலம் அவருக்கு வழங்கிஇருந்தார். ஆனால் அப்பதவியை ஏற்றகையோடு காரணம் தெரிவிக்காமல் திடீரென அதனை நீக்கிவிட்டு அதிகாரங்கள் எதுவும் அற்ற கட்டளைஅதிகாரி என்ற பதவியை ஜனாதிபதி அவருக்கு வழங்கினார்.

இது நடந்து சில மாதங்களாகிவிட்டன.

இப்போது அவர் குறோஷியா செல்கிறார். அங்கு நடப்பது இராணுவங்களின் ஒத்திகையோ, பயிற்சிகளோஅல்ல. சாதாரணமாக படைவீரர்கள் பங்குபற்றும் விளையாட்டு மற்றும் மெய்வல்லுநர் போட்டிகள் மட்டும்தான்.

## இயக்கச்சியில் படையினருக்கு சிற்றுண்டிச்சாலை

மேஜர் ஜெனரல் சரத்முனசிங்கவின் கட்டளைப் பிரிவுக்குள் அடங்கும் இயக்கச்சி சந்தியில் படையினருக்கான சிற்றுண்டி மற்றும் பொருள் விற்பனை நிலையம் ஒன்று திறக்கப்பட்டிருக்கிறது.

ஆனையிறவு மற்றும் பரந்தன் பகுதிகளில் நிலைகொண்டுள்ள 54ஆவது டிவிசன் படையினரின் சேமநலன்கள் சரியான முறையில் கவனிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்ட முறைப்பாடுகளை அடுத்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றே அந்தக் கடை.

'ஹந்திய கடே'(சந்திக்கடை)என அழைக்கப்படும் அந்த சிற்றுண்டி நிலையத்தில் மேலதிகமாக படையினருக்கான அஞ்சல் நிலையம் மற்றும் தொலைத்தொடர்பு வசதிகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

கொத்துறொட்டி, இடியப்பம் மற்றும் சிற்றுண்டி வகைகள் படையினருக்காக அங்கு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

## தளுவத்த 'யூனிபோர்ம்'

இராணுவத்துக்கு இடுப்புப் பட்டிகள் கொள்வளவு செய்யப்பட்டது தொடர்பாக உயர்மட்ட விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜெனரல் றொஹான் தளுவத்த தளபதியாக இருந்தசமயம் இலங்கை இராணுவத்தினரின் இடுப்புப்பட்டி அமெரிக்க இராணுவத்தின் இடுப்புப்பட்டியை ஒத்த நவீன வடிவத்துக்கு மாற்றப்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து நாடு சுதந்திரம் அடைந்தது முதல் இராணுவத்தினர் அணிந்து வந்த இடுப்புப்பட்டியின் வடிவத்துக்குப் புறம்பாகவே இந்தப் புதிய பட்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

'தளுவத்த யூனிபோர்ம்' எனப் படை அதிகாரிகளால் அழைக்கப்படும் சீருடைக்கான சுமார் 10ஆயிரம் இந்தவகை இடுப்புப் பட்டிகள் இறக்குமதி செய்யப்பட்டிருப்பது தொடர்பாகவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

# நவீன கிளைமோர்கள் மூலம் நகர்ப்புறத் தாக்குதல்கள்



கடந்த 4ஆம் திகதி வவுனியா வேப்பங்குளத்திலும் கடந்த புதனன்று மட்டக்களப்பு நகரிலும் படையினருக்கெதிராக புலிகள் மேற்கொண்ட இருபெரும் தாக்குதல்களும் கிளைமோர் கண்ணிவெடிகள் மூலமே நடத்தப்பட்டிருக்கின்றன.

வேப்பங்குளத்தில் விசேட அதிரடிப்படைக் கொமாண்டோக்களுக்கும், மட்டக்களப்பில் பொலீஸாருக்கும் பலத்த உயிர்ச்சேதத்தை விளைவித்த தாக்குதல்கள் அவை. படையினரின முழுக் கட்டுப்பாட்டில் உள்ள பாதுகாப்பான பிரதேசங்களுள் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டிருக்கின்றன. கிளைமோர்கள் இயக்கப்பட்ட இரு இடங்களும், நகரையும் நகரை அண்டியும் உள்ள சனசந்தடி மற்றும் பாதுகாப்புக் கண்காணிப்பு மிகுந்த பகுதிகள்.

வேப்பங்குளம் தாக்குதல் ஒரு தற்கொலைத் தாக்குதல் என்று முதலில் கூறப்பட்டது. பின்னர் அது கிளைமோர் கண்ணி மூலம் நடத்தப்பட்ட தாக்குதலே என உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது.

சைக்கிள் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் குண்டு சுமார் 30பேர் பயணஞ் செய்த டிரக் வண்டி ஒன்றை சிதறடித்துள்ளது. 12 கொமாண்டோக்களைப பலிகொண்டு பலரைக் காயப்படுத்தியும் இருக்கிறது. சைக்கிளில் பொருத்தக் கூடியது என்ற வகையில் அது ஒரு சிறிய குண்டாகவே இருக்கமுடியும். ஆனால் அது ஏற்படுத்தியிருக்கும் சேதம் மிக அதிகம்.

### வீடியோக்கடை கூரைக்குள் பொருத்திய குண்டு

மட்டக்களப்பில் - திருமலை வீதியில் - நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல் கிழக்கு பாதுகாப்பு வட்டாரங்களுக்கு பலத்த அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. பாதுகாப்பு வலயம் எனக் கருதக்கூடிய அந்தப் பிரதான வீதியோரம் அவ்வாறான சக்திமிக்க ஒரு குண்டுத்தாக்குதலை படையினர் எதிர்பார்க்கவே இல்லை.

பல டிரக்குகள், பஸ் வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் சகிதம் பொலநறுவைக்குப் புறப்பட்ட நீண்ட படை வாகன அணியே நகரில் இருந்து புறப்பட்ட சிறிது நேரத்தில் தாக்குதலில் சிக்கியது.

இந்தச் சம்பவத்திலும் சக்திமிக்க கிளைமோர் கண்ணி பொலீஸார் சென்ற பஸ்வண்டியைத தூக்கிவீசி இருக்கிறது. கடை ஒன்றின் கூரைக்குள் இருந்து சீறிப் பாய்ந்த குண்டே பஸ்ஸைப் பதம்பார்த்துள்ளது.

நீண்ட காலமாகக் கைவிடப்பட்டு மூடிக் கிடந்த ஒரு வீடியோ கடை அது. 'வீடியோஸ்பதி' என்ற பெயரில் முன்னர் இயங்கிய அந்தக் கடையை சில இளைஞர்கள் நடத்திவந்ததாகக் கூறப்படுகிறது. பின்னர் அதனைக் கைவிட்டு அவர்கள் வெளியேறிய பின் நீண்டகாலமாக அது மூடியே கிடந்துள்ளது.

சதா போகுவரத்து இடம்பெறும் அந்த வீதியில் கிளைமோர் கண்ணியை எடுத்து வந்து அந்தக் கடையின் கூரைக்குள் புலிகள் பொருத்தியுள்ளனர். அப்பகுதியில் நீண்டநாள் தங்கியிருந்து இரவு நேரத்தில் குண்டைப் பொருத்தி வைத்திருக்க வேண்டும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

குண்டு வெடிப்பினால் கடையின் கூரை சேதமடைந்தது. ஆனால் சம்பவம் நடந்த பின்னர் அப்பகுதிக்கு வந்த படையினரும் பொலீஸாரும் அக்கடையை முற்றாக இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளனர்.

இந்தக் கிளைமோர்கள் தொலைவில இருந்து 'ரிமோட் கொன்ட்ரோல்' முறை மூலம் இயக்கப்பட்டிருக்கின்றன. அவ்வாறாயின் தாக்குதல் நடத்தும் பகுதிக்குச் சமீபமாக புலிகள் தங்கியிருந்து செயற்படுகின்றனர். தாக்குதல் நடக்கும் வரை அப்பகுதியை கண்காணிக்கின்றனர். பாதுகாப்புத் தரப்பினருக்கு அதிர்ச்சிதரும் விடயங்கள் இவை.

சக்திமிக்க சிறிய கிளைமோர் கண்ணிகளைப் புலிகள் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர் என்பது வவுனியா மற்றும் மட்டக்களப்பு தாக்குதல்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆயுதப்போராட்டம் ஆரம்பமாகிய காலம் தொட்டே கிளைமோர் கண்ணிகள் பயன்படுத்தப் பட்டுவருகின்றன. ஆனால் புலிகள் அவற்றை பெரும்பாலும் கிராமப்புறங்களில் நடத்தும் தாக்குதல்களுக்கே பயன்படுத்தி வந்துள்ளனர். மரக் கிளைகள், பற்றைகள் என்பனவற்றில் மறைத்து வைத்து படையினரின் வாகனங்களைத் தாக்குவது புலிகளின் பாணியாக இருந்து வந்தது. இவை ஆரம்பத்தில் அளவில் பெரியனவாகவும் இலகுவில் இடத்துக்கிடம் கொண்டு செல்ல முடியாதனவாகவும் இருந்தன. அத்துடன் வயர் இணைப்புக்கள் மூலமே தொலைவில் இருந்து இயக்கப்பட்டன. தரைக்குக் கீழே புதைத்துவைக்கும் கண்ணிகளைவிட இவை அதிக சேதத்தை ஏற்படுத்தக் கூடியவை. அத்துடன் இவற்றால் இலக்கைத் தவறாமல் தாக்கவும் முடியும். படையினரின் நடமாட்டங்கள், போக்குவரத்து என்பனவற்றுக்கு கிளைமோர்கள் அன்று முதல் பெரும் அச்சுறுத்தலாகவே இருந்துவருகின்றன.

அண்மைக்காலத்தில் இந்தக் கிளைமோர்களில் நவீன வடிவங்களை கையாளும புலிகள் அவற்றை நகர்புறங்களில் நடத்தும் தாக்குதல்களுக்கும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர்.

இது படைத்தரப்புக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. நகரப் பகுதிகளில் படையினரின் சுதந்திரமான போக்குவரத்துக்களை இந்த நவீன கிளைமோர்கள் அச்சுறுத்தத் தொடங்கியுள்ளன.

குறைந்த அளவானதும் தாக்கும்திறன் கூடியதுமான வெடிமருந்துகளைப் பயன்படுத்தி தயாரிக்கும் புதிய கிளைமோர் கண்ணிகளுடன் புலிகள் நகர்ப்புறங்களில் புதிய போரைத் தொடங்கி இருக்கின்றனர்.

புலிகள் இவற்றை எங்கிருந்து கொண்டு வருகின்றனர்.?

பாதுகாப்புப் பிரதேசங்களுக்குள் ஊடுருவி இருந்து அங்கேயே இவற்றைத் தயாரித்து இலக்கு வைத்துத் தாக்குகின்றனரா?

படையினரின் வீதிச் சோதனை நடவடிக்கைகளில் ஓட்டைகள் உள்ளனவா?

பாதுகாப்புத்தரப்பினர் விரைந்து விடைகாண வேண்டிய கேள்விகள் இவை.

குடாநாட்டிலும் அண்மைக் காலத்தில் புலிகள் தமது பல தாக்குதல்களுக்கு கிளைமோர் கண்ணிகளைப் பயன்படுத்தி உள்ளனர்.

அதே போன்று கிழக்கில் மட்டக்களப்பு நகரிலும் கிளைமோர்தாக்குதல்கள் அதிகரித்துள்ளன. பிரதான வீதியோரங்களில் உள்ள அம்சங்கள் இந்தக் கண்ணிகளைப் பொருத்த வாய்ப்பாக அமைகின்றன.

வீதியோரம் நெருக்கமாக அமைந்துள்ள கட்டடங்கள், வீதி வரை நீண்டு வளர்ந்து நிற்கும் மரக்கிளைகள், வீட்டு மதில்சுவர்களுக்கு மேலாக அலங்கரிக்கும் குறோட்டன் செடிகள் என்பன கண்ணிகளை ஒளித்துவைக்க வாய்ப்பான இடங்கள்.

யாழ். குடாநாட்டின் வீதியோரங்கள் பொதுவாக இத்தகைய அம்சங்களைக் கொண்டுள்ளன. எனவேதான் யாழ்.படைத்தரப்பு இந்த வீதியோர பாதுகாப்பு அம்சங்களில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. பிரதான வீதியோரங்களில் மரங்கள், மரக்கிளைகள் வெட்டி அகற்றப்பட்டு வீதிகள் வெட்ட வெளியாக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சுலபமாக மரங்களை வெட்டி அகற்றுவது போன்று கட்டடங்கள், கூரைகளை அகற்றி விட முடியாது. வீதிவரை நீண்டிருக்கும் கூரைக்குள் குண்டு இருக்கலாம்.

மட்டக்களப்பு நகரில் வீடியோ கடைக்கூரைக்குள் குண்டு வைக்கப்பட்டிருந்ததால் நகரின்

( XV ஆம் பக்கம் பார்க்க)

## போர்முனைக்கு வெளியே புலிகள் தொடுக்கும் போர்

**தாக்கும் திறன் கூடிய 'ரிமோட் கொன்ட்ரோல்' குண்டுகள் மற்றும் கண்ணிகள் சகிதம் நகரப் புறங்களில் புலிகள் தொடுத்துள்ள புதிய தாக்குதல்கள் போர்முனைக்கு வெளியே படையினருக்குப் பலத்த சேதங்களை ஏற்படுத்தி இருக்கின்றன.**

**புலிகளின் இந்த நகர்புறத் தாக்குதல்கள் மாற்றுப் பாதுகாப்புத் திட்டங்களை வகுக்கவேண்டிய நிலைக்குப் படைத்தரப்பை தள்ளியுள்ளன.**




நகருக்குள் வரும் குண்டுகள்: வீதிச் சோதனைகளில் ஓட்டையா?

மறுபக்கம்
வார விமர்சனம்
நல்லூர் தாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - பாகிஸ்தான் மீண்டும் முறுகல் நிலையில்



கார்கில் பகுதியில் தற்பொழுது யுத்தம் ஓய்ந்துவிட்டது எனினும் இந்தியப் படைகள் அங்கு தொடர்ந்து உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானின் ரோந்து விமானம் ஒன்றை இந்தியா சுட்டு வீழ்த்திய சம்பவத்தை அடுத்தும் -

பத்திரிகையாளர் பயணம் செய்த இந்திய இராணுவ ஹெலிகளைத் தாக்கி அழிப்பதற்காக பாகிஸ்தான் ஏவுகணைத் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டுக்களை அடுத்தும் -

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கு இடையில் மீண்டும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளது. தரையின் மேல் பறந்து சென்று உளவு நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடியதும், கடலின் மேல் பறந்து நீர்மூழ்கிக் கப்பல்களின் நடமாட்டம் குறித்து தகவல் திரட்டக்கூடியதுமான பாக்.ரோந்து விமானம் குஜராத்தின் ஆகாயப் பிராந்தியத்துக்குள் ஊடுருவியபொழுது சுடப்பட்டதாக இந்தியா கூறுகின்றது.

சுட்டுவீழ்த்தப்பட்ட இந்த விமானத்தின் சிதைவுகளை பத்திரிகையாளர்களுக்குக் காண்பிப்பதற்காக மூன்று இராணுவ ஹெலிக்கொப்ரர்களில் பத்திரிகையாளர்களை அழைத்துச் சென்றபோதே பாகிஸ்தானின் ஏவுகணைத் தாக்குதலில் இருந்து இந்த ஹெலிக்கொப்ரர் தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்திய இராணுவ ஹெலிக்கொப்ரர்கள் மீது தாக்குதல் நடத்தத் தான் முயற்சிக்கவில்லை என்று பாகிஸ்தான் தெரிவிக்கிறது.


பாகிஸ்தானின் ஆகாயப்பிராந்தியத்துக்குள் நுளைய முயன்ற இந்திய ஜெட் விமானங்களை நோக்கியே ஏவுகணைகள் செலுத்தப்பட்டதாகவும் -

ஹெலிகளைநோக்கிச் செலுத்தப்படவில்லை என்றும் -

தனது விமானம் சுடப்பட்ட சம்பவத்தில் 16பேர் கொல்லப்பட்ட தாகவும் - பாகிஸ்தான் கூறுகின்றது.

கார்கில் பிரச்சினை காரணமாக நான்காவது யுத்தம் ஒன்றின் விளிம்பில் வந்த அணு ஆயுதவல்லமை கொண்ட இந்த இரு நாடுகளையும் தற்போதைய சம்பவங்கள் மீண்டும் மோதல் நிலைக்கு தள்ளிவிட்டுள்ளன.

கார்கில், பட்டாலிக், டிராஸ் பகுதி



களில் இருந்து பாகிஸ்தான் ஊடுருவல்காரர்கள் முற்றாக வெளியேற்றப்பட்டுவிட்டதாக இந்தியா கூறினாலும் அப்பகுதிகளில் இன்னும் தாக்குதல்கள் இடம்பெற்றே வருகின்றன. மலைப்பகுதிகளில் ஊடுருவல்காரர்கள் இன்னும் மறைந்திருக்கலாம் என்று இந்தியா கருதுகின்றது. பாக். ரோந்துவிமானம் இந்திய ஆகாயப் பிராந்தியத்துக்குள் ஊடுருவ முயன்றபோது இந்தியாவின் மிக் -21ரக ஜெட் விமானங்கள் வழி மறித்ததாகவும் பாக் விமானம் இந்திய விமானத்தளத்தில் தரையிறங்க மறுத்தபோது அதனை நோக்கி ஏவுகணைத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்திருக்கிறது. விமானத்தை சுட்டுவீழ்த்துவதை விடவேறு வழி இருக்கவில்லை என்றும் அது கூறுகிறது.

தனது ஆகாயப் பிராந்தியத்துக்குள் வைத்தே ரோந்துவிமானம் சுடப்பட்டதாக பாகிஸ்தான் தெரிவிக்கிறது. இந்துஸ் நதியின் சேற்றுப் பகுதியில் விமானத்தின் பிரதான பகுதி புதையுண்டு கிடப்பது பாக். பத்திரிகையாளர்களுக்கு காண்பிக்கப்பட்டது என்று இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

இரவோடிரவாக பாக்.எல்லைக்குள் வந்த இந்தியப் படையினர் விமானத்தின்சிதைவுகளை எடுத்துச் சென்றதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டுகின்றது.

விமானத்தின் சிதைவுகளை இந்தியா டில்லிக்கு எடுத்துவந்து பொது மக்களின் பார்வைக்கு வைத்துள்ளது. இந்தியப் பத்திரிகையாளர்களை ஹெலிக்கொப்டர்களில் அழைத்துச் சென்று விமானம் வீழ்ந்த இடத்தைக் காண்பிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி பாக். ஏவுகணைத் தாக்குதல் முயற்சி காரணமாகக் கைவிடப்பட்டது என்று இந்தியா தெரிவிக்கிறது.

1947,1965,1971 ஆண்டுகளில் மூன்று யுத்தங்களை நடத்திய இந்தியாவும் பாகிஸ்தானும் தற்பொழுது அணுசக்தி நாடுகளாக மிளிர்வதால் எல்லையில் இடம்பெறும் எந்த ஒரு சம்பவமும் சர்வதேச கவனத்தை ஈர்த்து விடுகின்றது.

தனது பாதுகாப்புக் கருதி எந்த ஒரு நடவடிக்கை எடுக்கவும் பாகிஸ்தானுக்கு உரிமை இருப்பதாக பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் சர்தாஸ் அஸீஸ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கார்கில் பிரச்சினை தொடர்பாக இந்தியாவுடன் பேச்சு நடத்துவதற்கு சர்தாஸ் அஸீஸே பாகிஸ்தானால் புதுடில்லிக்கு அனுப்பப்பட்டிருந்தார். கடைசி ஊடுருவல்காரர்கள் வெளியேறும்வரை இந்தியா தாக்குதலை நிறுத்தாது என்று தெரிவிக்கப்பட்டதை அடுத்து அவரின் புதுடில்லி விஜயம் தோல்வியடைந்திருந்தது.

இதற்கிடையில் இந்தியாவினால் சுட்டுவீழ்த்தப்பட்ட பாகிஸ்தான் விமானம் இந்திய ஆகாயப் பிராந்தியத்தில் வேவு நடவடிக்கையில் ஈடுபட்ட போது சுடப்பட்டதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதேசமயம் இரு நாடுகளையும் அதிகபட்ச பொறுமையைக் கடைப்பிடிக்கும்படி ஐ.நா.செயலாளர் நாயகம் கோபிஅனான் கேட்டுக்கொண்டுள்ளார். பாகிஸ்தான் விமானம் சுடப்பட்ட சம்பவத்தில் மனித உயிர்கள் பலியானது குறித்து கோபி அனான் கவலை தெரிவித்துள்ளார்.

அணுவெடிப்புப் பரிசோதனை, ஏவுகணைப் பரிசோதனை ஆகியவற்றில் கடந்த காலங்களில் இந்த இரு நாடுகளும் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து கொண்டிருப்பதால் இந்த இரு நாடுகளுக்கும் இடையிலான எந்த ஒரு சிறிய சம்பவமும் பெரும் விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று அஞ்சப்படுகின்றது. *

# மஞ்சள் கடல் மோதலை அடுத்து கொரியக் குடாவில் நெருக்கடி

கடந்த சில மாதங்களாக வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையிலான நெருக்கடி நிலைமை அதிகரித்து வருகிறது.

கடந்த ஜூன் மாதம் மூன்றாம் வாரம் இருநாடுகளின் படகுகளும் மஞ்சள் கடலில் மோதிக் கொண்டமை 1953 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இடம்பெற்ற மோசமான சம்பவமாகக் கருதப்படுகிறது.

கொரியாவின் மேற்குக் கரையில் உள்ள மஞ்சள்கடலில் ஒரு பகுதிக்கு இரு நாடுகளும் உரிமை கோருகின்றன. கடல்கனிவளங்கள் நிறைந்த அந்தப் பகுதி முழுவதும் தனக்கே சொந்தமானது என்கிறது தென்கொரியா. வடகொரியா இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது.

வடகொரியாவை யுத்தம் ஒன்றுக்குள் இழுப்பதற்காக வேண்டுமென்றே ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் தென்கொரியா ஈடுபடுவதாக வடகொரியா குற்றஞ்சாட்டி வருகிறது.

சர்ச்சைக்குரிய கடல் பரப்பில் மீன்பிடிப்படகுகளுக்குப் பாதுகாப்பு வழங்குவதில் ஈடுபட்டிருந்த தென் கொரிய கடற்படைக் கப்பல்கள் மீது வட கொரிய பீரங்கிப்படகுகளே முதலில் தாக்குதல் நடத்தின என்று தென் கொரியா குற்றஞ் சாட்டியுள்ளது.

மஞ்சள் கடலில் நிகழ்ந்த இந்த மோதல்களின் போது வடகொரிய கடற்படைப் படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது. பல படகுகள் சேதம் அடைந்தன. 30 வடகொரிய கடற்படையினர் கொல்லப்பட்டனர்.

1968 ஆம் ஆண்டில் அமெரிக்க உணவுக் கப்பலான "பியூபுளோ" வை வடகொரியா கைப்பற்றியது. வடகொரியாவின் 50 மைல் இராணுவ கடல்வலயத்துக்குள் வந்த சமயம் இந்தக் கப்பல் கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் வடகொரியா எதேச்சையாக ஏற்படுத்திக் கொண்ட இராணுவ கடல்வலயத்தை தவிர்த்தே சிவிலியன் கப்பல்கள் உட்பட சகல கப்பல்களும் பயணம் செய்து வருகின்றன.

1953 இல் கொரியா யுத்தம் முடிவடைந்து தற்பொழுது 46 வருடங்கள் கழிந்து விட்டன. ஆனால் வடகொரியாவும் தென்கொரியாவும் இன்னும் பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்றில் ஈடுபட்டு வருகின்றன. உலகிலேயே அதிக பதற்றம் நிறைந்த பிரதேசமாக கொரியக்குடாப்பகுதி இருந்துவருகிறது.

1953 இல் கொரிய யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் வடகொரியாவுமே கையெழுத்திட்டன. தென் கொரியாவுடன் சமாதான ஒப்பந்தம் எதிலும் வடகொரியா கைச்சாத்திடவில்லை. கொரிய குடாப் பகுதி இன்னும் பதற்ற நிலையில் இருப்பதற்கு இதுதான் காரணம். இரு நாடுகளும் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டால் மட்டுமே



தென் கொரியாவின் போஹாங் கடற்கரையில் தென்கொரிய - அமெரிக்க படையினர் இணைந்து ராணுவ ஒத்திகை நிகழத்துகின்றனர்.

பதற்றத்தைத் தணிக்கலாம்.

கடந்த ஜூன் மாதம் அமெரிக்காவும் வட கொரியாவும் உயர்மட்டப் பேச்சுக்களை ஆரம்பிக்க இருந்த சமயம் மஞ்சள் கடலில் தாக்குதல் சம்பவம் இடம் பெற்றது. இந்தப் பேச்சு வார்த்தையைக் குழப்புவதற்காக வடகொரியா திட்டமிட்டு ஆத்திரமூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக தென்கொரியா குற்றஞ்சாட்டி வருகிறது.

வடகொரியாவின் ஏவுகணைகள், அணு சக்தித் திட்டங்கள் குறித்து அமெரிக்கா அக்கறை கொண்டுள்ளது. இதனால்தான் வடகொரியாவை ஒதுக்கிவிடும் நிலையில் அமெரிக்கா இல்லை.

தென் கொரியாவில் 37 ஆயிரம் அமெரிக்கப் படைகள் இன்னும் நிலை கொண்டுள்ளன. மஞ்சள் கடல் சம்பவத்தின் பின்னர் தென்கொரியா மீதான வடகொரியாவின் எந்த ஒரு தாக்குதலின் போதும் அமெரிக்காவின் ஆதரவு தென்கொரியாவுக்கு கிடைக்கும் என்று தென் கொரியாவில் உள்ள அமெரிக்க கடற்படைத் தளபதி ஜெனரல் ஜோன் ரில்லேலி உறுதி அளித்துள்ளார்.

பெய்ஜிங்கில் வடகொரிய தென் கொரிய பிரதிநிதிகளுக்கிடையில் நடைபெறவிருந்த சந்திப்பை மஞ்சள் கடல் சம்பவம் பாதிக்கலாம் என்று முதலில் கருதப்பட்டது எனினும் தென் கொரியப் பிரதிநிதிகள் பெய்ஜிங் சென்று பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டனர். பேச்சுக்கள் ஆரம்பிப்பதில் ஒரு சில நாள்கள்தான் தாமதம் ஏற்பட்டது.

### வடகொரியாவின் ஏவுகணை

வடகொரிய மற்றும் ஒரு ஏவுகணைப் பரிசோதனையை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. கடந்த ஆண்டு மூன்று கட்டங்களாகக் கொண்ட 6 ஆயிரத்து 400 கிலோ மீற்றர் தூரம் செல்லக் கூடிய ஏவுகணையை வடகொரியா பரீட்சித்தது. வடகொரியாவின் அடுத்த ஏவுகணைப் பரிசோதனை கண்டம் விட்டுக் கண்டம் பாயும் நவீன ஏவுகணையாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரனின் சார்பாக சமீபத்தில் அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் வில்லியம் பெரி வடகொரியாவுக்கு விஜயம் செய்தார். தமது விஜயத்தின் முடிவில் வடகொரியா தனது ஏவுகணை, அணுசக்தித் திட்டங்களைக் கைவிட்டால் பல கோடி ரூபா பெறுமதியான உதவியை வடகொரியாவுக்கு வழங்கும்படியும் வடகொரியா மீதான அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை நீக்கும்படியும் கிளின்ரன் நிர்வாகத்துக்கு அறிக்கை சமர்ப்பித்தார். வடகொரியா அணுவல்லரசாக உருவெடுப்பதைத் தடுப்பதே அமெரிக்காவின் நோக்கம் என்பதில் சந்தேகம் இல்லை. வடகொரியாவின் ஏவுகணை அச்சுறுத்தலுக்கு ஈடுகொடுப்பதற்கு தென்கொரியா நடவடிக்கை எடுத்து வருகிறது. தென்கொரிய ஜனாதிபதி கிம் டே யங் சமீபத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்த சமயம் 30 கிலோ மீற்றர் வீச்செல்லை கொண்ட ஏவுகணை உற்பத்திக்கான அனுமதியை அமெரிக்காவிடம் கோரியிருந்தார்.

வடகொரியா சில மாதங்களுக்கு முன்னர் ஜப்பானுக்கு மேலாக நொடோங் - 1 என்ற ஏவுகணையை செலுத்தியது. இந்த நடவடிக்கை ஜப்பானையும் ஏவுகணை உற்பத்தியில் நாட்டம் கொள்ளச் செய்துள்ளது.

ஜப்பானினதும் தென்கொரியாவினதும் பாதுகாப்புக்கு அமெரிக்கா உத்தரவாதம் அளித்த போதிலும் வடகொரியாவின் அச்சுறுத்தலை சமாளிக்கும் விதத்தில் தாமும் ஏவுகணை உற்பத்தியில் ஈடுபடப் போவதாக இந்த இரு நாடுகளும் தெரிவித்து விட்டன. தென்கொரியாவில் மட்டும் அல்ல ஜப்பானிலும் அமெரிக்கப் படைகள் நிரந்தரமாக நிலை கொண்டுள்ளன.

ஏவுகணைத் தாக்குதலில் இருந்து பாதுகாப்பு வழங்கும் திட்டம் ஒன்று குறித்து அமெரிக்காவும் ஜப்பானும் இணைந்து செயற்பட்டு வருகின்றன.

### சுமுகமான உறவு

ஜனாதிபதி கிம் டே யங் தலைமையில் தென்கொரியா தற்பொழுது வடகொரியாவுடன் ஓரளவு சுமுகமான உறவுகளை வைத்துக்கொண்டுள்ளது.

உள்நாட்டில் இருந்துவரும் எதிர்ப்

**உலக உலா**

**என்.பி.சீலன்**

பையும் பொருட்படுத்தாமல் தென் கொரியர்கள் வ்டகொரியாவுக்கு உல்லாசப் பயணம் செல்வதற்கு தென் கொரியா ஜனாதிபதி அனுமதி அளித்துள்ளார். ஏற்கனவே 83 ஆயிரம் தென் கொரியர்கள் வடகொரியாவுக்கு சென்று திரும்பி உள்ளனர். இதன் மூலம் அடுத்த ஆறு ஆண்டுகளில் வடகொரியாவுக்கு 100 கோடி டொலர் வருமானம் கிடைக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

### அமெரிக்க உதவி

பொருளாதார நெருக்கடியினாலும் பஞ்சத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள வடகொரியாவுக்கு உணவு உதவி வழங்கும் நாடுகளில் அமெரிக்காவே முன்னணியில் நிற்கிறது. கடந்த வருடம் வடகொரியாவுக்கு மூன்று லட்சம் தொன் கோதுமைத் தானியத்தை அமெரிக்கா வழங்கியது. ஐ.நா உலக உணவுத்திட்டத்தின் கீழும் வடகொரியா பெரும் அளவு உதவிகளைப் பெற்று வருகிறது.

இத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஜனாதிபதி கிம் ஜோங் இல் தலைமையில் வடகொரியா நிலைத்து நிற்கிறது. கிம் ஜோங் இல் தலைமையின் கீழ் 11 லட்சம் பலமான படைகள் இருந்து வருகின்றன.

எந்த ஒரு பொருளாதாரத் தடையும் வடகொரியாவைப் பணியவைக்க மாட்டாது என்பது நிச்சயமான பின்பே அமெரிக்கா தனது உணவு உதவிகளை வழங்க ஆரம்பித்தது. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வார இராசி பலன்

**14 - 08 - 1999 இலிருந்து 20 -08 - 1999 வரை**

## மகாதேவா ஜோதிடம்

## சோதிட சஞ்சீவி

| | | | |
|---|---|---|---|
| | வி சனி | | |
| | இராசிச்சக்கரம் | | சூ புத ராகு |
| கே | | | வெ சந் |
| | | செவ் | |

மாற்றம்:- உத்தரம் 1 - சந்திரன் சிங்கம் இராசியில நிற்கும்.19.8.1999இல் - விருச்சிக இராசியில செவ்வாய்மாறும்.

*அரசியலில் மாறிமாறி கருத்து வேற்றுமைகள் ஏற்பட்டபடி இருக்கும். ஐ.நா.சபையில் புதிய அழுத்தங்கள் ஏற்படும். இந்தியா புதிய அணுகு முறைகளைக் கூறும். தென்திசையில் குழப்பநிலை கலக்கத்தைக் கொடுக்கும். இந்தியாவில் தேர்தல் சூடு உச்சக்கட்டத்தை அடையும். தீவிர வாதச் செயல்களால் அழிவுகள் தொடர இடம் உண்டு. தலைவர்களுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்படும். வடக்கு- கிழக்கு, மத்திய நாடுகளில புதிய அணுகுமுறையில் மேற்குலகத்தவர்கள அழுத்தங்களைக் கொடுத்துக் கொண்டிருப்பார்கள் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.*

## மேடம்

சாதகப் பொருத்தம் பார்த்தா ஓர் ஆணும் பெண்ணும் காதலிக்கிறார்கள்? காதலிப்பவர்களுக்கு ஏன் குறிப்பைப் பார்த்து கஷ்டப்படுத்துகிறீர்கள்? இயற்கை விதிகளை, விதியின் போக்கில் விட்டுவிடுவதே நியாயமாகும். காதலென்னும் மோகம் பலவீனத்தை மட்டும் ஏற்படுத்தாமல் பார்த்துக் கொள்ளுங்கள். காதலிக்கும் இளம் சிட்டுக்கள் இதையெல்லாம் தொழில் ஸ்தானத்திலிருந்து பெரிதாக எண்ணாமல் உங்கள் தொழிலில் கவனமாக இருந்து செயற்படுங்கள். குடும்பத்தின் அங்கத்தவர்களுக்கு கலக்கமான காலமாகும். பொருள் செலவு கட்டுமீறும். விஷபீடை, வயிற்று வருத்தம், தலைச் சுற்று, உஷ்ணத் தாக்கம் ஏற்படும். மருந்துத்துறை, நகைவேலை, நிர்வாகம், கடல்துறை, புடைவைத்துறையினர், பத்திரிகைத்துறையினருக்கு மாற்றங்களும் இலாபங்களும் அதிகரிக்கும்.

* *அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன்.*

## இடபம்

ஒருவருடைய வீட்டில் தோஷங்கள் இருந்தால், கிரகதோஷம் வருங் காலத்தில் மிகக் கெடுதிகளைக் கொடுத்து பிரிவு, பொருள் இழப்பு, மனத்துன்பங்களை ஏற்படுத்தும். இதை அறிந்து நிவர்த்தி செய்வது அறிவுடையோர் கடமையாகும். இதையெல்லாம் அறியாதவரல்லர் நீங்கள். தொழில் ஸ்தானத்தில் மேலதிகாரிகள், நண்பர்களின் உதவிகள கிடைக்கும். இடம் விட்டு இடம்மாறச் சிந்தனை வந்தாலும் நிதானமாகச் செயற்படுங்கள். விட்டகுறை, தொட்டகுறையால் புதிய நட்பு பகைமையைத் தந்துவிடும். நரம்புத்தளர்ச்சி, தோல்வருத்தம், அடிபாடுகள், வீக்கம், காயம் வரலாம். தொழில் நுட்பம், இரும்புவேலை, மின்சாரம், ஜோதிடத்துறை, கடல்துறை,புடைவை, சாய்ப்புச்சாமான் விற்பனைத் துறையினருக்கு நல்ல இலாபங்கள் கிடைக்கும்.

* *அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன்.*

## மிதுனம்

அவசரப்பட்டு ஒருவர், தெரிந்தோ, தெரியாமலோ செய்யும் பிழைகளால் பல துன்பங்களை அடைகின்றார்கள். நீங்களும் நிதானமாக இருக்க வேண்டும். சிலரின் திசைமாற்ற யோசனைகளால் பின்பு வருந்துவீர்கள். ஆழம் அறியாதுஅவசரப்பட்டு எதிலும காலை விடாதீர்கள். நிதானம் தேவையாகும். திடீர் நண்பர்கள், அரச அதிகாரிகள் உபத்திரவம் தருவார்கள். அடிக்கடி கோவித்தல், தலைச்சுற்றல், சலிப்படைதல், மலச்சிக்கல், உஷ்ண, பித்த ரோகங்கள் என்பன கொடுக்கும். கடல் துறை, வியாபாரத்துறை, நகைவேலை, மருந்துத்துறை தொடர்பானவர்களுக்கு மாற்றங்களும் நன்மைகளும் ஏற்படும். அவசரப்பட்டு பிணைநிற்பதைத் தவிருங்கள். பிரயாணங்களை காலதாமதப்படுத்துங்கள். தூரதேசச் செய்திகளால் நன்மைகள் ஏற்படும்.

* *அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன்.*

## கடகம்

எந்த நாட்டில் ஒரு குழந்தை பிறந்ததோ அந்த நாட்டிற்கு, அந்தத் திகதி - நேரத்திற்குக் கணிப்பீடு செய்தல் வேண்டும். யாழ்ப்பாணம் நேரத்திற்கு மாற்றிக் கணிப்பது தவறானதாகும். அதனால் பிழையான குறிப்பில் பிழையான பலனைத்தான் அறியமுடியும். எனவே கணிப்பீடுகளைச் சரியாகச் செய்தல் சோதிடர்களின் கடமையாகும். அதேபோன்று நீங்களும் உங்கள் கடமைகளைச் சரிவரச் செய்து வாருங்கள். புதிய நட்பு உபத்திரவம் தரும். வீடு, வாகனத்தால் இலாபங்கள் ஏற்படும். எதிர்ப்பாலார் கருத்து வேற்றுமைப்படுவர். திடீர்திடீரென திட்டங்கள்வரும். எதிலும் முடிவெடுக்க முடியாதநிலை ஏற்படும். படபடப்பு, நெஞ்சுநோ, வாய்வுத்தொல்லை என்பன ஏற்படும். ஹோட்டல்துறை, நகைத்துறை, புடைவைத்துறை, ரீவித்துறை, மின்சாரத்துறை, கடல்துறை, சமயத்துறை என்பன தொடர்பானவர்கள் அதிக இலாபம் அடைவார்கள்.

* *அதிர்ஷ்டநாள்:- திங்கள், புதன.*

## சிங்கம்

சாமிக்குமுன் ஏழை, பணக்காரன், அதிகாரி, கூலிக்காரன், கீழ்சாதிக்காரன், மேல்சாதிக்காரன், கற்பூரம் கொளுத்திறவன், பூத்தருகிறவன்என்ற எவ்வித பேதமும் இல்லை. சமதர்மத்துடன், தகுதிக்குத் தகுந்த இடத்தை அவனுக்கு சந்தர்ப்பம் வரும்பொழுது சாமி கொடுக்கத்தவறமாட்டார். அதுபோன்று தொழில் ஸ்தானத்தில் இருப்பீர்கள். ஆனால் உங்களை அறியாது சிலர் தூற்றுவார்கள். தூற்றட்டுமே. உண்மைகள் ஒரு நாள் தெரியாமலா போகும்? வசீகரப்பேச்சு, அடிக்கடி பிறரை மயக்கிவிடும். கயல்விழியாள் வெள்ளியும், மதிமுகவட்டநிலா மங்கை சந்திரனும் உதயத்தில் பல கற்பனைகளைத்தந்துவிடுவர். நெஞ்சுநோ, உடல்வலி, உஷ்ணபீடைகள், கண்கடி என்பன இருக்கும். ரீவித்துறை, விவசாயத்துறை, வாகனத்துறை, மின்சாரத்துறை, சட்டத்துறை, மருந்துத் துறை. கோயில்துறையில் தொடர்புள்ளவர்கள் அதிக இலாபம் அடைவார்கள்.

* *அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## கன்னி

காரணமின்றி எவருக்கும் துன்பம் வருவதில்லை. நாம்முன்னர் பிறருக்குச் செய்த தவறுகள், துன்பங்களால் பீடிக்கப்பட்டு பின்னர் வருந்துகின்றோம். தொழில் ஸ்தானத்தில் பொருளால், கொடுக்கல் வாங்கலால் பிரச்சினைகள் வரலாம். நண்பர்கள் கோள் சொல்லி வீண்பிரச்சினைகளைத் தரலாம். நரம்புத்தளர்ச்சி, சளித்தொல்லை, நாரிவலி, வாத, வாய்வு ரோகங்கள், குடல்வருத்தங்கள் வரலாம். ஓய்வு அடிக்கடி எடுத்தக் கொள்ளுங்கள். எதிர்ப்பாலாருடன் புத்திசாதுரியமாக நடந்து கொள்ளுங்கள். பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். உருக்குத்தொழில், குருத்தொழில், நிர்வாகத்தொழில், சட்டத்துறை, சமயத்துறை, விவசாயத்துறை போன்றவற்றில் தொடர்புடையவர்களுக்கு நல்ல இலாபங்கள் அதிகரிக்கும்.

* *அதிர்ஷ்டநாள்:- புதன்.*

## துலாம்

இருப்பதை, கிடைப்பதைக்கொண்டு மனிதர்கள் திருப்திப்படுவார்களாயின் அதனால் பல நன்மைகளும் மன அமைதியும் அவர்களுக்குக் கிடைக்கின்றது. எனவே இக்காலத்தில் பற்றுப்பாசத்தையெல்லாம் பெரிதாக எண்ணாமல் தொழில்ஸ்தானத்தில் இருக்கும் நிலையை அனுசரித்து செயற்பட்டு வெற்றி அடையுங்கள். இடமாற்றங்கள், வீடுமனைச் சிறப்பு ஏற்பட இடமுண்டு. தலைவலி, வயிற்றுக் கோளாறு, குடல்வருத்தங்கள், தோல் வியாதிகள் என்பன ஏற்பட இடமுண்டு. கலைத் துறை, குருத்துறை, ரீ.வி., நகைத்துறை, பத்திரிகைத்துறை, கடல் துறை போன்ற துறைகளில் சம்பந்தப்பட்டவர்கள் அதிக இலாபங்கள் பெறுவார்கள். தூரத்தில் உள்ளவர்களால் நற்செய்திகள் வரும்.

* *அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, புதன்.*

## விருச்சிகம்

தெய்வசக்தி கொண்டவர்கள் பிறருக்கு நன்மை, உண்மைகளை வெளிப்படுத்திச் செயற்படுவதனால் இறந்தபின்பும், தெய்வ நன்மைகளைப் பெறத்தவறமாட்டார்கள் என்பதை நீங்கள் உணர்வீர்கள். எனவே தொழில் ஸ்தானத்தில் நல்லதைச் செய்யப் பாருங்கள். இடமாற்றங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். நெஞ்சுவலி, வாயவுத்தொல்லை, கிருமித்தாக்கம், வீக்கம், உஷ்ணபீடைகள் வர இடம் உண்டு. பொருள் தவறவோ, களவு போகவோ இடம் உண்டு. வாகனத் துறை, சட்டத்துறை, கோயில்துறை, கடல்துறை, வியாபாரத்துறையினருக்கு இலாபங்களும் நன்மைகளும் வர இடம்உண்டு. பிரச்சினைகள் முடிவடைவதில்லை. அதன் மத்தியில் நின்றுதான் நாம் செயற்பட வேண்டும். தெளிவும் விடிவும் உங்கள் போராட்டத்தில் தங்கியுள்ளது.

* *அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, புதன்.*

## தனுசு

திறமை படைத்தவர்கள், அறிவாளிகள், நல்லவர்கள் பலர் கோபத்தால் உணர்ச்சிவசப்பட்டு சொல், செயல் மாற்றமடைந்து செயற்படுவதனால் பலரைப் பகைத்துக் கொள்வதுடன் பாவச்செயல்களுக்கும் ஆளாகின்றார்கள் என்பதை மறவாதீர்கள். நாடி வந்த தொழிலை நம்பிக்கையுடன் செய்யுங்கள். மாறிவரும் உலகில் மாற்றங்கள் சகஜம். தொழில் ஸ்தானத்தில் அமைதி நிலவும். கொடுக்கல் வாங்கல்களில் மாறிமாறி மனக் கசப்புக்கள் வரலாம். பெரியவர்கள், நல்லவர்களின் உதவிகளால் நன்மைகள் ஏற்படும். வயிற்றுவருத்தம், கைகால்சோர்வு, வாய்வுக்குழப்பம், உஷ்ணபீடைகள் என்பன அடிக்கடி கொடுக்கும். சட்டத் துறை, ஆலய வேலை, கடல்தொழில், நகைவேலை, குருத்துறையினருக்குப் பலவித மாற்றங்கள். தொழில் ரீதியிலான இலாபங்கள் என்பன கொடுக்கும்.

* *அதிர்ஷ்டநாள்:- ஞாயிறு, திங்கள், புதன்.*

## மகரம்

காலம்வரும் பொழுது காத்திருந்து எதிலும் இடம்பிடிக்க வேண்டும். அவசரப்பட்டு முந்திக் கொள்வதனால் இழப்புக்களைச் சந்திக்கிறார்கள். தொழில்ஸ்தானத்தில் தலைகுனிவு ஏற்படலாம். அடிக்கடி மனமாற்றம், வேதனைச் செயற்பாடுகள் மாறிமாறி இருக்கும் இடங்களில் ஏற்படலாம். கூடிய நட்பால் கலக்கமடைவீர்கள். வீடு, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். கண்ணி வைக்கும் கன்னிகளால் கலங்க நேரிடும். ஞானம் பேசுவதனால் காரியம் ஆகிவிடுமா? உடல் களைப்பு, யோசனை, நாரி, முழங்கால் பிடிப்பு, செமியாக் குணம், சளி, வாத உளைச்சல் ஏற்படலாம். வியாபாரத் துறை, சட்டத்துறை, ஆலயத்துறை, போக்குவரத்துத்துறை, ரீ.வித்துறை, மின்சாரத்துறை, பத்திரிகைத் துறையினருக்கு நன்மைகள் கிடைக்கும்.

* *அதிர்ஷ்டநாள்:- திங்கள்.*

## கும்பம்

நம்பிக்கையுடன உறுதியாக இறைவனை வழிபடல் வேண்டும். சுயநலத்தால் நம்பிக்கையைச் சிலர் அவநம்பிக்கை ஆக்குகின்றார்கள் எனச் சிந்திக்கிறீர்களா? காலம் மாறிவரும அப்பொழுது சமநிலையாகும். காசுக்காக எத்தனை கலக்கங்களை பிறருக்கு ஏற்படுத்துகிறார்கள். தொழில் ஸ்தானத்தில் உங்கள் புதுக்கருத்துக்களுக்கு நல்லவரவேற்பு ஏற்படும். எதிர்ப்பாலார் பல உதவிகளைச் செய்வார்கள். வாதஉளைவு, உஷ்ணபீடைகள், படபடப்பு,நரம்புச்சோர்வு என்பன அடிக்கடி கொடுக்கும் பலன்கள் காணப்படுகின்றன. ரீ.வி.த்துறை, வியாபாரத் துறை, மின்சாரத்துறை, போக்குவரத்துத்துறை, பத்திரிகைத்துறை, இயந்திரத்துறை, மருந்துத்துறையினருக்கு மாற்றங்கள் [illegible] கள் சொந்தங்களைக் காப்பாற்றும் என்று எண்ணாதீர்கள்.

* *அதிர்ஷ்டநாள்:- திங்கள்.*

## மீனம்

பாசத்தினால் வந்த வேகத்தில் தவறுகளைச் செய்து பல நல்லவர்கள் - தெய்வபக்தி கொண்டவர்கள - பல தண்டனைகளை அனுபவிக்கிறார்கள் என்பதை அறிவீர்கள். தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம். புத்திசாதுரியமாகச் சமாளித்துக் கொள்ளுங்கள். இடமாற்றங்களால் நன்மைகள் ஏற்படும். சளி, உஷ்ணபீடைகள், சமியாத்தன்மை, வாதஉளைவு, நாரிநோ என்பவற்றால் வருந்தலாம். அழகிற்காக ஏங்காதீர்கள். அழகிய பூக்கள் வாடத்தான் செய்யும். மருந்துத்துறை, ரீ.வி.த்துறை, குருத்துறை, மின்சாரத்துறை, நகைத்துறையினருக்கும் பல்பொருள் வியாபாரம் செய்பவருக்கும் அதிக இலாபங்கள் கிடைக்கும். வரவு - செலவு சமநிலையில் இருக்கும் காலமாகும். இடமாற்றங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்

* *அதிர்ஷ்டநாள்:- திங்கள்.*

# பாலர் ஆசிரியரும் பாலர் கதையும்

குழந்தைகள் ஒன்றும் எழுதப்படாத புத்தம்புதிய எழுதுபலகையைப் போன்றவர்கள். பிறரது முன் மாதிரியை அவதானித்தே அவர்கள் தமது பேசும் திறமையையும் - முறையையும் அமைத்துக்கொள்கின்றனர். அதனால் தாய் மொழியைப் போதிக்கும் ஓர் ஆசிரியர் திருத்தமான உச்சரிப்பும், வாக்குவன்மையும் பெற்றிருத்தல் அவசியம். தாய்மொழியில் ஆசிரியருக்குப் பற்றும் - தேர்ச்சியும் இருக்க வேண்டும். ஓர்ஆசிரியரின் போதனைத்திறனால்தான் பிள்ளைகளின் மனதில் மொழிஞானம் பிறக்கும். ஆகவேதான் ஆசிரியர் அனைத்திற்கும் ஒரு முன்னுதாரணமாக விளங்கவேண்டும்.

ஒரு பாலர் வகுப்பில் மொழியறிவுதனை தமிழ் உணர்ச்சியூட்டும் படங்கள் மூலம் தெளிவாகக் கற்பிக்கமுடியும். எந்தப் பாடத்தைக் கற்பிப்பதனாலும் பாலரின் இயற்கைக் குணங்களையும், அறிவு நிலையையும் அறிந்து அவற்றிற்குத் தக்கபடி பொருத்தமான முறைகளைக் கையாண்டால் முழுப்பயன் கிட்டும். ஆதலால் பாலரின் கல்வியில் யுக்திவாத முறையை விட (Logical Method), மனோதத்துவ முறையே (Psychological Method)சாலச் சிறந்தது.

தற்காலத்தில் பாலர்கள் விருப்பத்துடன், உற்சாகத்துடன் பாடசாலை செல்வதைக் காண்கிறோம். பிள்ளைகள் விரும்பும் விதமாகக் கற்பித்தல் முறைகள் நிகழ்வதே அதற்குரிய காரணமாகும்.

எந்தப்பாடத்தையும் கதைகள் மூலமாகக் கற்பித்தல் ஒரு சிறந்த முறையாகும். கதை கேட்டல் என்பது பிள்ளைகளுக்கு உற்சாகத்தையும், மகிழ்ச்சியையும் உண்டாக்குகின்றது; கதை சொல்லுதல் என்பது குழந்தைகளுக்கும் ஆசிரியருக்கும் இடையில் நேசப்பான்மையை விளைவிக்கின்றது.

கதை சொல்லுதல் வாய்மொழிப் பயிற்சிக்கு ஓர் அரியசாதனமாகும். குழந்தைகளுக்கு கதையில் இருக்கும் விருப்பம் அளவிடமுடியாதது. கதைகள் குழந்தைகளின் அறிவை வளர்த்து ஒழுக்கத்தைச் சீர்ப்படுத்தும். அவர்களது அழகுணர்ச்சிகளையும் விருப்பங்களையும் சீர்செய்யும். பாலர்கள் கோர்வையாகப் பேசவும், பின்பு எழுதப் பழகவும் கதை அவசியமாகின்றது. பாலர்களின் எண்ணங்களையும், கற்பனாசக்தியையும், ஞாபகசக்தியையும் பெருக்கி வளர்ப்பதற்கு கதைகள் பெரிதும் பயன்படும்.

புதிய சொற்களைக் கற்பதற்கும் சொல்லறிவை விருத்தி செய்வதற்கும் கதை அனுகூலமாகும். மனிதரிடத்தும் இதர பிராணிகளிடத்தும் அன்பும் - அனுதாபமும் கதைகள் மூலம் ஏற்படும். தாய்மொழியின் மேல் அபிமானமும், நல்ல மொழி நடையில் விருப்பமும் உண்டாக்க கதைகள் உதவி செய்யும்.

பாலர்களது வயதுக்கும், மனோவளர்ச்சிக்கும் பொருத்தமான கதைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். குழந்தைகளின் சொந்த அனுபவத்தை ஒட்டிய கதைகள் விரும்பத்தக்கவை.

"சங்கர் வீட்டில் ஒரு பசுமாடு நிற்கிறது. அது ஒரு நாள் கன்று ஈன்றது. கன்று மாட்டின் மடியை முட்டிமுட்டிப் பால் குடித்தது. மாடு தன்கன்றை நக்கிக் கொடுத்தது. அம்மா பசுவில் பால் கறந்தார். அதைக் காய்ச்சி சீனிபோட்டு எல்லோருக்கும் பருகக்கொடுத்தார். பசுப்பால் மிகவும் ருசியாக இருந்தது."

இப்படியான சிறுசிறு கதைகள் குழந்தைகளுக்கு உற்சாகம் அளிக்கக்கூடியவை. அன்றாடம் நம்வாழ்வில் நடக்கும் சம்பவங்களை வைத்தே கதையாக இயற்றிச்சொல்லும் போது அவர்கள் மகிழ்ச்சியில் பூரித்துப் போவார்கள்.

காட்டுக்கதைகள், மாயக்கதைகள், புராணக்கதைகள் என்பனவும் பாலருக்குரிய கதையாகத் தெரிவுசெய்யப்பட வேண்டியன. பறவை, மிருகம், மரம், செடி, கொடி பேசுவது போன்ற கதைகள் சிறுவரது ஆச்சரிய அவாவைப் பூர்த்திசெய்யவல்லன. இதற்கு உதாரணமாக காகமும் - நரியும், சிங்கமும் - முயலும் போன்றவற்றைக் கொள்ளலாம். தேவதைகள் தோன்றிப் பேசுவது போலவும், வரங்கள் கொடுப்பது போலவும் வரும் கதைகள் மனோராஜ்யம் செய்யும் குழந்தைகளுக்கு விருப்பமாக இருக்கும். இதற்கு உதாரணமாகவிறகுவெட்டியின்கதை, 'ஸ்னோவைற்றும் - சித்திரக்குள்ளர்களும்' கதை போன்றவற்றைக் கொள்ளலாம்.

இன்னும் இராமாயணம், பாரதம், விவிலியநூல், பெரியபுராணம் முதலியவற்றிலுள்ள குழந்தைகளுக்கான கதைகளைத்தேர்ந்தெடுத்தும் சொல்லாம். இதற்கு உதாரணமாக திருஞான சம்பந்தர் தேவாரம் பாடியகதை, சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்த கதை, புயலும் யேசுவும் போன்றவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

நாட்டுக்கதைகள், சரித்திரக் கதைகள், வாழ்க்கை வரலாறுகள், சுயசரிதைகள் என்பன பிள்ளைகளின் வாழ்க்கைக் குறிக்கோள்கள், தேசாபிமானம் என்பன வளர்வதற்கு உதவும். சாகசக் கதைகள், நகைச்சுவைக்கதைகளும் பிள்ளைகளுக்கு ஏற்றன.

நீண்ட கதைகளும், அச்சம் உண்டாக்கும் கதைகளும், கொள்ளைக் கதைகளும், பேய், பூதக் கதைகளும் பாலர்களுக்குத தேவையற்றவையாகும்.

ஆசிரியர் பாலருக்குக்கதை சொல்லும்போது பாலரின் முகத்தைப்பார்த்து ஜீவனுடனும், உற்சாகத்துடனும் சொல்ல வேண்டும். எடுத்தல்,படுத்தல், ஓசையுடன் - சிறுநடிப்புமு சேர்ந்து இயற்கையாகப் பேசுவதுபோல் பாலனுக்குத் தெரிந்த சொற்களைக் கொண்டே கதை சொல்லவேண்டும். கதையில் வரும் விடயத்திற்கேற்ப தொனியினை மாற்றிக் கொள்ளல் வேண்டும்.

கதை சொல்லும் போது அதில் உள்ள நீதியையோ அல்லது முக்கிய கருத்தையோ குழந்தைகள தாமாகவே அறிந்து கொள்ளும்படி தெளிவாகச் சொல்ல வேண்டும். கதையில் வரும் நீதியை எக்காரணம் கொண்டும் வெளிப்படையாக எடுத்துச் சொல்லல் ஆகாது. கதையில் வரும் சம்பவங்களை நாடகங்கள் போல பாலர்களின் மனக்கண்முன் தோன்றும்படி வர்ணிக்க வேண்டும்.

கதை சொல்லும் ஆசிரியர் உற்சாகமாகவும்,முகமலர்ச்சியுடனும இருப்பது அவசியம். ஆசிரியர் பிள்ளைகளோடு பிள்ளையாய் இருந்து தன்னை மறந்து கதை சொன்னால்தான் உற்சாகம் உண்டாகும். சொல்லப்போகும் கதையை ஆசிரியர் நன்றாகத்தெரிந்து வைத்திருக்க வேண்டும். அதன் கருத்துக்களையும் அமைப்பையும் இரசனையுடன் உணர்ந்திருக்க வேண்டும். விடயம் தெரிந்திருந்தால் இயல்பாகப் பேச்சுவரும். அதற்காக ஆசிரியர் பாடம் தொடங்க முன்பு கதையை நன்றாகப் படித்து அதனை சொல்லும் முறையினையும் நன்றாக ஆலோசித்து வைத்திருக்க வேண்டும்.

சிறந்த கற்பனைச்சக்தியும், வர்ணிக்கும் திறனும் ஒருங்கே கொண்ட ஆசிரியரால்தான் திறமையாகக் கதை சொல்லமுடியும். வர்ணிக்கப்படும காட்சி பிள்ளைகள் மனதில் உண்மையானது போலத் தோன்றி ஆசையையும், உற்சாகத்தையும், வியப்பையும் கொடுத்து அவர்களது மனோபாவ நிலையை விருத்தி செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். இவ்வித திறமை பழக்கத்தால் ஏற்படும்.

ஆசிரியர் பிள்ளைகளின் முகம் பார்த்து, சொல்வதைத் தெளிவான குரலில் சொல்ல வேண்டும். ஆசிரியா கூறுவது குழந்தைகளுக்கு நன்கு விளங்குகிறதென்றால் அவர்களது கண்களும், முகங்களும் ஒளிபெற்று விளங்குவதைக் காணலாம். பிள்ளைகள் கேட்ட கதைகளை திருப்பிச் சொல்லுவதால் அவர்களின் சொந்தப் பேச்சிற்கு சிறந்த வாய்மொழிப் பயிற்சி உண்டாகும். ஒவ்வொரு பிள்ளையையும் வகுப்பின் முன்னே வந்து கதையைத் திருப்பிச் சொல்லுமாறு ஊக்குவிக்க வேண்டும்.

ஆரம்பத்தில் ஆசிரியர் சொல்லிய சொற்களைக் கொண்டே பிள்ளைகள் கதை சொல்வர்.

நாளடைவில் அவர்கள் தங்கள சுய பேச்சில், அழகிய மழலை மொழியில் அதே கதையைச் சொல்லுந்திறமை பெறுவர்.

**- சந்திரா தனபாலசிங்கம் -**
(பயிற்றப்பட்ட பாலர் ஆசிரியை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# 19 பழங்கிடுகு வாழ்க்கை

## செங்கை ஆழியான்

மழைக்கு ஒழுகிய தலைவாசல் கூரையைச் சீர்செய்வதில் சுப்பிரமணியமும் சிவபுத்திரனும் வேறு இரு கூலியாட்களும் ஈடுபட்டிருந்தனர். நான்கு நாட்களாகக் கிடுகுக்கு அலைந்து பார்த்தனர். நல்ல கிடுகும் கிடைக்கவில்லை. ஒரு சோடிக்கிடுகுகளின் விலை நாற்பத்திரண்டு ரூபாவாக ஏற்றங்கண்டிருந்தது.

"ஆயிரத்து ஐநூறு கிடுகுகள் வேண்டும் இந்தத் தலைவாசலை மேய. முகட்டிற்கு வேணுமெண்டால் பழைய கிடுகுகளைப் பாவிக்கலாம்." என்று வேய்ச்சல்காரர் மதிப்பிட்டனர். அவாகள் தலைவாசலை மேயப்போகிறார்கள் என்ற செய்தி அயலில் எப்படிப் பரவியதோ தெரியாது. மூன்று குடும்பங்கள் அவர் வீட்டு முற்றத்தில் நின்றிருந்தன. அவர்களின் வறிய கோலத்திலிருந்து அவர்களின் நிலை புரிந்தது.

"கூரை மேய்ந்தால் அந்தப் பழங்கிடுகுகளில எங்களுக்குக் கொஞ்சம் தாருங்கோ. நாங்க தடியால கூரை போட்டு பழஞ்சாக்குகளைக் கட்டியிருக்கிறம். தந்தீங்கெண்டால் அதால மேய்ஞ்சிருப்பம்.."

சுப்பிரமணியத்திற்கு நெஞ்சு வலித்தது. இடம்பெயர்வின் துயரத்தை அவர்கள் அறியவில்லை. கையில் சம்பளப் பணம் இருந்ததும் வசதியாக ஓர் இருப்பிடம் கிடைத்ததும் அவர்களுக்கு மக்கள்படும் கஷ்டத்தினை உணரவிடவில்லை.

"மேய்ஞ்சால நிச்சயமாகத தாறம்.." என்றார் அவர்.

வலிகாமத்திற்குத் தேவையான தென்னங்கிடுகுகள் தென்மராட்சியிலிருந்துதான் வரும். தோட்டங்களுக்குத் தேவையான குழைவண்டில்களும் இப்பிரதேசத்திலிருந்துதான் வரும். நான்கு இலட்சம் மக்கள் திடீரென இங்கு இடம்பெயர்ந்து விட்டதால் ஒருவகையில் கடும் சிரமங்களைத் தென்மராட்சி மக்கள் அடைந்தாலும் அவர்களின் உற்பத்திப் பொருட்களுக்கு என்றுமில்லாத விலை கிடைத்தது. தேங்காய் முப்பது ரூபா வரையும் கிடுகுகள் நாற்பது ரூபா வரையும் விலையுயர்ந்தன. மாம்பழங்களை முன்னர் விற்கமுடியாத நிலை இருந்தது. இன்று அவை நன்கு விலை போயின.

எப்படியிருந்தாலும் தென்மராட்சி மக்களின் விருந்தோம்பும் பண்பினை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. அவர்கள் பெருமனது படைத்தவர்கள். முகஞ்சுழிக்காது வலிகாமத்து மக்களை ஏற்றுக்கொண்டவர்கள்.

சுப்பிரமணியமும் சிவபுத்திரனும் கையிலிருக்கும பணத்தைப பொறுத்து தேவையான கிடுகுக்கு எவ்வளவு செலவாகும், வேய்தல் கூலிக்கு எவ்வளவு செலவாகும் எனக்கணக்கிட்டுப்பார்த்தனர். கட்டுப்படியாகவில்லை. குறைந்தது ஆறாயிரம் ரூபா தலைவாசல் வேயத் தேவைப்பட்டது.

"அம்மாடி... அந்தக்காலத்தில் ஒரு வீடே கட்டலாம். கல்வீடு... இந்தக்காலத்தில ஓடே போட்டிடலாம் இந்தப் பணத்திற்கு.." என்றார் சுப்பிரமணியம் கவலையுடன்.

"அப்ப மேயாமல் இப்படி ஒழுக்குக்க இருக்கிறதே?" என்றாள பவளம்.

"கூரையே இல்லாமல் எத்தனை குடும்பங்கள் இருக்குது தெரியுமா?" பவளம் அதற்குப்பின்னர் பேசவில்லை.

சாவகச்சேரிக்குப் போய்விட்டு வந்த சிவபுத்திரன் நல்ல ஒரு தகவல் கொண்டு வந்தான்.

"சித்தப்பா, யூ.என்.எச்.சி.ஆர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு வெள்ளைப் பிளாஸ்ரிக் தளப்பார் கொடுக்கினமாம். எங்க, எப்ப கொடுக்கிறதென்று சாவகச்சேரி யாழ்ப்பாணக் கச்சேரியில எழுதிப்போட்டிருக்கினம். [illegible]சாலைக்கு வியாழக்கிழமையாம்... [illegible]ங்களுக்கு மூன்று [illegible]ளப்பார் கிடைக்கும். பெரிசாம்... அதை நாங்க இந்தக் கூரைக்கு மேல போட்டு இழுத்துக் கட்டிவிடுவம்."

அந்தத் தளப்பார்களைத்தான் தலை வாசல் கூரைக்கு மேலாக விரித்துக் கட்டுகின்ற வேலை நடந்து கொண்டிருந்தது.

"தம்பிமாரே கிழியாமல் போடுங்கோ... கிழிந்தால் ஒருபிரயோசனமும் இல்லை.."

இரண்டுதளப்பார் தலைவாசலுக்குப் போதுமானதாகவிருந்தது. மூன்றாவது தலைப்பாரை தூவானம் உள்ளே தட்டாமல் இரண்டாக்கிக் கட்டலாமென யோகம் ஆலோசனை தெரிவித்தாள். ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கூரையில் இழுத்துக்கட்டிய தளப்பார்கள் காற்றில் படபடத்தன. பிய்த்துக்கொண்டு போய்விடலாமென்ற நிலை.

"மாமா, குறுக்கும் நெடுக்குமாகக் கயிறு வரிந்து கட்டாவிடில் காத்துக்கு தளப்பார் பிய்த்துக்கொண்டு பறந்திடும். போட்டும பிரயோசனமில்லை." என்றாள் புவனம்.

"நானும் அதைத்தான் நினைச்சன்." என்றான் சிவபுத்திரன் அவளைப்பார்த்தபடி. புவனம் அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அவன் மனதில் முன்னம் நிலவிய அமைதியிருக்கவில்லை. கள்ளம் புகுந்து விட்டது. மனம் சஞ்சலமும் சலனமும் படத்தொடங்கிவிட்டது. 'இப்படியொரு சொந்த மச்சாள் இருப்பதை இவ்வளவு காலமும் மறந்திருந்து விட்டேன்' என எண்ணமிட்டான். அவளைப்பற்றி அவன் எண்ணாதிருந்தமைக்கு லண்டனில் இருக்கும் மாணிக்கராசாவுக்கு அவள் நிச்சயிக்கப்பட்டிருக்கிறாள் என்ற முடிவும் காரணமாகவிருந்திருக்கலாம்.

"டேய், சிவா.. என்ன யோசனை? இருந்தாற்போல... எறியுற கயிற்றைப் பிடித்துக் கட்டு..."

அவன் கயிற்றை எறியத்தான் செய்கிறான். பிடிபட வேண்டுமே?

"எனக்கொரு கவலை" என்றார் சுப்பிரமணியம்.

"என்ன?"

"பழங்கிடுகு கேட்டதுகளுக்குக் கொடுக்க முடியவில்லை..."

"அதுகளுக்கும் தளப்பா கிடைச்சிருக்கும்.."என்று பவளம் சிரித்தாள்.

தலைவாசல் கூரையைச் செப்பமிட்டு முடிய நண்பகலாகிவிட்டது. எல்லாருக்கும் நல்ல பசி. சாப்பிட அமர்ந்தார்கள். வரிசையாக எல்லாரும் இருக்க யோகமும் பவளமும் பரிமாறினர்.

அவர்கள் சாப்பிட்டுமுடிய திடீரெனத் தூறல் விழத்தொடங்கியது.

"நல்லா மழைபெய்யட்டும்.." என்றாள் பவளம் சிரித்தபடி. தளப்பாரில் படபடவெனத் தூறல்கள் விழுகின்ற சத்தம் எழுந்தது. வந்த மழை திடீரென நின்று போனது.

அந்தவேளை சிதம்பரம் மாமா உள்ளே வருவதை யோகம் கண்டாள். அவரைப் பார்த்ததும் அவளுக்குப் பழைய நினைவுகள் எழுந்தன. கம்பர்மலையில் அவள் குடும்பம் எவ்வளவு சந்தோசமாக வாழ்ந்தது? பொம்மரும் ஹெலியும் வானத்தில் வட்டமிட்டுப் பொழிய ஆரம்பமான ஒப்பரேசன் லிபரேசன் என்ற இராணுவ நடவடிக்கையுடன் அவர்களின் வாழ்வின் இனிமை அழிந்துபோனது. அவள் பிள்ளைகளை இழுத்துக் கொண்டு வயல்வரப்புக்கள் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு ஓடிவந்தாள். தாயைப் பார்த்து வரச்சென்ற அவளுடைய கணவன் தவநாதன் இராணுவத்திடம் பிடிபட்டுக் கப்பலில் ஏற்றப் பட்டுக் காணாமற் போனான். இவை நடந்து பத்துவருடங்களுக்கு மேலாகிவிட்டன.

கம்பர்மலையில் அவளது குடும்பத்திற்குப் பெரிதும் உதவியாகவிருந்த சிதம்பரம் மாமா வருகிறார். தவநாதனின் தாயின் சகோதரர். உண்மையில் தவநாதனுக்குத்தான் மாமன் முறையானவர். ஆனால் எல்லாரும்அவரைமாமா என்றே அழைத்தனர்.

"என்னம்மா, யோகம் திகைச்சுப் போய் நிக்கிறாய்?" என்றபடி திண்ணையில் அமர்ந்தார். சால்வையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு எல்லாரையும் பார்த்துப்புன்னகைத்தார். "நீங்கள் கம்பர்மலைக்கு வந்திருக்கலாம். ஆனால் இப்ப தொண்டமானாற்றிலிருந்து கம்பர்மலைக்கு ஒரே செல்லடி. நாங்கள் பயந்து கொண்டிருக்கிறம்."

யோகம் அவரைக் கவலையுடன் பார்த்தாள். மீண்டும் மழைத்தூறல்.

"எப்படி மாமா, எங்கட வீட்டைக் கண்டுபிடிச்சியள்?"

"ராகுலன் சொன்னான். எல்லாருக்கும் இப்படியொரு அவலம் வந்திட்டுது. ஐயாவையும் அம்மாவையும் அங்க விட்டிட்டு வந்திட்டியாளமே?"

"அவர்கள் வரமாட்டார் என்றிட்டி



னம். ஐயாவின்ர பிடிவாதம்தான் உங்களுக்குத் தெரியுமே?"

அவர்கள் பலவற்றையும் பேசிக் கொண்டனர். தாரணி தேநீர் வழங்கினாள். இருந்தாற்போல சிதம்பரம் எதையோ சொல்லவிரும்புகிறவர் போலக் காணப்பட்டார்.

"யோகம், ஒரு விசயம் முக்கியமான விசயம் அறிஞ்சன். எப்படிச் சொல்றது எண்டுதான் யோசிக்கிறன். அதில எவ்வளவு உண்மைபொய் இருக்கெண்டு எனக்குத் தெரியவில்லை. உண்மையாகவிருந்தால் எவ்வளவு நன்றாகவிருக்கும்."

"சொல்லுங்க மாமா..."என்று ஆவலுடன் யோகம் வினவினாள். சிதம்பரம் எல்லாரையும் ஆழமாகப் பார்த்தார்.

"தம்பிநாதன் உசிரோட இருக்கிறான் போலப்படுகுது, யோகம்."

அவ்விடத்தில் வியப்பும் ஆனந்தக் களிப்பும் ஏற்பட்டன.

"கடவுளே... எங்க மாமா? அவர் எங்க மாமா இருக்கிறார்.? நான் கும்பிட்ட தெய்வங்கள் என்னைக் கைவிடவில்லை." யோகத்தின் விழிகள் பொலபொலவென நீரைச்சொரிந்தன.

தாரணியும்சிவபுத்திரனும நெஞ்சு படபடக்க சிதம்பரத்தை ஏறிட்டனர்.

வானம் இரங்கி அழத்தொடங்கியது. தூரத்தில் மின்னல் கிளைவிட இடிமுழக்கம் கேட்டது. காலவேளை தெரியாமல் அண்டங்காகம் ஒன்று கத்தியவாறு தலைவாசலுக்கு மேலாகப் பறந்து சென்றது.

"என்ர மூத்தவன் கொழும்பில் டாக்குத்தராகவிருக்கிறான் தெரியுந் தானே?"

"ஓமோம், மாமா. சிகாமணி... வெள்ளவத்தையில பிறைவேற ஆஸ்பத்திரியில இப்ப வேலைசெய்யிறார்."

"அவன் ஒருநாள் ஏதோ அலுவலாக அங்கொடை மனநோயாளர் ஆஸ்பத்திரிக்குப் போய்இருக்கிறான். அங்க தம்பி நாதன்போல ஒருத்தர் இருந்திருக்கிறார். பத்து வருடங்களாக அங்க இருக்கிறதாக அறிக்கை இருக்காம். பதிவில் அவர் பெயர் இல்லை. மனநிலை குழம்பிய நிலையில் இருக்கிறாராம். மிகமோசமான மனநோயாளி அல்லவாம். தான் யார் எனத் தெரியாத நிலையாம். அவர் தானோ என்பது சந்தேகமாகவும் இருக்காம் யோகம்! தான் அவருடன் பேசிப் பார்த்தானாம். எல்லாத்துக்கும் தலையை ஆட்டுகிறாராம். முந்தநாள்தான் சிகாமணி கடிதம் போட்டிருந்தான். பார்க்கப் போறியே?"

அவா தன்மடியில் செருகியிருந்த கடிதம் ஒன்றை எடுத்து அவளிடம் நீட்டினாள். அவள் வாங்கிச் சிவபுத்திரனிடம் கொடுத்தாள்.

யோகத்தின் நிலை விவரிக்க இயலாதது. அவள் இதயம் மகிழ்ச்சியால் படபடத்தது. அவளுக்கு கடைசிவரை நம்பிக்கை இருந்தது. தன் கணவன எப்போதாவது திரும்பி வருவான் என்று. 'அப்படியொருவரை நாங்கள கைது செய்யவில்லை' என இராணுவம் அறிவித்திருந்தும் அவளது நம்பிக்கை அழிந்துவிடவில்லை. அந்த நம்பிக்கையில் அவள் நெற்றியில் குங்குமம் இட்டே வந்தாள். அவளுடைய நம்பிக்கை பொய்த்துவிடவில்லை.

சிகாமணி தனது கடிதத்தில் எழுதியிருந்தான்..."எதற்கும் யோகம் அன்ரியைக் கொழும்புக்கு கூட்டிக் கொண்டு வாருங்கோ. அவவின் துன்பங்களுக்கு ஒரு விடிவு இதன மூலம் கிட்டலாம். தம்பிநாதன் மச்சானை அவதான் சரியாக அடையாளம் காணமுடியும்."

யோகத்தால் எதுவும் பேச முடியவில்லை. அவள் உள்ளம் நிச்சயமாக அவராகத்தான் இருக்குமென அறுதியிட்டது. பக்கத்தில் நின்றிருந்த தாரணியைத் தன்னுடன் இழுத்து அணைத்துக் கொண்டு விம்மினாள். தாரணியும் தாயைக் கட்டிக் கொண்டு அழுதாள்.

"இதென்ன அம்மா அப்பா உசிரோட இருக்கிறார்.. அழுகிறியள்..."

"இல்லையடா சிவா, அப்பா இத்தனை காலமாக எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பார்?" என்றாள் யோகம் விம்மியபடி.

பவளம் தமைக்கையின் அருகில் வந்து பாசத்துடன் அவள் தோளில் கரம் பதித்தாள்.

"அழாதை அக்கா... அத்தான் தான் இருக்கிறாரே. நிச்சயமாக அவராகத்தான் இருக்கவேணும். நீங்க கொழும்புக்கு ஒருக்காப் போங்கோ. உங்களைக் கண்டால் அவருக்கு எல்லாம் சரியாகி விடும்."

"கெதியாகப் போய் அப்பாவைக் கூட்டிவாம்மா.." என்ற தாரணியை சிதம்பரம் இரக்கத்துடன் ஏறிட்டார்.

"இஞ்சை பாருங்கோ... எல்லாருக்கும் ஒன்று. தம்பிநாதனாகத்தான் நிச்சயம் இருக்கும். யோகம் அப்படியில்லையெண்டால் எங்களைப் பிழைசொல்லக்கூடாது."

"ஏன் மாமா அப்படிச் சொல்லுறியள்? ஒருக்காலும் அப்படிச் சொல்லமாட்டம். அவராக இருந்தால் எங்களைவிட இந்த உலகத்தில் கொடுத்து வைத்தவர்கள் வேறு எவருமிருக்கமாட்டினம்."

"கொழும்புக்குப் போறதுக்குப் பாஸ் எடு யோகம். நானும் எடுக்கப் போறன். சிகாமணியையும் பேரப் பிள்ளைகளையும் கண்டு கனகாலம்."

அவர் விடை பெற்றுச் சென்றார்.

எல்லோரது முகங்களிலும் மகிழ்வின் பிரகாசம் நிலவியது. யோகமும் பிள்ளைகளும் மகிழ்ச்சியில் பரபரத்தார்கள். யோகத்திற்கு இப்பொழுதே கொழும்புக்குச் சென்று தம்பிநாதனைப் பார்த்துவிட வேண்டும்போல ஆவல் எழுந்தது.

பிள்ளையார் கோயில் பூசை மணி ஒலித்தது.

"நான் ஒருக்கா கோயிலுக்குப் போயிட்டு வாறன்." என்று எழுந்த யோகத்தை எவரும் தடுக்கவில்லை.

"கடவுளே அது எங்க அப்பாவாக இருக்கவேண்டும்" என்றான் சிவபுத்திரன் வாய்விட்டு.

"மாமாவாகத்தான் இருப்பார். கவலைப்படாதையுங்கோ சிவா" என்றாள் புவனம் நம்பிக்கையுடன்.

வானம் மீண்டும் கருக்கட்டியது.

(தொடரும்)

## குறள் வெள்ளம்

இன்றைய சந்ததிக்கு ஞானபோதனை கசக்கலாம். 2000 ஆண்டு பிறக்கும் போது ஞானியாக இரு என்று சொல்லப்போனால் கல்லெறி - சொல்லடி - படவேண்டி வரும்.

எங்கும் பரந்துகிடக்கும் சுகபோகங்களை அள்ளி அள்ளி அனுபவிக்கும் காலம் இது. வயது இது.

இப்போது போய் - தொடாதே, சுவைக்காதே, பார்க்காதே, முகராதே, கேட்காதே என்றால் எடுபடுமா?

ஏதோ ஒரு பாட்டு காதில் கேட்கும். படம் திரையில் ஓடும். வாசனை கடையில் விற்கும்! மெத்தை பக்கத்தில் அழைக்கும். இதையெல்லாம் வெறுத்து ஒரு வாழ்வு தேவைதானா?

கேள்வியில் நியாயம் இருக்கிறது. [illegible] என்று வள்ளுவரே கூறிவிட்டார். விட்டுத்தந்ததற்காக அட்டகாசம் பண்ணக்கூடாது.

எதைக் காக்க - கட்டுப்படுத்த முடியாதவராயினும் - யாகாவாராயினும் பரவாயில்லை - நாகாக்க என்றார் அவர்.

நாவை மட்டும் அடக்கிப் பேசிவிடு போதும் என்கிறார். பேச்சினிலே அடக்கம் தேவை. புளுகித் திரிய வேண்டாம். இயலாததை, இல்லாததை வெட்டிவிழுத்தியதாகப பெருமை பீற்ற வேண்டாம்.

பொல்லாப்பு, பழிகூறல் வேண்டாம். அடுத்தவரைப் புறங் கூற வேண்டாம். வாக்குவாதம் வேண்டாம். புண்படுத்த வார்த்தை வீசல் வேண்டாம்.

நாவை அடக்காத போது சொல் இழுக்குப்பட்டு- குற்றப்பட்டு, துன்பத்தை சோகத்தை காக்கவேண்டி வரும்.

**'யாகாவாராயினும் நாகாக்க காவாக்காற்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு'** -0127

*-அம்பிகைபாகன்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புத் தண்ணீர்!

கொழும்பென்ற வுடனிங்கு கூட்டம் - மிக
கொழுப்பேறிப் போடுதடா ஆட்டம்!
தழும்பேது மில்லாத ஊராம் - அதற்கு
தரித்திர மில்லாநற் பேராம்!

என்பவர்கள் ஒருமுறைதான் வாரும் - வானில்
ஏறித்தான் கொழும்பினையே சேரும்
துன்பங்க ளெங்கேனும் இல்லை - எனினும்
துயருண்டு; தண்ணீர்க்கு எல்லை!

இரவென்ற வுடனங்கு நீரும் - இடையே
இல்லாமற் போவதனைப் பாரும்!
பருகிடத்தான் "பைப்"பினையே திருகும் - தண்ணீர்
படுத்திட்டால் பார்த்துமனம் உருகும்!

காலையிலே எழுந்துடனே கடன்கள் - நீரும்
கழித்திடத்தான் செல்வதிலே தடங்கல்!
வேளையிலே வேண்டியநற் குளியல் - என்றும்
விரும்பிட்டால் வந்திடும்வீண் பழிகள்!

விடுதிகளி லெங்கேனும் தங்கின் - மனம்
விடிவின்றித் தண்ணீரால் ஏங்கும்
சடுதியாக வந்துதானும் போகும் - அதன்
சட்டங்க ளரல்மனமும் வேகும்!

இம்மட்டும் என்றாலும் இனியும் - நாம்
என்செய்வோம் என்றுள்ளம் தணியும்
அம்மாம! தண்ணீரோ மணக்கும் - குளோரின்
அரித்திடவே உடலெல்லாம் சுனைக்கும்!

மேகத்தை முட்டியெழும் மாடம் - வீதியினை
மேவுகின்ற காரினிலே "மேடம்"!
வேகத்தைக் குறைத்திடாத வண்டி - மனதை
வியப்புறவே இழுத்திடுமே சுண்டி.

எல்லாமே உண்டென்றால் என்ன? - தண்ணீர்
இல்லையெனில் இன்னல்தான் பின்னே!
வல்லோராய் அங்கென்றும் வாழ்வோர் - கேட்டால்
வழியில்லை சமாளிப்போம் என்பார்!

எலிவளைதா னென்றாலும் தினமும் - அதற்கு
என்றென்றும் தனிவளையே வேண்டும்
கிலிகொண்ட வாழ்வெமக்கு என்றால் - தண்ணீர்
குளிரூட்டும் கொடுப்பில்லை கொழும்பில்!

- அனலையூர்ச் சேந்தன் -

# 'உயிரே!'

இன்றே எந்தன் ஆயுள் போகுமா - இல்லை
இன்னும் பலகாலமாக, ஆக வாழுமா?
வந்தோம் பூவுலகில் நாளுமா? - இந்த
நாடகத்தில் எம்முடலும் மாளுமா?

மண்வெட்டி அலவாங்கு தாழ்க்குமா? - காலை
மதிலோரம் மறைவெடிகள் தாக்குமா?
பொன் கொட்டி விளையும் வயல் மீதுமா?
புதைத்தவுடல் உண்மைகளை மீறுமா?

கப்பலிலே மானம் வந்து சேருமா?
கடை விலைகள் கீழிறங்கலாகுமா?
அப்போல சுதந்திரமாய் வாழ்வமா? - இல்லை
அகதியாகி வெறுநிலத்தில் சாவமா?!

ஒற்றுமையே தமிழரென ஆவமா? - கட்சி
உடைவதனால் உதிரியாகப் போவமா?
கற்றதெலாம் ஐம்பதாண்டுப் பாடமா?
கடைசியிலே அதுமறந்து வாடுமா?

- கி.வாயுபுத்திரன் -

# எப்படி வாழ்வோம் மகிழ்ந்து

ஓங்கிய அன்பினால் ஒன்றாகி எம்மோடு
வாங்கியுண்டு நன்றேதான் வாழ்ந்தசுற்றம் - ஆங்கே
மருந்தின்றி வீணே மரணிக்க நாம் இங்கே
எப்படி வாழ்வோம் மகிழ்ந்து.

கடைப்புறம் வந்திரந்தோர் கட்குத்தம் வாயில்
அடையா(து) அழைத்(து)ஈந்த எம்முடைய - கிட்டத்(து)
உறவுக(ள்)அங்(கு) ஊண்இன்றி வாடிட நாம் இங்கே
எப்படி வாழ்வோம் மகிழ்ந்து.

துன்பமாம் தூளியிலே தூங்கடா என்றேயோர்
அன்புத்தாய் தன்மகனைத் தன்முலை - யின்பாலும்
வற்றிப்போய் யோர்வழியின் றிச்சுமக்க நாம்இங்கே
எப்படி வாழ்வோம் மகிழ்ந்து.

பசியால் உடல்மெலிந்தெம் பந்துகள்தம் நாக்கு
ருசியும்போய் பச்சை மரங்களின்கீழ் - மூர்ச்சையுற்று
புட்டமரங் கள்போற் கிடக்கையில் நாம் இங்கே
எப்படி வாழ்வோம் மகிழ்ந்து.

- நா.நவராஜ் -

# ஏர்க்கவி படைக்க வேண்டும்!

ஓடியே செல்லும் மேகம்
ஓரிடம் தரித்து நின்று
தேடிய செல்லச் சீரை
தாழவே சுமந்து சென்று
வாடிய பூமி வாழ
வார்த்துமே மகிழ்தல் போல
நாடியே கண்ண தாசா
நேரில் நீ வருதல் வேண்டும்!

காதலைப் பாடி வாழக்
காலமோ சரியாய் இல்லை
சாதலின் போட்டி யாலே
சோகமாய் மனித ருள்ளம்
வேதனை கூட்டி மாளும்
வேளையை தமிழில் சாடி
நோதலை மாற்றி மாந்தர்
நேர் செலக் கவிதை செய்வாய்!

ஆனியில் பூத்த தென்றல்
அழ்கடல் குடித்துப் பொங்கி
தேனியாய் தேராய் காவாய்
தேசமாய் உயர்ந்து சென்ற
தோணியே இன்றெம் மக்கள்
தோய்ந்திடும் கொடுமை பாடு!
நாணியே கூற்றம் செல்லும்
நாளினை வரையப் பாராய்!

பட்டினச் சித்தர் பாட்டும்
பைந்தமிழ்க் குறளும் யாழும்
கட்டியம் கூறும் கீதம்
காற்றினை நனைக்க வேண்டும்!
மொட்டினில் மாய்க்கும் யுத்தம்
மீட்சியை நெருங்க வேண்டும்!
எட்டிநாம் ஏற்றம் காண
ஏர்க்கவி படைக்க வேண்டும்!!

- மாவை வரோதயன் -

# கண்ணெதிரே தோன்றினாள்?

காதலெனக் காதலைக்
கருதிவந்த போதிலே
காரணமி லானவன்
கண்ணெதிரே நின்றனள்
தேனரும்பும் வாயிதழ்
திறந்து 'டியர்' என்றனள்
ஆனதுஎன சொல்லுவேன்?
அன்புஎனை வென்றதே

மாயமெனக் காதலை
மறந்திருந்த நாளிலே
ஆயகலைச் செல்வியும்
அருகினிலே தோன்றினாள்
நாயகியைக் கண்டதும்
நான்கவிஞ னாகினேன்
நேயம்வந்து நெஞ்சிலே
நிறைந்துகொண்டதுண்மையே...

பொய்மையெனக் காதலைப்
போக்கடித்த காலையில்
'மைவிழி'யைக் காட்டியே
'மலர்விழி'யும் நோக்கினாள்
மையலினை ஊட்டினாள்
மைத்துனனும் ஆக்கினாள்
மெய்மையென காதலின்
மேன்மைநிலை நாட்டினாள்.....

காந்தவிழிப் பார்வையில்
காதலெனும் ஓடையில்
நீந்தவழி சொன்னவள்.....
நீலவிழி கொண்டவள்....
தேந்தமிழன் கண்விழி
மன்மதன்நின் மந்திரி
மாந்தியுனைப் பாடியே
மாக்கவிஞ னாகுவேன்.

- த. தர்மேந்திரா -

## கவிதை முற்றம்

# தமிழும் தேசமும்

உருகிஉருகி மனதில் நிறைந்த கவிதை வழிந்திட
செருகியெனது விழிகள ளிரண்டும் சிறிது கிறங்கிட
பருகிநிற்க அமுதத் தமிழின் பாடல் ஒலித்திட
பெருகியோடும் மகிழ்வி னோடு தமிழை வாழ்த்துவேன்.

தென்றலோடு தலையை சாய்த்துப் பூக்கள் சிரித்திட
கன்றினோடு தாயின் கால்கள் சுருதி சேர்த்திட
சென்றபோதின் சிதைவு யாவும் சிந்தை மறந்திட
வந்துநின்று வாழ்த்துப் பாடி தமிழை வாழ்த்துவேன்.

இந்தத்தேச எறும்பும் புல்லும் இனிய பூக்களும்
சொந்தமென்று சொல்லிச் சொல்லி சுகத்தில் அமிழ்ந்திட
தந்தைதாயர் கூடியொன்றாய் வாழும் தேசத்தை
எந்தைபாதம் என்று எண்ணி நின்று வணங்குவேன்.

இறந்தகால இழப்பும் சாவும் இருண்ட வாழ்க்கையும்
மறந்துபோகக் காலம் ஒன்று மிதந்து வந்ததாய்
சிறந்த நன்மை செழுமை வளங்கள் சேரும் தேசத்தில்
'பிறந்தோம் இன்று புதிதாய் வாழ' தினமும் பாடுவேன்.

- ச.சாரங்கா -

# வேட்டு வரும்பார் விரைந்து

பொன்னன் கருவே! புலியூர்ப் பெருமகனே!!
நின்னதன்றோ நாக்கின் நெருப்பு! - அன்னையுறும்
வன்னித் துயர்தனை வாயா லளந்தவரை
மின்னலெனத் தாக்கியதுன் பேச்சு.

பாதை பிடிக்கப் பலபாடு பட்டின்று
மாதூட்டும் வெள்ளைமா மாளிகையின் - போதை
யினால்
சூதொன்று செய்தாரே; சோற்றுணவு வண்டிகளின்
பாதைகளை வெட்டி மறித்து.

சட்டி வறண்டால் சனமெல்லாம் அட்டியின்றிக்
'கொட்டியா' கூட்டத்தைக் குட்டுமெனப் - பட்டையத்தார்
இட்ட பகற்கனவுத் திட்டமிது பட்டழிய
வேட்டு வரும்பார் விரைந்து.

தாயையுஞ் சேயையுந் தன்னந் தனியாக்கும்
மாயப் பொறியில் மடங்காது - மாயாது
காயை நகர்த்துங் கணனியே தாயென்ற
சாயை அறியாச் சதுப்பு.

வேலு மகனின் விடுதலைத் தொண்டிடையே
காலனாய் வந்த கனவான்கள் - ஞாலமிதில்
கூலிக்கு மாரடித்துக் கூண்டழிய மாண்டதே
நீல நறியா நிசம்.

நாளை நமக்கெல்லாம் நல்ல விடியலுக்காய்த்
தோளைக் கொடுக்கத் துணிந்துநற் - றோழருடன்
காளை புறப்பட்ட காலமுத லின்றுவரை
கோளனுவுங் கோணாக் குணம்.

- அங்குசன் -

# தூர விரட்டாதே

தூரவிரட்டாதே துடிக்குதடா பெற்றமனம்!

பட்டமரமாகி பார்ப்பார் எவருமற்று
தட்டுத்தடுமாறி தவிக்குதடா எனதுமனம்
நட்டநடுக்காட்டில் நாவறண்டு நிற்கின்றேன்
கிட்டஅழைத்தெனக்கு ஆறுதல் தாராயோ?

பாசத்தைக் கொட்டி பலகாலம் வளர்த்தமகன்
பாரம்நானென்று சொல்லி பதறித் துரத்திவிட்டான்
பணத்தைக் கொட்டித்தினம் பாங்குடன் வளர்த்தமகன்
பரதேசி யென்றென்னை பரிகசித்துத் தூற்றிவிட்டான்.

மகனே!
பாலும்பழஞ்சோறும் நீயெனக்குத் தரவேண்டாம் – என்
தோளில்வலுவுண்டு தொடர்ந்துழைக்கத் திடமுண்டு
பாழும் முதுமையினால் கொஞ்சம் தளர்வுண்டு – ஆயினும்
உழைப்பதற்கு உள்ளத்தில் உரமுண்டு.

உனைப்பிரிந்த நாள்முதலாய் உள்ளம் வேகுதடா
உடலின்முதுமையோடு மனமுதுமை வாட்டு தடா – உன்
யாழனைய மொழிகேட்க ஆவல் பெருகுதடா
வாழ்வினிலேஉனைப்பிரிந்தால் அர்த்தமே இல்லையடா

ஓடிநான்அலையாமல் ஒட்டாண்டி ஆகாமல்
ஒதுங்கஇடந்தாடா உன்வீட்டு நிழலினிலே – உனைப்
பார்த்துப்பசியாற மொழிகேட்டு மனமாற
துடிக்குதடா பெற்றமனம் தூர விரட்டாதே.

- வதிரி வாசன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20ஆம் நூற்றாண்டில் உலக இலக்கியம்



வோல் ஸொயின்கா

14

நைஜீரியாவின் மிக முக்கியமான இன்னொரு இலக்கியப் படைப்பாளி, வோல் ஸொயிங்கா. கவிஞர், நாடகாசிரியர், இயக்குநர், நாவலாசிரியர், ஒப்பீட்டு இலக்கியப் பேராசிரியர் எனப் பல்பரிமாணங்கொண்ட ஸொயிங்கா நோபல்பரிசு பெற்றவர். அவருடைய படைப்புகள வாசகர்களுக்குச் சவாலாக விளங்குபவை; அவர்களுடைய ஆழ்ந்த கவனத்தை நாடி நிற்பவை. அவருடைய 'சிங்கமும் நவமணியும்', 'ஜெரோ நாடகங்கள்', போன்றவை பெரும்வரவேற்பைப் பெற்றவை. 'தொலைபேசி உரையாடல்' என்ற ஸொயின்காவின் சிறிய வசன கவிதை, அங்கதச்சுவை கொண்டு மிளிர்கிற அதேவேளை, நிறவெறியின் அபத்தங்களையும், வக்கரிப்புகளையுங் கூட வெளிப்படுத்தி நிற்பது.

ஆபிரக்காவின் - குறிப்பிட்டுச் சொல்ல வேண்டிய - முக்கிய இலக்கியவாதிகளில் ஒருவர், அகஸ்தினோ நெட்டோ. போர்த்துக்கல்லின் ஆட்சியிலிருந்த அங்கோலா, 1975இல்தான் விடுதலை பெற்றது. இந்த விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த 'அங்கோலா மக்கள் இயக்கத்தை' நிறுவுவதில் முன்நின்றவரும், அங்கோலா மக்கள் குடியரசின் முதல் ஜனாதிபதியாக இருந்தவருமான நெட்டோ, ஆபிரிக்காவின் முதன்மைக் கவிஞர்களிலொருவர். தம் மாணவப் பருவத்திலிருந்தே சிறந்த கவிஞனாக இனங்காணப்பட்டிருந்த நெட்டோ, அக்கால கட்டத்திலேயே தம் அரசியல் வாழ்வையும் ஆரம்பித்தார். அரசியலும் இலக்கியமும் அவர் வாழ்வில் முப்பதாண்டுகளாக இணைந்து சென்றன. அவருடைய 'தூய நம்பிக்கை' என்ற கவிதை மிகவும் புகழ் பெற்றது. உலக மொழிகள் பலவற்றிலும் அது பெயர்க்கப்பட்டது.

**சாந்தன்**

நெட்டோவைப் போல, ஜனாதிபதியாகவும் கவிஞராகவும் திகழ்ந்த இன்னுமொருவரும் ஆபிரிக்காவில் இருந்தார். அவர் செனகல் நாட்டின் தலைவராயிருந்தலியபோல்ட் ஸெடோர் செங்கோர். 'செங்கோர்' என்ற பெயர் தமிழாய்வில் ஈடுபட்டோருக்கும் மிகவும் பரிச்சயமானது. அவருடைய ஆர்வத்திற்குரிய துறைகளில் தமிழாய்வும் ஒன்றாயிருந்தது. ஆராய்ச்சி மகாநாடுகளிலும் கலந்துகொண்ட செங்கோர், ஆபிரிக்கர்களும் திராவிடர்களும் பொதுவான பாரம்பரியமொன்றிலிருந்து கிளைவிட்டுப் பிரிந்தவர்கள் என்ற கொள்கையையுங் கொண்டிருந்தார். செங்கோர், தமது படைப்புகளை பிரெஞ்சு மொழியில் ஆக்கினார்.

**சில குறிப்புகள்**

அவரைப் போலவே பிரெஞ்சில் எழுதி உலகப்புகழ் பெற்ற இன்னொரு ஆபிரிக்க இலக்கியவாதி கமரா லே. கினி நாட்டைச் சேர்ந்த லே, தொழிலால் ஒரு பொறியிலாளர். பொறியியற் கல்விக்காக பாரிசுக்குப்போன அவர் அங்கு தனிமையையும், துயரையும் அடைந்தார். அவ்வேளையில், அவற்றிலிருந்து தப்பிப்பதற்காக அவர் எழுதிய அவருடைய இளம்பருவ நினைவுகள் 'ஆபிரிக்கச் சிறுவன்' என்ற நூலாக உருவெடுத்தன. இந்த ஒரு நூல் மட்டுமே இலக்கிய உலகின் கவனத்தை அவர்பால் ஈர்க்கப் போதுமானதாயிருந்தது. இதன் தொடர்சியாய், பன்னிரண்டு ஆண்டுகளின் பிறகு லே எழுதிய 'ஆபிரிக்காவின் கனவு' என்ற நூல் ஆபிரிக்காவெங்கும் அலைவீசிய சுதந்திரப் போராட்டங்களின் பின்னணியில் எழுந்தது.

ஏகாதிபத்தியத்திற்கும் இன வெறிக்கும் எதிராகப் பேராடிய நாடுகளில், தென்னாப்பிரிக்கா முதன்மையானதென்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. அதன்போராட்ட வரலாறு மிக நீண்டது. இந்த நீண்ட போராட்டத்தின்போது தமது பங்களிப்பை நல்கிய இலக்கியவாதிகள் தொகையும் அதிகம்.

மற்றெந்த ஆபிரக்கக் கவிஞர்களையும் போலே தென்னாப்பிரிக்க கவிஞர்களும், ஒடுக்கு முறைகளுக்கெதிராகவும், விடுதலைக்காகவும் பாடினார்கள். ஒருகலைஞன் தன்படைப்பில் ஏதோ ஒன்றைச் சொல்லவோ, ஏதோ ஒன்றை எதிர்க்கவோ முயல்வான். அப்படியான எந்த ஒரு கலை வெளிப்பாட்டிலும், கலைஞனைப் பாதிக்கிற விஷயங்களே முதன்மை பெறும்; இது தவிர்க்க முடியாதது. இதனால்தான் விடுதலையை நாடிய ஆபிரிக்கக் கவிஞர்கள் நிலவையும், வானையும், இயற்கையையும், காதலையும் பாடாமல், காலனித்துவ ஒடுக்குமுறைகளை உடைத்தெறியும் விஷயங்களையே தம் கவிதைகளின கருப்பொருளாக்குவது இயல்பாய் அமைந்தது.

கமராடோ ஜோர்ஜ் றெவோலா என்கிற கவிஞன் இப்படிப் பாடினான்;

*இந்தக் கனவெலாம் எதுவாகும்?*
*எனக்குச் சொல், நீ.*
*பூமி மலரும்*
*புதுநாள் ஒன்று வரும்.*
*போனதெலாம் மீட்டெடுப்போம்.*
*இது நடக்கும்.*
*இதன் பிறகு -*
*சொற்களைத் தொடுப்பேன்*
*குழந்தைகளுக்கும் புரிகிற சொற்கள்*
*எல்லா வீட்டிலும் நுழைகிற சொற்கள்*
*- காற்றைப் போல்.*
*அவை,*
*செஞ்சுடராய் ஒளிவீசும்*
*எம் மக்கள் இதயமெலாம்.*

இன ஒதுக்கலுக்கும் ஒடுக்குமுறைகளுக்குமெதிராகப் போர்குரல் கிளப்பிய கவிஞர்களில் முக்கியமானவர், டெனிஸ் புருட்டஸ். தன் கவிதைகளால் மட்டுமன்றி, செயற்பாடுகளாலும் தீவிரமாகப் போராடியவர்.


தென்னாபிரிக்க எழுத்தாளர்களில் மிகவும் முக்கியமானவர்கள், பீற்றர் ஏப்ரஹாம்ஸ், அலன் பேற்றன் மற்றும் அலெக்ஸ் லா குமா ஆகியோர். ஏப்ரஹாம்ஸ் எழுதிய 'சுரங்க வேலையாள்' என்ற நாவல், கறுப்பின மக்கள் வெள்ளையரால் நடத்தப்பட்ட விதத்தை எடுத்துக் கூறும் தொடக்க காலப் படைப்புக்களிலொன்று. அது அவருக்கு நிலையானதொரு புகழையும் தேடிக் கொடுத்தது. அலன் பேற்றனுடைய 'அழு என் அருமை நாடே' என்ற நாவலும் தென்னாபிரிக்க இனப்பிரச்னையை நுணுக்கமாகக் கையாண்ட படைப்பு எனப் போற்றப்படுவது. இந்நாவல், 'அன்னையின் குரல்' என்ற பெயரில் தமிழிலும் பெயர்க்கப்பட்டு, ஐம்பதுகளில் வெளியாயிற்று.

அலெக்ஸ் லா குமா, பிந்திய தலைமுறையொன்றைச் சார்ந்தவர். தீவிரமான இலக்கிய முயற்ச்சிகளில் ஈடுபட்டவர் 'இரவில் உலவுதல்' என்ற கதைத்தொகுதி 'கல் விளையும் பூமி' நாவல் போன்ற படைப்புகளால் கவனம் பெற்றவர் - ஆபிரிக்க - ஆசிய எழுத்தாளர் சங்கம் போன்றவற்றில முன்னின்று உழைத்த குமா, 'தாமரைவிருது' பெற்றவர். அறுபதுகளில் நடுப்பகுதியில் அவர் கியூபாவில் குடியேறினார்.

(தொடரும்)

# விற்றமின் C

சின்னவன் நடந்து கொண்டிருந்தான். கண்களில் நிரந்தரமாய்த் தேங்கிப்போன சோகம். பரட்டைத் தலை. பாதங்கள் தூசி பூசியிருந்தன. பூமிக்கு வந்து பத்துப் - பன்னிரண்டு வருஷங்கள் இருக்கலாம். வயதுக்கேற்ற துள்ளல் இல்லை. அவனது வரலாறு சில வரிகளுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டது. அவன தேவையற்ற சில தேவைகளுக்காகப் பிறப்



பிக்கப்பட்டவன். மழைக்கு மண்ணுக்கு மேலால் தலைநீட்டும் ஒரு காளான் போல ஏன், எதற்கெனத் தெரியாத பிறப்பு அவனுடையது. பாய்விரித்து அவன் படுத்ததில்லை. குப்பைகள் மஞ்சமானதும் உண்டு. கொஞ்சம் சோறே கிடைத்தால் சொர்க்கம்.

**ச.சாரங்கா**

பெரும்பாலான பொழுதுகளில் அவன் மௌனமாகவே இருந்தான். அந்த நேரங்களில் எல்லாம் சிந்தனை செய்தான் காண்கின்ற - கேட்கின்ற - நல்லவற்றைக் கடைப்பிடிக்க பூர்சிந்தனை ஒப்பத இலக்கு நோக்கிய பயணித்தான். வழக்கமான அழகிய பூங்கா. செதுக்கப்பட்ட சித்திரக்கல்லொன்றின் அருகே அமர்ந்து கொண்டான். காத்திருக்கத் தொடங்கினான்.

நேரம் மனிதாபிமான அழிவு வீதத்தில் பறந்து கொண்டிருந்தது.

அவனுக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு இருபது அல்லது பதினெட்டு ஜீன்ஸ் - ரீஷேர்ட்டுடன் பூவிதழ் பிய்த்துக் கொண்டிருந்தது. பிறகு எறிந்து விட்டு நகம்கடிக்கத் தொடங்கிற்று. காத்திருப்புக்கள்தான் எவ்வளவு வேறுபட்டவை!

திடீரென அவன் விழிகளில் ஒளியின் தெறிப்பு. கைகளில் கோலுடன் அந்தக் கிழவர். பார்க்கப் புரிகின்ற பணக்காரத்தனம். கார்களில் பயணித்துக் களைத்து கால்களுக்கு ஓய்வு கொடுக்க 'வோக்கிங்' அவரது தேவையாயிருந்தது. அவன் பார்த்துக் கொண்டிருந்தான் - ஒரு சிறு நாய்க் குட்டி போல.

அவர் அமைதியாக பைக்குள்ளிருந்த வாழைப்பழங்களை எடுத்தார். ஆறுதலாக உரித்தார். சாப்பிடத் தொடங்கினார். இரு பழங்கள் உடலுக்கு நல்லது. ஏழைப்பையனது காத்திருப்புத் தொடர்ந்தது. வாழைப் பழத்தோலை வீசிஎறிந்தார். எழுந்து நடக்கத் தொடங்கினார். சிறுவன் ஓடிச் சென்று அந்த வாழைப்பழத் தோல்களை எடுத்தான். மண்து எடுத்து ... உண்ணத் தொடங்கினான். வாய்க்குள் முணுமுணுத்துக் கொண்டான். 'வழமையாய் எனக்கு விற்றமின் C வேறு எங்கிருந்து கிடைக்கும்?'

சிந்தனைக்கரு:
**ஏழ்மையின் துயரம்**

# நாடுங்கால் நகைதருவன

உலகு, பெரியோரை 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்' என்று கூறுகின்றது. அதன் விளக்கம் என்ன? கல்வியால் நிறைந்து, ஆசை அற்று, மன மொழி மெய்களால் அடங்கிய மேலோர் என்று கொள்ளலாம். அவர் பிறர்நலமே பேணுவர்; எஞ்ஞான்றும், நல்லனவே எண்ணி நல்லனவே சொல்லி, நல்லனவே செய்து வாழ்வர். அத்தகு மேலோர், நகை செய்யும் இடங்கள் ஐந்தினைக் காரியாசான் என்னும் புலவர் காட்டுகிறார்.

முதற்கண் வருவது – 'நாணிலார் சால்பு'. சால்பு என்பது அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை, நிறைந்த அமைதி என்று முன்பு கண்டோம். நாணம் என்பது வெட்கம். அஃது இருவகைத்து. முதலது மகளிர்க்குரிய நால்வகைக் குணங்களுள் ஒன்று. மற்றது இழிந்த காரியங்களைச் செய்யும்வழி உண்டாகும் நாணம். இந்த நாணம் யாவர் மாட்டும் இருக்க வேண்டிய பெருங்குணமாகும். திருவள்ளுவர் பெருமானும் 'கருமத்தால் நாணுதல் நாணு – திரு நுதல் நல்லவர் நாணுப் பிற' என்பர். நாணம் நன்மக்களுக்கு அணிகலமாகும். இழிதொழில் செய்ய நாணாத – வெட்கப்படாத – ஒருவனுக்கு, சால்புடைமை அமையாதன்றோ! அத்த கையோரைக் கண்டவிடத்து விழுமியோர் நகைப்பர்.

அடுத்து வருவது – 'நடையிலார் நோன்பு'. நடை என்பது நல்லொழுக்கம். ஒழுக்கம் உயிரினும் மேலாக மதிக்கப்படும். ஒழுக்கம் இல்லார்க்கு உயர்வு இல்லை. ஒழுக்கம் உடையார் மறந்தும் தீயவை சொல்லார். அவர் செய்யும் நோன்பே பயன்தரும். ஈங்கு நோன்பு என்பது விரதமாகும். விரதத்தினை எங்கள் மலக்குறும்பை அகற்ற அனுட்டிக்கின்றோம். மனம்,புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் அகத்துக்கரணங்கள் – மறைந்திருக்கும் கருவிகள் தூயதாதற் பொருட்டுச் செய்கின்றோம். உணவைச் சுருக்கியேனும், விடுத்தேனும் விரதம் இருக்கின்றோம். விரதம் தூய உள்ளத்துடன் இயற்றியவழியே தான் நற்பயன் தரும். ஒழுக்கக்கேடு உடையார்க்குப் பயன் தராதன்றோ? மேலோர், தூயரல்லார் நோன்பு கண்டு சிரிப்பர்.

**சிந்திப்போம் செயற்படுவோம**

அடுத்து 'ஊண் இலான் உதாரதை'. ஊண் என்பது உணவு. அது போனகம் என்றும் புகலப்படும். உதாரதை பிறர்க்கு ஈகையாகும் – கொடுத்தலாகும். ஒரு குடும்பத்தில் புதல்வோராய் இருக்கும் போது தாய், தந்தையர் இடமிருந்து உணவு கிடைக்கின்றது. குறிப்பிட்ட கால எல்லையின் பின், ஒவ்வொருவரும் தத்தமில் தங்கி இருக்க வேண்டும் உணவு பின்னர்தான் வருந்திப் பாடுபட்டுழைத்து உணவை உண்ண வேண்டியிருக்கின்றது. இந்நிலையிலேதான் 'போனகம் என்பது தானுழந்துண்டல்' என்றாகின்றது. ஒரு சிலர், அறிவீனத்தாலோ, முயற்சி இன்மையாலோ உண்வின்றி வருந்துதலும் உண்டு. அவ்வாறு வருத்துபவர், பிறர்க்கு உணவளிக்க, உதாரதை செய்ய முற்படுவர். அன்னமும் கறியமுதும் அளிப்போமென்று ஆரவாரம் செய்வர். 'இயல் பலாதன செய்யேல்' என்று ஆன்றோர் ஆணையிட்டதையும் அறியார். மூடன் ஒருவன், செய்யும் முறை அறிந்து செய்யத் தெரியாத ஒருதொழிலை மேற்கொள்ளுவானாயின் அது பயன்படாது குற்றப்படும் அன்றோ! உணவுக்கு வழியிலான் ஈகை நகை விளக்கும் தானே!

தேன்கூடு

தொடர்வது – 'ஏணிலான் சேவகம்'. வலிமை அற்றேனின் வீரத்தனம். ஏண் – வலிமை; சேவகன் – வீரன். சிவபிரான் திண் சிலை ஏந்தியவீரன் என்று பேசப்படுகிறார். கம்பநாடர் இராமனை சேவகன் என்று ஏத்துகின்றார். தமிழர் வரலாற்றில் வீரர் பலர் வருகின்றனர். வீரத்தாய் ஒருத்தி, 'யுத்த களத்தில் யானையை வேலால் வீழ்த்தித் திரும்புதல் காளைக்கு – இளைஞனுக்கு – கடன்' என்கிறாள். வலிமை அற்ற கோழை ஒருவன் தன்னை வீரமுடையான் என்று கூறுதல் நகைப்புக்கு இடமன்றோ!

இறுதியாக வருவது – 'தமிழ் தேற்றா தான் கவிதை' செய்தலாகும். முன்பெல்லாம் செந்தமிழ் இலக்கியங்களை நன்கு பயின்றவர்களே பாடல்களை யாத்தனர். கல்லாதார் அறிவுடைமை ஒருகால், மிக நன்றாக இருப்பினும் நூலறிவுடையோர் அதனை ஏற்றுக் கொள்வதில்லை. 'கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும் – கொள்ளார் அறிவுடையார்' என்பது வள்ளுவர் வாய் மொழி. வரம்புசிதைந்த பாடல்களை முந்தையோர் கண்டித்தனர்; தண்டித்தனர். 'தமிழறி யாத் துரைகள்' பாராட்டினர். செந்தமிழ் கற்காதான் பாடலும் நகை விளைக்கும் என்கிறார் காரியாசான். இனிச் சிறு பஞ்சமூலம் பாடலை நோக்குவோம்.

நாணிலான் சால்பும், நடையிலான் -
நன்னோன்பும்
ஊணிலான் செய்யும் உதாரதையும், -
ஏணிலான்;
சேவகமும்; செந்தமிழ் தேற்றான்
கவிசெயலும்;
நாவகமே நாடின் நகை.

நாணொடு கூடிய சால்பினராய், ஒழுக்கம் பேணி, விரதம் காத்து, முயன்றுழைத்துப் பிறர்க்கும் கொடுத்துண்டு, நூல் பல கற்றுக் கவிபாடி வாழ்வோம்.

(தொடரும்


–சிகண்டியார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “நள - தமயந்தி தூதுவனின் வாரிசு


# நெருங்கினால் ஆபத்தான பேர்வழிச

நளன் தமயந்தியிடம் அன்னத்தைத தூதுவிட்ட தாகக் கதை. தூது செல்லும் தகைமை அன்னத் துக்குண்டோ தெரியாது. இவற்றைப்பழக்கி எடுப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. ஆயினும் இக் கூட்டத்தைச் சேர்ந்த கூஸ்வாத்து (GOOSE) விவேகமுள்ளது. சுலபமாகப் பழக்கி எடுக்கலாம்;



ஊமை அன்னப் (MUTE SWAN) பட்சிக் குடும்பம்!


ஏனைய அங்கிகளுடன் சுலபமாக நட்புறவு கொள் ளும் இயல்புடையது; வளர்ப்புப் பிராணியாகவும் மாற்றப்பட்டுள்ளது. அதனால் பல கதைகளில் இவை இடம்பெற்றுள்ளன. சிறுவயதில் படித்த 'MOTHER GOOSE STORIES' களை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.



அன்னப்பட்சிகள் பிரதேச உரிமை கொண் டாடும். ஒரு குடும்பத்திற்குரிய பிரதேசத்தை ஆண் நிர்ணயித்து வைத்திருக்கும். எல்லையை மீறுவோர் யாராக இருந்தாலும் ஆண் எதிர்க்கும். ஆண் அன்னம் ஊடுவற்காரனுடன் போரிடுவதற் குத்தயார் நிலையிலிருப்பதைத்தான் படம் காட்டுகின்றது.


## குகன்

பறவைகளின் கூர்ப்பைப் பற்றி ஒரு கட்டுரையில் கவனித்தோம். ஆக்கியோப்ரெறிக்ஸ் (ARCHAE-OPTERYX) பறவைகளின் முன்னோடி; ஆனால் முதற்பறவையன்று. அதற்கும் முன்னோடிகளுண்டு என்பதை ஏற்கனவே அறிந்தோம். ஆக்கியோப் ரெறிக்ஸைப்போன்ற பல்லுள்ள பறவைகள் அநாதி யான காலத்திலேயே கடல் வாழ்க்கையை மேற் கொண்டிருந்தன என்பதற்குச் சுவட்டு ஆதாரங்



பொரித்தல் நிகழ்ச்சி - மூன்று வெளியே, ஒன்று உள்ளே.

களுண்டு. பறவைகள் ஆரம்பகாலத்தில்நில வாழ்க் கைக் குரியவையாக இருந்தாலும் உணவு தேடிக் கரையோரப்பகுதிகளை நாடியிருக்கலாம். நீந்து வதற்குக் கால்களைப் பயன்படுத்தியிருக்கலாம். பின் படிப்படியாக, நீந்துவதற்கு உதவும் வகையில், விரல்கள் அகலமாகவும் பின்விரல்களுக்கிடையே சவ்வும் (WEBBED FEET) தோன்றியிருக்கலாம். நீர் வாழ்க்கையை மேற்கொண்ட போதும், நில



தாயின் முதுகில் குஞ்சு சவாரி செய்கின்றது. சரக்குவிமானம் போன்று இங்ஙனம் தாய் குஞ் சைக் கொண்டு செல்லும்.

வாழ்க்கைக்குரிய அங்கிகள் என்ற காரணத்தினால் இனப் பெருக்கம் செய்ய நிலத்தை நாட வேண்டும். இதே காரணத்தினாற்றான் இனப்பெருக்கம் செய்ய முதலை நிலத்தையும் தவளை நீரையும் நாட வேண்டியுள்ளது. இந்த விதிக்கு திமிங்கலக் கூட டத்தைச் சேர்ந்த விலங் குகள் விதிவிலக்கு.

நீர் வாழ்க்கையை மேற்கொண்ட பறவைக ளில் தாராக் கூட்டத்தைச் (ANSERES)சேர்ந்த பற வைகளின தோற்றம்(ஆரம் பம் ORIGIN) அவ்வளவு பழமையானதல்ல. தாரா கூட்டத்தைச் சேர்ந்த பற வைகளில் “ஒரு கால் நீரி லும் ஒரு கால் நிலத்தி லும்” கொண்டவை என்று கொள்ளலாம். இவற்றின் கால்கள் குறுகியவை உறுதியானவை; சவ்வுள ளவை(WEBBEDFEET). அவை நீரின் மேற்பரப்பில் நன்றாக நீந்த உதவும். நிலத்திலும இடப்பெயர்ச்சி செய்ய உதவும். இக் கூட் டத்தில் அநேகமானவற் றிற்கு அலகுகள் அகல மானதாக - தட்டையான தாக - இருக்கும். இத்த கைய இயைபாக்கம் நத் தைகள், கூனிகள், புழுக் கள் போன்ற சிறிய அங் கிகளை மண்வெட்டியினால் அள்ளுவது போல அள்ளி எடுக்க உதவும். இத்தகைய அலகு தோன் றியதற்கு இதுதான் முக்கிய காரணியாக இருந் திருக்கும். ஆயின் இக்கூட்டத்தைச் சேர்ந்தவற்றுள் அனேக இனங்கள் தாவரப் பட்சணிகளாக இருப்ப தானால் மேற்படி அலகு மேச்சலுக்கும் உதவுகின் றது. இவற்றின் அலகுகளின் விளிம்பில் கொம்புத் தன்மையான தகடுகள் உண்டு. இவை நீர் வெளி யேறவும் அதேசமயம் சிறு அங்கிகளைத் தடுக் கவும் உதவும். இங்ஙனம் வடிகட்டப்பட்ட அங்கிகள் உணவாகப் பயன்படும். தாவர உண்ணிகளின் மேற்படி ஒழுங்கு தாவரங்களை வெட்டி எடுக்க உதவும்.



ஆண் ஊமை அன்னத்தின் தலையிலுள்ள குமிழைக்கவனிக்கவும். இது ஆணுக்கு மாத் திரமுண்டு. அலகின் பருமனையும் கவனிக்க - இதுவொரு ஆபத்தான் கருவி.

## அங்கிகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்

இக்கூட்டத்திற்குரிய பறவைகள் உலகளாவிய ரீதியில் பரந்து பட்டதாக காணப்படுகின்றன. அநேக இனங்கள் கடலிலும் கடற்கரையிலும் உணவு தேடுபவையாக இருக்க, பல இனங்கள் நன்னீர் நிலைகளை நாடிவந்து விட்டன. சில இனங்கள் நீர் வாழ்க்கையைத் துறந்து மீண்டும் நில வாழ்க் கையை மேற்கொண்டுவிட்டன. சில இனங்கள் காலநிலைக்கேற்ப குடிபெயரும் இயல்புடையவை. உதாரணமாக [illegible] திற்கு [illegible] கள் ருசியாவின் சைபீரியாவிலிருந்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

அன்செறிஸ் கூட்டப்பறவைகளிலேயே பெரி யவை அன்னங்கள். வாத்துக்களைக் காட்டிலும் இவை பலமடங்கு பெரியவை. பொதுவாகப் பறவை களின் கழுத்து அவற்றின் கால்களின் நீளத்துடன் தொடர்புடையதாக இருக்கும். அதனால் அவை நிமிர்ந்த நிலையில் நின்று கொண்டே நிலத்தில் இருக்கும் உணவைப் பொறுக்கி எடுக்க முடியும். ஆனால் அன்னத்தின் கழுத்தோ மிக நீண்டது. அதனால் அது நீந்தும் நிலையில் நீருக்குள்ளே கழுத்தை நீட்டி அது உணவாகக் கொள்ளும் தாவரங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். அன்னங் கள் கழுத்தை முன்நோக்கி நீட்டி, செட்டைகளை ஆறுதலாகவும் ஒழுங்காகவும் அடித்து நன்றாகப் பறக்கக்கூடியவை. இங்கிலாந்தில் சாதாரணமாகக் காணப்படும் இனம் ஊமைஅன்னம். (MUTE SWAN) வூப்பர் அன்னம் (WHOOPER SWAN), பெவிக்கின் அன்னம் (BEWICK'S SWAN) ஆகிய இரண்டு இனங்களும் மாரிகாலத்தில் குடிபெயர்ந்து வருபவை. ஊமை அன்னத்திற்கு அப்பெயர் பொருத்தமானதல்ல. பெரும்பாலும் அது மௌன மாக இருந்தாலும் அதனால் சத்தமிடமுடியும். ஒலி வேறுபாடுகள் தோன்றும் வகையில் சத்தமிடமுடி யும். பெண்ணின் முதுகில் குஞ்சுகள் உறங்கும். தாய் காலை நீட்ட, குஞ்சு அதை ஏணியாகப் பயன்படுத்தித் தாவி ஏறி படுக்கையைச் சென்றடை யும். குஞ்சுகள் இங்ஙனம் பாதுகாப்பாக இருக்க தாயினால் நீந்தித் திரிந்து உணவு தேடவும் முடி யும். ஊமை அன்னங்கள் பெரதுவாக நாளிலிருந்து பன்னிரண்டு முட்டைகள்வரை இடும். முட்டைகள் ஐந்து வாரங்களில் பொரிக்கும். குஞ்சுகள் ஐந்து மாதங்களில் பறக்கும். இளசுகள் இரண்டு வயதில்

சோடி சேரும். ஆயுட்கால
நிலைக்கும் (இரண்டு கால் பி
னுக்கு இருக்கும் விவாகாரத்
அன்னங்களுக்கு இல்லை.) மு
னங்கள் தாய்மையில் இருந்
ஊமைஅன்னங்களின் சராசரி
வருடங்கள் எனக் கருதப்
பெருக்க காலத்தில் ஒரு குறி
ஆண் தனதாக்கிக் கொள்
கூடு அமைத்து, முட்டை இ
குஞ்சு பொரிக்கும். பிரதேசத்தி
அன்னத்திற்குதான் தெரியும்.
மீறினால் செட்டைகளை
பாய்ந்து செல்லும். செட்டை
மனிதனின் கையை அதனால்
காலாலும் அடிக்கும். பெரிய
பாரியகாயங்களை ஏற்படுத்த
போன்றவையும் கொத் திக காயங்களை ஏற்படுத் தும். இவற்றினால் ஏற் படுத்தப்படும் காயங்கள் தோல்ஆழமுள்ள வெண் காயங்களே!ஆனால் அன் னங்களினால் ஏற்படுத்தப் படும் காயம் பெருங்காய மாக இருக்கும். ஆண் ஊமை அன்னத்தில்அல கின் மேல் உள்ள குமி ழைக் கொண்டு ஆண், பெண் அன்னங்களை வேறு பிரித்தறியலாம்.



அன்னங்கள வட,தென் துருவங்கள்ள அண்டிய பிரதேசங்களுக்குரியவை. ஆஸ்திரேலியாவின கறுப்பு அன்னம்(BLACK SWAN) உலகப்புகழ் பெற்றது. சில காலத்திற்கு முன் மொஸ்கோ மிருகக் காட் சிச்சாலையில் உள்ள ஆஸ்திரேலியா கறுப்பு அன்னச் சோடி தமது விநோத நடத்தையினால் பார்வையாளர்கள் எல் லோரையும் பிரமிக்க வைத்தன. ருசிய (RUS-SIA) மாரிகாலத்தைப்
பற்றி எல்லோருக்கும் தெரியும்
யில் மேற்படி சோடி கூடு
இட்டு இனவிருத்தி செய்ய முற்
பொரிக்கா என்பது வேறுவி
சில ஆண்டுகள் தொடர்ந்தன.
கடும் குளிரை உணரமுடியவி
ஆயினும் அவை வேறு ஒன்
தப்பட்டு அங்ஙனம் இயங்கின

அங்கிகளில் எல்லாம் கால
LANDAR) உண்டு. உயிரிய
LOGICAL CLOCK) என்ற
அவற்றின் நடத்தைகள் கட்டுப்
போகங்களுக்கு ஏற்ப இது ந
பிரதேசத்திற்குஏற்ப கடிகாரம்
கைய கட்டுப்பாட்டுக்கு அ
கள் பூத்துக் காய்கின்றன; வி
கின்றன; மாரி, கோடை
நிகழ்த்துகின்றன; இனப்பெரு
அன்னப்பட்சிகளின் மேற்படி வி
காரணம் மொஸ்கோவில் ம
ஆஸ்திரேலியாவில் கோடை
தன்பாட்டுக்கு இயங்கியிருக்கி

கூஸ் வாத்துக்கள் (GEES
காட்டிலும் மிக அதிக எண்ணி
டும். இவை அன்னங்களிலும்
லும் பெரியவை. இவை கூடு
கையை மேற்கொண்டவையாக
றிற்கு சவ்வுள்ள பாதங்கள் உ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகள்!
# ழிகள்"



இணைபிரியாச்சோடி. இதுதான் குடும்ப அந்நியோன்னியத்திற்கு இலக்கணமா?

ட்காலத்திற்கு இணைப்பு
கால் பிராணியாகிய மனித
ாகாரத்துக் கோரும் குணம்
லை.) முப்பது வயதில் அன்
இருந்து ஓய்வு பெறும்
ராசரி ஆயுட்காலம் எழுபது
கருதப்படுகின்றது. இனப்
ரு குறிப்பிட்ட பிரதேசத்தை
கொள்ளும். அங்கு பெண்
டை இட்டு, அடைகாத்து
தசத்தின் எல்லைகள் ஆண்
ரியும். எல்லையை யாராவது
ளை விரித்துக்கொண்டு
செட்டைகளினால் அடித்து
தனால் உடைக்க முடியும்.
பெரிய அலகினால் கொத்தி
படுத்தமுடியும். காகம், கிளி

நன்றாக நீந்த முடியும். ஆயினும் பெரும்பாலான நேரத்தை அவை நிலத்திலேயே கழிக்கும். பெருமளவில் உணவை நிலத்தில் இருந்தே பெற்றுக் கொள்ளும். இவை பெருமளவில் தாவரங்களையே உணவாகக் கொள்ளும். வான் வகைக் குரியவற்றையும், வளர்ப்பு இனங்களையும் முழுக்க முழுக்க புல்லையே உணவாகக் கொடுத்து வளர்க்க முடியும். கீஸ் மிகவும் விவேகமுள்ளவை. நட்புறவு கொள்வதிலும் இவை பிரசித்தமானவை. குதிரைகள், கழுதைகள், மாடுகள் போன்ற பலதரப்பட்ட விலங்குகளுடன் இவை நட்புறவு கொள்வதுண்டு. ஸ்கொட்லாந்து தேசிய விலங்கியற் பூங்காவில்



வான்வகைக்குரிய கூஸ்(GOOSE) வாத்துக்கள்.

தெரியும். அந்தக் கடும்மாரி
கூடு அமைத்து முட்டை
ய முற்பட்டது. முட்டைகள்
வறுவிடயம். இந்நிகழ்ச்சி
ர்ந்தன. அன்னங்களினால்
டியவில்லையா? முடியும்.
ு ஒன்றினால் கட்டுப்படுத்
பங்கின.
ம் கால அட்டவணை (CA-
யிரியற் கடிகாரம் (BIO-
என்ற கடிகாரத்தினால்
கட்டுப்படுத்தப்படும். கால
இது நிகழும். அங்கியின்
டிகாரம் இயங்கும். இத்த
அமையத்தான் தாவரங்
ன; விலங்குகள் குடி பெயர்
டை நெடுந்தூக்கங்களை
ப்பெருக்கம் செய்கின்றன.
ற்படி விநோத நடத்தைக்கு
ில் மாரிகாலம் என்றால்
காடைகாலம். மணிக்கூடு
பிருக்கின்றது.
GEESE) அன்னங்களைக்
எண்ணிக்கையில் காணப்ப
ளிலும் சிறியவை. தாராவி
கூடுதலாக நில வாழ்க்
வையாகமாறிவிட்டன. அவற்
கள் உண்டு. அவற்றினால்

ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி எல்லோரையும் பிரமிக்க வைத்தது. அங்கிருந்த ஓர் எகிப்திய ஆண்கூஸ் வாத்து அங்கிருந்த ஒரு பெண் கடற்சிங்கத்துடன் (SEA - LION) நட்புறவை ஏற்படுத்திக் கொண்டது.



அப்பப்பா எவ்வளவு நீளம், அதிலும் ஒரு செட்டை இவ்வளவா? மனிதனுடன் அன்னத்தின் பருமனையும் ஒப்பிட்டுப் பார்க்க!

அதனால் தனது குடும்பத்தையே மறந்து விட்டது - துறந்து விட்டது. இந்நட்பு ஏழு ஆண்டுகள் வரை நீடித்தது. பெண் சிங்கத்தின் மகனினால் நட்பு முறிந்தது. அது வாத்தைக் கொன்று தின்று விட்டது.

நீர் பறவைகளில் இது ஒரு பகுதி - மிகுதியை பின்னர் பார்ப்போம்.



அன்னங்களின் அலங்காரப் பவனியா?

# கானம் புரியுமா?

தழைத்து ஓங்கும் மரங்கள்குறைந்தால்
தரணி ஓங்குமா?
தண்ணீர் முழுக்க அமிலமானால்
தாகம் தீருமா?

பயிர் கெடுக்கும் தொழிலகங்கள்
பசியை ஆற்றுமா?
பார் முழுதும் நஞ்சானால்
நெஞ்சம் தாங்குமா?


காது கிழிக்கும் இரைச்சலிலே
கானம் புரியுமா?
கத்தும் கடலில் கழிவு சேர்ந்தால்
முத்து கிடைக்குமா?

கண்ணீரில் உப்பு செய்தால்
கஞ்சி சுவைக்குமா?
காற்று மண்டலம் மாசானால்
காலம் போற்றுமா?

ஓசோன் படலம் ஓட்டையானால்
உலகம் வாழுமா?
உணர்ந்து நாமும் செயல்பட்டால்
உயர்வு வீழுமா?

- மு.நடராசன் -

# வித்தியாசங்கள் தெரிகின்றனவா?



இந்த இரண்டு படங்களையும் நன்கு அவதானியுங்கள். இரண்டுக்கும் இடையே ஆறு வித்தியாசங்கள் உள்ளன. ஒரு வித்தியாசம் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளது. மீதி ஐந்து வித்தியாசங்களை வட்டமிட்டுக் காட்டுங்கள் பார்க்கலாம்.

(விடை XV ஆம் பக்கத்தில்)

# எத்தனை பேர்?





இந்தப் படத்தை நன்கு பாருங்கள். எத்தனை பேர் வலப்பக்கம் பார்க்கின்றார்கள்? எத்தனை பேர் இடப்பக்கம் பார்க்கின்றார்கள்? எண்ணிக் கணக்கிடுங்கள் பார்க்கலாம்!

(விடை XV ஆம் பக்கத்தில்)




# பக்தியின் ஆழம்!



ஏழுமலையும் ஐயப்பனும் பால்ய நண்பர்கள். சிறுவயதில் ஒன்றாகப் படித்து, ஒன்றாக விளையாடி, ஒன்றாக வளர்ந்தவர்கள். பாடசாலைக் கல்வி முடிந்ததும் இருவரும் தனித்தனி வழிபிரிந்து விட்டார்கள். நீண்டகாலம் சென்றது. ஏழுமலை ஊர்ஊராகச் சுற்றி அறிவைப் பெருக்குவதில் ஈடுபட்டான். ஐயப்பன் ஊரில் இருந்தவாறே உழைத்துச் சம்பாதித்து குட்டி முதலாளி ஆகிவிட்டான்.

ஒரு நாள் ஐயப்பனை அவனது வீட்டில் சந்தித்துப் பேசுவதற்காக ஏழுமலை வந்தான். ஐயப்பன் மும்முரமாக சிவபூசையில் ஈடுபட்டிருப்பதாக வீட்டுக்காரர்கள் கூறினார்கள். அதனால் திரும்பிச் சென்ற ஏழுமலை, சற்று நேரம் கழித்து மீண்டும் ஐயப்பனைச் சந்திக்க வந்தான். இப்போது ஐயப்பன் விஷ்ணு பூஜையில் மூழ்கியிருப்பதாகச் சொன்னார்கள். அதனால் ஏழுமலை திரும்பிச் சென்றான்.

திரும்பவும் சற்று நேரம் கழித்து வந்த போது ஐயப்பன் காளி பூஜையில் ஈடுபட்டிருப்பதாகச் சொன்னார்கள்.

இவ்வாறு காலையில் ஆறுதடவைகள் ஐயப்பனைச் சந்திப்பதற்கு ஏழுமலை வந்த போது பல பூஜைகளில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிவித்து அவனைத் திருப்பித் திருப்பி அனுப்பினார்கள்.

மதிய வேளையில் ஐயப்பன் வீட்டுக்கு வெளியே வந்தான். அப்போது அங்கு ஏழுமலை நின்று கொண்டிருந்தான். முற்றத்தில் ஆறு குழிகள் தோண்டப்பட்டிருந்தன.

அவற்றைக் கண்டதும் ஐயப்பன் "இந்தக் குழிகளைத் தோண்டியது யார்? ஏன் தோண்டினார்கள்?" – என்று வினாவினான்.

"தண்ணீர் பெற்றுக் கொள்வதற்காக நான் தான் தோண்டினேன்." – என்றான் ஏழுமலை.

"நீ அறிவுபூர்வமாக நடந்து கொள்ள வேண்டும். தண்ணீர் பெறுவதாயின் தனித் தனியாக – சிறிது சிறிதாக – ஆறு இடத்தில் குழிகளைத் தோண்டாமல் ஒரே இடத்தில் ஆழமாகக் குழி தோண்டியிருந்தால் தண்ணீர் கிடைத்திருக்குமே!" என்று அறிவுரை கூறினான் ஐயப்பன்.

"அது சரி என்றால் நீயும் ஆறு கடவுளரை ஆறு மணி நேரமாகத் தனித்தனியாக வணங்காமல் ஒரு கடவுளில் முழு நம்பிக்கை வைத்து முற்றிலும் பக்திபூர்வமாக வணங்கியிருந்தால் உனக்கும் சரியான சித்தி கிடைத்திருக்குமே!" என்றான் உறைப்பாக ஏழுமலை.

அப்போதுதான் தனது பக்தியின் ஆழம் ஐயப்பனுக்குப் புரிந்தது.

# நெற்பானையும் எலியும்

பாட்டியின் வீட்டுப் பழம்பானை - அந்தப்
பானையின் ஒருபுறம் ஓட்டையடா
ஓட்டை வழியொரு சுண்டெலியும் - அதன்
உள்ளே புகுந்து நெல் தின்றதடா


உள்ளே புகுந்து நெல் தின்று தின்று - அதுவும்
ஊதிப் புடைத்துப் பருத்ததடா
மெள்ள வெளியில் வருவதற்கும் - ஓட்டை
மெத்தச் சிறிதாகிப் போச்சுதடா

பானையைக் காலை திறந்தவுடன் - அந்தப்
பாட்டியின் பக்கமாய் வந்தவொரு
பூனை எலியினைக் கண்டதடா - ஓடிப்
போயதைக் கௌவியே சென்றதடா

கள்ள வழியினிற் செல்பவரை - எமன்
காலடி பற்றித் தொடர்வானடா
உள்ளபடியே நடப்பவர்க்குத் - தெய்வம்
உற்ற துணையாக நிற்குமடா.

வி.லவப்பிரியா.
(தரம் 5, நாவற்குழி ம.வி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 2 அவசிய தேவை மூன்று

சித்தார்த்த கல்லூரியில் இருந்த மிகக் கவர்ச்சியான ஓர் அம்சம் எதுவென்றால், 'பழசு' என்றோ 'அரைப் பழசு' என்றோ ஒன்றுதானும் இல்லாததுதான். எல்லாமே 'புத்தம் புதுசுகள்' - வண்ண மலர்களும் தேன் சிட்டுகளாகவுமே வாய்த்திருந்தன. வெகுசிலரே திருமணமாகியிருந்தனர். முகாமையாளரைத் தவிர ஏனைய எவருக்குமே என்னைப் பற்றிய 'சங்கதி' ஒன்று - சில மாதங்கள் கடந்துவிட்ட போதும் - தெரியாமலே இருந்தது. மற்றவர்களுக்குத் தெரியாதவாறு மறைத்தேன் என்பதுதான் மிகப்பொருத்தம். அதாவது.....'எனக்குத் 'திருமணம்' முடிந்திருந்தது.

எனது விவாகம் என் சிறு பராயத்திலேயே நிச்சயிக்கப்பட்டிருந்த ஒன்று. 'உத்தியோகம் புருஷலட்சணம்' என்று காத்திருந்தவர்கள் போல்,எனது தந்தையும், மாமியும் எனக்குக் கிடைத்த இந்தத் தற்காலிக வேலையிலேயே திருப்திப்பட்டு, பஞ்சாங்கம் பார்த்து என் திருமணத்துக்கு நாள் குறித்துவிட்டனர். ஏற்கனவே நான் மாமியின் மகள்மீது ஒருகண்...ஒரு கண் என்ன.... இரு கண்ணையுமே வைத்திருந்தேன்.

ஆயினும், எனது 17 அல்லது 18 ஆவது வயதில் என்னை ஈர்த்த வேறு ஒரு பெண்ணுக்கு அக்காலப் பாணியில் - கலைஞர் கருணாநிதியின் அடுக்கு வசனப் பாணியில் - காதல் கடிதம்எழுதி.... பலநாளாய் நானே தனிமையில் அதை வாசித்து... கொடுக்கத் துணிச்சல் இன்றி... நாணம் தடுக்க இறுதியில் சுக்கலாய்க்கிழித்து விட்ட சங்கதி ஒன்றும் நிகழ்ந்ததுண்டு. (இதனால் சகலருமறிய வெளிப்படுத்தப்படுவது யாதெனில், நான் அவ்வப் பருவத்துக்குப் பொருத்தப்பாடு உடையவனாய் இருந்திருக்கிறேன் என்பதாகும்.)

இப்போது, கல்யாணம் என்றதும் மிகுந்த சந்தோஷத்தினிடையே இனம் புரியாத பயம் ஒன்றும் ஏற்படவே செய்தது. முதன் முதல் வேலைக்கு -லப்பந்துர புறப்படுவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னர்தான் திருமணம் முடிந்தது.

சித்தார்த்த கல்லூரியில் இதை மறைப்பதற்கு இதில் அப்படி என்ன இருக்கிறது....?

இருந்தது....! இருந்தன....!

அப்போதுதான் நான் என் 23 ஆவது வயதின் நடுப்பகுதியை அண்மித்திருந்தேன். எனவே ஒரு 'பாலிய விவாகம்' போல் உணர்ந்தேன். இது ஒன்று! கல்லூரி மாணவன் ஒருவனின் தோற்றமே எனக்கு வாய்த்திருந்தது. இது இரண்டு! நான் மிகுந்த ஒரு 'தமாஷ்' பேர்வழியாகக் கருதப்பட்ட போதும், பெண்மைப் பண்புகளில் கொஞ்சம் நாணமும் கொஞ்சம் பயிர்ப்பும் என் இயல்பில் கலந்துவிட்டிருந்தன. இது மூன்று!

தவிரவும், சித்தார்த்தக் கல்லூரிப் புதுசுகள் வயசுக்கே உரிய ஆபாச, அசைவக் கேலிகளை சிங்களத்தில் என்மீது பொழிய.... அர்த்தம் புரியாமல் நான் திருதிருவென்று முழி பிதுங்கி... அசடாய் இளித்து... நாணிக்கோணி.. வேண்டுமா இதெல்லாம்..? எனவேதான்... மறைத்தேன்!

ஆனாலும் ஒருநாள் 'அவளிடம்' மறைமுகமாய்ச் சொல்லிவிட்டேன்.


யாரிடம்....?

சிலநாள் அடுத்தடுத்துப் புதுப்புதுக் கணக்குடனும், புதுப்புது ஆடையுடனும் ஆசையுடன் வந்த அந்த அழகிய இளசு....! தர்மாவையும் பொருட்படுத்தாமல்...! அவளது கண் இமை கவிழ்ப்பும் நாண முறுவலிப்பும்... எனக்குச் சூசகமாய் ஏதோ ஒன்றை - வேறு எதை? - புலப்படுத்தின. கட்டியவளோடு ஒரு வாரம் வாழ்ந்து விட்டு, இப்போது கனவுலகில் சஞ்சரிக்கின்றேனே..! இந்த நேரம் பார்த்து இவள் ஒருத்தி.....!

"ஊரிலிருந்து என் மனைவியின் கடிதம் வந்திருக்கு...! வாசிக்கும் வரை கொஞ்சம் இருக்கச் சொல்லுங்கள்" என்று தர்மாவிடம் சொல்லிவிட்டு,பொக்கற்றிலிருந்து மனைவியின் கடிதத்தையே எடுத்து வாசிக்கத் தொடங்கினேன். தர்மாவும் அந்த இளசின் 'மனசை'ப் புரிந்துகொண்டதால் அவளுக்கு விஷயத்தை தெளிவாய்ச் சொன்னார். ஆனால், நிலைமைக்குப் பொருத்தமாய் நான் 'மனைவியின் கடிதம்' என்று 'சமயோசிதப் பொய்' ஒன்றைச் சொன்னதாகவே தர்மா நினைத்தார். அந்தப் பெண் போனபின் தர்மா என்னிடம்,

"ஏங்க ஸேர்..! அந்தப் பெண் மூக்கும முழியுமா நல்லாத்தானே இருக்கா...? நாளைக்கு அவவந்தா நான் கொஞ்சம் ஒதுங்கிக்கட்டுமா..?"

"க்ஹூம்.....அவள் ஒரு மூக்கும் ரண்டு முழியுமாத்தான் இருக்கிறாள்... கொஞ்சம் பல்லும் இருக்கு. காட்டினாளே.... நீங்கள் பார்க்கல்லையா? ஆனால், நாளைக்கு அவள் வரமாட்டாள்! என் மனைவியின் கடிதத்திலை



எனக்கிருக்கின்றகாதலை அவளுக்குக் காட்டியாச்சே...!"

"இருந்தாலும்.....நாங்கள் செய்தது தப்போன்னு மனசுக்குள்ள ஒரு எண்ணம் வருது....!நீங்கள் அவளைக் கட்டிக்கிட்டா... ரொம்ப ஈஸியா.... சீக்கிரமா சிங்களம் படிச்சுடுவீங்க....! அது தான்..!"

"அடடா! இந்த அற்புதமான யோசனை எல்லாம் வேறே ஆருக்கையா வரும்... உங்களைத்தவிர! நான் கொஞ்சம் ஆங்கிலம் படிக்க வேண்டியிருக்கு... அதுக்கு, நுனி நாக்கில இங்கிலிஷ் பேசிற ஒரு பொம்பிளை! சிங்களத்துக்கு ஒரு பொம்பிளை! தமிழும்கொஞ்சம் படிக்கவேண்டியிருக்கு... அதுக்கும் ஒரு பண்டிதையாய் ஒண்டு..! இப்பிடி இப்போதைக்கு இந்த மூண்டும் அத்தியாவசிய தேவை! பிறகு...அரபி படிக்க ஆசை வந்தால், அரபு தெரிஞ்ச ஒரு முஸ்லிம் பெண்ணாயும் ஒண்டைப் பார்க்கலாம்.....! இது எப்பிடி இருக்கு...? என்ரை ஐடியா!"

"இந்தக் கரைச்சல் எல்லாம் வேணாம்! இந்த லீவுக்கு ஊருக்கு போறீங்கல்ல...... அப்பிடியே ஒரு கல்யாணத்தையும் பண்ணிட்டு வாங்க..!"

கா.அருளானந்தம்
(கீழ்க் கருணையூர்)

தர்மாவுக்கு நான் ஒரு மணமகனாய்த் தெரிந்தேனே தவிர, ஒரு கணவனாய்த் தோன்றவே இல்லை. நான் உண்மையைச் சொல்லிவிட்டால் எல்லாருக்கும் தகவல் தந்தியாய்ப் பரவும். எதுக்கு வீண் கரைச்சல்?

### இனிதாய் இல்வாழ்க்கை

என்னால் இறுக மூடி வைக்கப்பட்ட எனது விவாக விஷயம் தானாகவே வெளிவரும் சுபவேளை விரைவாகவே நெருங்கியது.

யாழ். தமிழ் ஆசிரியை, லப்பந்துர பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி (O.I.C)யின் குடும்பத்தோடுதான் பொலிஸ் விடுதியில் (QUARTERS) தங்கியிருந்தார். அந்தப் பிரதேசத்திலேயே அந்தக் குடும்பமும் ஆசிரியர்களான நாங்கள் இருவரும் மட்டுமே யாழ்.பிரதேசத்தவர்கள்.

அந்த ஆசிரியை மூலம் அந்தக் குடும்பத்தார், லப்பந்துரவில் எனது பிரவேசம் அறிந்தது முதல் பொலிஸ் விடுதிக்கு என்னை வருமாறு பல முறையும் சொல்லியனுப்பினார்கள். இயல்பான கூச்ச சுபாவத்தினாலோ என்னவோ மிகத் தயக்கமாயிருந்தது. ஒருமுறை, அந்த ஆசிரியையிடம் எனக்குச் சிற்றுண்டியும் அனுப்பியிருந்தார்கள். இனியும் போகாதிருந்தால்...? அவர்களின் அன்பான அழைப்பை மலினமாக்குவதாகாதா? எனது கூச்ச விஷயங்களை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு ஒருநாள்.... போனேன்! அப்பப்பா...! அவர்களுக்கு வந்த சந்தோஷத்தில் பெற்றோரும் பிள்ளைகளுமாய் மொய்த்து நின்று என்னைத் திணறடித்துவிட்டார்கள். அன்றே எனது சகல விவரமுமடங்கிய 'பயோ டேற்றாவை' வாக்குமூலமாகப் பெற்றுக் கொண்டார்கள். பலநாள் தாமதித்து வந்ததற்கு வருந்தினேன்.

விசேஷமான சமையல் செய்த நாளெல்லாம் என்னை அழைத்து விருந்து உபசாரம் போல் நடந்தது. சில நாள்களுள் நானும் அவர்களின் குடும்பத்தில் ஒருவனாய் இணைந்து போனேன்.

அந்த பொலிஸ் அதிகாரி வெற்றிலைப் பழக்கம் தவிர, மதுப்பழக்கமோ புகைத்தலோ அறவே இல்லாதவர். என் மனதில் உயர்ந்த ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டார். கல்யாணமாகியும் பிரமச்சாரியாய் வாழ்கின்ற எனது நிலைமை, அனுபவ முதிர்ச்சியுள்ள அவரது மனதைப் பாதித்திருக்க வேண்டும். ஓரளவுக்கு அது எனக்கும் புரிந்தது.

விளைவு...?

பொலீஸ் விடுதிக்குப் பக்கத்திலேயே வீட்டுவசதி, பாதுகாப்புவசதி, அணைதுணை, ஆதரவு யாவையும் பெற்று என் மனைவியை லப்பந்துர அழைத்து வருவதற்கான ஒழுங்குகள் யாவும் நிறைவேறின!

இனியும எனதுவிவாக விஷயத்தை மறைக்கமுடியாது. சாத்தியமுமில்லை. தர்மாவிடம் இனியும் வெளிப்படுத்தாமல் விடுவது நியாயமில்லை. தர்மாவிடம் மெல்லப் பேச்சை ஆரம்பித்தேன்.

"நான் எனது மனைவியைக் கூட்டி வரப்போகிறேன்!"

"ஓஹோ...! அதுவா...? உங்களுக்கு மொத்தம் நாலு தேவை! அதுலயும் தமிழ், சிங்களம், இங்கிலிஷ் மூணும் அத்தியாவசிய தேவை! இந்த மூணுல ஒண்ணுகூட இப்ப கூட்டிவர முடியாது! அப்படின்னா..! அந்த ஜெர்மனாத்தான் இருக்கும்...! அந்த ஜெர்மன்தான் எனக்கு நல்லாத் தெரியுமே! நான் மொழிபெயர்த்தவனாச்சே..! கூட்டிட்டு வாங்க.. அல்லது வாடகை 'செட் அப்' ஏதாவது இருக்குமோ...?

நம்பிக்கையின்மையால் கொஞ்சம் 'தமாஷ்' பண்ணினார். நாங்கள் தம்பதியாய் எடுத்த கறுப்பு வெள்ளை(அக்காலத்தில் 'கலர்'ப்படம் எல்லாம் மிகப் பணக்கார இடத்துச் சமாசாரம்) புகைப்படம் காட்டி... நிறையக் கதை சொல்லி.... மிகுந்த சிரமப்பட்டு என் திருமண விஷயத்தை ஒருவாறு நிரூபணஞ் செய்து அவருக்கு நம்பிக்கை உண்டாக்கினேன்.

யாழ்ப்பாணம் வந்து மனைவியுடன் திரும்பி, ஜூலை மாத ஆரம்பத்திலேயே லப்பந்துர புதிய இல்லத்தில், பொலீஸ் அதிகாரி அவர்களினதும் பாரியாரினதும் உளமார்ந்த நல்லாசியுடன் இல்லற வாழ்க்கை இனிதாய் ஆரம்பித்தது.

### கொழுக்கடைப் பொன்னு

எங்கள் முதலாவது தனிக் குடித்தன வீட்டின் சிறு முற்றமும் வீதிக்கு வரும் நடைபாதையும் கோடு போட்டுப் புல் செதுக்கித் துப்புரவு செய்திருந்தோம். மீதி நிலத்தோடு படர்ந்த புல் தரைமீது நடப்பதிலும் 'விபத்து' ஒன்று ஏற்படுவதற்குச் சந்தர்ப்பம் இருந்தது. அதுதான் 'அட்டை'த் தொந்தரவு. அது ஆளில் தொற்றும்போதோ பின்னரோ எவ்வித ஸ்பரிச உணர்வு கொஞ்சமும் தெரிவதில்லை. கடும் 'பிரவுண்' நிறத்தில் சைக்கிள் 'வால்வ் ரியூப்'பை விட மெலிதாய் இருக்கும். காலிலோ தொடையிலோ - கழுத்து வரைகூட உடையினூடாக ஏறிவிடும் - போதிய இரத்தம் உறிஞ்சிவிட்டால் தானாகக் [illegible] பிடுங்குவதானால் பிடியை இலகுவில் தளரவிடாது. கடித்த இடத்தில் இரத்தம் கசியும். பின்பு அந்த இடம் புண்ணாகும்.

இதை எல்லாம் அதிகம் பொருட்படுத்தாமல், பக்கத்து வீட்டு எல்லையில் சிறுசிறு இலைகளுள்ள அந்தச் செடிமரக் கட்டைவேலி அருகே நான் போக.....மறுபக்கம் பக்கத்து வீட்டு என் 10 வயது இளந் தோழனும் வேலியருகே வர... இந்தச் சந்திப்பு நாளாந்தப் பிற்பகல் நிகழ்வு ஆகியது! இதில் வேடிக்கை என்னவென்றால், இருவருக்குமே ஒருவர் மொழி மற்றவருக்குத் தெரியாது. முதலில் இருவருக்கும் தெரிந்ததான 'ஆய்போவன்' (வணக்கம்) இருவருமே சொல்லிக் கொள்வோம். பின்னர் சைகைகளுடன் அவரவர் மொழியில் உரத்தே பேசிக் கொள்வோம்.


அவனது தாய் அவனை "புத்தா!... புத்தா....!" என்று கூப்பிடும் போது,

"புத்தனே....! பிறைசூடிப்பித்தனே...! உன் அம்மா, புத்த பெருமானை இப்படி அவமதிக்கிறாவே...! 'புத்தரே!' என்றாவது சொல்லக் கூடாதா...? ஓடு..! ஓடு...!" என்பேன். நான் சொன்னதை விளங்கிக் கொண்டவன் போல் ஓடிக் கொண்டே திரும்பித் திரும்பிப் பார்த்துச் சிரிப்பான்.

நான் தினமும் அவனைத் தேடி வருவதில் ஒரு ரகசியம் இருந்தது. பிற்பகல் வேளைகளில் என் மனைவியுடன் சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருக்கும் சிங்களப் பெண்கள் என்னிடமும் பேச்சுக் கொடுக்க முற்படுவார்கள். எனக்கோ தமிழ்ச்சிரிப்பே தவிர, சிங்களச் சிரிப்புக்கூடத் தெரியாது. இந்தச் சங்கடமான சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கே நான் வெளியேறி, என் குட்டித் தோழனைத் தேடுவேன். "அனே! மே மாத்தயாட்டா சிங்ஹல டிக்கக்கத் தேரின்நா வாகே!" என்று அவர்கள் சொல்லும் போது, 'எனக்குச் சிங்களம் கொஞ்சமும் தெரியாது' என்பதைச் சொல்லுகிறார்கள் என்று புரிந்து கொள்வேன்.... அவ்வளவுதான்!

சமையல் மற்றும் தேவைக்கான சாமான்கள் யாவும் பொலீஸ் விடுதிக்கு வாங்குபவர் மூலமே எங்களுக்கும் வாங்குவித்துத் தருவார்கள். நான் கடைக்குப் போய் வாங்குவதிலுள்ள கஷ்டம் மனைவிக்குத் தெரியும். கடைக்கு நான் போகவேண்டிய அவசியம் நேரும்போது, சாமான்களின் சிங்களப் பெயர்களை ஒரு துண்டில் தமிழில் எழுதுவித்து, கடைக்குப் போய், எழுதிய துண்டைப் பார்த்து நான் வாசிக்க, அவர்கள் சாமான்களைக் கட்டித் தருவார்கள்.

ஒருநாள் எழுதித் தந்த துண்டுடன் கடைக்குப் போனேன். ஒரேயொரு சாமான் என்பதால் துண்டு பார்க்காமல் ஞாபகத்திலிருந்து நானே சிங்களத்தில் பெயர் சொன்னேன். கட்டித் தந்தார்கள். வீட்டுக்கு வந்ததும் 'பார்சல்' கொஞ்சம் பெரிதாயிருப்பதைப் பார்த்து சந்தேகப்பட்ட என் மனைவி குசினியில் கொண்டுபோய் அவிழ்த்துப் பார்த்துவிட்டு, என்னிடம் வந்து.... விசாரணை ஆரம்பமானது.



"நான் எழுதித் தந்தது என்ன சாமான்...?"

"அதுதான் 'ஹால்'! வெந்தயம்..!"

"நீங்கள் வாங்கிவந்த வெந்தயத்தைப் பாருங்கோ!"

பார்த்தேன்..! அது அரிசி! எழுதித் தந்த துண்டைப் பார்த்தேன். அதில் 'உளுஹால்' என்று இருந்தது, வெந்தயத்துக்கும் அரிசிக்கும் பெயரில் ஒரு சின்ன வித்தியாசந்தான் என்பது எனக்குத் தெரியும், 'உளுஹால்' என்பதற்குப் பதிலாய் 'ஹால்' என்று தடுமாறிச் சொன்னது ஞாபகம் வந்தது... அவர்கள் அரிசியைக் கட்டித் தந்து விட்டார்கள். என் சிங்கள 'மழலை' அரங்கேறப் பார்த்து, இவ்வாறு தோற்றுப் போனது.

அன்று பிற்பகல் பொலீஸ் குவாட்டஸில் பெண்கள் எல்லாரும் சேர்ந்து சிரிப்பதற்கு எனது 'கொழுக்கட்டைப் பொன்னன் கதை' வசதியாகப் போய் விட்டது.

### அம்மே....! அப்பே....!

எனது இளந்தோழன் மூலம், தட்டுப்பட்டுத் தடக்குப்பட்டுக் சிங்களச் சொற்கள் பல அறிந்து கொண்டேன். கையிலிருந்த புத்தகத்தைக் காட்டி 'இது என்ன?' என்று சைகையால் கேட்டேன். 'பொத்த' என்றான். 'இவன் எங்கள் ஆச்சிகால மனிதன்' என்றுதான் அப்போது நினைத்தேன். 'பொத்தகம்' என்று ஆச்சி சொல்வது சரியான சொல்தான் என்பது அப்போது எனக்குத் தெரியாது.

அவன் தனது தாயாரை 'அம்மே' என்று அழைப்பதை அடிக்கடி கேட்டிருக்கிறேன். ஒருநாள் ஓரளவு சிறிய ஒரு ரேடியோவுடன் வந்தவன் அதைக் காட்டி 'அப்பே' என்றான், 'அம்மே' என்பது 'அம்மா'வை, அப்பே என்பது 'அப்பா'வை இல்லையா...? ரேடியோவைக் காட்டி 'அப்பே' என்கிறானே! என்று குழம்பினேன். என் குழப்பம் அவனுக்குப் புரியவில்லை. துருவித் துருவிக் கேட்டதில், 'அப்பே' என்றால் 'எங்களுடையது' என்று அர்த்தம் என்பதைப் புரியவைத்தான்.

அவனுக்கும் எனக்குமிடையே இதுபோன்று நடைபெற்ற சிங்களப் 'பேச்சுவார்த்தை' ஏராளம், பேச்சுச் சிங்களத்தைப் பொறுத்தவரை அவனும் எனது ஓர் 'ஆசிரியர்' என்றால் ஓரளவாவது பொருந்தும்.

### சாம்பல் நிற ஆடை

சித்தார்த்தக் கல்லூரியில் தங்களைப் போல் என்னையும், மண வாழ்க்கையை எதிர்நோக்கும் ஓர் இளைஞன் என எண்ணியிருந்த அனைவருமே நான் மணமானவன் என்பது தெரியவந்ததும் வியந்துதான் போனார்கள். நான் எதிர்பார்த்தது போலவே ஆபாசமான, அசைவக் கேலிகளை எல்லாம் என்மீது சிங்களத்தில் பொழிந்து தீர்த்தார்கள். இந்த அசைவங்களைத் தமிழாக்கும்போது மிகுந்த நாணமடைந்தவர் தர்மாவேதான். நான் சிறிதும் தளரவில்லை. அறநனைந்தவனுக்கு குளிர் என்ன.. கூதல் என்ன?

வாரத்தில் மூன்று நாள்களாவது இடைவேளைப் பொழுதுகளை ஆனந்தமாய்க் கழிப்பதற்கு நானும் ஒரு கருவியாகப் பயன்பட்டேன் என்பதில் எனக்கும் மகிழ்ச்சிதான்.

இந்த மகிழ்வான வாழ்க்கை அந்த ஆண்டு மார்கழி மாதத்துடன் முடிந்துவிடும் என்பது சற்றும் எதிர்பாராத ஒன்றே.

மார்கழி மாத ஆரம்பத்தில் ஒரு நாள் -

கடிதம் வந்தது ஊரிலிருந்து, கடிதத்துள் மற்றுமொரு கடிதம் - அரச பணிக் கடிதம் - இருந்தது. நான் பொது எழுதுவினைஞர் சேவைக்குத் தேர்வு பெற்றுள்ளமையை அது தெரிவித்தது. (நான் லப்பந்துர செல்வதற்கு ஒரு மாதத்துக்கு முன்பே பரீட்சைக்குத் தோற்றியிருந்தேன்.)

விளைவு.......?

நான் சித்தார்த்தக் கல்லூரியை விட்டு - லப்பந்துரவை விட்டு - எங்களைத் தங்கள் உறவுகளாய நேசித்த பொலீஸ் அதிகாரி அவர்களின் குடும்பத்தைவிட்டு நிரந்தரமாய்ப் பிரிந்து செல்ல நேர்ந்தது. இப்பிரிவு மிகுந்த மனக் கஷ்டத்தையே தந்தது.

என்மனைவி, சாம்பல்நிற உடுப்பையே விரும்பி அணிவா... மாங்காய்ப் புளிப்பையே பெரிதும் விரும்புவா... இடையிடையே வயிற்றுப் புரட்டும் குமட்டலும் ஏற்படும்....என்று ஆவலாய் எதிர்பார்த்த அவர்கள் எல்லாரையும் அப்போது ஏமாற்றித்தான் விட்டிருந்தேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு கீதோபதேசம்

அம்மன் கோவிலில் வேட்டைச் சாமி ஆறரை, ஏழுமணிக்கு புறப்பட்ட தென்றால் நேரே வைரவர் கோவிலுக்குப் போய் மகிடாசுரசங்காரம், வாழைவெட்டு முடித்து வைரவர் கோவில் முன்றலில் கொஞ்ச நேரம் தங்கி குளிர்த்தி, பூசை எல்லாம் முடித்து, அம்மன்சாமி ஊருக்குள் ஆசிக்காக நுழையும்.

வீடுகள் தோறும் பந்தல் போட்டு, தோரணம் கட்டி, பெற்றோமக்ஸ் கொளுத்தி, பூரண கும்பம் வைத்து வெத்திலை, பாக்கு, பழம், அவல், கடலை, மோதகம் படைத்து வசதிப் பட்டவர்கள் ரின்பால் தேநீர் சாமியுடன் வருபவர்களுக்கு கொடுப்பது வழக்கம். சாமி பலவர்ண பல்புகளுடன் உழவு இயந்திரப் பெட்டிக்குள் புன்னகை ததும்ப அமர்ந்திருக்கும். வீட்டுக்கு முன்னால் விசேட அர்ச்சனைகள் நடக்கும்.

எங்கள் வீட்டுப்பக்கம் சாமி வர கிட்டத்தட்ட விடியும். ஊரெல்லாம் சுற்றி விட்டு ஊர்த்தொங்கலான எங்கள் வீட்டுக்குவர நாலரை ஐந்து மணியாகும். அத்தோடு நேரே கோவிலுக்கு இருப்புக்குப் போய்விடும்.

எங்கள் பந்தல் வேலையெல்லாம் முடிந்து விட்டது. அம்மா அவலும் கடலையும் பண்ணி முடித்திருந்தாள். ஓர் ஆட்டம் தூக்கம் போட்டு விட்டு விடியவாக எழும்பிக் கொள்ளலாம். ஆனாலும் தூக்கம் பிடிக்கவில்லை. வெளியே பந்தல் பக்கம் வந்து வேலிக்கரை பனம் கொட்டில் அமர்ந்து கொண்டேன். பௌர்ணமி நிலா உச்சமாய், மௌனமாய் எறித்துக் கொண்டு இருந்தது. சுகமான கற்பனைகள் வட்டம் இட்டன. நிலவினில் மௌனித்திருத்தல் சுகம்.

எதிர்ப்பக்கமாய் வெறுங்காணி. அதற்கு வலப்பக்கமாக போஸ்மாஸ்டர் சகாதேவன் வீடு. அவர்கள் வீட்டுக்கு முன்பாகவும் பந்தல் போடப்பட்டு இருந்தது.

போஸ்ட்மாஸ்டரும மகள சாரதாவும் வெளியே வந்தார்கள். பந்தல் அலங்கரிப்பு வேலை மிகுதி இருந்தது போலும். தோரணம் கொஞ்சம் கட்டினார்கள். தற்செயலாக எங்கள் பந்தல் பக்கம் திரும்பியவர் என்னை கவனித்திருக்க வேண்டும்.

"என்ன மாஸ்டர்த்தம்பி தனிமையாக..."

"சும்மா... நித்திரை வரவில்லை"

அப்போதுதான் சாரதாவும்என்னை கவனித்திருக்க வேண்டும்.

"கதை பிளான் போடுறார் போல்"

இந்தப் பெண்களுக்குப் புரியாத விடயம் எதுவும் இல்லை.

சிரித்து மழுப்பினேன். கதையை வேறுதிசைக்கு மாற்ற விரும்பி "சாமி வர நாலுமணியாகும் போல" என்றேன்.

"ஓம் தம்பி, இப்பதானே கோயிலடியால் புறப்பட்டு இருக்கும்"

இந்த உரையாடல் சத்தத்தில் சகாதேவன் வீட்டுக்கு எதிர்த்த வீட்டு பந்தலில் சலசலப்பு சிறிதாக கேட்டது. திரும்பிப் பார்த்தேன். புவனேஸ் தோரணம் போட்டுக் கொண்டு பெற்றோமக்ஸ் வெளிச்சத்தினில் என்னை பார்த்து புன்னகைத்தான். பதிலுக்கு புன்னகைத்தேன். போஸ்ட் மாஸ்டர் உள்ளே போய் விட்டார். சாரதா மட்டும் தனியாக நின்று கொண்டிருந்தாள். சிறிது நேரம் மௌனம்.

"ம்...விஷ்ணுபுரம் பார்த்தீங்களா ஜோதியண்ணை"

"இல்லையப்பன் இன்னும் கைக்கு கிடைக்கேயில்லை"

"நல்லாய் இருக்காமா? அண்ணை"

நான் பதில் சொல்வதற்கு இடையில் சாரதா குறுக்கிட்டாள்.

"விஷ்ணுபுரம் நாவலா? வரலாறா?"

இதற்கு புவனேஸ் பதில் சொன்னாள்.

"இரண்டும் கலந்தது"

இந்தப் பதில் எனக்கு ஒப்புதல் இல்லாததால் மௌனமாக இருந்தேன். விஷ்ணுபுரத்தை பற்றி எனக்கு அதிகம் தகவலும் இல்லை.

என்னை விட்டு விட்டு அவர்கள் இருவரதும் உரையாடல் நடந்தது. பள்



ளிக்கூடக் கதைகள் நிறைய கதைத்தார்கள். சிரித்தார்கள் - நான் அவர்களுக்கு இடையூறு அல்லன் என்ற எண்ணத்துடன். எனக்கு இடையூறு செய்தவர்களுக்கே இடையூறு செய்யாத நான் இவர்களுக்கு ஏன் இடையூறு செய்யப்போகின்றேன்?

நாலுமணிக்கு மானம்பூச் சாமி வந்து விட்டது. சாகாதேவன் வீட்டு வாசலில் முதலில் சாமி நின்றது. சாரதாவும் குடும்பத்தினரும் அர்ச்சனை செய்து கொண்டார்கள். புவனேஸ் வீட்டாரும் தங்கள் பந்தலடியில் நின்றனர். சாரதாவின் பார்வை அடிக்கடி புவனேஸின் பக்கம் திரும்புவதை புவனேஸ் கவனிக்கத் தவறினாலும் நான் கவனிக்கத் தவறவில்லை. சாரதா பார்க்காத நேரம் புவனேஸ் பார்த்ததையும் கவனித்துக் கொண்டேன்.

சாமி புறப்பட்டுப் போய்விட்டது - இங்கே இரு உள்ளங்களில் உறவின் தொடக்கத்தை விதைத்துவிட்டு.

* * *

போஸ்ட் மாஸ்டரின் கடைசி மகன் பவன் 'ஒறுப்பு' என்ற சொல்லுக்கு எதிர்ச் சொல் கேட்க... போஸ்மாஸ்டர் சாரதாவின் தமிழ் புத்தகத்தை எடுத்துப் பார்க்க... அதற்குள் இருந்து கடிதம் ஒன்று விழ...விடயம் மலிவாயிற்று.

புவனேஸ் சாரதாவுக்கு எழுதிய கடிதம். என்ன எழுதியிருந்தது என்று கேட்டீர்களா? ஓர் இளம் பையன் ஓர் இளம் பெண்ணுக்கு என்ன எழுதுவான் என்று தெரியாவிட்டால் எங்காவது ஆறு, குளம், கிணறு பார்த்து குதித்து கொள்ளுங்கள். உயிருடன் இருப்பதில் அர்த்தம் இல்லை.

போஸ்மாஸ்டர் மகளை கண்டிக்காமல் அதை விடுத்து புவனேஸின் அம்மாவுடன் நாகரிகம் இல்லாமல் சண்டைபோட்டார்.

"மகனை திருத்தி வள"

"உங்கடை மகள் கடிதத்தை கிழித்து எறிந்திருக்கலாம்" போஸ் மாஸ்டர் விக்கித்து போனார்.

"பொம்பிளைப்பிள்ளையை ஒழுங்கா வளர்க்கத் தெரியாது வந்திட்டார் பெரிய உத்தியோகம். உங்கடை பிள்ளை ஒழுங்கானவள் எண்டா கடிதத்தை உங்களிடம் தந்திருக்கலாம் தானே"

சண்டை பாடு மாறிவிட்டது. புவனேஸின் விழிகள் இன்னும் வெளியில் பிதுங்கி விழாமல் இருந்தது ஆச்சரியமாகப்பட்டது.போஸ்மாஸ்டா உள்ளே போய்விட்டார். புவனேஸும் அம்மாவும் வீட்டுக்குள் போய்விட்டனர்.

**கோகுலராகவன்**

இரவு முழுவதும் சாரதா அழும் சத்தம் கேட்டது. புவனேஸின் அறையில் விடியவிடிய விளக்கெரிந்து கொண்டு இருந்தது.

புவனேஸ் இறுகிய முகத்துடன் பள்ளிக்கூடம் போனான். சாரதாவை தகப்பன் ஏற்றிக் கொண்டு போய் விட்டுவிட்டு வந்தார்.

இளம் காதல்கள் பெரும் எடுப்பாகத்தான் தொடங்குகின்றன. ஆர்ப்பாட்டமாய் உலகம் காலடியில் கிடக்கின்றது என்று முகிழ்கின்றன. ஆனால் முடித்துவைக்க துணிவின்மையால் தொடங்க முன் முடிந்த துயரமாகவே புவனேஸ் சாரதா நிலையும்.

போஸ்டமாஸ்டரின் அக்காள் குடும்பம் லண்டனில் இருந்தது... அக்காளின் மகன் ஒருத்தனை சாரதாவுக்கு முற்றாக்கினார் போஸ்ட் மாஸ்டர். இலண்டனுக்கு சாரதாவை அனுப்பும் ஒழுங்கையும் மேற்கொண்டார்.

சாரதாவால் எதுவும் செய்ய முடியவில்லை. கண்டிப்பான தகப்பன். எதிர்க்கத் துணிவும் இல்லை. வயதும் இல்லை. தொடர்ந்து படிக்கப் போவதாகச் சொல்லிப் பார்த்தாள். திரும்பிப் பார்த்த தகப்பனின் பார்வையிலே ஒரு கன்றுக்குட்டிபோல ஒதுங்கிப் போய் விட்டாள். பார்வையிலேயே பயப்படும் சாரதா வார்த்தைகளால் வெல்வாளா?

சில நாட்களின்பின் சாரதா இலண்டனுக்கு போக யாழ்ப்பாணம் போய் விட்டாள்.அங்கிருந்து கொழும்பு போயும் சேர்ந்து விட்டாள். இனி, அவளை ஊரில் காணமுடியாது.

புவனேஸ்...

பாவம், துயர் நிறை முகமாய், எதையோ பறிகொடுத்தவன் மாதிரி திரிந்தான்.

ஆபத்து இல்லாத வேட்டை இல்லை. சோகம் இல்லாத காதலும் இல்லை. ஆனால் இதுதான் முழுமை இல்லை. யாருடனும் கதைப்பதில்லை. சிரிப்பதுமில்லை. அமைதியாகப் பள்ளிக்குப்போய் வந்தான்.

இதன்பின் புவனேஸ் உயர்தரப் பரீட்சை எடுத்தான். அதன் முடிவுகளும் புவனேஸை ஏமாற்றின. விதி விளையாடத் தொடங்கினால்... சிப்பிலியாட்டி விட்டேவிடும். அதுவரை அதன் போக்கில் போகவிடுவது சிறப்பு.

புவனேஸ்தோல்வியின் நாயகனாக உலாவினான்.பழைய கலகப்பான புவனேஸை அவன் இழந்து நீண்டநாள்கள் ஆகிவிட்டன. துயர்வடிநிலமாய், சோகம் விளைநிலமாய் திரிந்தான். எந்தவித இலட்சியமும் அவனிடம் இருப்பதைக் காணமுடியாது.

ஒருநாள் குளக்கரையில் புவனேஸை மடக்கிப் பிடித்தேன்.அவனை எப்படியும் இந்தத் துயரக்கடலில் இருந்து மீட்க வேண்டும்.

"புவனேஸ்"

திரும்பிப் பார்த்தான். அவன் கண்களில் இருந்து சாரதா மீது வைத்திருந்த காதல் வழிவது போல எனக்குப்பட்டது.

"மேற்கொண்டு என்ன பண்ணுவதாய் உத்தேசம்"

"எதுவுமில்லை" - பிடிப்பில்லாத பதில்.

"அப்ப எதிர்காலம் என்னவாகும்?"

மௌனமாக புவனேஸ் நின்றான்.

ஆலமரத்தடியில் அமர்ந்து கொண்டோம். இருவரிடையேயும் மௌனம் குடிகொண்டது. புவனேஸ் குளத்தை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

"புவனேஸ் இப்படியே இருந்து என்ன செய்யப் போறீங்கள்? ஏதாவது பார்க்கலாமல்லவா? நெடுக முடிந்ததை நினைத்துக் கொண்டு இருந்தால் எப்படி?"

"மறக்க முடியவில்லையண்ணை!"

மறக்க அவள் என்ன சோளக் கொல்லை பொம்மையா?

"யார் மறக்கச் சொன்னது?.. மறந்தால் நினைத்ததில் அர்த்தம் இல்லை. நினைத்து விட்டு மறப்பது காதலல்ல. உம்மடை உள்ளத்தில் அது அப்படியே இருக்கட்டும்."

அழுகிறானா புவனேஸ்?

"இதே நினைவா இருந்தா முன்னேறமாட்டீர். சாரதா உம்மை ஏமாற்றவில்லை. பாவம் அவள் என்ன செய்ய முடியும்? சின்னப்பெண் உம் வாழ்க்கையில ஓர் அத்தியாயம் முடிந்து விட்டது. புதிய அத்தியாயத்தைப் பற்றியோசியும்.

குளிக்க வந்த சின்னனின் மகனைக் கொண்டு தோப்பில் இளநீர் பிடுங்கிக் குடித்தோம். நான் ஐந்து இளநீர் குடித்த பின் புவனேஸ் ஒரு இளநீர் கூட குடிக்கவில்லை.

"சிறுதோல்வி, சிறு அவமானம் வாழ்வின் திசையை மாற்றக் கூடாது அப்பன்"

என் முகத்தை கூர்ந்து நோக்கினான் புவனேஸ்.

"உங்கடை தகுதி காணாது என்று தானே போஸ்ட்மாஸ்டர் இவ்வளவும் செய்தவர்."

புவனேஸ் ஆம் என்று தலை அசைத்தான்.

"அப்ப அவருக்கு நீர் முன்னேறிக் காட்ட வேண்டாமா? உம்முடைய தகுதியை நீர் இன்னும் குறைப்பதா? நல்லா யோசிச்சுப் பாரும். எல்லாவற்றையும் மூலையில் வைத்து விட்டு நல்ல வழியைத் தேடும்."

நான் எழுந்து வீட்டை நோக்கிப் புறப்பட்டேன் புவனேஸ் தனியாக இருந்தான். நல்லமுடிவு எடுக்கத் தனிமை தேவை.

மறுநாள் புவனேஸ் என்னைப் பார்க்க வந்தான். கொழும்புக்கு போகப்போவதாகவும் 'சாட்டெட்' செய்யப் போவதாகவும் கூறினான். நான் மகிழ்ச்சியுடன் ஆமோதித்தேன். மாமன்காரன் வீட்டில் நிற்கலாம் என்றும் கூறினான். எனக்கு மிகவும் சந்தேசமாக இருந்தது.

சில நாள்களில் புவனேஸ் கொழும்பு போய்விட்டான். ஆறு மாதம் கழித்து எனக்குக் கடிதம் வந்தது. 'சாட்டெட்' பகுதி ஒன்று எடுத்து விட்டதாகவும் கொழும்பில் நிறுவனமொன்றில் வேலை செய்வதாகவும் நாலாயிரம் ரூபாய் சம்பளம் எடுப்பதாகவும் எழுதியிருந்தான்.

"உங்களைச் சந்திக்காவிட்டால் இவ்வளவு மாற்றம் ஏற்பட்டிருக்க முடியாது. உங்களை மறக்கமாட்டேன்" எனவும் எழுதினான்.

நன்றாகப் படிக்கவும் என்றும், சாரதாக்கள் விடயத்தில் கவனமாக இரு என்றும் கடிதம் எழுதினேன்.

ஒரு பையனை நல்வழிப்படுத்தியதில் பெருமை எனக்குப் பிடிபடவில்லை.

* * *

இவை எல்லாம் நடந்து நாட்கள் நகர்ந்துவிட்டன. இன்று மானம்பூ. சாமி இம்முறையும் வழமைபோல ஊருக்குள் வரும். பந்தல் போட்டு பந்தல் அலங்கரித்து விட்டு ஓய்வாக பனம் கொட்டில் இருந்து கொண்டேன்.

சகாதேவன் வீட்டுப் பந்தலில் அசைவு தெரிந்தது. யார் என்று பார்த்தேன்.

சாரதாவின் தங்கை நிவேதா பந்தல் அலங்கரித்துக் கொண்டு இருந்தாள். இடையில் எதிர்வீட்டுப் பந்தலை நோக்கி புன்னகைத்து கதைப்பது தெரிந்தது.

எதிர் வீட்டுப் பந்தலில் யார் இருக்கக் கூடும்? திரும்பிப் பார்தேன். அங்கு புவனேஸின் தம்பி தினேஷ் நின்று கொண்டிருந்தான். பந்தல் அலங்கரிப்பு வேலையில் இருக்கின்றான் போலும்.

தினேஷும், நிவேதாவும் ஏதோ சிரித்துக் கதைத்துப் பகிடிவிட்டுச் சிரித்தனர். எனக்குத் தலைசுற்றும் போல இருந்தது. பழையவை யாவும் ஞாபகம் வந்தன.

புவனேஸுக்குச் சொன்ன புத்திமதிகள், வசனங்கள் யாவற்றையும் ஞாபகப்படுத்திக் கொண்டேன்.

ஏனெனில் அவை மிகவிரைவில் தினேஷிற்கும் பயன்படப்போகின்றன.

அந்தச் சந்தர்ப்பத்தை போஸ்டமாஸ்டர் தராமலாவிடப் போகின்றார்?

---

# தூக்குத் தண்டனையை எப்படி நிறைவேற்றுவர்?

மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு அதனை நிறைவேற்றுவது அவசியம் என்ற நிலைப்பாடு இலங்கையில் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளமை நமக்குத் தெரிந்ததுதான்.

அந்தக் காலத்தில் தூக்குத் தண்டணையை எப்படி நிறைவேற்றினார்கள்?

தூக்குக் கயிறு மூலம் கைதிகளை மேலுலகம் அனுப்பும் வழக்கத்தை முதலில் ஆரம்பித்து வைத்தது பாரசீகம்தான். பிறகு எல்லாநாடுகளும் அதைப்பின்பற்றின. 'ஸிம்பிளான' வழிமுறை என்பதுதான் அது பிரபலமாகக் காரணம். மற்றும் சிக்கனமானது.... நிச்சயமானது!

முன்பெல்லாம் மக்களுக்குத் தண்டோரா போட்டு அறிவித்து விட்டுப் பிறகு நடுத்தெருவில் தூக்குத் தண்டனையை நிறைவேற்றுவார்கள். கூட்டம் அலைமோதும். மரத்திலிருந்து தொங்கும் சுருக்குக் கயிற்றைக் கைதியின் கழுத்தில் மாட்டி, அவன் நிற்கும் 'ஸ்டூலைத்' தள்ளிவிடுவார்கள். கயிறு கழுத்தை நெரிக்க, பல நிமிடங்கள் துடிக்க வேண்டிவரும். பொதுமக்களில் சிலர் இரக்கப்பட்டு அருகில் போய்க் கைதியின் கால்களைப் பலமாக இழுத்து சீக்கிரம் உயிர்போக உதவுவார்கள்.

1760ஆம் ஆண்டில்தான் தூக்குத் தண்டனையில் ஒரு பெரிய 'இம்ரூவ் மெண்ட்' வந்தது. அதாவது, கைதிக்குச் சுருக்கை மாட்டிப் பிறகு, படுவேகமாக உடலைக் கீழே 'விழ'ச் செய்தார்கள். இதனால் கழுத்து எலும்பு 'மடக்' என்று ஒடிந்து உடனே உயிர் போய் விடும். இதில் ரொம்ப நேரம் துடிக்காமல் சாவு. (வசதி படைத்த கைதிகள் முன்கூட்டியே பணம் தந்தால் பட்டு நூலால் செய்யப்பட்ட கயிறு கிடைக்கும்!)

லண்டனில் ஒரே சமயத்தில் ஒரு டசின் கைதிகளைத் தூக்கிலிடும்படி பெரிய மேடை (கீழ் நோக்கித் திறக்கும் கதவுகளோடு) அமைத்து விட்டார்கள். தூக்கிலிடப்பட்டவர்களின் சடலங்களைப் பல நாள்கள் அழுகும்வரை அங்கேயே தொங்க விடுவதும் வழக்கமாயிருந்தது, மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக!

'இப்படி நடுவீதியில் மக்கள் முன் தூக்கிலிடுவது கொடூரமானது. இந்த வழக்கத்தை முதலில் நிறுத்த வேண்டும்.' என்று இங்கிலாந்தில் 1850களில் போராட்டம் ஆரம்பித்தார் ஒரு புகழ் பெற்ற நாவலாசிரியர். அவர்தான் சார்லஸ் டிக்கன்ஸ். அவருடைய கோரிக்கையைப் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் ஏற்றுக்கொள்ள, 1868இல் இந்தத் 'திருவிழா' ஸ்டைல் தூக்குத்தண்டனைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தார்கள்.

ஜெயிலில் நிறைவேற்றப்படும் தூக்குத்தண்டனைவேறு, தூக்குப் போட்டுத் தற்கொலை பண்ணிக் கொள்பவர்களின் விஷயம்வேறு. இரண்டாவதில் உடனே சாவு வராது. பல நிமிடங்கள் துடிக்க வேடிண்டியிருக்கும்.

ஜெயில் தூக்கு கச்சிதம். 'இன்ஸ்டண்ட்'. ஒரு 'லீவரை' இழுக்க, கீழே உள்ள கதவு வாய் பிளக்கும். 'தொப்!' மறுவிநாடி கழுத்து எலும்பு (Cervical Vertebrae) உடைந்துவிடும். இதற்குக் கைதியின் எடை, கயிற்றின் நீளம்... இதெல்லாம் முக்கியம். இதையெல்லாம் முதலிலே கணக்குப் பண்ணி வைத்துவிடுவார்கள்.

சாதாரணமாக ஒரு கைதிக்கு சுமார் ஐந்து விநாடிகள்தான் நினைவும், வலியும், துடிப்பும் இருக்கும். மூளைக்குச் செல்லும் ரத்தம் உடனடியாகத் தடைப்படுத்தப்படுவதால், தொங்கிய உடனேயே முதலில் ஏற்படுவது மயக்கம்தான். வலி தெரியாது.

இதயம்? - அது ரொம்ப விசுவாசமானது. சுமார் பதினைந்து நிமிஷங்கள், விஷயம் தெரியாமல், ஓர் எதிர்பார்ப்புடன் அடித்துக்கொண்டிருக்கும்.

இப்போதெல்லாம் மின்சாரக் கதிரையில் வைத்து பஸ்மம் செய்வது வரை சுருக்கமான முறைகள் பல நடைமுறைக்கு வந்துவிட்டன.

பொதுவாக யாரையும நாம் 'கையை வாரி விட்டார்' என்று சொல்வதில்லை. 'காலை வாரி விட்டார்' என்றுதான் குறிப்பிடுகின்றோம். ஆங்கிலத்திலும் கூட "Don't pull my leg" என்றுதான் சொல்கின்றோம்.

இதுகூட இந்த மரணதண்டனை, தூக்குத்தண்டனை விவகாரத்தில் இருந்துதான் வந்தது.


காலை வாரிவிட்டதாக எதிரிகளை நாம் சொல்வதில்லை... நண்பர்களைத் தான் சொல்கின்றோம் என்பதையும் நீங்கள் கவனிக்கவேண்டும்! இதற்குப் பின்னணி உண்டு. அந்தக் காலத்தில் குற்றவாளிகளை மரக்கிளையில் கயிற்றை முடிச்சுப் போட்டுத் தூக்கில் போடுவார்கள். பல நிமிடங்கள் துடிக்க வேண்டியிருக்கும். அப்போது பார்வையாளரான நீதிபதிக்கு இரக்கம் ஏற்பட்டால் தூக்கில் தொங்கித் துடித்துக் கொண்டிருப்பவரின் உயிர் சீக்கிரம் போவதற்காக அவருடைய கால்களைப் பிடித்துக் கீழே இழுக்க குற்றவாளியின் நண்பர் யாராவது ஒருவருக்கு அனுமதி தருவார். நண்பரின் கடைசி உதவி! Pulling the leg என்பது அதிலிருந்து வந்ததுதான். இப்போது வேறு அர்த்தம் வந்துவிட்டது.

**-'ஹாய் மதன்' கேள்வி - பதில் பகுதியிலிருந்து.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கவிதைகள்

# மௌனமொழி



மனமே; மனித இனமே!
துயரம் கண்டு துவண்டுவிடாதே!
துன்பம் வந்தால் அது உன்னை
அறுக்க வந்த வாள் என்று கொள்ளாதே!
செதுக்க வந்த உளி என்று கொள்!

- மௌனிகன் -

தாத்தா...!
எனக்குத் தெரிஞ்சு நீயொரு
தமிழனாய்ப் பிறந்ததைத் தவிர வேறொரு
தப்பும் செய்யேல்லை. ஏன் ஒரு
புழுவைக்கூட மிதிச்சிருக்க மாட்டாய்!
அருளக் கதையாய்;
போட்டதைத் தின்னுவாய்;
பொயிலைச் சுருட்டும் நீயுமாய்
பொக்குப் பொக்கெண்டு
புகைவிட்டுக் கொண்டும், கோயில்வழிய
புராணம் படிச்சுக் கொண்டும்
திரிஞ்சாய்.....
எப்பவாவது எனக்குக் கெட்ட கோபம் வந்தா?
உன்னை நினைச்சுத்தான் ஆறுவன்.
அப்ப, நெஞ்சைப் பிசைஞ்சு கொண்டு
ஒரு சோகம் பெருமூச்சா வந்து விழும்...
அட,
உன்னைப் போய்க் கொன்று விட்டார்களே...!

- எஸ்.யு.காந்தன் -
தல்லையபுலம்.

பட்டினியால் வாடி இருக்கும் எனக்கு
புத்துயிர் அளிக்க யாரும் வருவார்களா? ~ என
பகல் கனவு காணுகின்றேன்!
அதற்கிடையில்......!!
ஆயுதம் ஏந்திய கை ஒன்று ~ எனக்கு
அழிவு என்னும் விருந்தைத் தருவதற்கு
காத்து நிற்கிறது!

- சா. இரஞ்சினி -
மட்டுவில் வடக்கு

பொலிவோடு வாழ்ந்த தமிழன்
திருவோடு ஏந்தும் பரிதாபம்!
கலிகாலம் ஆனாலும்;
பரிகாரம் காண
பரிவாரம் இருக்கிறது
கவலை விடு!

- வட்டு. சிவநேசன் -

பட்டினிச் சாவுக் கஞ்சோம்
படைகளின் சேட்டைக் கஞ்சோம்
விட்டெறி கணைகட் கஞ்சோம்
வெடிகுண்டுக் கஞ்சோம் வெவ்வாள்
வெட்டுக்கும் அஞ்சோம் எந்த
வேதனை தரினும் அஞ்சோம்
சுட்டெரிக் கின்ற போதும்
சுதந்திரம் பெறுதற் கஞ்சோம்!

- வ. சின்னப்பா -
தனங்கிளப்பு.

அமெரிக்கன் மாவையும்
நிவாரணத்தையும் கண்டாய்
குரக்கன் பிட்டையும்
கூழையும் மறந்தாய்
ஒடியல் மா எங்கே
மரவெள்ளி மா எங்கே
நிவாரண வெட்டுக் கேட்டு
சட்டி பானை கவிழ்ந்தனவா?
எழுந்து நில்• தமிழா உன்
வளமான மண்ணைத் திரும்பிப்பார்!

- திருமதி ச. சிவபலான் -
வடலியடைப்பு.

எனக்கு
சோறு தரவேண்டாம்;
சோலியையாவது தராதீர்கள்
அறுக்கையான வீடு வேண்டாம்
அநியாயமாவது செய்யாதீர்கள்!
நீரும் எனக்கு வேண்டாம்
நிம்மதியையாவது குலைக்காதீர்கள்!

- ஈச்சமோட்டையூர் மணிராஜ் -

இது எந்த நாட்டிலும் இல்லாத ஆயுதம்
இறுதி ஆயுதம்...எச்சரிப்பு ஆயிரம்...
பாதைத் தடையல்ல...இது நகர்வதற்குத்தடை
உணவுக்குத் தடையல்ல... உயிர் வாழத்தடை
வெற்றுப்பாத்திரம்...வேகின்ற வெயில்...
வளைந்த உடம்பு... பின்னால் வாளோடு கை
இது ஜனநாயக நாட்டின் நாளாந்த ஏடு
மிஞ்சப் போவது... எலும்புக் கூடு...?

- த. தர்மதா -

கவிழ்த்த குடமும்
கறிச்சட்டியும்
கந்தலாடையும்
வன்வறுமை சொல்லும்
வாழ்வொடு தான்
உனது போராட்டம்!
எனினும் வாளொடு.....
உன்னுயிர் போகும்!
இனத்துவேஷச் சிக்கலில்
நீயொரு இலங்கைத் தமிழன்
என்பதால்

- ச.சாரங்கா -
சங்கத்தானை.

வன்னித் திருமகனே!
குள்ளநரியாய் வந்த அந்நியனை
வாளேந்திக் குதறியவன் உன் பூட்டன்!
ஆனையை அடக்கியே -
அரிய சாதனை படைத்தவள் உன் பூட்டி!
ஆனால்... இன்று நீயோ...?
ஒரு வேளை சோற்றுக்காய்..
ஓயாமல் - போராடி
சாதனை படைக்கின்றாய்!

- சி. சிவகௌரி -
மட்டுவில் வடக்கு

தமிழனே!
நீ
வாள் (கண்ட) நீண்ட
இடங்களிலெல்லாம்
வாளாவிருக்க வேண்டும்.
ஏனெனில்
நீ இலங்கைத் தமிழன்.
இது –
இனவாத உருக்கில் வார்த்து
அகிம்சைப் பிடிபோட்ட
அரச(ங்க) வாள்!

- வ.இந்திராணி -
வலந்தலை.

வன்னிவாழ் சோதரனே!
கண்ணீரைத் துடைத்தெழும்பு!
கத்திகொண் டுனையழிக்கும்
சித்தத்தோ டொழுந்தவரை
நீறாக்க நீயெழும்பு!
நியாயத்தை எடுத்தியம்பு!
பட்டினியும் தீரும்!
பசி வயிறும் ஆறும்...!!

- சிந்துதாசன் -

## மௌனமொழி - 47



உங்கள் கவிதைகளை [illegible] ஓவியம் இது.
வரைந்தவர் [illegible] சேர்ந்த க. அருள்நேசன்.

இது!
சிங்கம் ஏந்தியவாள்!
சிறுபான்மையினரின்
அங்கத்தை மட்டுமல்ல...
அபிலாசைகளையும்
துண்டாடியவாள்...
வாளேந்திய...
வன்னியன் பரம்பரை;
கோலேந்தும் வேளை...
நாளை...
தானேந்தும்...வாள்!!!

- நா. சோபினி -

பிறந்தும் உறக்கமாய்;
இருந்தும் மயக்கமாய்;
வருந்தும் வழக்கமாய்;
கருகும் வாழ்க்கையில்
கருவறை தொடங்கி
கல்லறை வரைக்கும்
அவலமான வாழ்வுக்கு
ஆயுள் கைதிகளாக.....

- வளர்மதி -

வாள் ஏந்தி
விடுதலை
சமைக்கப்படும்வரை – எம்
மண் (ணின்) பானைகளில்
சோறு சமையாது!!! – பட்டினிச்
சாவும் நிற்காது!!!

- புரட்சி -
பூநகரி.

தமிழனே!
சிங்கள அரசின்
பொருளாதாரத்தடை உன்னை
சோர்வடையச் செய்கின்றது...
சோகத்தில் சுகம் எதற்கு - உன்
வீரத்தில் சந்தேகம் எதற்கு?
சோற்றை இழக்கலாம்
சுதந்திரத்தை இழக்கலாமா?
உணவை இழக்கலாம்
உணர்வை இழக்கலாமா?
உயிரை இழக்கலாம்
உரிமையை இழக்கலாமா?
தேகத்தை இழக்கலாம்
தேசத்தை இழக்கலாமா?
பணிந்து விடாதே!
எழுந்து விடு!
அழுதால் ஆறுதல் கிடைக்கும்
அடித்தால் சுதந்திரம் கிடைக்கும்.

- கதா -

பட்டினிவயிற்றுடன்
பரிதவிக்கும் வன்னித்தமிழனை
படையெடுப்பு என்ற கோஷம்
பரலோகம் அனுப்புகிறது.

- இ. சிவராமி -
பிரம்படி.

கனநாளாய்க்
காய்ந்து போனது - உன்
சோற்றுப்பானை
மட்டுமல்ல - உன்
வயிறும்கூடத்தான்! - ஆயினும்
கவனம் - உன்
கழுத்தும் கவரப்படலாம்...

- அப்துல்லா -
பூநகரி.

தமிழா!
கிட்டாத தீர்வுக்காய் நீ
கொட்டாவி விடுகையில்
வெட்டும் வாளொன்று உனை
வேட்டையாட வருவதை
உணராதிருப்பதேனோ?

- த. பிரபாகரன் -
சுழிபுரம்.

என் தசைகளை மீறித்
தடல் புடலாக
என்புக்கூடு எக்காளமிடுகிறது
ஆனாலும் என்ன?
இதயப்பாறை உறுதி கொள்கிறது
முதுகுக்குப் பின்னால்
முயல்வதுன் இயல்பா?
முகத்துக்கு முன்னே வா
அறத்தினைக் காணலாம்!

- இ. ஜெயக்குமார் -

உணவுத் தடை...
மருந்துத் தடை...
உடுக்கத் தடை...
படிக்கத் தடை...
தடைக்கு மேல் தடையெனவே
தடைகள் குவிந்தாலும்.....
தடைகளினால் படைவெல்லுமா..?
தளராதே வாளேந்து...!
தக்கதொரு வழி பிறக்கும்...!

- தமிழ் -
கிராஞ்சி.

அன்றாடச்சாப்பாட்டுக்கு
அல்லல்படும்போது
அரிவாள் கொண்டு அறுக்க
நினைக்கும்
அளவில்லாத அநியாயத்தனம்
இதுவே இன்றுவரை
அப்பாவித்தமிழனின் அவல
நிலை!

- த.சுதர்சினி -
ஈச்சமோட்டை.

எண்பத்துமூன்றில் இனவாத அரசு
எம்மவரை அழிக்க ஏந்திய ஆயுதம்
தொண்ணூற்றொன்பதிலும் தொலைந்து போனதா?
தொடர்கிறது!

- கனகராயனூரான் -

இன்னுமா உன்புயங்கள்
பூச்சியத்தினுள் புதையவேண்டும்...
தடைகளை உன் கரங்களால் கத்தரி!
உலக அதிசயம் உன்னுள்ளும் கருத்தரிக்கும்
அருவி ஓட்டத்தில் நாணல் வளைகிறது
கூனல் விழுகிறதா...?
சவால்கள் படிக்கற்களாக
சளைக்காது முன்னேறு!
வெற்றி நிச்சயம் – இது
வேத சத்தியம்!

- கமலா -
மருத்துவபீடம்.

இங்கே...
சட்டிபானைக்குள் சட்டென்ற – மௌனம்
சிறுகுடலும் பெருங்குடலும் ஒன்றையொன்று முறுக்க
– பெரும்போர்
அங்கோலா மனிதரைவிட அவலமாகிவிட்ட என்னிடம்
– எதைப்பறிக்க வருகிறாய்
ஊசலாடும் உயிரையா? – அல்லது
உறங்கமுடியாமல் தவிக்கும் இலட்சியத்தையா?

- நட்ஷேத்ரா-
உடுப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இக்கரையும்...

ஜனாகியிடம் ஏற்பட்ட மாற்றங்களை மிக அருகிலிருந்தவர்கள் - அதுவும் உன்னிப்பாக அவதானித்தவர்கள் - மட்டுமே கவனித்திருக்க முடியும். கடந்த சுமார் ஐந்தாறு மாதங்களாகத்தான் இந்த மாற்றம்.

அவதானித்தவர்கள் தமக்குத் தாமே "ஏன் இப்படி மாறி விட்டாள்?" எனக் கேட்டுக் கொண்டார்கள். நெற்றியைச் சுழித்துக் கொண்டார்கள். ஆனால் எவரும் ஜானகியிடம் விசாரிக்க முற்படவில்லை. எப்படி விசாரித்தறிவது என வழி தெரியாது விழித்தார்கள்.

திருமணம் செய்த காலம் முதல் சேலை உடுத்தியவளாகவே அவளைக் காண முடிந்தது. இப்போது அச் சேலைக்கு விடை கொடுத்திருந்தாள். ஆங்கிலேய பாணியில் சட்டை அணியத் தொடங்கியிருந்தாள். அதுவும் முழந்தாளுக்கு மேலே ஆறு இஞ்சி குறைவாக இருக்கும்.

அவள் திருமணம் செய்து குறைந்தது பதினைந்து வருடங்கள் சென்றிருக்கும். இவ்வளவு காலமும் வீட்டிலே தங்கியிருக்கும் போது சேலை உடுத்தியவளாகத்தான் காணப்படுவாள். ஆனால் இப்போது வீட்டைவிட்டு வெளியே அலுவலாகச் செல்லும் போது கூட சட்டையுடன்தான் காண முடிந்தது.

**பழையூர் சுந்தரம்பிள்ளை**

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் ஜானகியைத் தவறாது ஆலயத்தில் காணமுடியும். அங்கே கூடச் சட்டையுடன்தான் வருகை தந்தாள். கடந்த காலமெல்லாம் சேலையுடன் காட்சி தந்தவள், சட்டையுடன் காட்சியளித்தது எல்லோருக்கும் புதுமையாகவும் ஆச்சரியமாகவும்தான் இருந்தது.

ஜானகியிடம் ஒரு பழக்கம் இருந்தது. ஒருநாள் உடுத்திய சேலையை, திரும்பவும் உடுத்துவதில்லை. வேறு சேலையைத்தான் பயன்படுத்துவாள். ஒரே சேலையை அடுத்தடுத்து உடுத்துவதை கௌரவக் குறைவாகக் கருதுவதே இதற்குக் காரணம். இப்படிப்பட்ட மனப்பாங்குடையவள் மாறியது புரியாத புதிராகவே இருந்தது.

இத்துடன் நிற்கவில்லை சில மாதங்களுக்கு முன்பு தலைமுடியையும் வெட்டிக் குறைத்து விட்டாள். தலையைப் பின்னுவது அல்லது கொண்டை போடுவதைத் தவிர்த்தாள்.

ஆலயத்திற்கு வரும் - தனக்கு அறிமுகமான - பெண்களிடம், ஒரு வேண்டுகோளை அண்மையில் விடுத்திருந்தாள்.

"என்னை இனிமேல் 'ஜானி' என்று அழையுங்கோ. ஜானகி எண்டு கூப்பிடாதேங்கோ".

ஏன் என்று கேட்க எவரும் முயலவில்லை.

ஜனாகி தான் மாறியதுடன் நில்லாது தனது கணவரையும் மாற்ற முயற்சி செய்தாள். அவளுடைய கணவர் வரதன் ஒரு பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியர். பண்பாடுள்ள குடும்பத்தில் வந்தவர். அதனால் அவர் வேட்டியும் "நஷனல் சேட்" எனப்படும் தேசிய உடையான மேற்சட்டையும் அணிவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

வட்ட வடிவமான பரந்த முகமுடைய அவருக்கு, அந்த உடை ஒருவகைப் பொலிவையும் கொடுத்தது. அந்த ஊரில் வேறு எவருமே 'நஷனல் சேட்' அணிவது கிடையாது. கடைகளில் விற்பனை செய்யப்படும் மேல்நாட்டுப் பாங்குடைய மேற்சட்டைகளையே அணிவர். ஆகவே வரதன் ஒரு வித்தியாசமான தோற்றத்துடன் காட்சி தருவான்.

ஒரு நாள் மாலை வேளை, வரதன் ஓய்வாக இருந்த நேரம் பார்த்து அவரை அணுகினாள் ஜானகி.

"இஞ்சாருங்கோ...... ஒரு அலுவல்"

'என்ன?' என்பது போல வரதன் ஜானகியை ஏறிட்டு நோக்கினார்.

"உந்த வேட்டியையும் நஷ்னலையும் விட்டுப்போட்டு, ரவுசர் போடுங்கோ. அதுதான் மதிப்பா இருக்கும்." எனக் கதையைத் தொடங்கினாள்.

"ஏன் ஜானகி? இந்த உடுப்புக்கு மதிப்பில்லையே? அமைப்பாய்த்தானே இருக்கு?"

"அமைப்பாய்தான் இருக்கு, எண்டாலும்....." என இழுத்தாள்.

"ஏன்? என்ன விஷயம். ஆராவது குறை சொல்லீனமே?"

"ஒருதரும் குறைசொல்லேல்லை. ஆனால் காலத்துக்கேற்றபடி மாத்திறது நல்லதெல்லே? மற்றது பாருங்கோ..." என சொல்ல முற்பட்டுச் சிறிது தயங்கினாள் ஜானகி.

"என்ன சொல்லுமன்....."

"அக்காவும் அத்தானும் லண்டனிலையிருந்து வருகினமல்லோ?...."

"ஓமோம், வருவதாய்தானே எழுதியிருக்கினம். அது இந்த வருஷக் கடைசியிலை டிசெம்பர் விடுமுறையோடைதானே?"

"விடுமுறையோடைதான். இனியென்ன மூண்டு நாலுமாதம் தானே இருக்கு? அது கழியிறதுக்குக் காலம் எடுக்கப்போகுதே? பார்த்துக் கொண்டிருக்க போய்விடும்."

"அதுக்கென்ன, கெதியிலை வந்திடுவினம் எண்டு வைச்சுக் கொள்ளுவம்......"

"அக்காவும் அத்தானும், பிள்ளையளும் மேல்நாட்டு நாகரிகத்திலை நல்லாய் ஊறினவை. அங்குள்ள பாஷன் எங்கடை நடைமுறையிலையிருந்து கனக்க வேறுபட்டதாம்."

"உண்மைதான்" என ஆமோதித்த வரதன் தொடர்ந்தார்.

"மேல்நாடுகளின்ரை கலாசாரம், பண்பாடு எல்லாம் வேறே மாதிரியானதுதான். அந்த நாடுகளுக்கு அது தான் ஏற்றது....."

"நான் இப்ப என்ன சொல்ல வாறனெண்டால்.....அவை வரேக்கை நாங்களும் ஓரளவுக்கு அவையளைப் போல உடைகள், பாவனைகளை வைச்சுக் கொண்டால்தானே நல்லது? நீங்கள் வேட்டியோடையும், நான் சீலையோடையும் நிண்டால் அவைக்கு ஒருமாதிரியெல்லே இருக்கும்?"

"ஓகோ......நீர் அந்த இடத்திலை வந்து நிற்கிறீரே? அதுதானே இப்ப சீலை உடுக்கிறதை விட்டிட்டுச் சட்டை மட்டும் போடுறீர்?"

"கண்டுபிடிச்சிட்டியள். அங்கே தலைமயிர் வளர்த்துக் கொண்டை கட்டிறதோ பின்னல் பின்னுறதோ இல்லையாம். மயிரை அளவோடை வெட்டிப்போடுவினமாம். அதுதான் நானும் மயிரை வெட்டிப்போட்டன்."

"அதுக்காக நானும் காற்சட்டை சேட் போட்டு, கோட்டும் போடவேணும் எண்டு சொல்லுறீர்....."

"சரியாய்ச் சொன்னீங்கள்...."

"இஞ்சாரும் ஜானகி மேல்நாடு குளிரான தேசம். அங்கே எங்கடை வேட்டி சேட்டுகளைப் போட்டால் குளிர் தாங்காது. அதுக்காகத்தான் தடித்த துணியிலை தைத்த உடைகளைப் பாவிக்கிறார்கள். ரைகட்டி, கோட்போடுகிறார்கள். குளிர் உடம்பைத் தாக்காமல் இந்த உடைகள் தடுக்கிறது. ஆனால் எங்கடை நாடு உஷ்ணம் மிகுந்தது. இங்கே அந்த உடுப்புக்களை அணிந்தால் வியர்க்கும். அது மட்டுமல்ல அதனாலே நோய்களும் ஏற்படும். அந்த நோய்களுக்குப் பிறகு வைத்தியம் செய்ய வேண்டி வரும்." என ஒரு பெரிய பிரசங்கமே செய்து முடித்தார் வரதன்.

"உங்களோடை வாதிச்சு வெல்ல முடியாது" என்று கூறியபடி அங்கிருந்து நழுவிவிட்டாள் ஜானகி.

வரதனின் அறிவுரைகள் ஜானகியின் போக்கில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

இப்போது பிள்ளைகளின் பக்கம் அவளின் கவனம் திரும்பியது. லண்டன் நாகரிகத்திற்கு ஏற்றவகையில் அவர்களைப் புடம் போட வேண்டும் என முடிவு செய்தாள்.

பாலச்சந்திரன், கயல்விழி என இரண்டு பிள்ளைகள். இருவருக்கும் அவள் பயிற்சி கொடுக்கமுற்பட்டாள். முதலில் தன்னை 'அம்மா' என அழைக்கக் கூடாது எனவும் 'மம்மி' என்றே அழைக்க வேண்டும் எனவும் கண்டிப்பாகக் கூறிவிட்டாள். அவர்கள் பல வருடங்களாக 'அம்மா' என்றே அழைத்துப் பழகியவர்கள். புதிய சொற்பிரயோகத்தை வழக்கத்தில் கொண்டு வர மிகவும் சிரமப்பட்டார்கள்.

அவ்வப்போது, பழக்கதோஷத்தில் வாய் தடுமாறி 'அம்மா' என்று அழைத்து விடுவார்கள். பின்பு ஜானகியிடம் நன்றாக பேச்சு வாங்கிக் கொள்வார்கள். தொட்டில் பழக்கத்தை மாற்றுவது எவ்வளவு கடினம் என்பதனை ஜானகியால் கிரகித்துக் கொள்ள முடியவில்லை. அவசர புத்திக்காரர்களுக்கு அறிவு சூனியம்தானே?

பிள்ளைகளின் பெயர்களிலும் மாற்றம் செய்தாள். மகனை 'பாலசாந்த்' என்றும் மகளை 'கயா' என்றும் பெயர் மாற்றம் செய்து அவ்வாறே அழைக்கத் தொடங்கினாள்.

மேலை நாட்டுப் பெயர்கள் போல இருக்க வேண்டும் என்பதே அவள் எண்ணம். இதனாலும் பிள்ளைகள் குழம்பத்தான் செய்தார்கள். தூரத்தில் நிற்கும்போது இப்பெயரைக் கூறி அழைத்தால் அவர்கள் கவனத்தில் எடுக்காது விடுவதும் உண்டு. தம்மைத்தான் கூப்பிடுகிறார் என்பது, அவர்களின் மனதில் படுவதில்லை. பல ஆண்டுகளாக வேறு பெயர்களில் அழைக்கப்பட்டவர்களல்லவா??

மேலும் தந்தையாரான வரதன் இந்தப் பெயர் மாற்றத்துடன் ஒத்துழைக்காததும். ஒரு காரணமாகும். அவர் உள்ள பெயரிலேயே அழைத்தார்.

இவ்வாறான சூழலில் டிசெம்பர் மாதமும் வந்து சேர்ந்தது. தாம் வரும் திகதி குறித்து முன்கூட்டியே ஜானகிக்கு அறியத்தந்திருந்தனர் மூத்த சகோதரியும் கணவரும்.

கொழும்பிற்குச் சென்று, வரவேற்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரவேண்டும் என ஜானகி திட்டமிடத் தொடங்கினாள். அப்படியான கட்டத்தில் சகோதரியிடமிருந்து மறுகடிதம் ஒன்று வந்தது. அதில் இவர்களைக் கொழும்பிற்கு , வரத்தேவையில்லை எனவும், தாம் யாழ்ப்பாணம் வந்து சந்திப்பதாகவும் தெரிவித்து விட்டனர்.

கொழும்பிற்கு வந்த அவர்கள் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தாம் வரும் தினத்தை அறிவித்து யாழ்ப்பாணம் நகர பஸ்நிலையத்தில் சந்திக்கும்படி கேட்டுக் கொண்டனர்.

குறிப்பிட்ட தினத்தில் யாழ். பஸ் நிலையத்தில் குடும்பமாகச் சென்று, அவர்களுடைய வரவை எதிர்பார்க்கத் தொடங்கினர்.

விமானப் பயணிகளை ஏற்றி வந்த பஸ் வந்து சேர்ந்தது.

வரதனுக்கு அவர்கள் எவரையுமே முன்பு அறிமுகமில்லை. ஆகவே அவரால் இனம் காணமுடியாது. ஜானகிக்கும் அவளுடைய சகோதரியை மட்டுமே தெரியும். ஏனெனில் சகோதரி லண்டனுக்கு மணமகளாக அனுப்பப்பட்டு அங்கேதான் திருமணம் நடைபெற்றது. ஆகவே அவளின் கணவரை இனம் காணும் நிலையில் அவள் இல்லை.

ஜானகிக்கு ஒரு நம்பிக்கை இருந்தது. பஸ்ஸில வருபவர்கள் யாவருமே உள்ளூர்ப் பயணிகள். ஆகவே அவர்கள் அனைவரும் சாதாரண உடையில் காணப்படுவார்கள். சகோதரி குடும்பம் மேல்நாட்டு உடையில் தோற்றமளிப்பர். ஆகவே சுலபமாக இனம் காணலாம் என எதிர்பார்த்தாள்.

பஸ்ஸிலிருந்து எல்லோரும் இறங்கி விட்டனர். மேல் நாட்டு உடையில் எவரையுமே காணவில்லை. ஜானகிக்கு ஒரே ஏமாற்றம். ஏதோ தவறு நேர்ந்து விட்டது போலும் என எண்ணினாள். அவர்களின் வருகைத் திகதியைத் தாம் சரியாகக் கவனிக்கவில்லையோ எனச் சந்தேகித்தாள்.

"எப்பிடி ஜானகி சுகமா?"

தன்னை யாரோ அழைக்கும் குரல் கேட்டுத் திரும்பியவள் திகைப்படையும் சம்பவம் நிகழ்ந்தது.

"என்ன திகைத்துப்போய் நிற்கிறாய்?" என்றவாறே அருகில் வந்தாள் ஒரு பெண். தமிழ்மணம் கமழும் உடை. நெற்றியில் குங்குமம். அழகாக அமைக்கப்பட்ட கொண்டை.

'யாராக இருக்கும்? எனத் தன்னைத்தானே கேட்டபடி உற்றுப் பார்த்தாள். சகோதரி செல்வி நின்று கொண்டிருந்தாள்.

"நீங்கள்.....வந்திட்டீங்களே அக்கா? நான் கவனிக்கேல்லை."

மேல்நாட்டு உடைப்பாவனையில் காட்சியளிப்பாள் என எதிர்பார்த்து செல்வியைத் தேடிக் கொண்டிருந்த ஜானகிக்கு ஒரே அதிர்ச்சி. சிறிது நேரம் பேச்சே வரவில்லை.

சகோதரியின் பிள்ளைகளைத் தேடினாள். அவளுக்கு இரண்டு பெண்கள். இருவரும் முழுப்பாவாடை அணிந்து காட்சி தந்தனர்.

"கலையரசி, கலைவாணி..."

பிள்ளைகளை அழைத்தாள் செல்வி.

"என்னம்மா?" என இருவரும் ஒரேநேரத்தில் கூறியபடி தாயைப் பார்த்தனர்.

"இவதான் உங்கடை சின்னம்மா. இவர்தான் சித்தப்பா." அறிமுகம் செய்து வைத்தாள்.

சுத்தமான தமிழ்ப் பெயர்கள். அம்மா என்றே தாயை அழைக்கிறார்கள்.

இது ஜானகிக்கு மேலும் அதிர்ச்சியளித்தது. பெயர்களில் மாற்றம் செய்து, கலப்படம் செய்து 'மம்மி' என அழைக்கப் பழக்கிய தனது செய்கையை நினைக்க அவளுக்கு இப்போது வெட்கமாக இருந்தது.

ஒருவாறு ஒரு வாகனத்தை



# அக்கரையும்...!

அமர்த்திக் கொண்டு விட்டிற்குப் பயணமாகினர்.

வீட்டிற்கு வந்தவளுக்கு மேலும் மேலும் திகைப்பை ஏற்படுத்தியது அவர்களின் மாற்றமடையாத தமிழ்ப் பண்பாடுகள்.

ஜானகியால் மனதை அடக்க முடியவில்லை. ஆகவே செல்வியிடம் கேட்டுவிட்டாள்.

செல்வி நிதானமாகக் கூறினாள்.

"யாழ்ப்பாணத்தவர்கள் ஒரு தவறான அபிப்பிராயம் வைத்துள்ளனர். நாங்கள் மேல்நாடுகளில் அவர்களுடைய பண்பாடுகளைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றி, எமது கலாசாரத்தை மறந்து விடுவதாக நினைக்கிறார்கள். அது தவறு. லண்டனைப் பொறுத்த வரையில் நாம் மிக அவதானத்துடன் நடந்து கொள்கிறோம். எமது பண்பாடுகளைத் தவறாது பின்பற்றுகிறோம். இதனால் எமக்கு அங்கே வாழும் ஆங்கிலேயர் மத்தியிலும் மிகுந்த மதிப்பு உண்டு. எம்மிடமிருந்து சில பண்பாடுகளைக் கற்றுக் கொள்ளவும் அவர்கள் முற்படுகிறார்கள். ஆனால் கொழும்பும் யாழ்ப்பாணம் எதிர்மாறாக இருக்கு, மாறி வருகிறார்கள்."

"அப்பிடியே அக்கா? நான் நீங்கள் எல்லாம் தமிழிலை பேசக் கூட மாட்டியள் எண்டெல்லே நினைச்சிருந்தன்."

ஆச்சரியத்துடன் ஜானகி கூறினாள்.

அருகிலிருந்து இவர்களின் கருத்துப்பரிமாற்றங்களைக் கேட்டுக் கொண்டிருந்த செல்வியின் கணவர் தமது கருத்தைக் கூறினார்.

"நாங்கள் கொழும்பில் சில நாள்கள் தங்கியிருந்தோம். அங்கே பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் உள்ளனர். ஆனால் அவர்களை இனம் காண முடியவில்லை. மேல்நாட்டு உடை பாவனைகள். பெண்களிடம் 'பொட்டு' இல்லை.

இதே நேரத்தில் சிங்கள, முஸ்லிம் இனத்தவர்களை இனம் காண முடிகிறது. அவர்கள் தமது பண்பாடுகளை மாற்றவில்லை.

"கொழும்புத் தமிழர்களுடைய வாயிலிருந்து சுத்தத்தமிழ் வெளிவரவில்லை. ஆங்கிலச் சொற்களையும், சிங்களச் சொற்களையும் கலந்து பேசுகிறார்கள். ஒருவரை விசாரித்தேன். அப்படிப் பேசுவதுதான் தமக்கு மதிப்பு என்று பதிலளித்தார். இதனால் என்ன பெரிய மதிப்போ எனக்குப் புரியவில்லை.

"யாழ்ப்பாணம் வந்தால் இங்கேயும் அதே நிலைதான் போல இருக்கிறது. திருமணம் செய்து நான்கு பிள்ளைகள் பெற்ற பெண்ணுக்கும், இருபது வயது இளம் பெண்ணுக்குமிடையில் வித்தியாசம் காணமுடியவில்லை. தலைமுடியை வெட்டியும் அசிங்கமாகக் காட்சி தருகிறார்கள்.

"தனிநாடு தேவை என்ற போராட்டம் ஒருபுறம் நடக்கிறது. உலகெங்கும் ஆதரவு கோரப்படுகிறது. அதே நேரத்தில் இங்கே தமிழர்கள் விரைவாக மாறிக் கொண்டிருக்கிறார்கள். ஏன்தான் தனிநாடு கேட்கிறார்களோ தெரியவில்லை.

"மேல் நாட்டில் வாழும் எங்களுக்கு உள்ள அக்கறை இங்குள்ளவர்களுக்கு இருப்பதாகத் தெரியவில்லை" எனக் கூறிமுடித்தார்.

வரதனிடமிருந்து அர்த்தமுள்ள ஒரு புன்முறுவல் வெளிவந்தது. இக்கரை இப்படி. அக்கரை அப்படி என நினைத்தார்.

ஜானகி எழுந்து அவசரமாக உள்ளே ஓடினாள் சேலையை எடுப்பதற்காக.

(நிதர்சனம் நிறைந்த கற்பனை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்வீட்டுப் பெண்ணுக்கு 'ஜூஸ்' கொடுக்கலாமா?

**புற்றளை. அ.குமரன்.**
மனைவி சொற்படி கேட்டு நடக்கலாமா?
☺நடக்கலாமாவா? அதுதானே நமக்கு வேத மந்திரம். 'தையல் சொல் கேளேல்' என்று ஆத்திசூடியில் ஔவையார் கூறியிருக்கின்றார் என்பது வாஸ்தவம்தான். அவர் கருத்துப்படி தையலாகிய அவரின் ஆத்திசூடியையும் நாம் கேட்கக் கூடாதல்லவா? ஆகவே 'தையல் சொல் தலைப்படு' என்று தலையில் வைத்துக் கொண்டாடுவதுதான் நமக்கு நல்லது; பாதுகாப்பானது. (ஹீ...ஹீ... இவ்வளவு பயமா என்று நீங்கள் திட்டுவது காதில் விழுகின்றது. நமக்கு வேறு என்னதான் வழி?)

❀ ❀ ❀

**கட்டுடை. எ.வேந்தன்.**
பூசை செய்யும் ஐயர்மார், மோட்டார் சைக்கிளில் ஓடித்திரிவது சைவத்தின் மறுமலர்ச்சி என்று கூறலாமா?
☺மோட்டார் சைக்கிளில் ஓடுவது இருக்கட்டும். சில ஐயர்மார் பூசையையும் அந்த வேகத்தில் அல்லவா ஓட்டமாக நடத்தி முடிக்கின்றார்கள். அதுதான் சஞ்சலத்தைத் தருகின்றது.

❀ ❀ ❀

**கொக்குவில். மதுமிதா.**
நான் ஓர் இளம்பெண். அடுத்த வீட்டிலிருக்கும் இளைஞன் என்னுடன் நட்பாகப் பழகுகின்றான். அவனை நண்பனாக்கலாமா?
☺பாம்பொடு பழகேல்!

❀ ❀ ❀

**மானிப்பாய். சங்கர்ராஜ்.**
சுகமான சுமை எதுவோ?
☺அறிஞர்களுக்கு நூல்கள்; அன்னைக்குக் குழந்தை; பெண்களுக்கு ஆபரணங்கள்; சிறுவருக்கு விளையாட்டுப் பொருள்கள்; அரசியல்வாதிகளுக்கு பதவிப் பொறுப்புக்கள்... இப்படிப் பட்டியல் நீண்டு கொண்டே போகும்.

❀ ❀ ❀

**கரணவாய். வாசவன்.**
'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது எப்போதும் பொருந்துமா?
☺ இல்லை. ஒரு தனி ஆசிரியரோ, ஒரு தனி டாக்டரோ தவறு செய்ததற்காக நாம் தலை வணங்க வேண்டிய ஆசிரியர் உலகையும் டாக்டர்கள் சேவையையும் குறைத்து மதிப்பிட கூடாது அல்லவா?

கொள்ளுங்கள்.

❀ ❀ ❀

**கல்வயல். ஆர்.தயாளன்.**
இந்தியாவில் மருமகளை மாட்டுப் பெண் என்கிறார்களே?
☺ மாமியாரை மாடு போன்று முட்ட வரும் பெண் என்றாலும் மாட்டுப் பெண். மாமியாரிடம் மாட்டிக்கிட்டு முழிக்கும் பெண் என்றாலும் மாட்டுப் பெண். - பெயர்ப் பொருத்தம் சரியாகத்தானே பார்த்து வைத்திருக்கின்றார்கள்!

❀ ❀ ❀

**கைதடி. க.சுப்பு.**
போதையில் வரும் கணவனை மிரட்டும் பேதை குறித்து என்ன கூறுகின்றீர்கள்?



☺முள்ளை முள்ளால்தானே எடுக்க வேண்டும்?


❀ ❀ ❀

**பளை. வெ.வடி□.**
யாழ்ப்பாணப் பெற்றோர் மக்களுக்காக லட்சம் லட்சமாகத் தேடுகின்றார்களே?
☺ மக்களுக்கு எங்கே தேடுகின்றார்கள்? மருமகன்மாருக்கு அல்லவா தேடுகின்றார்கள்!

# மனைவி சொற்படி கேட்டு நடக்கலாமா?

❀ ❀ ❀

**நீர்வேலி. லவன்.**
எனக்காக காதல் தூது செல்லுமாறு நெருங்கியவர்களைக் கேட்டேன். மறுக்கின்றார்களே. என்ன செய்ய?



☺காதல் செய்வது என்ன அஞ்சலோட்டமா? 'தன் கையே தனக்குதவி'. நீங்களே முயற்சித்துப் பாருங்கள்!

❀ ❀ ❀

**கொழும்புத்துறை. குலம்.**
பெற்றோர் சம்மதமின்றி எனது நண்பன் ஒரு பெண்ணைத் தூக்கிக் கொண்டுபோய்விட்டானே?
☺ தனக்குத்தானே தூக்குத் தண்டனை விதிப்போரைப் பெற்றோர் என்ன செய்ய முடியும்?

❀ ❀ ❀

**சண்டிலிப்பாய். து.பிரதீபன்.**
'பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்' என்கின்றார்களே. அந்தப் பத்தும் யாவை?
☺ ஔவையாரின் நல்வழியில் கூறப்பட்ட விடயம் இது. "மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை, தேனின் கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் - பத்தும் பசி வந்திடப் போம் பறந்து" - என்று அவர் கூறுகின்றார். நடைமுறையில் இது சரியானதா என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

❀ ❀ ❀

**அராலி. தே.பரணி.**
ஆஸ்பத்திரியில் இல்லாத மருந்துகள், முன்னால் உள்ள மருந்துக் கடை வரிசைகளில் விற்கின்றார்களே?
☺ இப்போதைய நிலையில் நதி மூலம், ரிஷி மூலம் போன்று மருந்து மூலத்தையும் தேடக்கூடாது.

❀ ❀ ❀

**யா□. க.அனுஷன்.**
'குட்டக்குட்டக் குனிபவனும் மடையன். குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்.' என்கின்றார்களே. உண்மையா?
☺ ஈழத் தமிழர்களையும் தமிழ்க்கட்சிகளையும் இணைக்கும் நல்லதோர் பழமொழி இது!

❀ ❀ ❀

**நல்லூர். மி.சந்திரன்.**
வெயில் காலம் இது. முன் வீட்டுப் பெண்ணுக்கு 'ஜூஸ்' கொடுக்கலாமா?
☺ 'ஜூஸ்' கொடுத்தால் தப்பில்லை. 'யூஸ்' பண்ண முயலாவிட்டால் சரி!

❀ ❀ ❀

**உரும்பிராய். எஸ்.சுபா.**
ஒரு பெண்ணை ஆழமாக நேசித்து இடையில் அவளை விட்டுவிட்டு,இன்னொரு பெண்ணை நேசித்து அவளையும் இடையில் விட்டு விட்டு ஊரை விட்டே ஓடும் ஆண்கள் குறித்து....?
☺ இடையில் விடுவதுதானே இவர்களுக்குக் கைவந்த கலை.

❀ ❀ ❀

**மட்டுவில். பிரணவன்.**
பெண்களை தெய்வத்துக்கு ஒப்பிடலாமா?
☺ தெய்வம் நின்று கொல்லும். தினசரி நம் உயிரை வாங்குவதில்லையே!

❀ ❀ ❀

**நவாலி. எஸ்.மகேத்.**
ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டும் தமிழ்க்கட்சி குறித்து.....?
☺ பாவம் கூட்டணி. நொந்து போய் இருக்கின்றது. விட்டுவிடுங்களேன் பிளீஸ்...!

❀ ❀ ❀

**திருநெல்வேலி. அருண்ராஜ்.**
வித்தூ! எனது மனைவி எல்லாச் செயற்பாட்டிலும் என்னைக் கீழுக்குத் தள்ளிவிட முற்படுகின்றாளே. என்ன செய்ய......?
☺ நீர் மேலாக (Male ஆக) இயங்க முயற்சியும்.

❀ ❀ ❀

**தட்டாதெரு. ஸ்ரீதரன்.**
ஆண்மையின் சிறப்பு யாது?
☺'பிறன்மனை நோக்காப் பேராண்மை' என்கின்றாரே பொய்யா மொழிப் புலவர்.

❀ ❀ ❀

**புங்குடுதீ□. கே.சிவம்.**
'வித்து' என்பதைச் செல்லமாக 'பித்து' என அழைக்கலாமா?
☺ 'சிவம்' என்பதைச் செல்லமாக 'சவம்' என்று அழைக்கலாமா?

❀ ❀ ❀

**அச்சுவேலி. கஜானனன்.**
இரவு நேர மின்ஒளி விளையாட்டுக்களில் பங்குபற்றலாமா?
☺ ஒளிவு - மறைவு விளையாட்டுக்களாக இல்லாவிட்டால் சரி.

# வித்துவான் பதில்கள்

❀ ❀ ❀

**நல்லூர். என்.யமுனா.**
'ஒரிஜினலை'க் கைவிட்டு'எக்ஸ்ட்ராவை நாடிச் சென்ற பலர் இப்போது முழுசுகின்றார்களே?
☺பலரின் நிலை, சட்டியிலிருந்து அடுப்புக்குள் விழுந்த மாதிரி ஆகிவிட்டதாம்!

❀ ❀ ❀

**உடுவில். அ.கமல்.**
கற்பு என்பது நெருப்பா?
☺ஆம். விசித்திரமான நெருப்பு. கணவன் ஏற்றினால் தீப[illegible] மற்றவர்கள் கொளுத்தினால் தீ!

❀ ❀ ❀

**வடமராட்சி. து.தவா.**
தமிழ்க் கட்சிகளின் தலையாய இலக்கு எது?
☺ தலையாய இலக்கோ, தலை போற இலக்கோ தெரியவில்லை. ஒரே இலக்கு கதிரை. அதன் மூலம் பவிசு, வரவு.. போன்றவை.

❀ ❀ ❀

**நீர்வேலி. ப.கண்ணன்.**
சாதி விட்டு சாதி திருமணம் செய்யலாமா?
☺ ஆண்சாதி, பெண்சாதியைத்தானே கட்ட வேண்டும்? ஒரே சாதிக்காரர்கள் (ஆண்சாதியும் ஆண்சாதியும், பெண்சாதியும் பெண்சாதியும்) திருமணம் செய்யும் குளறுபடி எல்லாம் நம்நாட்டில் இல்லைக் கண்ணா!

❀ ❀ ❀

**கொழும்புத்துறை. ஜோ.ஜெஸ்ரின்.**
உயிர்களை உருவாக்குவது ஆண்களா? ஆண்டவனா?
☺உணர்வுள்ள உயிர்களில் உணர்ச்சி. உணர்ச்சியின் விளைவுதானே உயிராகுகின்றது?

❀ ❀ ❀

**அரியாலை. வசந்தன்.**
உயரமான எனது நண்பன், குள்ளமான பெண்ணைக் காதலிக்கின்றானே?
☺ 'கடுகு சிறிது என்றாலும் காரம் பெரிது' என்பார்கள். உங்கள் நண்பர் காரம் புரிந்தவரோ என்னவோ!

❀ ❀ ❀

**தட்டாதெரு. ப.சுமதி.**
பல மாமிமார் தாங்களும் ஒரு காலத்தில் மருமகளாக இருந்தவர்கள்தான் என்பதை மறந்து, தங்கள் மருமகளைக் கொடுமை செய்கின்றார்களே......?
☺ பல்கலைக்கழகத்தில் 'ராகிங்' செய்யும் பலர் தாங்கள் முன்னர் 'ராகிங்' வதைக்கு உள்ளானதை மறந்து விடுவது போல்தான் இதுவும்.

❀ ❀ ❀

**சங்கானை. ம.நேசன்.**
கோயில் திருவிழாக்கள் லீலை புரியும் இடங்களாகிவிட்டமைக்கு காரணம் என்ன?
☺ தட்டிக் கேட்க ஆளில்லா விட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்தானே!

**பளை. போ.உதயணன்.**
பேய்களிலும் ஆண் - பெண் பிரிவு உண்டா?
☺ நான் இதுவரை சந்தித்தது எல்லாம் ஒரு பிரிவுதான். நம்ம பிரிவில் குறைவுதான்.

❀ ❀ ❀

**வட்டுக்கோட்டை. சோ.வனிதா.**
பெண்ணுக்கு அழகு தருவது எது?
☺ ஆடவரின் கண்ணுக்கு விருந்தாவது எதுவோ அதுதான்.

❀ ❀ ❀

**சங்குவேலி. மு.குமரன்.**
தெரிந்த குடும்பத்தில் திருமணம் செய்வதா, தெரியாத குடும்பத்தில் திருமணம் செய்வதா நல்லது?
☺Known devil is better than Unkonwn devil (Angel அல்ல).

❀ ❀ ❀

**நெல்லியடி. சந்துரு.**
காக்காய் வலிப்பு என்ற சொல் சரியானதா?
☺ கை, கால் வலிப்பே இன்று காக்காய் வலிப்பாகத் திரிவுபட்டு விட்டது போலும். அது சரி சந்துரு, உமக்கு ஏன் காக்காய் வலிப்பு பற்றி ஞாபகம் வந்தது? கொழும்பில் ஏதேனும் Night club இற்கு அல்லது நம்மூர் பிரேக் டான்ஸ் நிகழ்ச்சிக்குச் சென்றீரா?

❀ ❀ ❀

**கோண்டாவில். எஸ்.ராஜா.**
எனது மனைவி சமையல் கரண்டியைத் துடுப்பாகப் பயன்படுத்துகின்றாளே....?




☺ அப்படியானால் உங்கள் தலைதான் பந்தாக இருக்கும். அப்படித்தானே ராஜா?

❀ ❀ ❀

## இவ்வார ஜோக்

அந்த ஆசிரியர் கண்டிப்புக்குப் பேர் போனவர். வகுப்புக்குள் நுழைந்தார். வழக்கமாக அவரைக் கண்டதும் மிரட்சியில் முழுசிக்கொண்டிருக்கும் மாணவ, மாணவிகள் அன்று அவரைப் பார்த்ததும் ஒரு நக்கல் சிரிப்பை உதிர்த்தார்கள். ஆசிரியருக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"ஒருவரும் சிரிக்காதீர்கள்!" என்று கண்டிப்புடன் கூறிவிட்டு தன்னுடைய பாட்டில் மாணவர்களுக்கு முதுகுப்புறத்தைக் காட்டிக்கொண்டு கரும்பலகையில் பாடத்தை எழுதத்தொடங்கினார். எழுதிக்கொண்டிருந்தவர் இடையில் பாடம் எடுப்பதற்காக மாணவர் பக்கம் திரும்பினார். இப்போது மீண்டும் மாணவர் முகத்தில் சிறிய நக்கலுடன் கூடிய சிரிப்பு. திரும்பவும் ஆசிரியர் சீறினார்.

"சிரிக்காதைங்கோ! சிரிச்சாப் பிடிச்சு வெளியில விட்டிடுவன்"

வழக்கமாக ஆசிரியரின் மிரட்டலுக்கு பயப்படும் மாணவர்கள் 'இந்தப் பிடிச்சு வெளிய விட்டிடுவன்' என்ற மிரட்டலுக்கு ஒருபுறம் பயத்தோடு மறுபுறத்தில் நக்கல் சிரிப்பைத் தொடர்ந்தனர். ஆசிரியர் சடாரென கரும்பலகைப்பக்கம் திரும்பி எழுதுவதுபோல் பாவனை பண்ணிக் கொண்டு சிந்திக்கலானார்.

அப்போதுதான், சற்றுமுன்னர் இயற்கைக் கடன் கழிக்க மலசலகூடத்துக்குப் போய்விட்டு 'டிரவுஸர் ஸிப்' பூட்டாமல் வந்தது ஆசிரியருக்குப் புரிந்தது. தனது மிரட்டலுக்கு மாணவர்கள் ஏன் சிரித்தார்கள் என்பது விளங்க ஆசிரியரின் முகத்தில் அசடு வழிந்தது.

(யாழ்.ஆசிரியர் ஒருவரின் உண்மை அனுபவம் இது.)

# ஆண் ~ பெண் பேதம் பேய்களிலும் உண்டா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலைப் பாடுவோம்!

காதலி செய்யும் லீலை
பாடுதல் எந்தன் வேலை
ஆதலின் நெஞ்சம் ஓலை
ஆக்கினேன் இந்தப் பாவை
சாதனை தந்தாள் பாவை
சாத்தினேன் பாவில் மாலை
சாதலின் போதும் வாழும்
சாட்சியாய் நெஞ்சில் நீளும்

வாலையே பாட சாலை
வார்த்தனல் காமப் பாலை
பாலியல் இன்பப் போதை
பார்வையிற் தந்தாள் பேதை
வாலிபங் கூறும் காதல்
வாழ்வினைச் சொன்னாள் ராதை
போலிகள் பொய்கள் இல்லை
போற்றுவேன் நெஞ்சத்துள்ளே

நூலினைப் பாடும் போதும்
நினைவுகள் நெஞ்சில் நீளும்
நூலிடை போலும் மேனி
நுதலிடை வந்தே தோணும்
பாலினை ஒக்குஞ் சாயல்
பார்வையிற் பேசும் காதல்
காலனை வெல்லும் வீரம்
காட்சியில் வாழும் வாழும்

- த.இந்திரா -

## என்றும் நமக்குத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறைவனிடம் பிரார்த்தனை செய்வது பயன்தரும்.

இந்தப் பூமியில் ஒவ்வொரு துன்பத்திற்கும் மருந்து உண்டு, அல்லது இல்லை, இருக்கும் மருந்தைக் கண்டு பிடி, இல்லை என்றால் பொருட்படுத்தாதே.

கில்பர்ட், சல்லிவன் ஆகியோர் இருவரும் மிகச்சிறந்த இசை அமைப்பாளர்கள். இவர்களின் இசைக்கச்சேரிகளில் உலகம் முழுவதும் மகிழ்ச்சி அடைந்தது.

ஆனால் இவர்களின் சொந்த வாழ்க்கையில் அமைதி இல்லை. தங்கள் மேடை நிகழ்ச்சிக்காக சல்லிவன் ஒரு தரைவிரிப்பு வாங்கினார். அதன் பட்டியலைப் பார்த்த கில்பர்ட், "இவ்வளவு விலையா?" என்று துள்ளிக் குதித்தார். இவர்களின் சண்டை நீதிமன்றம்வரை சென்றது. ஆயுட்காலம் முழுவதும் அவர்கள் பேசிக்கொள்ளவில்லை.

ஒரு சமயம் கில்பர்ட் புதிய தயாரிப்பிற்காக மெட்டு அமைத்து சல்லிவனுக்குத் தபாலில் அனுப்பினார். கில்பர்ட், பாட்டெழுதி, தபாலில் அனுப்பினார். நிகழ்ச்சித் துவக்கத்தில் திரை உயர்த்தப்பட்டபோது, இருவரும் ஆளுக்கொரு திசையில் நின்று சபையோரை வணங்கினார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவே இல்லை.

மக்களுக்கெல்லாம் உற்சாகமும் ஆனந்தமும்தரும் இசைக் கலைஞர்கள் இவ்வாறு பகைமை பாராட்டியது சரியா?

சற்று விட்டுக் கொடுத்து, மனம் விட்டுப் பேசி இருந்தால் அவர்கள் இழந்த மகிழ்ச்சி மீண்டிருக்குமே?

**நன்றி:**
**ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம்**

# விடைகள்

IX ஆம் பக்கத்தில் 'சிறுவர் சுடர்' பகுதியில் பிரசுரமாகியுள்ள புதிர்களுக்கான விடைகள் வருமாறு.

### வித்தியாசங்கள் தெரிகின்றதா?

1. சூரியனின் மீசை.
2. குடைக்கு மேல் வியர்வைத்துளி ஒன்று
3. பையனின் காற்சட்டை.
4. செருப்பு.
5. சட்டைக்கழுத்து.

### எத்தனை பேர்?

உங்களின் இடதுபுறம் நோக்கி ஏழு பேரும், வலதுபுறம் நோக்கி ஐந்து பேரும் பார்த்துக்கொண்டு இருக்கின்றார்கள். (படத்தின் வலது புற மேல் மூலையில் இருக்கும் நபருக்கு இலக்கமிடப்படவில்லை என்பதைக் கவனிக்கவும்.)

## பகிடிவதையை வரவே...

(XVIஆம் பக்கத் தொடர்ச்சி)


மாணவரை அடக்கியாளப் போவதாக சூளுரைத்திருக்கிறாரே? சமூகச் சீர்கேடுகளைத் திருத்துவது நன்று.அத்துடன் உங்கள் பிள்ளைகளையும் அறிவுறுத்துங்கள். ஓர் உற்ற நண்பனால் திருத்தமுடியாத மாணவனையும் ஓர் அன்பான பெற்றோரினால் திருத்த முடியும். ஏனெனில்அவன் தனது இளம்பிராயத்தை (teenage) கடந்துவிட்டான்.

சட்டத்தால் அடக்குவதைவிட மாணவர், பெற்றோர், சமூகம் யாவரும் உணர்ந்து தாமாகவே ஒத்துழைப்பார்களேயானால் பகிடிவதைப் பாதகம் படிப்படியாக மெலிந்து இறப்பது சித்தம். கொழும்பு மருத்துவபீடம் மற்றும் விஞ்ஞான பீடத்திலும் பேராதனைப் பல்கலைக்கழகத்திலுமுள்ள சில மாணவர்களும் மொறட்டுவைப் பல்கலைக்கழக மாணவர்களும் அந்தப் பல்கலைக்கழகத்தில் 1991இல் ஸ்தாபித்த - இன்றும் வெற்றியுடன் வீறு நடைபோடுகின்ற - பகிடிவதை எதிர்ப்பு அணியினரும் (Anti Raggers) இம் முயற்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள். தன்கையே தனக்குதவி!

**செயலாளர்,**
பகிடிவதை எதிர்ப்பு இயக்கம்,
கொழும்பு.

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல. 115



### சொற்சிலம்பம் இல. 115

சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..........................................................................

விலாசம்: ......................................................................

..........................................................................

..............................இங்கே வெட்டுக..............................

முடிவுத் திகதி:- 20-08-1999

### இடமிருந்து வலம்

1. அருச்சுனனின் மகன். 5. எந்நேரமும். 7. நூல். 8. முகம். 10.சிரார்த்தம். 11. கூட. 12. நீண்டகால அளவு. 15. அவசர நெருக்கடியில் உதவுபவன். 16. காதலனின் விருப்புக்கு உரியவள். 17. நீர்த்தன்மையுள்ள. 18. பிடிப்பது. 20. பன்மைத் தன்மையைக் குறிக்கும் சொல்:21.துணைவனை இழந்த நிலைமை. 22. தள்ளிப்போகும்.

### மேலிருந்து கீழ்

1. களைப்பால் வருவது. 2. கைம்மாறு. 3. குளம். 4. இளம் பெண். 5. மக்கள். 6. தாங்கள். 9. சிதறுதல். 11. பாண்டுவின் தாய்: அம்மன். 13. சப்தமிட. 14. சுயநலம். 17. கொடை. 19. இரண்டு. 20. பிரி.

### சொற்சிலம்பம் 113 இன் விடைகள

### இடமிருந்து வலம்

1. சதுப்பு. 4. கத்தி. 6. கட. 7. ரகளை 9. திக்குதல். 11. கவி. 12. குணம். 13. மாணிட. 15. காந்தம். 16. வசதிசெய்தல். 19. மரி. 21. திகைத்தல். 22. கறை.

### மேலிருந்து கீழ்

1. சகதி. 2. துடக்கு. 3. புரதம். 4. களை. 5. திராவிடம். 8. கல். 10. குணநிதி. 11. கனிதல். 13. மாந்தர். 14. அவமதி. 15. காய். 17. சரிகை. 18. செய்த. 20. பறை.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்ட சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகள் வருமாறு:-

**முதலாம் பரிசு** :- திருமதி பி.பேரின்பநாயகம்,
6/2 மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு** :- செல்வி மகாதேவன் சுதா,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

**மூன்றாம் பரிசு** :- வை.சரவணமுத்து,
213,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

புதிர்ப்போட்டிக்கு விடைகள் அனுப்பும்போது கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தை தவறாது குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் - சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்துகொள்ள முடியாது.

| | |
|---|---|
| முதற் பரிசு: | ரூபா 150.00 |
| இரண்டாம் பரிசு: | ரூபா 100.00 |
| மூன்றாம் பரிசு: | ரூபா 50.00 |

புதிர்ப்போட்டி இலக்கம் 114 இன் முடிவுகள் அடுத்தவார சஞ்சீவியில் வெளிவரும்.

# நவீன கிளைமோர்....

( II ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீதியோரக் கட்டங்கள் மீது பாதுகாப்புத் தரப்பினரின் கவனம் திரும்பி உள்ளது. ஆனால் வீதி நெடுகிலும் உள்ள கட்டடங்களைத் தினமும் சோதிப்பதோ கண்காணிப்பதோ இயலாத காரியம். இந்த நிலையில் புலிகள் தமது அடுத்த கிளைமோரை கூரைக்குள்தான் பொருத்துவார்கள் என நினைப்பதும் முட்டாள்தனம். ஏற்கனவே அங்கு பல சைக்கிள் குண்டுகள் வெடித்துள்ளன. எனவே கிழக்கில் புலிகள் ஆரம்பித்திருக்கும் இந்த நகர்புறத் தாக்குதல்கள் பாதுகாப்புத் தரப்புக்கு நெருக்கடியை ஏற்படுத்டுவதாகவே இருக்கும். மாற்றுப் பாதுகாப்புத் திட்டங்கள் அவசியம். ஆனால் அதை எவ்வாறு வகுப்பது என்பதே சிக்கல்.

### அனுருத்த கூட்டிய இரகசிய மாநாடு

கிழக்கில் குறிப்பாக மட்டக்களப்பில் நகரப்பகுதியில் தங்கள் தாக்குதல்களை புலிகள் அதிகரிப்பது ஏன்?

மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைக் கைப்பற்றும் நோக்கில் படை நகர்வுகளை ஆரம்பிப்பதற்கு திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன.

பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கடந்தவாரம் தனது பரிவாரங்களுடன் திடீரென மட்டக்களப்புக்கு விஜயம் செய்து அங்குள்ள இராணுவத் தலைமையகத்தில் மாநாடு ஒன்றை நடத்தினார்.

மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைவரம், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக சுமார் நான்கு மணித்தியாலங்கள் மந்திராலோசனை நடைபெற்றிருக்கின்றது. உள்ளூர் பிரதேச படைஅதிகாரிகள் தமது பகுதி பாதுகாப்பு நிலைவரங்களை அமைச்சருக்கு விளக்கியுள்ளனர். அதேவேளை புலிகளின் பகுதிகளுக்குள் நகர்வுகளை ஆரம்பிப்பதற்காக படையினரை ஒன்று திரட்டுவது குறித்தே அந்த மாநாட்டில் இரகசியமாக ஆராயப்பட்டிருக்கிறது.

அமைச்சர் அனுருத்த கிழக்குப் பகுதிக்கு அடிக்கடி விஜயம் செய்வதில்லை. அண்மைக்காலத்தில் அவர் அங்கு மேற்கொண்ட முதல் விஜயம் என்பதால் அவரது இந்த வருகையைத் தொடர்ந்து பல்வேறு ஊகங்கள் எழுந்தன.

எனினும் புலிகளின் பகுதிகளுக்குள் புதிய நகர்வுகள் விரைவிலேயே இடம்பெறப்போகின்றன என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

புலிகளும் அதனை எதிர்பார்த்து தக்க ஆயத்தங்களை மேற்கொள்ளத் தொடங்கிவிட்டனர்.

புலிகளைத் திசை திருப்புவதற்காக சில முனைகளில் படைக்குவிப்பும், ஆயுத தளபாட இறக்கமும் செய்யப்பட்டிருக்கின்றன. முகாம்களை அமைப்பதற்கான தளபாடங்கள் மற்றும் பொருள்கள் வாகரை முகாமுக்கு அருகே இறக்கப்பட்டிருக்கின்றன.

இந்த் முனையூடாகத்தான் படையினர் நகர்வு இடம்பெறும் எனப் புலிகள் எதிர்பார்க்கவில்லை.

மட்டக்களப்பு - பதுளை வீதி, செங்கலடி, பட்டிருப்பு, கிரான், பெரிய புல்லுமலை, படுவான்கரை, வவுணதீவு, எனப் பல முனைகளிலும் தங்கள் நிலைகளைப் புலிகள் பலப்படுத்தியுள்ளனர்.

மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிராமப்புறங்களைக் கைப்பற்ற படைத்தரப்பு திட்டம் தீட்டிக்கொண்டிருக்க புலிகள் நகர்ப்புறத்தில் தங்கள் தாக்குதல்களைத் தீவிரமாக்கி உள்ளனர்.

கிளைமோர் மற்றும் குண்டுத் தாக்குதல்கள் மூலம் நகரில் பாதுகாப்பு நெருக்கடியை ஏற்படுத்துவது புலிகளின் நோக்கம். புதிய நகர்வுக்காக படையினரை ஒன்று திரட்டுவதை சிக்கலுக்குள்ளாக்க புலிகள் முயற்சிக்கின்றனர்.

இந்த நகர்ப்புறத் தாக்குதல்கள் வாகன அணிகளை நோக்கி நடத்தப்படுவதால் மாவட்டத்தின் சிவில் அதிகாரிகள் கூட வாகனங்களில் செல்ல அஞ்சுகின்றனர்.

கிழக்கின் பாதுகாப்புத் தொடர்பாக ஜெனரல் ரத்வத்தையும் மூத்த படை அதிகாரிகளும் கூடி ஆராய்ந்த சில நாள்களுக்குள்ளேயே வாகரை முகாமின் உதவிக்கட்டளை அதிகாரி தற்கொலைக் குண்டுக்கு இரையானார். புலிகளுக்கு எதிராக புதிய தாக்குதல்களை திட்டமிட்டு வரும் தருணத்தில் மேஜர் கருணாநாயக்காவின் மரணம் கிழக்குப் பாதுகாப்புத் தரப்பினருக்கு பலத்த பின்னடைவாக அமைந்து விட்டது. மட்டக்களப்பில் குறிப்பாக வாகரையில் புலிகளை ஒடுக்குவதில் நீண்ட காலம் முன்னின்று செயற்பட்டவர் அவர். பொதுமக்கள் மத்தியில் நன்கு பரீச்சயம் மிக்கவராகவும் விளங்கிய கருணாநாயக்கா புலிகளின் தாக்குதல் பட்டியலிலும் முன்னணியில் இருந்தார்.

கடந்த திங்களன்று வழமைபோல் சக படையினருடன் முகாமின் ஒரு பகுதியில் அமர்ந்தவாறு உரையாடிக் கொண்டிருந்த சமயம் தற்கொலைக் குண்டுதாரி அவரை நெருங்கி குண்டை வெடிக்க வைத்துள்ளார்.

### தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோரல்

இந்தத் தற்கொலைத் தாக்குதலுக்கு புலிகள் உரிமை கோரியுள்ளனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த மேஜர் ரட்ணாகரன் என்ற போராளியே இத் தாக்குதலை வெற்றிகரமாக நடத்தி வீரச்சாவடைந்ததாக புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

இது அண்மைக்காலத்தில் கிழக்கில் புலிகள் உரிமைகோரிய இரண்டாவது தற்கொலைத் தாக்குதல் ஆகும்.

கடந்த மே மாதம் ராஸிக் குழுவின் பொறுப்பாளர் ராஸிக் மீது மட்டக்களப்பில் நடத்தப்பட்ட கரும்புலித் தாக்குதலையும் தாங்களே நடத்தியதாகப் புலிகள் உரிமைகோரியிருந்தனர்.

வாகரை முகாம் படை அதிகாரியைக் கொல்வதற்கான திட்டத்தை கடந்த மூன்று மாதகாலத்திற்கு முன்னரே புலிகள் தீட்டியிருந்தனர். பலத்த பாதுகாப்பு வேலிக்குள் அமைந்துள்ள வாகரை முகாமுக்கு அருகே வாகரை மத்தி பல.நோ.கூ. சங்கத்தின் கிளை ஒன்று இயங்குகிறது. இந்தக் கிளையில் மாதத்தில் ஒரு தடவை சமுர்த்தி உலர் உணவு நிவாரணம் விநியோகிக்கப்படுவது வழக்கம். புலிகளின் பகுதியிலிருந்துவரும் பெரும் எண்ணிக்கையான மக்கள், தமக்குரிய உலர்உணவுப் பொருள்களை இக் கிளையிலேயே பெற்றுக்கொள்வர். மேஜர் கருணாநயக்கா இந்த உலர் உணவு நிவாரண விநியோகத்தை மேற்பார்வை செய்வது வழக்கம்.

தற்கொலைத் தாக்குதல் நடத்திய புலிஉறுப்பினர் நிவாரணம் பெறும் சாக்கில் பல தடவைகள் அப்பகுதிக்கு வந்து அவரது நடமாட்டங்களை நன்கு அவதானித்துள்ளார். நிவாரண விநியோகம் இடம்பெறும் தினத்தன்று முகாமினுள் குண்டுடன் பிரவேசிப்பதற்குத் திட்டம் தீட்டப்பட்டது. அதன்படி கடந்த திங்களன்று தாக்குதலை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கின்றனர் புலிகள். இச்சம்பவம் தொடர்பாக உயர்மட்ட விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன. இத்தாக்குதலை நடத்த புலிகளுக்கு உதவியதாகச் சந்தேகத்தின்பேரில் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைமுகாமையாளர் உட்பட ஆறு பேரை படையினர் கைதுசெய்து விசாரித்து வருகின்றனர்.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'உதயன்' - வெகுஜனத் தொடர்பு சாதனமல்ல

# அது பெரிய குழுத் தொடர்பு சாதனம் மட்டுமே!

'கரைவையூர் செல்வம்' என கலை, இலக்கியத்துறையில் அறியப்படும் அருட்திரு.சா.ம.செல்வரட்ணம் 'புதிய உலகம்' பத்திரிகை மற்றும் வானொலி வாயிலாக அறியப்பட்டவர். உளத்துணைத் துறையில் ஈடுபட்டு தற்போது பல நாடுகளிலும் சென்று பணியாற்றிவரும் அவர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்தபோது 'ஆத்மா' சஞ்சிகைக்காக பேட்டி ஒன்று அளித்திருந்தார். அந்தப்பேட்டியில 'உதயன்' குறித்தும் அவர் பிரஸ்தாபித்திருந்தார். அவை இங்கு 'உங்கள் உள்ளத்திலிருந்து' பகுதியில் பிரசுரமாகின்றன.

*** நீங்கள் தொடர்பூடகத் துறையில் இருந்து உளத்துணைத்துறைக்கு மாறிய பின்பு பின்னையதே அதிகம் பயனுள்ளது என்றவாறாக உணர்ந்ததாகச் சொல்லப்படுவது பற்றி......?**

பின்னையதும் ஒரு தொடர்பூடகமே. முன்னையது 'மாஸ் மீடியா'(Mass Media) என்று சொன்னால் பின்னையது ஒரு 'குறூப் மீடியா' (Group Media) அது வெகுஜனத் தொடர்பு; இது சிறுகுழுத்தொடர்பு. வெகுஜனத்தொடர்பில் ஈடுபடுவது என்று சொன்னால் அதில் முழுமையாக ஈடுபடவேண்டும். ஒரு வீடியோவைச் செய்து விட்டு அதை 'மாஸ்மீடியா' என்று சொல்ல முடியாது. 'மாஸ்மீடியா' என்றால் திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டும். அப்போதுதான் மக்களின் மனமமாறும். தமிழில் ஒரு பழமொழி இருக்கிறது. 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்று. அதுதான் மாஸ்மீடியாவின் தாக்கம ஆகும். அந்தப் பலமும் எங்களிடம் இல்லை. 'மீடியாவும்' எங்களிடம் இல்லை.

ஆனால் 'குறூப் மீடியா' வெற்றியளிக்கிறது. ஏனென்றால் நாலு அல்லது ஐந்து பேர் சேர்ந்து வந்து ஒருவரோ்டு ஒருவர் கலந்துரையாடுகிற போது,கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கிறபோது, ஐந்து பேர் செய்தியைச் சொல்ல ஐந்து பேர் பெறுகிறார்கள். ஒருவர் பகிர்தலில் ஈடுபட்டுத் தன் சொந்த வளர்ச்சியை பெறும்போது ஏனையோருக்கு உறுதிப்பாடு (Conviction) கிடைக்கிறது. ஐந்துபேர் கொண்ட குழுவுக்கு இது சாத்தியம். ஆனால் ஐயாயிரம் பேர் கொண்ட குழுவுக்கு இது சாத்தியமில்லை. ஆனால் அந்தப் பெரிய குழுவுக்கு நாடகம்மூலம், பத்திரிகைமூலம், தொலைக்காட்சிமூலம் ஒரே விடயத்தை திருப்பித் திருப்பிச் சொன்னால் அப்போது அது நம்பும்.

*** அப்படி என்று சொன்னால் 'மாஸ் மீடியா' நிறையப் பயன் தரும் என்று சொல்கிறீர்கள்....?**

நல்ல பயன் தரும். அதற்குரிய பிரமாண்டத் தன்மையோடு அதை நடத்துவதற்கு நம்மிடம் சக்தி இருந்தால்.

*** யாழ்ப்பாணத்தில் இன்று இயங்கும் 'மாஸ்மீடியா' பற்றி....?**

யாழ்ப்பாணதில் 'மாஸ்மீடியா' இல்லை என்றுதான் நான் சொல்லுவேன்.

*** அப்ப யாழ்ப்பாணத்தில் எப்ப 'மாஸ் மீடியா' இருந்ததென்று சொல்வீர்களா?**

யாழ்ப்பாண 'மாஸ்மீடியா' என்று எப்பவும் இருக்கவில்லை: எல்லாம் இலங்கை 'மீடியா' தான்; இலங்கைப 'பேப்பர்'தான் இங்க வந்தது. இலங்கை வானொலிதான் இங்கு கேட்கப்படுகிறது. இலங்கை அல்லது இந்தியத் தொலைக்காட்சிதான் இங்கு பார்க்கப்படுகிறது. சிலவேளை புலிகள் காலத்தில் ஓரளவிற்கு இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது இல்லை.

*** அப்படியென்றால் 'உதயன்' போன்ற பத்திரிகைகள்?**

'மாஸ்மீடியா'வின் தாக்கத்தை ஏற்படுத்த அது பாரிய அளவில் விற்பனை ஆகவேண்டும். ஆனால் உள்நாட்டுப் பத்திரிகைகள் இத்தகைய விற்பனைப்பரப்பைக் கொண்டிருப்பதில்லை. மற்றையது 'மாஸ்மீடியா' எப்பொழுதும் 'மல்டி மீடியா' (பல சாதனங்கள்). 'பேப்பரில்' படித்ததை "ரெலிவிசனில்' பார்க்க வேண்டும். அதையே ரேடியோவில் கேட்கவேண்டும். அப்பொழுதுதான் 'மாஸ்மீடியா'வின் தாக்கம் உணரப்படும். எமது குடா நாட்டுப் பத்தரிகைகளை ஒரு பெரிய குழுச் சாதனம் என்றுதான் குறிப்பிடலாம். 'குறூப் மீடியா' - குடாநாட்டுக் 'குறூப்'.

இன்று தினமுரசு, வீரகேசரி போன்ற பத்திரிகைகள்த்தான் ஓரளவிற்கு 'மாஸ்மீடியா' விற்கு உரிய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியவகையில் தமிழில் வெளிவருகின்றன.

*** ஆனால் இன்று இத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய சாதனங்கள், மக்களுக்குத் தேவையானதை - பயன் தருவதை - கொடுப்பதாகத் தெரியவில்லையே?**

ஆம். அது உண்மைதான். ஆனால் நான் 'மீடியா'வின் தாக்கத்தைப் பற்றித்தான் கூறுகின்றேன். தமிழ் நாட்டுச் சினிமாவை எடுத்துக் கொள்ளுங்கள் பெரும்பாலும் சினிமா நட்சத்திரங்கள்தான் அரசியல் தலைவர்களாக வருகிறார்கள். அவர்கள் தனிப்பட்ட வாழ்க்கையினால் வருவதில்லை. 'மீடியாவின்' சக்தியால்தான் வருகிறார்கள். இதுதான் வெகுஜனத் தொடர்பு சாதனத்தின் சக்தி.

*** இந்த மீடியாவின் சக்தியை நாங்கள் எவ்வாறு சமூகத்திற்கு பயன் தரும் விதத்தில் திருப்பலாம்?**

அதற்கு நீங்கள் சக்தி வாய்ந்த Counter Media (எதிர் தொடர்புசாதனம்) வைத்திருக்க வேண்டும். அதாவது சக்திவாய்ந்த தொடர்பு சாதனங்கள் ஊடாக பல முனைகளில் நல்ல விடயங்களை கொடுக்க உங்களால் கூடுமானதாக இருக்க வேண்டும். ஆனால் இதற்கு பெரும் சக்தி, பணம் தேவை. அந்த வசதிகள் இல்லை என்று சொன்னால் 'குறூப்மீடியா' (சிறு குழுத் தொடர்பு)தான் ஒரே வழி. சிறுசிறு குழுக்களில் நம்பிக்கைகளை, கருத்துக்களை பகிர்ந்து கொண்டு அவற்றை ஒருவருக்கொருவர் தொற்ற வைப்பது. இதுவும் ஒரு சக்தி வாய்ந்த ஊடகமே.

---

## பகிடிவதையை வரவேற்கும் பல்கலை மாணவருக்கு....!

இந்தக்கடிதத்தை வரைந்த மாணவர் கொழும்பிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் பயிலும் தமிழ் இளைஞர். கொழும்பில் 'பகிடிவதை (ராகிங்) எதிர்ப்பு இயக்கம்' என்ற அமைப்பில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி, வருடாவருடம் அங்குவரும் புதிய மாணவர்களில் பகிடிவதைக்கு உட்பட விரும்பாத மாணவர்களை அச்சிக்கலில் இருந்து காப்பாற்றி, உதவி புரிந்து வருபவர். ஏனைய பல்கலைக்கழகங்களில் பகிடிவதையை எதிர்க்கும் மாணவர்களுடன் தொடர்பு வைத்து அமைப்பு ரீதியாக செயற்பட முயன்று வரும் அணியைச் சேர்ந்தவர். அத்தோடு சஞ்சீவி வாசகரான அவர் கொழும்பில் இருப்பதால் சஞ்சீவி இதழ்கள் தமக்கு தாமதமாகவே கிடைப்பதாகத் தெரிவிக்கின்றார். அதனால் தான் எழுப்பும் சர்ச்சையை பழைய விடயங்களை கிளறுவதாகக் கொள்ளாமல் முக்கியத்துவம் கொடுக்கும்படியும் வேண்டுகிறார். உண்மையில் பல்கலைக்கழகம் ஒன்றில் பகிடிவதை என்னும் நாடகம் எவ்வாறு அரங்கேறுகிறது என்பதை விவரமாக - தொடராக எழுதுவது அவரது அவா. அதில் அவர் முழுமூச்சில் ஈடுபட்டால் பல்கலைக்கழக புது முக மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் சஞ்சீவி வாசகர்கள் அனைவருக்குமே சுவையான அனுபவம் கிட்டும் என்று எதிர்பார்க்கலாம்! (ஆ-ர்)

பகிடிவதைக்கு வரைவிலக்கணம் தெரியாத அப்பாவிப் பல்கலைக்கழக மாணவர்க்கு, யானும் ஒரு மூத்த பல்கலைக்கழக மாணவன் என்ற வகையில் உங்களுக்கு ஓர் அறிவுறுத்தலாகவும், உங்கள் மடல்களைக் கண்டு குழம்பிப் போயிருக்கும் எம் தாய்நாட்டுச் சமூகத்தை விழிப்படையச்செய்யவும் நோக்கம் கொண்டு இம் மடலை வரைகின்றேன்.

'உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளை பல்கலைக்கழகத்துடன் ஒப்பிடுவதா?' என 'இவன்' எனும் புனைபெயருக்குரியவர் எழுதும் போது தனது நிலையைத்தானே மறந்து, நீதிமன்றில் வழக்காடும் வக்கீல்கள் போன்று போலியான ஒரு விதண்டாவாதத்தை சமூகம் என்ற பார்வையாளர்முன் பத்திரிகை என்ற நீதிபதி மூலம் நியாயப்படுத்த முயன்றார்.

மது அருந்துபவர் போதையில் தாம் செய்யும் பிழைகளை ஒத்துக் கொள்வதுமில்லை; சுவை கண்ட மதுவை விடுவதுமில்லை. மாறாக தாம் செய்வது சரியென்று நியாயப்படுத்தவே முனைவர். இந்நிலையிலேயே யாழ். பல்கலைக்கழக 'இவன்' உள்ளார். அவருக்குப் பதில் எழுதிய கொக்குவில் பா.சுதன் "புளித்த தத்துவம் பேசும் புத்திஜீவிகள்" எனும் தலைப்பில், நிதர்சனமான உண்மைகள் பலவற்றை வெளிப்படுத்தியிருந்தார். அவருடைய மடல் புளங்காகிதத்தை தந்தபோதும், ஒரு பல்கலைக்கழக மாணவன் தெரிந்து வைக்காத உண்மையை எவ்வாறு சமூகம் உணர்ந்து நடக்கின்றது என்று நினைத்து கவலை கொள்ளவும் செய்தது. ஆனால் 'இவன்' எழுதியது போல் உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளை பல்கலைக்கழகத்துடன் ஒப்பிடமுடியாதுதான். ஏனெனில் இப்பத்திரிகையே விவரிப்பது போல் நாயிலும் கேவலமாக பகிடிவதைபுரியும் இந்தப் புத்திஜீவிகளை சமூகத்திற்கு விழிப்புணர்வூட்டும் குடாநாட்டின் தனித்துவமான பத்திரிகையுடன் எவ்வாறு ஒப்பிடலாம்? தொடர்ச்சியாக 15.05.1999 சஞ்சீவியில் எஸ்.பிரபாகர் என்ற முகாமைத்துவ மாணவனும், யாழ். பல்கலைக்கழக 'இவள்' என்ற புனை பெயருக்குரியவரும், சுதனின் மடலையிட்டு மறுதலிப்பது யாவும் இவர்களின் உள்ளத்தில் உறைந்திருக்கும் தாழ்வு மனப்பான்மையை துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன.

'பகிடிவதை என்பது ஒருவிதமான மனநோய்! அதுவும் ஒருவகை தொற்றுநோய்!' இதை நான் கூறவில்லை. மொறட்டுவ பல்கலைக்கழகப் பொறியியல்பீட முன்னாள் பீடாதிபதியும் தற்போது குடிசார் எந்திரவியல் (Civil Engineering) பிரிவில் சிரேஷ்ட விரிவுரையாளருமாகவுள்ள போராசிரியர் செனரத் (இவர் Civil Engineering, Psychology இரண்டிலும் டாக்டர் (Ph.D.) பட்டம் பெற்றவர்) தனது மனோதத்துவவியல் உயர் கல்வியின் பின், 1990 இலிருந்து 1993 வரை பல புதிய மற்றும் மூத்தமாணவர்களை நேரில் கண்டு கதைத்தும் உளவியல் பரிசோதனைக்குட்படுத்தியும் செய்த ஆராய்ச்சியின் முடிவாகும்.

இப்பேராசிரியர் 1993 ஜூலை மாதம் வெளிவந்த 'ஞாயிறு தி ஐலண்ட்' (Sunday The Island) பத்திகையில் தொடர்ச்சியாக தன் முடிவுகளை கட்டுரையாக வடித்திருந்தார். எனவே மனநோய் உள்ளவர்களை மாத்திரையால் மாற்றமுடியாது. இவர்களுக்கு உளவியல் சிகிச்சை மட்டுமே அளிக்கமுடியும். அத்துடன் அவர்கள் தமது நோயை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். இதன் முக்கிய அறிகுறி தாழ்வு மனப்பான்மை. வேறு வழிகளில் பிரகாசிக்கவோ அல்லது தமது திறமையை வெளிப்படுத்தவோ முடியாதவர்கள் இத் தாழ்வு மனப்பான்மை (Inferiority Complex) காரணமாக அடாவடியான பகிடிவதையில் ஈடுபட்டு புதிய மாணவர்களை அடிமைப்படுத்தி அக்கணத்தில் தாம் உயர்ந்தோர் என நினைத்து திருப்தியடைகின்றனர்.

வரலாறு தெரியாத எஸ்.பிரபாகருக்கு...'rag' என்ற சொல்லை பழைய அகராதியில் புரட்டிப் பார்க்க! "பழய துணி" என்பது மட்டுமே அதன் பொருள். இன்றைய அகராதிகளில் மேலதிகமாக "வேடிக்கையாக புதியவர்களை வரவேற்றல்" என்ற அர்த்தமும் இருக்கும். "ragging" என்ற சொல்லின் உண்மை அர்த்தம் புதிய ஒக்ஸ்போர்ட் அகராதியில் (New Oxford Dictionary) 'விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர் வருட முடிவில் தமது பழய உடைகளை விற்று அப்பணத்தில் புதியமாணவர்க்கு வைக்கும் வரவேற்புபசாரம்' என்று தெளிவாக விளக்கம் தரப்பட்டுள்ளது. 'பகிடிவதை' என்பது பிற்காலத்தில் கீழைத்தேய நாடுகளில் ragging சித்திரவதையாக மாற்றம் பெற்றதனால் அதனுடன் ஒப்பிட்டுத் தமிழில் பிறந்த பதமாகும் சரி! சரி! மூத்த மாணவர்க்கு 'பகிடி'. புதிய மாணவர்க்கு 'வதை': பகிடிவதை! எமது சமூகத்தில் எவ்வாறு 'கற்பழிப்பு' எனும் பதம் நீக்கப்பட்டு 'பாலியல்வல்லுறவு' எனும் பதம் புகுத்தப்படுகிறதோ அதே போல் 'பகிடிவதை' எனும் தப்பான பதமும் நீக்கப்படவேண்டும். வெளிநபர் என்பதால் பா. சுதனை மட்டம் தட்டுகிறீர்கள். நான் ஓர் பல்கலைக்கழக மூத்த மாணவன் என்ற வகையில் கூறுகிறேன். ஏற்றுக் கொள்வீர்களா? சுதன் குறிப்பிட்டபடி மெத்தப்படித்தவர் என்பதால்தான் சமூகம் நம்பும் என்று பிதற்றுகிறீர்கள் குடாநாட்டில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஒவ்வோர் ஊர்களிலும் கிடைக்கும் போலி மரியாதையை பயன்படுத்தி மாணவரை ஏமாற்ற முயலாதீர்கள். வெளியிலிருந்து நோக்குபவர்கள் உங்களை விட அறிவு கூடியவர்களே மற்றும் 'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக்கழகத்தில் நடப்பது பற்றி சுதனுக்குத் தெரியாதென்றால் பிரபாகருக்கு எப்படித் தெரியும்? நானும் இங்கிலாந்திற்கு சுற்றுலா நிமித்தம் சென்றபொது 'ஒக்ஸ்போர்ட்' பல்கலைக்கழகத்திற்கு சென்று வந்துள்ளேன். எனது நண்பர்கள் பலரும் மேலும் பல பழக்கமான இளைய மாணவர்களும் அங்கு சென்று இன்னும் என்னுடன் தொடர்பு வைத்திருக்கிறார்கள். அங்கு நடப்பது 'பகிடிவதை' அல்ல. நான் முன்னர் கூறிய ragging என்னும் வரவேற்புபசாரம் புதிய மாணவர்களை சூழலுக்குத் தயார்படுத்துவதை Orientation Programme என்று அழைக்கிறார்கள் இது உலகத்திலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களிலும் முதல் ஒன்று அல்லது இரண்டு வாரங்களுக்கு நடைபெறுகிறது. அதாகப்பட்டது மூத்த மாணவருடன் சேர்ந்து தீய - வக்கிர - ஆபாசப்பழக்கங்களை பழகுவதல்ல. விரிவுரையாளருடன் கதைத்துப் பழகவும், ஆய்வுகூடங்களைக் கையாளவும், பல்கலைக்கழகத்திலுள்ள கல்வித் துறைகளைப்பற்றி விளக்கமளிப்பதையும் கொண்டதே Orientation Programme. சிரேஷ்ட மாணவர்களைச் சந்தித்து உரையாடுவதற்கு 'ஒன்று

## உங்கள் உள்ளத்திலிருந்து

கூடல்' (get together) வைக்கிறர்கள். ஒருவரை ஒருவர் உபசரித்து கலந்து, உண்டு, பாடி,ஆடி, மகிழ்வதே இந்த ஒன்றுகூடல். உண்மையான தோழமையுணர்வு மூத்தமாணவர் புதியமாணவருடன் காட்டும் மரியாதையிலும் அன்பிலும்தான் ஊற்றெடுக்கிறது. பகிடிவதையால் அல்ல! இலங்கைப் பல்கலைக்கழகங்களில் ஆங்கிலேயர் அறிமுகம் செய்து வைத்தது நீங்கள் எதிர்பார்க்கும் கொடூரப் பகிடிவதையல்ல. நான் முன்பு குறிபிட்ட ragging எனும் விருந்துபசாரத்தை. கொக்குவில் பா.சுதன் ஒன்றும் அறியாமல் கூறவில்லை. பல்கலைக்கழகத்துக்கு வரும் புதியமாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப்பெற்றே வருகிறார்கள். உயர்தர வகுப்பில் அதுவும் யாழ் மாவட்டத்தின் வெட்டுப் புள்ளிக்கேற்றவாறு படித்து அனுமதிபெறும் மாணவர்கள் உயர்ந்த நற்பண்புகளைப் கொண்டே இருப்பர். எனவே அவர்களிடம் மண்டியிட்டு பாடம் கேட்க வேண்டியவர்கள் மூத்த மாணவர்களே. நீங்கள் கூறுவது போல் அவர்களும் பின்னர் முன்னின்று பகிடிவதை புரியக்காரணம், பகிடிவதை எனும் ஊசிமூலம் உங்களிடமுள்ள மனநோயை அவர்களுக்கும் தொற்ற வைத்துவிடுகிறீர்கள்.

பகிடிவதை எந்த விதத்திலும் மாணவரைப் பாதிப்பதில்லை எனவும், உடல் ரீதியான கஷ்டங்களை ஏற்படுத்தும் விதத்தில் யாழ். பல்கலைக்கழகத்தில் 'ராகிங்' நிகழ்வதில்லை எனவும், யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 'இவள்' முழுப் பூசணிக்காயை சோற்றில் புதைக்க முனைகிறார். ஏன் மீண்டும் மீண்டும் சமூகத்தை ஏமாற்றுகிறீர்கள்? உடல் ரீதியாக அதுவும் யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த ராகிங்கிற்கு பெயர், திகதி, இட விவரங்களுடன் ஆதாரபூர்வமான நிருபணங்களை வைத்துள்ளேன். அவை யாவும் எழுத்தில் வடிக்க முடியாத - பத்திரிகையில் பிரசுரிக்க முடியாத - கேவலமான - வக்கிர - ஆபாசச் சம்பவங்கள். நீங்கள் தொடர்ந்தும் சமூகத்தை ஏமாற்ற முயன்றீர்களேயானால் அவ் விபரங்களை வெளிக்கொணரத் தயாராக உள்ளேன். முக்கியமாக பல்கலைக்கழகம் புகும் மகளிர் உடல் ரீதியான கஷ்டங்களை அனுபவிப்பது ஒப்பீட்டளவில் குறைவாக இருப்பதனால் இவ்வாறான வார்த்தைப் பிரயோகங்களை வீசி ஏனைய மாணவர்களையும் அப்படுகுழியில் வீழ்த்துவது பரிதாபத்துக்குரிய செயல். ஆனால் எத்தனை மாணவர்கள் தமது உள்ளக் குமுறல்களை வெளிப்படுத்தமுடியால் வெட்கப்பட்டு உடல், உளரீதியில் நோய்வாய்ப்பட்டு மன வெறுப்புடன் கல்வியைத் தொடர்கிறார்கள்? எத்தனை பேர் பயம் காரணமாக அனுமதி கிடைத்தும் பல்கலைக்கழகம் வராமல் உள்ளனர்? ஒரு பிள்ளை 16 வயதைத் தாண்டினால் பின் சுயமாக முடிவெடுக்கும் இயல்பில் உள்ளது. அவர்களுக்கு புத்தியூட்டுவது என்ற பெயரில் தீய பழக்கங்களை திணிப்பது மனித உரிமை மீறலாகும். நன்கு படித்த பலர் 20 வயதைத் தாண்டிய பின் கண்ணீர் விட்டு இதனால் அழுவதைப் பார்த்து உங்கள் உள்ளமாவது உருகவில்லையா?

பகிடிவதை வக்கிரமாக மாறியதற்காக மன வருத்தப்படுகிறீர்கள். இந்தக் கிரிமினல் குற்றம் நீங்க வேண்டுமேயானால் சிறு துரும்பளவு பகிடிவதை கூட நடைபெறாமல் தடுத்தால்தான் ஓர் உய்வு வரும். போராட்ட காலத்தில் மட்டுமல்ல சாதாரண வாழ்வியலுக்கும் இது தகுமா? 1995க்கு முன் குடாநாட்டில் கடுமையான பகிடிவதைத் தடைபோடப்பட்டது ஏன்? சிறைகளில் எமது சகோதரர்கள் வாடுவதையும், சித்திரவதைக்குட்படுவதையும் சாடுகிறீர்கள். அதிலும் கொடூரமாகப் பகிடிவதை புரிய முனைவது ஏனோ? நாடாளுமன்றத்தில் போடப்பட்ட தடைச் சட்டம் இதைத்தடுக்கப் போவதில்லை. அதுவும் ஏனைய சட்டங்களைப் போலவே தள்ளாடுகிறது. ஓர் உயிர்பிரியும் ஒவ்வொரு நிகழ்வின் பின் மட்டுமே சட்டம் நடவடிக்கை எடுக்கிறது. வெள்ளம் வரும் முன்பே அணைகட்ட ஒருவரும் முன்வருவதில்லை. முளையிலேயே இதனைக் கிள்ளி எறிய வேண்டும். "நான் குறிப்பிட்டது போல் இம் மனநோய்க்கு உளவியல் சிகிச்சை மட்டுமே அளிக்கமுடியும்! இச்சிகிச்சை அளிக்கக் கூடியவர்கள் புதியமாணவர்கள் மட்டுமே! எனவே உங்களைப் பகிடிவதைக்கு உட்படுத்த முயலும் மாணவர்களையிட்டு கோபப்படாதீர்கள்! அவர்கள் நோய்வாய்ப்பட்டவர்கள் என எண்ணி கவலை கொள்ளுங்கள்! கதைத்து அவர்களை மாற்ற முயலுங்கள்! கதைக்கக் கூட விடாமல் அடிப்பவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட வேண்டியவர்கள்! அவர்களை விட்டுத் தூரவிலகி விடுங்கள்! அவர்களின் போலி வார்த்தைகளால் ஏமாறிவிடாதீர்கள்! தன்னம்பிக்கை கொள்ளுங்கள்! உங்களால் எதையும் சாதிக்கமுடியும்! ஆண்டவன் என்றும் நீதியின்பக்கம்!" என்கிறார் பேராசிரியர் செனரத்.

பல்கலைக்கழக வட்டத்துள் நிற்கவேண்டாம் என 5.6.1999 சஞ்சீவியில் வண்ணை க.பிரசாந்தன் கேட்டிருந்தார். கீழைநாடுகளில், முக்கியமாக இலங்கையில், அதுவும் குறிப்பாக எமது யாழ். குடாநாட்டில், பல்கலைக்கழகம் புகும் மாணவர்க்கு உள்ள மரியாதையும், அவர்களை உதாரணம் காட்டும் சமூகமுமே அதிக பங்கெடுக்கின்றன. ஏனையோர் குற்றங்கள், சமூகச் சீர்கேடுகளில் ஈடுபடும்போது பல்கலைக்கழக மாணவர்களே செய்வதாக உதாரணம் காட்டுவதை நீங்கள் கண்ணாரக் காண்பதில்லையா? இன்றைய மாணவர்தானே நாளைய மக்கள். மாணவ சமுதாயம் திருந்தித்தான் இன்று மக்கள் சமுதாயம் திருந்துகிறது. ஆனால் இன்னும் மக்கள் முட்டாள்கள் இல்லை. இன்றைய பெற்றோர் பல்கலைக்கழக மாணவரை வெறுப்போடு நோக்குவது ஏன்? பல திருமணப் பேச்சுக்களில் பட்டதாரி என்றவுடன் அவர் எந்தத்துறையைச் சார்ந்திருந்தாலும் பழக்கவழக்கங்களைப் பற்றி அஞ்சுவது ஏன்? சிந்தித்துப் பாருங்கள்! முடியாவிட்டால் உதயன், சஞ்சீவி செய்யும் இப்பணியை சாடாதீர்கள். கடந்த சில வாரங்களுக்கு முன்னர் மாணவ முதல்வர் தேர்வு சம்பந்தமாக யாழில் உள்ள பிரபல கல்லூரி மாணவர்கள் போட்ட நாடகம் என்ன? வரப்பிரகாஷின் நெஞ்சை உருக்கும் மரணத்தையும் மரணச்சடங்கையும் கண்டு கண்ணீர் விட்டிருந்தால் இவர்கள் இவ்வாறு நடந்திருக்கமாட்டார்கள். நடவடிக்கை எடுத்த அதிபரை பாராட்டாமல் இருக்கமுடியாது. இன்னோர் அதிபர் 'கெல்ட்' வகுப்புக்களில் வந்து சேஷ்டை செய்வதை கலைத்ததாக 15.5.1999 சஞ்சீவி செய்தி வெளியிட்டிருந்தது. நன்று! அவரது மகன் தலைநகரிலுள்ள ஓர் பல்கலைக்கழகத்துக்கு வந்த போது எத்தனையோ மூத்த மாணவர்கள் பகிடிவதை இல்லாமல் உதவி செய்வதாகக் கூறியும் தானாக பகிடிவதைக்குட்பட்டு, அடுத்தமுறை வரவிருக்கும் புதிய

(XV ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org